# கம்பர்-1000

தொகுப்பு:

கவிஞர் அ. கு. ஆதித்தர்

31141

பதிப்பு:

தமிழ் வளர்ச்சி மன்றம் (பதிவு)

சென்னை-1.

1974

# கம்பர் 1000

தொகுப்பு :

கவிஞர் அ. கு. ஆதித்தர்

பதிப்பு :

தமிழ் வளர்ச்சி மன்றம் (பதிவு)

சென்னை-1.

1974 ] [ விலை ரு. 6-00

கிடைக்குமிடம் :—

**தமிழ் வளர்ச்சி மன்றம்**

54, வரதாமுத்தையப்பன் தெரு, சென்னை-1.

**லலிதா பதிப்பகம்**

5-A, டேங்க் பண்டு ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-34.

லலிதா பப்ளிகேஷன் & பிரஸ், நுங்கம்பாக்கம், சென்னை-34.

# உள் அடக்கம்


| பொருள் | | பக்கம் | பாடல் | முதலும் முடிவும் |
|---|---|---|---|---|
| பதிப்பாளர் முன்னுரை | .... | 3 | | |
| தொகுப்பாளர் பாயிரம் | .... | 5 | | |
| நூல் | | | | |
| பால காண்டம் | .... | 9 | 100 | 1 — 100 |
| அயோத்தியா காண்டம் | .... | 29 | 200 | 101 — 300 |
| ஆரண்ய காண்டம் | .... | 67 | 200 | 301 — 500 |
| கிட்கிந்தா காண்டம் | .... | 103 | 100 | 501 — 600 |
| சுந்தர காண்டம் | .... | 123 | 100 | 601 — 700 |
| யுத்த காண்டம் | .... | 144 | 300 | 701 — 1000 |
| ஓம்படை | .... | 195 | 6 | |
| செய்யுள் முதற் குறிப்பு | .... | 197 | | |
| திருத்தங்கள் | .... | 202 | | |

## தமிழ் வளர்ச்சி மன்றத் தலைவர்

## டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள்

B.Sc., M.D., F.R.C.P. (Lond.), F.C.C.P. (U.S.A.), F.A.M.S. (India)

எழுதிய

# கம்பர் ஆயிர முன்னுரை

ஆங்கிலத்தின் இனிய பெருங் காவியங்களையும் பெருங் கதைகள் கட்டுரைகளையும் சுருக்கி வெளியிடுதல் வழக்கம். உதாரணமாக ஷேக்ஸ்பியர் எழுதிய முக்கியமானவைகளைத் தெரிந்தெடுத்து, உரைநடையில் எழுதியிருக்கிறார்கள். சிறுவயதில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படித்து உணர்வது மிகக்கடினம். ஆனால் லாம்ப் எழுதிய கதைகளைப் படிப்பது எளிது. இது பிற்காலத்தில் மூலத்தைப் படித்து உணர்வதற்கு ஒரு ஆவலை உண்டாக்கும், ஆகையால் இத்தகைய புத்தகங்கள் மிக அவசியம்.

திரு ஆதித்தனார் அவர்களின் **கம்பர் ஆயிரம்** கம்பராமாயணத்துக்கு ஒரு சுருக்கம். அவர்கள் "1000 பாக்களைத் தொகுத்திருக்கிறேன்" என்று கூறியபொழுது, "தமிழ் வளர்ச்சி மன்றத்தின் சார்பில் அதனை வெளியிடலாம்" என்று கூறினேன். அவர்களும் மனமகிழ்ந்து இசைந்தார்கள். அவர்கட்கு என் நன்றி. அவர்கள் விரும்பியவாறே மன்றத்தலைவர் என்ற முறையில் இம்முகவுரை எழுதுகிறேன். நான் தமிழில் பண்டிதனுமல்ல, வித்துவானுமல்ல, என் கடமைஉணாச்சியால் ஆதித்தர் அவர்கள் விருப்பத்துக்கு இணங்கி இதை எழுத முன்வந்தேன்.

திரு ஆதித்தனார் அவர்கள் செய்யுள் நூல்களாகவும், இலக்கண நூல்களாகவும் உரைநடை நூல்களாகவும் திறம்பெறப் பல நூல்கள் இயற்றியுள்ளார்கள். அண்மையில் அவர்கள் இயற்றி, வானதிப் பதிப்பகத்தார் வெளியிட்ட **கம்பர் கவிநயம்** அவர்களின் தமிழ்ப்புலமையை நன்கு வெளிப்படுத்தும். அதைப்போன்று கம்பரின் அழகிய முக்கியமான 1000 பாட்டுகளைக்கொண்டு, ஒரு சிறந்த நூலாக இது விளங்குகிறது. பாட்டுகளின் பதங்களைப் பிரித்துப் பிரித்து எழுதியிருப்பதாலும், கடினமான பதங்களுக்குப் பொருள் ஆங்காங்கு அடியில் எழுதியிருப்பதாலும், இதனை யாவரும் எளிதில் படித்து உணரமுடியும். இத்தகைய புத்தகங்களை நூல் நிலையங்களில் வைத்திருந்தால், அவை மாணவர்க்கு மிக உபயோகப்படும். மாணவர்கள் கோடை விடுமுறை நாட்களில் இந்தப் பாடல்களை மனப் பாடஞ் செய்தால், அவர்கள் தம் வாழ்நாள் முழுவதுக்கும் உரிய நல்ல பயனைக் காணமுடியும்.

இந் நாட்களில் இராமாயணம் போன்ற நூல்களைப் படிக்காததினால் நாட்டில் மாணவர்களிடையே குழப்பமும், அமைதியின்மையும் காணப் படுகின்றன. இராமாயணத்தில் முக்கியமாகக் கூறப்படுவது - மூத்தோர் சொல்லின்மிக்க வார்த்தையில்லை. குரு சொல்படி கேட்டு நடக்கவேண்டும் இவைபோன்ற வாழ்க்கை நெறிகளே. தசரதரிடம் விசுவாமித்திரர் இராமனைக் கொடு எனக் கேட்கிறார். தசரதர் தம் உயிரின் மீது எவ்வளவு ஆசை கொண்டிருந்தாரோ அவ்வளவு ஆசை இராமன் மீது கொண்டிருந்ததால் தயங்குகிறார். ஆனால் வசிட்டர் தைரியம் கூறி, இதனால் இராமனுக்கு நல்லது ஏற்படும் என்று அறிவிக்கிறார். குருவின் கட்டளைப்படி தசரதர் இராமனை அனுப்பி வைக்கிறார். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதற்கு உதாரணமாக: தந்தை தசரதர் இராமனை அழைத்து "உனக்கு முடிசூட்ட வேண்டும்" என்று சொன்னபொழுது, இராமர் அரசனாகப் போகிறோம் என்று பூரிக்கவில்லை; அல்லது இந்த அரச பாரத்தை இந்தச் சிறு வயதிலேயே ஏற்கப்போகிறோமே என்று வருத்தப்படவில்லை; தகப்பனார் இட்ட

கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளினுல் ஒப்புக் கொண்டார். பின்னுல் கைகேயி வரம் கேட்டாள். தசரதர் கொடுத்தேன் என்று சொன்னுல் இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும்; கொடுக்க மாட்டேன் என்று சொன்னுல் சத்தியம் தவறியதாகும். ஆனுல் கைகேயி இராமனை வரவழைத்து "இது அரசன் கட்டளை. நீ 14 வருடம் காட்டுக்குப் போகவேண்டும். உன் தம்பி பரதன் நாட்டை ஆளவேண்டும்" என்ருள். அதற்கு இராமன் "இதற்கு அரச கட்டளை என்பானேன்? தாங்கள் கூறினுல் போதுமே, நான் அரசாண்டாலும் என் தம்பி ஆண்டாலும் எல்லாம் ஒன்றுதான். நான் காட்டுக்குப் போகிறேன்" என்று விடைபெற்ருன். இப்படி இராமாயணம் முழுவதும் நீதியை எடுத்துக்காட்டி நமக்கு நல்லது கெட்டது, சுகம் துக்கம் வரும்பொழுதெல்லாம் நாம் எப்படிஎப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கற்பிக்கிறது.

இராவணன் சீதையைக் கொண்டுபோய் அசோக வனத்தில் சிறை வைத்துவிட்டுத் தற்புகழ்ச்சியாகப் பேசுகிருன். அப்பொழுது சீதை அவனை இகழ்ச்சியாகப் பேசி "என் கணவனும் அவர் தம்பியும் இல்லாத சமயத்தில் நீ திருடனைப்போல் என்னைக் கொண்டுவந்தாய்; இதில் என்ன வீரம்" என்று கூறுகிருள். அடுத்து "இங்கு உனக்கு இடித்துக்காட்டி எது நல்லது, எது கெட்டது என்று சொல்ல எவரும் இல்லை. நீ நினைத்தபடி எல்லாம் முடித்து நிற்கிருய். இதனுல் நீ அழிந்து போவாய்" என்று சொல்கிருள். இவ்வாறு வாழ்க்கையில் அறிய வேண்டிய பல செய்திகள் அங்குள்ளன.

இந்தக் காவியத்தில் அரசன் எப்படி நடக்க வேண்டும், மக்கள் எப்படி நடக்க வேண்டும், தந்தை மகனிடம், மகன் தந்தையிடம், குரு சிஷ்யர்கள், கணவன் மனைவியர், சகோதரர்கள் எப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் வாழ்க்கையின் சிறந்த நடைமுறைகளைச் சிறந்த தமிழில் கம்பர் காட்டியுள்ளார்.

கம்பராமாயணத்தை ஒன்று அல்லது இரண்டுமுறை படித்தால் போதாது. மனப்பாடம் செய்ய வேண்டும். அந்த வகையில் திரு ஆதித்தனுர் அவர்களின் **கம்பர் 1000** மாணவர்களுக்குச் செய்த ஒரு பெருந் தொண்டாகும். ஆதலால் இளைஞர் தினம் 10 பாட்டுகளை மனப்பாடம் செய்து அதன்படி நடந்து, பாரத நாட்டின் அருமைப் புதல்வர்களாகவும் புதல்விகளாகவும் வாழ வேண்டும். இது என் கருத்து. இந்தக் கருத்தை முன்னிட்டுத் திரு. ஆதித்தனுர்அவர்கள் நன்கு துருவி ஆய்ந்து இந்தப் புத்தகத்தைத் தொகுத்துள்ளார்கள். அவர்களுக்குத் தமிழறிந்த மக்கள் எல்லோரும் மிகக் கடமைப்பட்டுள்ளார்கள்.

**தமிழ் வளர்ச்சி மன்றம்** பலருக்குப் பாடம் சொல்லி அவர்களைத் தமிழ் அறிஞர் ஆக்குகிறது. இப்பொழுது முதல்முதலாகக் **கம்பர் ஆயிரத்தை** வெளியிட்டு பதிப்புத் தொண்டில் அடிவைத்துள்ளது. தமிழ் தமிழ் என்று சொல்லிக்கொண்டு தமிழுக்கு ஆக்கமுறையில் யாதும் செய்யாமல் இருப்பதைவிடத் திரு. ஆதித்தனுர்போல் புத்தகங்களைத் தீட்டிப் பெரிய காவியங்களைச் சுருக்கி எளிய நடையில் மாணவர்கள் புரியும்படி எழுதுவது தமிழுக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும். இதை இயற்றியவருக்கும் படிப்பவருக்கும் கேட்பவருக்கும் இது நன்மை தரும். இதுபோல் பல புத்தகங்கள் திரு. ஆதித்தனுரைப் போல் நன்கு படித்த தமிழ் ஆசிரியர்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குத் தமிழ் நாட்டு அரசும் வேண்டிய பொருளுதவி கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும். இதனை இயற்றிய ஆதித்தனுர் அவர்கட்கும், இதனைப் பதிப்பித்து உதவிய லலிதா அச்சகத்தாருக்கும், இனி இதனைப் பெற்றுப் படித்துப் பயன் பெற்றுப் பாராட்டும் யாவருக்கும் என் நன்றி.

(ஒப்பம்)....... . ...........................

*13—4—1974*

# கம்பர் 1000 பாயிரம்

"கம்பரப்பர்"

## வாழ்த்து

அறிவினுக் கப்பா லாகி
அறிபடு பொருளு மாகி
உறுவது யாதோ அந்த
உறுபொருள் துணையாம் எற்கே 1

நீடிய சிலைக்கை ராம நாடக நிகழ்ச்சி யாகப்
பாடிய பன்னீ ராயி ரத்தொரு பகுதி சேர்க்க
ஏடெழுத் தாணி பற்றும் தெய்வமா யேத்தப் பெற்ற
பீடுடை யானை உச்சிப் பிடத்தே அமர்த்து கின்றேன் 2

கருக்கலிற் கழிமு கத்தைக் கடக்கயான் நின்ற காலை
விருத்தனுய்த் தோன்றி "நீரின் ஆழத்தை விளம்பற் கின்றுல்,
திருத்தமார் நெறியே செல்க" எனஎனைச் செலுத்திச் சாலை
அருகுற உருக்க ரந்த ஐயனை வாழ்த்தி வாழ்வேன் 3

செய்யதா மரையா ளாகத் துயிலுறு கனவிற் றேன்றிப்
பய்யவே அருகில் வந்து பயோதரம் எடுத்து வாயுள்
வய்த்துநல் லமுத மூட்டி அடுத்ததும் மாற்றித் தந்த
மெய்ப்பொருள் யாது அஃதை மறக்கிலேன் போற்று கின்றேன் 4

முற்றுறும் ஆயுள் என்று கணிதர்கள் மொழிந்த நாளில்
அற்படு கனவிற் றேன்றி அசரீரி யாகக் கேட்கக்
கற்பக வினய கத்தைக் கண்டுநீ தொழுவாய் என்ற
அற்புதன் யாவன் என்றும் அவனடி முடிமேற் கொள்வேன் 5

## வணக்கம்

பெற்றவர்ப் பணிந்து, சங்கத் தமிழ்எனிற் பிறங்க வைத்த
சற்குணச் சான்றோர் பாதம் தலைமிசைச் சூடு கின்றேன்:
விற்பன முத்து ஞானி; திரு.வி.க; சாமர்வில்லி
நற்றமிழ் ஐயர் எந்த நாளும்என் வணக்கங் கொள்வார் 6

# 4

## கம்பர்

பண்டைய மொழிகள் மிக்க பண்பட்ட மொழிக ளுள்ளே
வண்டமிழ் ஒன்று அஃது வளமுடைத் தென்பார் நூலோர்
நுண்ணிதாய்க் களவு கற்பு அகம்புறம் எனச்சு வைத்துப்
பண்ணிய முறைகள் பாரில் யாவரே துய்த்துப் பார்த்தார் 7

முந்திய வீரம் மானம் முயக்கொடு பிணக்கு காதல்
பிந்திய அறங்கள் நீதி பரம்பொருட் பக்தி மற்றும்
சிந்தனைக் கினிய வான சிறுகதை பிறவும் சேரத்
தந்தனன் ராம காதை தனிப்பெரும் புலவன் கம்பன் 8

திருவள்ளு வர்தம் நீதி திருத்தக்க தேவர் வாக்கு
அருள்நெறி சம்பந் தர்தம் வண்ணங்கள் அனைத்து மேலாப்
பெருமிதம் யாண்டும் காட்டிப் பாரகா வியமாய் நாட்டிப்
பெருமலை ஆனன் கம்பன் பிறர்எல்லாம் குன்றம் ஆனர் 9

அருந்திறல் வியாசர் கண்ணன் வாயிலாய்க் கீதை தந்தார்
இரணியப் படலம் தந்து இறையியல் அளித்தார் கம்பர்
பெரும்புது மைகள் செய்தார் பிழைஎலாம் களைந்து நின்றார்
வரன்முறை நிறுவி வாழ்க்கை நல்வழி காட்டு கின்றார் 10

கருத்துநீள் ஆழமாக கல்வியே ஆக மற்றைத்
திருத்தமார் நெறியே ஆக சொல்லின்நா கரிக மாக
ஒருத்தரும் தனக்கீ டின்றி உயர்ந்துளான் கம்ப நாடன்
பருத்தகா வியமாய்ப் பன்னீ ராயிரம் பாடி நின்றான் 11

## கம்பராயிரம்

ஓதிநன் குணர்ந்தோ ரெல்லாம் அறிந்தயே நுண்மை ஒன்று
"ஆதித்தன் புதல்வன் கம்பன்" என்பதாம்: புதல்வன் பாவில்
தாதையார் ஆயி ரத்தைத் தேர்ந்துளார் தரநூ லாக:
ஈதுயா வர்க்கும் முற்றும் படிக்கநேர் வாயி லாகும் 12

தெய்வத்தை அறியார் அஃதைத் தெரிந்துகொள் நெறியா கத்தாம்
செய்வர்சிற் றுருவம் ஒன்று, பூசிப்பார் தினைத்து நிற்பார்.
வையம்மேல் கதிரோன் ஒக்கும் வளமிகு கம்பன் வாக்கு,
கைவிளக்கு "ஆயி ரம்"தான் கவினுறும் பயனும் நல்கும் 13

# 5

## தமிழ் வளர்ச்சி மன்றம்

பாரத நாட்டி லுற்ற பருநக ரங்க ளுள்ளே
சீரணி கலைந யத்தாற் சிறந்தது சென்னை யாகும்
காரியங் கருதி அங்கு கலைக்கழ கங்கள் நூறு :
பேரது "தமிழ் வளர்ச்சி மன்ற"மாய்ப் பிறங்கும் ஒன்று 14

பெருமன்றம் புலவர் கூட்டம் பிறங்குநற் சூழ லாக,
நிரந்தரத் தலைவர் ஆவார் ரத்னவேல் சுப்ர மணியம்
அருளொடு பொருளும் கல்வி அறிவொடு தெருளு மிக்கார்
அருங்கொடை வளத்தால் தாங்கி நல்லன அனைத்தும் செய்வார் 15

கம்பனின் கவிவ ளத்தைத் கண்டுளம் களித்த தாலோ
எம்திறன் உணர்ந்த தாலோ இரத்னவேல் சுப்ர மணியம்
தம்பெருங் கடனாய்க் "கம்பர் 1000" தரமுன் வந்தார்,
அம்புவி வான்மா ரிக்கு ஆற்றுங்கைம் மாறு உண்டோ! 16

மருத்தர்தம் சீட்டில் நாட்டும் மங்கலக் குறிஎ ழுத்தே
விருத்தியைக் காட்டத் தன்பேர் விலாசமாய் அமைத லானே
ஒருத்தராய் உயர்தல் உற்ற நியதியே; புதுமைத் தன்றால்:
திருத்தமார் நெறியார்க் கென்றும் தெய்வமே துணையாய் நிற்கும் 17

மழைவரு முன்னே பூமி மணந்தரும் குளிருங் காட்டும்
நுழைபுலக் கம்பர் ஆயி ரந்தரு நோக்கத் தானே
விழைதகு வசந்தம் மேவ மணமுறும் இல்லம் என்றால்,
இழைமுழு உருவம் எய்த யாங்கினும் நலமே ஆமே 18

## புலவர்கள்

நந்தாப் புகழ்சேர் திருவள் ளுவரும்
சிந்தா மணிசெய் திருத்தக்க தேவரும்
பரணி பாடிய சயங்கொண் டாரும்
திருப்புகழ் தருஅரு ணகிரி யவரும்
கொஞ்சும் சிந்திசை அண்ணா மலையும்
விஞ்சிய புலமைக் கம்ப நாடரும்
ஏனை யோரினும் என்னுளங் கவர்ந்தவர்;
வானத்து நெறியும் வையத்து நெறியும்
குறைவறத் தந்தவன் கம்பனே ஆவான்
நிறைந்த புலமையன் நிறைகுணத் தொருவனாய்

உலகநல் வாழ்வுக் குரிய முறையெலாம்
நலமுற நாடக நெறியில் காட்டி
மொழியின் நடையும் வினையின் இயல்பும்
ஒழுக்கமும் உயர்ந்த முறையொடு வகுத்து
உலகப் புலவர் பலரினும் மிக்குத்
தலைசிறந் தவனாய் விளங்குவான் கம்பன்என்! 19

## "கம்பரப்பர்"

திருச்செந்திற் பதிய டுத்துச் சிறப்புறு ஊர்கள் தம்முள்
பெரும்புகழ் காயா மொழியே என்பிறப் பிடமாம்: அஃதே
பொருளொடு கல்வி சீலம் நலம்பல பொருந்தப் பெற்று,
அருங்கவிப் புலவன் ஆண்டான் ஆசியும் பெற்ற தாகும் 20

வழிவழி வந்த வித்தை வளத்தினுல், பின்னர் சார்ந்த
வழுவிலாக் கல்விச் சான்றோர் சற்குணர் அருள்வலத்தால்,
மொழிமுறைத் தெளிவும் மேலும் கற்றற்காம் உணர்வும் பெற்றேன்
பழியிலா வகையில் மன்றிற் பேசவும் துணிவு கொண்டேன் 21

பழந்தமிழ் நூல்கள் கற்றேன் பகர்ந்துள உரைகள் கற்றேன்
விழவணி பதிகட் கான புராணங்கள் பாடல் கற்றேன்
மழகளி றுக்கும் கம்பன் காவியம் மனத்தூற் றுக,
இழந்தனென் ஏனை யெல்லாம்; ஒன்றிலே திளைக்க லானேன் 22

கம்பனைப் படிக்கும் போதே கால்கைகள் நடித்து நிற்கும்
வெம்மையிற் சினமும் மற்றுத் தண்மையிற் சிரிப்பும் தோன்றும்
தம்புலம் என்னைப் போன்று ஒன்றுவார் யாவர்? என்றே
கம்பித்துச் செல்வேன் துய்க்கும் அன்பர்பால் எடுத்துச் சொல்வேன் 23

படிப்பது பட்டம் எய்த! பட்டமும் பணத்தை யீட்ட!
நடிப்பதே அன்றி நாட்டம் நலத்தினில் யாண்டும் இன்றால்:
பிடிப்பொரு சிறிது மின்றிப் மன்றத்தில் பேசு கின்றார்:
வடித்தனென் நூலாய், நேரில் அளாவுதல் விடுத்த தாலே 24

## கவியியல்பு

உள்ளத் தேதுவாக்
கொள்ளு வாரிடை
வெள்ளம் போல்கவி
துள்ளி ஓடுமே 25

படித்து உணர்ந்ததும்
நடித்து மகிழ்ந்துடன்
அடுத்த அன்பர்பால்
விடுத்துத் திளைப்பிரே 26

நல்ல கவிகளைச்
சொல்ல, மனத்தொரு
வல்ல மையுறத்
தொல்லை தொலையுமே 27

பிறர்க்குச் சொல்வதால்
பிறக்கும் இன்பமே
அறத்தின் ஆறிது
சிறப்பு நல்குமே 28

## கம்ப நாடக நடை

அன்னத் தின்நடை ஆனையின் நடை
மன்ன வன்நடை மான்க ளின்நடை
வன்ம னக்கிரா தன்கொள் வன்நடை
வன்மச் சொல்நடை யாவும் விளங்குமால் 29

தண்ணீ ரின்நடை தாழ்த்த மென்னடை
கண்ணீர் விட்டழு தோடும் கடுநடை
பெண்க ளின்நடை போர்வீ ரர்நடை
கண்ணி லாதவர் நடையும் காட்டு மால் 30

கொடியின் ஆடலும் குளிரில் ஆடலும்
குடியர் ஆட்டமும் குமரர் கோட்டமும்,
முடிசூ டல் திரு மணவி ழாக்களும்
நடித்து நாடகம் காட்டும் கவிகளே 31

கோடி நுட்பம் கொடுக்கிருன் கம்பனே
நாட நாட, நவீனமாய்த் தோன்றுமால்
பாடிப் படித்துப் பரவசம் எய்துவாம்
தேடும் தேட்டு இதிற்பிறி தில்லையால் 32

இடங்கண் டேற்ற சொல்லும், சொற்கியை
நடையும் பொருளும் ஆழம் நாட்டினன்
படைப்பைப் பிரித்துப் பருகித் துய்ப்பமால்;
கிடைத்த செல்வம் கிளையோ டருந்துவோம் 33

## கம்ப நாடகம்

புள்ளும் விலங்கினமும் புன்மை இராக்கதரும்
உள்ளத் துயர்ந்த முனிவரரும்-கள்ளமில்
வேடரும் தொண்டரும் வீரரும் கம்பர்தரு
நாடகத்துள் காணலாம் நன்கு 34

தந்தை யொடுமைந்தன் தம்பி யொடுஅண்ணன்
மந்திரி மன்னர் மடந்தைமார்—தந்திரிகள்
தூத ரொடுஒற்றர் தூய ரொடுதீயர்
போதரலும் நாடகத்தின் பொற்பு 35

ஆண்மை யொடுபெண்மை ஆட்சி கடும்போர்கள்
மாண்பார் திருமணக்கொண் டாட்டங்கள்-மாண்டோலம்
நட்பு சிறைவாசம் மேல்விமா னம்பறத்தல்
உட்செறியும் காட்சிகளாம் ஓர் 36

நாடும் நகரும் மலையும் நளிகடலும்
காடும் கயமும் பொருகளமும்—ஓடுநீர்
ஆறும் வயலும் அரண்மனையும் சோலைகளும்
வேறுவேறும் காட்சிகளைப் பார் 37

எடுத்துப் படிப்பீர் எந்நாளும் இன்புற்
றடுத்தார்க் களித்தே மகிழ்ந்து-நடப்பையெல்லாம்
உன்னி உயர்ந்து ஒழுக்கம் கடைப்பிடித்து
மன்னுவீர் நீள மகிழ்ந்து 38

சித்திரைப் பிறப்பா னந்தத் தாதிநாள் சீலங் காட்டும்
புத்தகம் நிறைவே றிற்றால்: புண்ணியந் தருதற்கான
ரத்தினக் கொடை யிதாகும்; நேயத்தால் பயில்வா ரெல்லாம்
நித்திய சூரி யென்ன நிலைப்பரால் நீடு வாழ்வார்! 39



சில குறிப்புகள் :

*பாயிரம் (பா. 1.) உறு பொருள் - பரம் பொருள். (3) நிகழ்ச்சி 1945 (4) நிகழ்ச்சி 27-3-70 (5) நிகழ்ச்சி 22-6-72 (10) பிழை வான்மிகியின் சில முறைகேடுகள். (17) மங்கலக் குறி - RS. (18) வசந்தம் - பெண் பெயர்க்குறிப்பு - இழை - நூல். (39) ஆனந்த வருடம் சித்திரை முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை.*

# கம்பர் 1000

## பாலகாண்டம்

### வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே 1

*உலகங்களை எல்லாம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை விளையாட்டாகக் கொண்டு அவற்றில் ஒன்றி நிற்கும் அப்பெருமானுக்கு வணக்கம்.*

### அவையடக்கம்

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதை யரோ 2

*பூசை-பூனை. காசுஇல்-குற்றமில்லாத. கொற்றத்து-வெற்றி சேர்.*

முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்தம கவிகட் கொன்று ணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ 3

*இராம கதையில் பக்தியும் பித்தும் கொண்டு பாடுவதால் தகுதிபற்றி ஆய்தல் வேண்டாம்.*

## ஆற்றுப்படலம்

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர் தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம் 4

*சூரிய குல மன்னர் போல் முறை தவறாத ஒழுக்குடையது, தாய்முலை போல் பருவங் கண்டு பயன்பட்டு நிற்பது சரயு நதி.*

முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்தல்தன்னைப் பொருவரு மருதம் ஆக்கி
எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடு மாறு நீரால்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச் சென்ற தன்றே 5

*நல்வினை தீவினைகள் தத்தம கதியிற் சென்று உருமாறுதல் போலச் சரயுநதிவெள்ளம் நிலங்களை மாற்றியும் நிலத்துப் பொருட்களை இடம் பெயர்த்தும் நின்றது.*

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே 6

*கல்-மலை, நீத்தம்-வெள்ளம், மறை-வேதம், தொல்லையில்-ஆதிமூலம் ஒன்றான தெய்வம் பலவகைச் சமயங்களால் பலவகைப்பட்டது போல் ஆற்றின் உற்பத்தி ஒன்றாயினும் பின்னர் பல இடங்களிலும் பலபெயர் பெற்றுப் பலவாறு பயன்பட்டது.*

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணல் தடங்க டோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கடோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே 7

*தாது உகு-பூந்தாது சிந்தும், போது-பூ, தடம்-தடாகம், பூகம்-பாக்குமரம். ஆற்று நீர் நாட்டுக்கு உயிர் நாடியாக விளங்கிற்று.*

## நாட்டுப் படலம்

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம்வீற் றிருக்கு மாதோ 8

*தண்டலை-சோலை, விளக்கம்-விளக்கு, கொண்டல்-மேகம், திரை-அலை, எழினி-திரைகள், தேம்-இனிமை. மருதநிலம் நடனமேடை போல் பொலி வுற்றது.*

**பண்கள்வாய் மிழற்றும் இன்சொற் கடைசியர் பரந்து நீண்ட**
**கண்கைகால் முகம்வாய் ஒக்கும்களையலாற் களையிலாமை**
**உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலாவி நிற்பார்.**
**பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர்பெற்றல் 9**

*மிழற்றும்-பேசும், கடைசியர்-உழத்தியர், களை-தாமரைமலர், கள்வார்-கள் ஒழுக்கும், மள்ளர்-உழவர்.*

**ஈர நீர்படிந் திந்நிலத் தேசில**
**கார்க ளென்ன வருங்கரு மேதிகள்**
**ஊரினின் றகன் றுள்ளிட, உண்முலைத்**
**தாரை கொள்ளத் தழைப்பன சாலியே 10**

*கார்கள்-மேகங்கள், மேதி-எருமை, உள்ளிட-நினைப்பதால், சாலி-நெல், தாரை-வார்ந்தொழுகல்.*

**பெருந்தடங்கண் பிறைநுத லார்க்கெலாம்**
**பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
**வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்**
**விருந்து மன்றி விளைவன யாவையே 11**

*நுதலார்-நெற்றி பெற்ற பெண்கள். ஈதல், விருந்து இரண்டும் மாதரால் ஓம்பப் பெற்றன.*

**வண்மை இல்லை ஓர்வறுமை யின்மையால்**
**திண்மை இல்லை நேர்செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய் யுரையில் லாமையால்**
**வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால் 12**

*வண்மை-கொடை, செறுநர்-போர் செய்பவர், வெண்மை-பேதைமை.*

**பொற்பின் நின்றன பொலிவு, பொய்யிலா**
**நிற்பின் நின்றன நீதி, மாதரார்**
**அற்பின் நின்றன அறங்கள், அன்னவர்**
**கற்பின் நின்றன கால மாரியே 13**

*பொலிவு-விளக்கம், பொற்பின்-அழகினால், நிற்பு-நிலை அற்பு-அன்பு, நின்றன-நிலைத்தன.*

## நகரப் படலம்

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை, அவைவல்லவ ரல்லாரு மில்லை.
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரு மில்லை உடையார்களும் இல்லை மாதோ 14

*கல்லாதவர் எவரும் இலர் ஆதலின் இவர் கல்விவல்லார், இவர் கல்வியில்லார் என்று கூற இடமில்லை.*

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி அருந் தவத்தின்
சாகம் தழைத் தன்பரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது போலுமன்றே 15

*தனி முதற்பொருளாகிய (அயோத்தி) நகரமாகிய வித்தில் கல்வியாகிய முளை தோன்றி வளர்ந்து கேள்வியாகிய கிளைகள் பெருகித் தவம் என்னும் இலைகள் மிகுத்து அன்பு என்னும் அரும்பு தோன்றித் தருமம் என்னும் பூ மலர்ந்து போகம் என்னும் கனி பழுத்து நின்றது.*

## அரசியற் படலம்

தாய்ஒக்கும் அன்பில், தவம்ஒக்கும் நலம்பயப்பில்
சேய்ஒக்கும் முன்நின் றொருசெல்கதி உய்க்கும்நீரால்.
நோய்ஒக்கும் என்னின் மருந்தொக்கும், நுணங்குகேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான் 16

*தாய் அன்புகாட்டுவது போலும், தவம் நற்பயன் தருவது போலும், சேயர் பெற்றோரை நற்கதிக்குச் செலுத்துவது போலும்; நோய் தண்டிப்பது போலும், மருந்து குணந்தருவது போலும் மன்னன் ஒழுகி வந்தான். சேய்—மக்கள். நுணங்கு—நுட்பமான.*

ஈந்தே கடந்தான் இரப்போர்கடல், எண்ணில் நுண்ணூல்
ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர், வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை, கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவிற்றொடர் போக பௌவம் 17

*அளக்கர் வேலை பௌவம் — கடலின் பெயர்கள், இரப்போர் — பிச்சைக்காரர்.*

எய்யென எழுபகை எங்கும் இன்மையால்
மொய்பெருந் தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிஞன் ஓம்பும்ஓர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான் 18

*எய்—முழக்கி ஆர்த்து. மொய்—வலிய எதிர்ப்பு. முழவு - மத்தளம், செய்—வயல். தினவு - குறு குறுப்பு.*

## திரு அவதாரப் படலம்

அருந்தவ முனிவரும் அந்த ணாளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்;
இருந்துயர் உழக்குநர் என்பின் என்பதோர்
அருந்துயர் வருத்தும்என் அகத்தை என்றனன் 19

*என்பின்—எனக்குப் பிற்காலத்தில், உழக்குநர்—வருந்துவார். மக்களில்லாக்குறை வசிட்டரிடம் குறிப்பாக அறிவிக்கப்பட்டது.*

கருமுகில் தாமரைக் காடு பூத்து, நீடு
இருசுடர் இருபுறத் தேந்தி, ஏடலர்த்
திருவொடும் பொலியஓர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன் 20

*வசிட்டர், தேவர்கள் வேண்டுகோட்கிணங்கித் திருமால் காட்சியளித்த கோலத்தை விளக்குகிறார்.*

*நீலமேகத்தில் தாமரைப் பூக்கள் தோன்றிய வடிவாய்; இருபக்கங்களிலும் சூரிய சந்திரர் விளங்க; திருமகளும் உடனிருக்க (செம்பொற் குன்றின்மீது வருவதுபோல்) கருடன் மீது வந்து காட்சிகொடுத்தார். அரக்கரை வதைப்போம் என்று வரம் அருளி அவர் சென்றபின், தசரதர் வசிட்டர் சொற்படி யாகஞ்செய்து புத்திரரைப் பெற்றார். மூத்த மகன் இராமன். ஏடு அலாத் திரு-இதழ் விரிந்த தாமரையின் திருமகள்.*

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
எதுவினை? இடரிலை? இனிதுநும் மனையும்?
மதிதரு குமரரும் வலியர்கொல்? எனவே 21

*எமை உடை இறைவன்-எம் தலைவனாகிய இராமன். காரியங்கள் எப்படி? துன்பம் யாதும் இல்லையே? மனைவி நலமோ? மக்கள் நலமோ? என வினவி அளவளாவினான் இராமன்.*

## கையடைப் படலம்

நிலம்செய்தவம் என்றுணரின் அன்று, நெடியோய், என்
நலம் செய்வினை உண்டெனினும் அன்று, நகர்நீ யான்
வலஞ்செய்து வணங்க எளிவந்தஇது முந்தென்
குலம்செய்தவம் என்றினிதுகூற, முனிகூறும் 22

*அரண்மனைக்கு வந்த கௌசிக முனிவரை நோக்கி அரசன் கூறியது இது.*

*நிலம்-அயோத்தி. என் நலம் செய்வினை-என் புண்ணியம். முந்தென்-முந்திய என்னுடைய.*

தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக் கிடையூருத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென, நிருதர்இடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென உயிர்இரக்கும் கொடுங்கூற்றின் உளையச் சொன்னன்

*தரு-மரம் அடர்ந்த, பயன்தரும் இயல்புடைய. வெருவர-அஞ்சும்படி. நிருதர்-அரக்கர். செரு-போர், செம்மல்-பெரியோன், உளைய-வருந்துமாறு. "இராமனைத்தா" என்பது "உயிரைக்கொடு" என்பதுபோல் மன்னனுல் உணரப்பட்டது. கூற்றின்-யமனைப்போல.*

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல் மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தா லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த, ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான் கடுந்துயரம் கால வேலான் 24

*எண் இலா-அளவில்லாத, மருமம்-மார்பு, உண்ணிலாவிய-உள்ளத்தில் உற்ற, உந்த-தள்ள, பிள்ளையில்லாதிருந்து, பின்னர் பெற்று, இப்போது பிரிய நேர்வதால் "கண் இலான் பெற்று இழந்தான்" எனக் கூறினுர், வசிட்டர் ஆணைப்படி மன்னன் மக்களைக் கௌசிகரிடம் ஒப்படைத்தான்.*

வந்த நம்பியைத் தம்பி தன்னுெடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி, நல்
தந்தைநீ, தனித் தாயும்நீ இவர்க்கு :
எந்தை தந்தனென், இயைந்த செய்கென்றுன் 25

*தம்பி–இலக்குவன், இயைந்த-உனக்கு இயைந்தவாறு வேண்டிய முறையில்; முனிவர் இராம இலக்குவருடன் காட்டை அடைந்தார்.*

## தாடகை வதைப் படலம்

சூடக் அரவுறழ் சூலக் கையினள்
காடுறை வாழ்க்கையள். கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினுய்,
தாடகை என்பதச் சழக்கி நாமமே 26

*அங்கு வந்த தாடகையை இராமனுக்கு அறிவிக்கின்ருர் :*
*அரவு-பாம்பு, சூடகம்-கையின் காப்பு, சழக்கி-தீயள்.*

தீதென் றுள்ளவை யாவையும் செய்தெமைக்
கோதென் றுண்டிலள்; இத்தனை யேகுறை!
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்,
மாதென் றெண்ணுவ தோ? மணிப் பூணினுய் 27

*கோது-சக்கை, பூணினுய்-பூண்கள் உடையவனே*

ஐயன் அங்கது கேட்டறன் அல்லவும்
எய்தினல், அது செய்கஎன் றேவினல்
மெய்ய நின்னுரை வேதம் எனக்கொடு
செய்கை அன்றோ அறஞ்செய்யும் ஆறென்ருன் 28

*அறன் அல்ல-தர்மம் இல்லாதன ஆயினும், ஆறு-முறை, பின்னர் இராமன் தாடகைமீது பாணம் செலுத்தினுன்.*

சொல்ஒக்கும் கூடியவேகச் சுடுசரம், கரிய செம்மல்
அல்ஒக்கும் நிறத்தி னுள்மேல் விடுதலும்; வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்கா தப்புறங் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே 29

*அல் ஒக்கும்-இருள் போன்ற, சொல் ஒக்கும்-ஒலிபோல் வேகமான, சரம்-அம்பு, கல்லா-படிப்பறியா.*

பொடியுடைக் கானம் எங்கும் குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த் தாடகை, தலைக டோறும்
முடியுடை அரக்கர்க் கந்நாள் முந்திஉற் பாதமாகப்
படியிடை அற்று வீழ்ந்த வெற்றிஅம் பதாகை ஒத்தாள் 30

*பொடி-புழுதி, தடி-தசை, எயிறு-பல், பதாகை-கொடி, உற்பாதம்-கெட்ட சகுனம், படியிடை-பூமியில், கொடி அற்று வீழ்வதுபோல் அரக்கர் அழிவுக்கு முதல்முதல் ஒரு கெட்ட சகுனமாக வீழ்ந்தாள்*

வாசநாள் மலரோ னன்ன மாமுனி பணிமருத
காசுலாம் கனகப் பைம்பூண் காகுத்தன் கன்னிப் போரில்,
கூசுவாள் அரக்கர் தங்கள் குலத்துயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலும் கூற்றும் சுவைசிறி தறிந்த தன்றே 31

*மலரோன் அன்ன-பிரமனை ஒதத கௌசிகர், பணி-கட்டளை, காகுத்தன்-இராமன், கன்னிப்போர்-முதல் போர், அரக்கர் உயிர்கொள்ள அஞ்சும் யமனும் இன்றே சிறிது சுவைத்துக்கொண்டான்.*

## வேள்விப் படலம்

எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர் 32

*எண்ணுதற்கு-நினைக்கவும், ஆக்குதற்கு செய்யவும், அரிது-முடியாத.*

## அகலிகைப் படலம்

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவதுண்டோ ?
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ணலே, உன்
கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன் 33

*இராமன் திருவடிபட்டுக் கல் உரு பெண்ணுருகமாறி நின்றது. அதைக் கண்ட முனிவர் அவ்வரலாற்றை விளக்கினார். இவ்வண்ணம்-இவ்வாறு, உய்வண்ணம்-நல்வாழ்வுமுறை, மை-கரிய, கைவண்ணம்-கைத்திறன்.*

## மிதிலைக் காட்சிப் படலம்

மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தா ளென்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாஎன் றழைப்பது போன்ற தம்மா 34

*மையறுமலர்-குற்றமில்லாத் தாமரை மலர், செய்யவள்-திருமகள், கடிநகர்-காவல் மிகு மிதிலை. மிதிலையின் கொடிகள் ஆட்டம் "திருமகள் இங்கு இருக்கிறாள் ஆதலின் வா வா" என அழைப்பது போலிருந்தது.*

செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல்யாரும்
எப்பெண் பாலும் கொண்டுவ மிப்போர் உவமிக்கும்
அப்பெண் தானே ஆயின போதிங் கயல்வேறோர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி உரைசெய்வோம் 35

*பிரமன் முதலாகப், பெண் அழகுக்கு உவமை கற்பிக்கும் யாவரும் சொல்லும் திருமகள் தானே இங்கு சீதையாயினள் என்னின்; இச்சீதைக்கு நாம் வேறு எதனை எவ்வாறு உவமை சொல்ல முடியும்?*

கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவைஎல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றது : குன்றும் சுவரும்திண்
கல்லும் புல்லும் கண்டுருகப் பெண் கனிநின்றாள் 36

*சீதையின் மதர்த்த விழிகள் வேலையும் யமனையும் விடக் கொடுவினை புரிவன. மலை, சுவர், கல், புல் இவைகளும் கண்டு உருகத்தக்க கனிவுடன் அவள் நின்றாள்.*

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்இணை கௌவி ஒன்றையொன்
றுண்ணவும், நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் 37

*எண் அரு நலம்-நினைக்க முடியாத அழகு. உண்ணவும்-பருகவும் உணர்வு-கட்டுப்பாட்டு உணர்ச்சி, நிலைபெறாது-இடம் பெயர்ந்து.*

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேல்இணை
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே 38

*நுதி-கூர்மை. மதுகையான்-வலிமையுடையான். தாக்கு அணங்கு-தாக்கும் அரமகள்.*

பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்
தொருவரை ஒருவர்தம் உள்ளத் தீர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர் 39

*பாசம்-கயிறு, பற்று. ஈர்த்தல்-இழுத்து நிற்றல்.*

மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிர்ஒன் றாயினர்.
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ 40

*மருங்கு-இடை, ஒருங்கிய-ஒருமைப்பட்ட, கலவி-கூடல்.*

அந்தமில் அழகனை அணைகி லாமையால்
பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்.
சிந்தையும் நிறையும்மெய் நலனும் பின்செல
மைந்தனும் முனியொடு மறையப் போயினான் 41

*அந்தம்இல்-எல்லை இல்லாத, நிறை-கற்புநிலை, மெய்ந்நலன்-திருமுகப் பார்வை, பின்-திரும்பிச் சீதைபால்.*

இந்திர நீலம்ஒத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்,
சுந்தர மணிவரைத் தோளு மேஅல,
முந்திஎன் உயிரைஅம் முறுவல் உண்டதே 42

*குஞ்சி-தலைமுடி, வரை-மலை, முறுவல்-புன்சிரிப்பு, முந்தி-யாவற்றுக்கும் மேலாக நின்று.*

கடலோ மழையோ முழுநீலக் கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை நாள்மலரோ நீலோற் பலமோ பானலோ
இடர்சேர் மடவார் உயிருண்ப தியாதோ என்று தளர்வாள்முன்
மடல்சேர் தாரான் நிறம்போலும் அந்தி மாலை வந்ததுவே 43

காயா நறும்போதோ-நல்ல காயாம்பூவோ? பானல்-நெய்தற்பூ, மடல்-இதழ், தார்-பூமாலை.

நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்,
சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப்
பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள் 44

நீக்கம் இன்றி-எங்கும் பரவி, சேக்கை-இருப்பிடம்.

வாச மென்கல வைகளை வாரிமேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்,
வீச வீச வெதும்பினள் மென்முலை.
ஆசை நோய்க்கு மருந்தும்உண் டாங்கொலோ 45

கலவை-சந்தனக் குழம்பு. புலர்ந்து-வருந்தி.

முனியும் தம்பியும் மொய்ம்முறை யால்தமக்
கினிய பள்ளிகள் எய்திய பின்இருட்
கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும்அத் தையலும் ஆயினன் 46

பள்ளி-படுக்கை, கங்குல்-இரவு. இரவில் தனிமையில் உடன் உற்றவை இருட்டு, திங்கள், தனிமைப்பாடு, சீதையின் சாயல்.

ஏகும் நல்வழி அல்வழி என்மனம்
ஆகுமோ?அதற் காகிய காரணம்
பாகு போல்மொழிப் பைந்தொடி கன்னியெற்
காகும், வேறிதற் கையுற வில்லையே 47

நல்வழியிற் செல்லும் என்மனம் இங்கு அவ்வழியில் செல்லக் காரணம், இக்கன்னி எனக்காகவே பிறந்தவள் ஆதலின், இதில் ஐயப்பாடு வேண்டா. எற்கு-எனக்காக, ஆகும்-பிறந்ததாகும். விடிந்தபின் இராம இலக்குவர் முனிவருடன் சென்று சனகரின் வேள்வி மண்டபத்தில் இருந்தனர்.

இருந்தகுலக் குமரர் தம்மை இருகண்ணால் முகந்தழகு பருக நோக்கி
அருந்தவனை அடிவ ணங்கி யாரைஇவர்? உரைத்திடுமின் அடிகள் என்ன;
விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகா ணியவந்தார் வில்லும் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வர்என அவர்தகைமை பேச லுற்றான் 48

அருந்தவன்-கௌசிகன், விருந்தினர்-புதியர்.

## குலமுறை கிளத்து படலம்

திறையோடும் அரசிறைஞ்சும் செறிகழற்கால் தசரதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்.
உறையோடு நெடுவேலாய், உபநயன விதிமுடித்து
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண் 49

*அரசர்கள் திறையோடு வணங்கும் தசரதன். பொறை-பொறுமை, மறை ஓடுவித்து-வேத அறிவு செறிய வைத்து.*

அலைஉருவக் கடல்உருவத் தாண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலைஉருவப் புயவலியை நீஉருவ நோக்கையா!
உலைஉருவக் கனல்உமிழ்கண் தாடகைதன் உரம் உருவி
மலைஉருவி மரம்உருவி மண்உருவிற் றொருவாளி 50

*உருவ-உருவம் உடைய, உருவ நோக்கு-கண்ணைச் செலுத்திப்பார், உலை-கொல் உலை, உரம்-மார்பு, வாளி-அம்பு.*

ஆய்ந்தேற உணர்ஐய, அயற்கேயும் அறிவரிய
காய்ந்தேஇவ் உலகனைத்தும் கடலோடும் மலையோடும்
தீந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈந்தேனும் மனம்உட்க இவற்கேவல் செய்குனவால் 51

*ஐய, ஆய்ந்து தெரி-பிரமனாலும் அறிய முடியாப் பெருமை. உலகு, கடல், மலையாவற்றையும் அழிக்கவல்ல படைவித்தை கற்பித்தவன் யான். யானும் வெட்கும்படி இன்று படைக்கலங்கள் அவன் ஏவிய வழியில் நிற்கின்றன. பின்னர் சதானந்தர் வில்லின் பெருமைகளை உரைத்தார்.*

## கார்முகப் படலம்

நினைந்தமுனி பகர்ந்தஎலாம் நெறியுன்னி, அறிவனும்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போர்ஏற்றின் முகம்பார்த்தான்.
வனைந்தனைய திருமேனி வள்ளலும்அம் மாதவத்தோன்
நினைந்தஎலாம் நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினன் 52

*முனி-சதானந்தர், அறிவன்-கௌசிகர், போர் ஏறு-இராமன், சிலை-வில், அவர் குறிப்பை உணர்ந்த இராமன் வில்லை எடுக்கச் சென்றான்.*

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள்ளன முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்திப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை என்பார் 53

*அப்போது அயலார்:—வள்ளல்-சனகன், வெள்ளம் அணைத்தவன்-கங்கையைக்கொண்ட சிவன்.*

தோகையர் இன்னன சொல்லிட, நல்லோர்
ஓகை விளம்பிட, உம்பர் உவப்ப
மாகம டங்கலும் மால்விடை யும்பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான் 54

ஓகை-உவகை, வாழ்த்து. மாகமடங்கல்-பெருஞ்சிங்கம், மால் விடை - காளை, நாகம்-மேருமலை, யானை.

ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதைஎ னும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடக மாலைஇ தென்ன எடுத்தான் 55

ஆட கவரை-பொன்மலை, சூடகம்-கைக்காப்பு, வளை-சங்குவளையற் சீதை, ஏடு அகம்-இதழ் உறு.

தடுத்திமையாமல் இருந்தவர்-தாளின்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர், கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார் 56

தாள்-கால் அடி, கடுப்பு-விரைவு.

நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்
தம்பியைக் காண்மின் என்பார், தவமுடைத் துலகம் என்பார்
இம்பர்இந் நகரில் தந்த இறைவனை இறைஞ்சும் என்பார் 57

வில் இறுந்ததைக் கண்ட மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால். கொம்பு-பூங் கொடிபோன்ற சீதை, தம்பி-இலக்குவன், நகர்-மிதிலை, தந்த-கொண்டு சேர்த்த, இறைவன்-முனி.

## எழுச்சிப் படலம்

உழுந்திட இடமிலை உலகம் எங்கணும்
அழுந்திய உயிர்க்கெலாம் அருட்கொம் பாயினன்
எழுந்திலன், எழுந்திடைப் படரும் சேனையின்
கொழுந்துபோய்க் கொடிமதில் மிதிலை கூடிற்றே 58

அருட்கொம்பு ஆயினன்-தசரதன். தசரதன் புறப்பட்டது:—எழுந்திலன்-புறப்பட்டிலன், இடை-வழிச்செல்லும். கொழுந்து-முன் அணி.

வார்குலாமுலை வைத்தகண் வாங்கிடப்
பேர்கிலாது பிறங்கு முகத்தினன்
தேர்கி லான்நெறி, அந்தரிற் சென்றெரு
மூரி மாமத யானையை முட்டினன் 59

வார்குலாம்-கச்சையணிந்த, (காமத்தின் விளைவு விளக்கப்பட்டது.)

## வரைக்காட்சிப் படலம்

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனும்இது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்உருள் உரைத்துரைத்தோடி
இருண்ட கல்லையும் தன்நிறம் ஆக்கிய இரதம் 60

மேலவர் - பெரியோர்களை, மருண்ட - பித்துற்ற, உருள்-சக்கரம், உரைத்து-தேய்த்து, பொன் உருளை தேய்க்கக் கல்லும் பொன்னாயிற்று.

## பூக்கொய் படலம்

நஞ்சினும் கொடியநாட்டம், அமுதினும் நயந்து நோக்கிச்
செஞ்செவே கமலக் கையால் தீண்டலும், நீண்ட கொம்பர்
தஞ்சிலம் படியின் மென்பூச் சொரிந்துடன் தாழ்ந்த என்றால்
வஞ்சிபோல் மருங்கு லார்மாட் டியாவரே வணங்கி லாதார் 61

நாட்டம்-கண், கொம்பர்-பூங்கொடி, சிலம்படி-சிலம்பு அணிந்த பாதங்கள்.

நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு வீழ்ந்தன, அலைப்பப் போகா:
புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார் 62

நளினம்-தாமரை, மதிநுதல் வல்லி-பெண்கள், மாலை-வரிசை, இனம்.

செம்மாந்த தெங்கின் இளநீரையோர் செம்மல்நோக்கி
அம்மா இவைமங்கையர் கொங்கைகள் ஆகும் என்ன
எம்மாதர் கொங்கைக்கிவை ஒப்பன?என் றேரேழை
விம்மா வெதும்பா வெயரா முகம்வெய் துயிர்த்தாள் 63

செம்மாந்த-நிமிர்ந்து ஓங்கிய, செம்மல்-தலைவன், ஏழை-பெண், விம்மா-விம்மி.

போர்என்ன வீங்கும், பொருப்பன்ன பொலங்கொள் திண்டோள்
மாரன் அனையான் மலர்கொய் திருந்தானை, வந்தோர்
கார்அன்ன கூந்தல் குயில்அன்னவள் கண்புதைப்ப,
ஆர்? என்னலோடும் அனலென்ன அயிர்த் துயிர்த்தாள் 64

பொலங்கொள்-அழகிய, பொருப்பு-மலை, மாரன்-மன்மதன், கார்-மேகம், அனல்-நெருப்பு.

ஊக்கம் உள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்னகை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது, வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே 65

காக்கல்-அடக்கல், முனிவர் காமத்தை அடக்கி நிற்பர் என்பது சொல்லளவே.

நாறு பூங்குழல் நன்னுதல் புன்னைமேல்
ஏறி னன்மனத் தும்பர்சென் றேறினள்
ஊறு ஞானத் துயர்ந்தவ ராயினும்
வீறு சேர்முலை மாதரை வெல்வரோ 66

மனத்தும்பர் ஏறினள்-மனத்தில் மேலிடம் பெற்றாள், வீறு-திரட்சி.

## நீர் விளையாட்டுப் படலம்

ஆன தூயவ ரோடுடன் ஆடினர்
ஞான நீரவர் ஆகுதல் நன்றரோ
தேனும் நாவியும் தேக்ககில் ஆவியும்
மீனும் நாறின, வேறினி வேண்டுமோ 67

நாறும் மீன்களும் தேன் கத்தூரித் தேக்கு அகில்மணம் பெற்றன.

தையல் லாளையோர் தாரணி தோளினன்
நெய்கொள் ஓதியில் நீர்முகந் தெற்றினன்:
செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல்
கையின் ஆட்டுங் களிற்றர சென்னவே 68

தார்-பூமாலை, ஓதி-முடி, களிற்று அரசு-யானை அரசு.

## உண்டாட்டுப் படலம்

வளையயில் முன்கைஓர் மயிலனாள்தனக்
கிளையவள் பெயரினைக் கொழுநன் ஈதலும்
முளையயி றிலங்கிட முறுவல் வந்தது,
களகள உதிர்ந்தது கயற்கண் ஆலியே 69

*கணவன், தன் தங்கையின் பெயரைச் சொல்ல, அவள் சகியாது கண்ணீர் வடித்தாள்.*

உருத்தெரி தன்மைய உயிரும் ஒன்றுதாம்,
அருத்தியும் அத்துணைஆய நீரினர்
ஒருத்தியும் ஒருத்தனும் உடம்பும் ஒன்றெனப்
பொருத்துவ ராம்எனப் புல்லி னர்அரோ 70

*உருவத்தோற்றமும் உயிரும் ஒன்றாகி, அன்பும் ஒன்றான தன்மை யானவர்-புல்லினர்.*

## எதிர்கோட் படலம்

கங்கைநீர் நாடன் சேனை, மற்றுள கடல்கள் எல்லாம்
சங்கினம் ஆர்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
பங்கயத் தணங்கைத் தந்த பாற்கடல் எதிர்வ தேபோல்
மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்ததன்றே 71

*கங்கைநீர் நாடு-அயோத்தி. வளநகர்-மிதிலை. மற்றக் கடல்கள் சேர்ந்து வரத், திருப்பாற் கடல் எதிர் கொள்வது போன்ற காட்சி-இனி மிதிலை வீதியில்—*

காவியும் குவளையும் கடிகொள்கா யாவும்ஒத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ ருருவுடன்
தேவரும் தொழுகழல் சிறுவன், முன் பிரிவதோர்
ஆவிவந் தென்ன,வந் தரசன்மா டணுகினான் 72

*காவி-நீலோற்பலம், கடி-வாசனை, சிறுவன்-இராமன், இராமன் தசரதரை அண்மினான்.*

## உலாவியற் படலம்

அரத்தமுன் டனைய மேனி அகலிகைக் களித்த தாளும்,
விரைக்கருங் குழலிக்காக வில்இற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளும் காண மறுகினில் வீழும் மாதர்
இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கும் ஈஇனம் என்னலானர் 73

*அரத்தம் உண்டு-செந்நிறங்கொண்ட, தாள்-பாதம், விரை-வாசனை, குழலி-சீதை.*

கருங்குழற் பாரம் வார்கொள் கனமுலை கலைசூழ் அல்குல்
நெருங்கின மறைப்ப, ஆண்டோர் நீக்கிடம் பெருது விம்மு
பெருந்தடங் கண்ணி காணும் பேரெழில் ஆசை தூண்ட
மருங்குலின் வெளிகளூடே வள்ளலை நோக்கு கின்ருள் 74

*காணும்-இராமனைக்காணும், கூந்தற்கற்றை, விரிந்த தனங்கள், தடித்த கீழ்ப்பாகம் மறைத்தலின்-இரு இடைகளுக்கு இடையே உற்ற வெளியூடு பார்வையைச் செலுத்திப் பார்த்து நின்ருள்.*

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரும் அஃதே,
வாள்கொண்ட கண்ணூர் யாரே வடிவினை முடியக் கண்டார் !
ஊழ்கொண்ட சமயத் தன்னுன் உருவுகண் டாரை ஒத்தார் 75

*வாள்கொண்ட-வாள் ஒத்த, பல சமயத்தினரும் தம்தம் முறைமைப்படி காண நிற்கும் பலவகை வடிவம்போல் மக்கள் இராமனைத் துய்த்தனர்.*

நாமத்தால்அழி வாள்ஒரு நன்னுதல்
சேமத்தார்வில் இறுத்தது தேருங்கால்
தூமத் தார்குழல் தூமொழித் தோகைபால்
காமத் தாலன்று, கல்வியி னுல்என்ருள் 76

*நாமத்தால்-விரகத்தால், சேம-போற்றப்பட்ட, கன்னி வேட்கையன்று, அவன் கல்வித்திறனே வில்லை ஒடித்தது. இனிச் சீதையின் மண அலங்காரம் : —*

## கோலங்காண் படலம்

அமிழ்இமைத் துணைகள் கண்ணுக் கணியென அமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலங்கள் நங்கை உருவினை மாய்ப்ப தோரார்,
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக் கழகு செய்தார்:
இமிழ்திரைப் பரவை ஞாலம் ஏழைமை உடைத்து மாதோ 77

*கண்ணுக்கு இமை அழகு, அவை கண்ணை மூடும், சீதையின் அணிகள் அவள் அழகை மறைக்கும்.*

கோனணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்
தீனமில் கலன்கள் தம்மின் இயைவன அணிதல் செய்தார்:
மானணி நோக்கி னூர்தம் மங்கல கழுத்துக் கெல்லாம்
தான்அணி யானபோது தனக்கணி யாது மாதோ 78

*கோன் அணி சங்கம்-திருமாலின் பாஞ்சசன்யம் கண்டம்-கழுத்து, சுமங்கிலிகளின் கழுத்துக்கு அணியாயிருக்கும் அவட்கு, அணியாகத்தக்கது வேறு யாது?*

**மொய்கொள் சீறடியைச் சேர்ந்த முளரிக்கும் செம்மையீந்த**
**தையலாள் அமிழ்தமேனி தயங்கொளி தழுவிக் கொள்ள,**
**வெய்யபூண் முலையிற் சேர்ந்த வெண்முத்தம் சிவந்த என்றால்**
**செய்யரைச் சேர்ந்துளாரும் செய்யராய்த் திகழ்வா ரன்றே** 79

*திருமகள் திருவடிபடலின் தாமரை செந்நிறம் பெற்றது, அவள் முகப் பொலிவால் மார்பின் வெண்முத்து செம்மையானது. செய்யர்-நல்லவர்.*

**சில்லியல் ஓதி கொங்கைத் திரள்மணிக் கனகச் செப்பில்**
**வல்லியும் அநங்கன்வில்லும் மான்மதச் சாந்தில் தீட்டிப்,**
**பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்ன, யார்க்கும்**
**இல்லை உண்டென்ன நின்ற இடையினுக் கிடுக்கண் செய்தார்** 80

*சில் இயல் ஓதி-நுண்ணிய அழகிய கூந்தல் பெற்ற சீதை.*

**பொன்னின்ஒளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்**
**மின்னின்நிழல் அன்னவள்தன் மேனிஒளி மான**
**அன்னமும்அ ரம்பையரும் ஆரமிழ்தும் நாண**
**மன்னவையி ருந்தமணி மண்டபம்அ டைந்தாள்** 81

*பொன் ஒளி, பூவின் மணம், சந்தனக் குளிர், மின்னலின் சாயல் உடைய சீதை மணமண்டபத்துள் வந்தாள். மான-ஒப்ப.*

**நைவளம்ந விற்றுமொழி நங்கைவர லோடும்,**
**வையம்நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்**
**கைகள்தலை புக்கன,க ருத்துளதும் எல்லாம்**
**தெய்வமென உற்ற:உடல் சிந்தைவயம் அன்றே** 82

*நைவளம்-பண், கொற்றவன்-தசரதர், மாதவர்-வசிட்டர் சதானந்தர், சீதையைக் கண்டதும் தெய்விகமே சிந்தையிற் பிறந்தது.*

**மாதவரை முற்கொளவ ணங்கிநெடு மன்னன்**
**பாதமல ரைத்தொழுது, கண்கள்பனி சோரும்**
**தாதையரு கிட்டதவி சில்தனியி ருந்தாள்;**
**போதினைவெ றுத்தரசர் பொன்மனைபு குந்தாள்** 83

*தாதை-சனகர், தவிசு-ஆசனம், போது-செந்தாமரை மலர், அரசர் மனை-மிதிலை அரசர் மனை.*

அச்சென நினைத்தமுதல் அந்தணன் இருந்தான்
பச்சைமலை ஒத்தபடி வத்தடல இராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கைஇவள் என்றால்
இச்சிலை கிடக்க,மலை ஏழையும இருனே! 84

அச்சு-மணவினைக்கு அச்சாணியாகக் கருதப்படும், அந்தணன்-கௌசிகன் அடல்-வலிமை, வடிக்கண்-மாவடுபோன்ற கண், இருனே-ஒடிப்பான்.

எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்
மெய்விளை விடத்துமுதல் ஐயம்விட லுற்றாள்
ஐயனை அகத்துவடி வேஅல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் நுகர்ந்தாள் 85

ஏய்ய-அம்பு எய்ய, மெய் விளைவு-உண்மை நடப்பு முதலாக, நாணத்தின் பெருமை விளக்கப்பட்டது.

## கடிமணப் படலம்

தெருவே திரிவார் ஒருசே வகனர்
இருபோ தும்விடார்: இதுஎன்னை கொலாம்!
கருளாய் கடலோ கரைகா ணரிதால்,
இருள்ஆ னதுதான் எனைஊ ழிகொலாம்! 86

இரவு வந்ததும் தனிமையிற் சீதை :—சேவகன்-வீரன், இருபோது-பகல் இரவு, கடல்போல் கரையற்ற இருள், ஊழிபோல் நீடிக்கிறது.

பண்ணோ ஒழியா, பகலோ புகுதா
தெண்ணோ தவிரா, இரவோ விடியா
உண்ணோ வொழியா, உயிரோ அகலா
கண்ணோ துயிலா, இதுவோ கடனே 87

எண்-எண்ணம், உண்ணோ-உள் நோவு, இவ்வாறே இராமனும் வருந்துகிறான் :—

கல்ஆர் மலர்சூழ் கழிவார் பொழிலோடு
எல்லாம் உளவா யினும்,என் மனமோ
சொல்ஆ ரமுதின் சுவையோ டினிதாம்
எல்லை தியர்தாம் விளையா டிடமே! 88

கல்-மலை; மலை, பொழில்பல இடங்கள் இருந்தும், மாதர் விளையாட்டுக் குரிய இடம் என் மனம் தானே!

**சிலையுடைக் கயல்வாள் திங்கள் ஏந்திழை செம்பொற் கொம்பர்**
**முலையிடை முகிழ்ப்பத் தேர்மேல் முன்திசை முளைத்தது அன்னாள்,**
**அலைகடற் பிறந்து, பின்னை அவனியிற் றோன்றி, மீள**
**மலையிடை உதிக்கின் றாள்போல் மண்டபம் அதனில் வந்தாள் 89**

*பொழுது விடிந்து, சீதை மணமண்டபத்துள் வருகிறாள். சிலையும் கயலும் திங்களும் ஏந்திய பூங்கொம்பு முல்லை அரும்புடன் கீழ்த்திசையில் தோன்றியதுபோல-முன்னர் பாற்கடல், பின்னர் மிதிலை-இப்போது மலை போன்றுயர்ந்த மண்டபத்துள் சீதை வந்தாள். அன்னாள்-ஒத்தவள்.*

**மன்றலின்வந்து மணத்தவி சேறி**
**வென்றிநெடுந்தகை வீரனும், ஆர்வத்**
**தின்துணை அன்னமும் எய்திஇருந்தார்:**
**ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார் 90**

*மன்றல்-மணவிழா, யோகத்தின் விளைவு போகம்.*

**கோமகன்முன் சனகன்குளிர் நன்னீர்**
**"பூமகளும் பொருளும்என நீஎன்**
**மாமகள் தன்னொடு மன்னுதி" என்னாத்**
**தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான் 91**

*பொருளே பூமகள்-அவ்வாறே நீவிர் ஒன்றி வாழ்க.*

**மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தே**
**முற்றிய மாதவர் தாள்முறை சூடிக்**
**கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்,**
**பொற்றொடி கைக்கொடு நன்மனை புக்கான் 92**

*பொற்றொடிக்கை-சீதையின் கையைப்பற்றிக்கொண்டு.*

**கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்**
**தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கா,**
**ஆயதன் அன்னை அடித்துணை சூடித்**
**தூய சுமித்திரை தாள்தொழ லோடும் 93**

**அன்னமும் அன்னவர் அம்பொன் மலர்த்தாள்**
**சென்னி புனைந்தனள்; சிந்தையுவந்தார்**
**கன்னி அருந்ததி காரிகை காண,**
**"நன்மக னுக்கிவள் நல்லணி" என்றாள் 94**

*அன்னம்-சீதை, கன்னி-கற்புறு.*

*அயோத்திக்குத் திரும்பும் வழியில் பரசுராமன் இராமனை எதிர்த்து:—*

## பரசுராமப் படலம்

இற்றேடிய சிலையின்திறம் அறிவென்:இனி யான்உன்
பொற்றேள்வலி நிலைசோதனை புரிவான்நசை யுடையேன்:
செற்றேடிய திரள்தோளுறு தினவும்சிறி துடையேன்
மற்றேர்பொருள் இலைஇங்கிதென் வரவென்றனன் உரவோன் 95

*இற்றேடிய-முரிபட்டுள்ள, நசை-விருப்பம், செற்று-அரசர்களை அழித்து, தினவு-குறுகுறுப்பு.*

உலகெலாம் முனிவர்க் கீந்தேன் உறுபகை ஒடுக்கிப் போந்தேன்
அலகில்மா தவங்கள் செய்தேன் அருவரை இருந்தேன்: ஆண்டைச்
சிலையைநீ இறுத்த ஓசை செவியுறச் சீறி வந்தேன்,
மலைகுவென்:வல்லை யாயின் வாங்கிடித் தனுவை என்றான் 96

*வாங்கிடு-வளை, மலைகுவன்-போர்செய்வேன். இராமன் வில்லை வளைத்து நின்று—*

பூதலத் தரசை எல்லாம் பொன்றுவித் தனை என்றாலும்,
வேதவித் தாய மேலோன் மைந்தன்நீ, விரதம் பூண்டாய்
ஆதலின் கொல்ல லாகாது, அம்பிது பிழைப்ப தன்றால்,
யாதுஇதற் கிலக்கம்ஆவ தியம்புதி: விரைவின் என்றான் 97

*மேலோன்-வேத விற்பன சமதக்கினிமுனி, பிழைப்பது-வீண்போவது, இலக்கு-குறிப்புப் பொருள்.*

எய்தஅம் பிடைபழுதெய்தி டாமல்என்
செய்தவம் யாவையும் சிதைக்கவே எனக்,
கைஅவண் நெகிழ்தலும் கணையும் சென்றவன்
மையறு தவம்எலாம் வாரி மீண்டதே 98

*நீ எய்யும் அம்பு வீணுகாமல் என் தவப்பலனை அழிக்கட்டும் என்று—*

எண்ணிய பொருள்எலாம் இனிது முற்றுக!
மண்ணிய மணிநிற வண்ண, வண்துழாய்க்
கண்ணிய, யாவர்க்குங் களைகண் ஆகிய
புண்ணிய, விடைஎனத் தொழுது போயினன் 99

*பின்னர் இராமனை வாழ்த்துகிறான் :—மண்ணிய-கழுவப்பட்ட, களைகண்-ஆதரவு, கண்ணிய-மாலையனே, விடைபெறுகிறேன் எனச் சென்றான்.*

பூமழை பொழிந்தனர் புகுந்த தேவருள்—
வாமவேல் வருணனை "மான வெஞ்சிலை
சேமி" என் றுதவித்,தன் சேனை ஆர்த்தெழ
நாமநீர் அயோத்திமா நகரம் நண்ணினன் 100

*வாம-அழகிய, நாம-பெயர் பெற்ற நீர் வளமுடைய அயோத்தி.*

# அயோத்தியா காண்டம்

## மந்திரப் படலம்

உற்றதுகொண்டுமேல்வந் துறுபொருள் உணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர், பிறப்பின் ஆற்றல் பெரியவர், அரிய நூலும்
கற்றவர், மானநோக்கிற் கவரிமா அனையநீரார் 101

*நடந்ததைக்கொண்டு பின் நடப்பதை அறிபவர், விதியை யாற்ற வல்லவர், நற்குடிப்பிறப்பு கல்வி மானம் உடையவர் அமைச்சர்.*

அறுபதி னுயிரர் எனினும் ஆண்டகைக்கு
உறுதியில் ஒன்றுஇவர்க் குணர்வென் றுன்னலாம்:
பெறலருஞ் சூழ்ச்சியர், தகவின் பெட்பினர்
மறி திரைக் கடலென வந்து சுற்றினர் 102

*எண்ணில் பலர், எண்ணத்தில் ஒருமித்தவர். உறுதி-நன்மை, சூழ்ச்சி-ஆய்வு, பெட்பு-அழகு.*

கன்னியர்க் கமைவருங் கற்பின், மாநிலந்
தன்னை இத்தகைதரத், தருமம் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்:
என்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணினேன் 103

*அமைச்சரைப் பார்த்து அரசன் :—மாதர் கற்போடு, நாட்டு நலம், தருமம் ஓம்பல் செய்து குடிகளைக் காப்பாற்றினேன்.*

ஓட்டிய பகைஞர்வந்து உருத்த போரிடைப்
பட்டவர் அல்லரேல், பரமஞானம் போய்த்
தெட்டவர் அல்லரேல், செல்வம் ஈண்டென
விட்டவர் அல்லரேல், யாவர் வீடுளார்? 104

*உருத்த-எதிர்த்த போரில் இறந்தவர், ஞானமுற்றவர், முற்றுந் துறந்தவர்களே வீடு பெறுவார்.*

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவரியும் பெய்யும் இன்னிழல்
நிச்சயம் அன்றெனின், நெடிது நாளுண்ட
எச்சிலை நுகர்வது இன்பம் ஆகுமோ? 105

*கச்சை-கழுத்துக் கயிறு, பிச்சம்-மயில் பீலிக்கற்றை, நிச்சயம் அன்று-நிலையற்றது, அதை விரும்புவது எச்சில் உண்பதாம்.*

மைந்தரை இன்மையின் வரம்பில் காலமும்
நொந்தனன்: இராமன்என் நோவை நீக்குவான்
வந்தனன்: இனியவன் வருந்த, யான்பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி எண்ணினேன் 106

பெருமகன் என்வயின் பிறக்க; சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகள் நிறைகுணத்து அவனி மாதெனும்
ஒருமகள் மணமுங்கண் டுவப்ப தாயினேன் 107

*அவனிமாது-நிலமகளை (நாட்டை) அவனுக்கு மணமுடித்து (முடிசூட்டி) மகிழ விரும்புகிறேன்.*

திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும், சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர் ஆங்கே
வெருண்டு, மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென இருந்தார் 108

*ஒரு கன்று உண்ணுவது மகிழ்ச்சியாயினும், மறுகன்று உண்ணாது அயல் நிற்பது தாய்ப் பசுவுக்கு வருத்தம். அதுபோல் இராமன் முடிசூடும் மகிழ்ச்சியும் மன்னர் துறவுபற்றிய கவலையும் எய்தினர். அமைச்சருடன் வசிட்டரும் மன்னன் கருத்தை ஆதரித்தனர்.*

மண்ணினும் நல்லள், மலர்மகள் கலைமகள் கலைஊர்
பெண்ணினும் நல்லள், பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்.
கண்ணினும் நல்லன், கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பர் 109

*நிலமகள் திருமகள் கலைமகள், மான்வாகன மலைமகள் இவர்களினும் நல்லாள் சீதை. கண், உண்ணும் நீர், உயிர் இவற்றினும் சிறந்தவன் இராமன். பின்னர் அரசர் கட்டளைப்படி சுமந்திரர் சென்று இராமனை அழைத்து வருகிறார்.*

மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்தஅப் பெருவில்
இற்ற அன்றினும், எறிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோ ருவகையன் ஆனான் 110

*அவன்-வசிட்டன், பிஞ்ஞகன் வில்-சிவனுடைய வில், மழுவாளன்-பரசுராமன், இழுக்கம்-பங்கம்.*

நீளெழுத் தொடர் வாயிலும் குழையொடு நெகிழ்ந்த,
ஆளகத்தினே டரமியத் தலத்தினும் அலர்ந்த,
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள் 111

*வாசல்களிலும் மாடிகளிலும் குண்டலம், விரிந்த கூந்தலுடன் தாமரை மலர்கள் தோன்றின. சன்னல்களில் வாள் வேல் வண்டு மீன் பெற்ற தாமரை மலர்கள் (மாதர் முகங்கள்) தோன்றின. குழை-குண்டலம், ஆளகம்-அளகம், முடி, அரமியம்-திறந்த வெளிமாடி. சாளரம்-சன்னல்.*

மாத வன்தன்னை வரன்முறை வணங்கி, வாள்உழவன்
பாத பங்கயம் பணிந்தனன், பணிதலும் அனையான்
காதல் பொங்கிடக் கண்பனி உகுத்திடக், கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகம் சேர்த்தான் 112

*இராமன் அவைக்கு வந்தான். மார்பகஞ் சேர்த்தான்-தழுவினன், மாதவன்-வசிட்டன், வாள் உழவன்-தசரதன்.*

நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பதென்! நளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைத்தான்
விலங்கல் அன்னதிண் தோளையும் மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும் தனதுதோள் மார்புகொண் டளந்தான் 113

*நளிநீர்-நீர்வளஞ் சிறந்த, விலங்கல்-மலை, திரு-திருமகள், அலங்கல்-பூமாலை, மகனை மார்புறத் தழுவினன் என்பதைவிட, அம்மார்பு நிலத்தைத் தாங்க வலியதோ ? என்று அளவிட்டான் என்பதுபோன்ற ஒரு காட்சி.*

உரிமை மைந்தரைப் பெறுகின்றது உறுதுயர் நீங்கி
இருமை யும்பெறற் கென்பது பெரியவர் இயற்கை:
தருமம் அன்னநிற் றந்தயான் தளர்வது தகவோ?
கருமம் என்வயின் செய்யின்,என் கட்டுரை கோடி 114

*மன்னன் இராமனைப் பார்த்து :—மக்களைப் பெறுவது கவலைகளை நீக்கி இம்மை மறுமை இன்பம் எய்த. தருமத்தின் உருவாகிய உன்னைப் பெற்ற யான் தளர்ச்சியுறுதல் முறையன்று. கோடி-கொள்க.*

மன்னரானவர் அல்லர்,மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலியர் அல்லர்:
பின்னு மாதவம் தொடங்கினோன் பிழைத்தவர் பிறர்யார்!
சொன்மறு மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார் 115

*மன்னர்களும் தேவர்கள் தலைவனாகிய இந்திரனும் பெருந்தவம் செய்தவரல்லர்; பெருந்தவத்தவர் யாரெனின் மறுத்துரைக்காத மக்களைப் பெற்றவரே.*

அணைய தாதலின், அருந்துயர்ப் பெரும்பரம் அரசன்
விணையின் என்வயின் வைத்தனன் எனக்கொள வேண்டா.
புணையு மாமுடி புணைந்திந்த நல்லறம் புரக்க
நிணையல் வேண்டும்:யான் நின்வயின் பெறுவதீ தென்ருன் 116

பெரும்பரம்-பெரிய அரச பாரத்தை, அறம் புரக்க-நாடாளும் கருமம் நடத்த, பெறுவது-பெறவேண்டியது.

தாதை அப்பரிசு உரைசெய்யத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன்இதென் றுணர்ந்தும்
ஏது கொற்றவன் ஏவியது அதுசெயல் அன்ருே
நீதி எற்கென நிணைத்தும்அப் பணிதலை நின்ருன் 117

கடன்-கடமை, அரச கட்டளையை ஏற்று நிற்பதே நீதி. பணிதலை நின்ருன்-கட்டளையைத் தலைமேற் கொண்டான்.

ஒத்த சிந்தையர் உவகையர் ஒருவர்க்கங் கொருவர்
தத்தமக்கு உற்ற அரசெனத் தழைக்கின்ற மனத்தர்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த, நன்றெனை அன்பிஞே டறிவிப்ப தானுர். 118

அத்த-ஐயனே, இராமனுக்கு முடிசூட்ட யாவரும் இணங்கினர்.

## மந்தரை சூழ்ச்சிப் படலம்

அந்நகர் அணிவுறும் அமலை வானவர்
பொன்னகர் இயல்பெனப் பொலியும் எல்வையில்
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினுள் 119

கூனி வருகிருள்:—அமலை–ஆரவாரம், எல்வையில்-காலத்தில், தீமை போல்-பாவத்தின் உருப்போல்.

அணங்குவாள் விடஅரா அணுகும் எல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லை;நீ உறங்குவாய் என்ருள் 120

கூனி கைகேசியைப் பார்த்து:—அணங்கு-துன்புறுத்து, விடஅரா-ராகு கேது, குணம் கெடாது-இயல்பு மாருமல், உணங்கு-வருந்து. வான்-மிக.

வெவ்விடம் அனையவள் விளம்ப, வேற்கணுள்
தெவ்அடு சிலைக்கைஎன் சிறுவர் செவ்வியர்,
அவ்வவர் துறைதொறும் அறந்தி றம்பலர்
எவ்விடர் எனக்குவந் தடுப்ப தீண் டென்றாள் 121

*வேல் கண்ணாள்-கைகேசி, தெவ் அடு-பகைவரை அழிக்கும், என் மக்கள் நல்லவர், நெறி நிற்பவர், ஆதலின் எனக்கு ஏது இடர்? என்றாள்.*

பராவரும் புதல்வரைப் பயக்க, யாவரும்
உராவரும் துயரைவிட் டுறுதி காண்பரால்,
விராவரும் புவிக்கெலாம் வேதமே அன்ன
இராமனைப் பயந்தஎற் கிடருண்டோ என்றாள் 122

*பராவஅரு-போற்றற்கு அரிய, உராவரு-வருத்தந்தருகிற, விராவரு, விரவி உலாவுதற்குரிய.*

ஆடவர் நகையுற, ஆண்மை மாசுறத்
தாடகை எனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவான், நாளைவாழ் விதெனச் சொல்லினள் 123

*கூனி கூறுகிறாள் :—கோடிய-வில் வளைத்த, பெண் கொலை செய்த இராமன் அரசனாவதே நாளை நடக்கப்போகிறது!*

மாற்றம்அஃ துரைத்தலும் மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அறிவும் ஒத்தவால்;
வேற்றுமை உற்றிலள், வீரன் தாதைபுக்
கேற்று,அவள் இருதயத் திருக்க வேகொலாம் 124

*மாற்றம்-சொல், மங்கை-கைகேசி, தசரதர் தனக்கு இணங்கி அவர் உள்ளத்தில் தான் இருப்பதால் அவள் களங்கமற்றிருந்தாள்.*

சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்தஆ சனத்தினி திருப்ப, நின்மகன்
அவந்தனுய் வெறுநிலத் திருக்க லானபோது
உவந்தவா றென்?இதற் குறுதி யாதென்றாள் 125

*கூனி :—கரிய செம்மல்-இராமன், அவந்தனு-அவம்ஆக, உவந்தவாறு— நீ இதில் மகிழ்கிறாயா? இத்துணிவு உனக்கு எவ்வாறு?*

போதி என் எதிர்நின்று,நின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனென். புறஞ்சிலர் அறியின்?
நீதி அல்லவும் நெறிமுறை அல்லவும் நினைத்தாய்
ஆதி: ஆதலின் அறிவிலி, அடங்குதி என்றாள் 126

உடனே கைகேசி :— நினைந்தாய்ஆதி-முறையற்றவை நினைத்தவளாகின்ருய். அடங்குதி-நாவை அடக்கு.

தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத்; துயரால்
ஈண்டு வந்துனை இரந்தவர்க் கிருநிதி அவளை
வேண்டி ஈதியோ? வெள்குதியோ?விம்மல் நோயால்
மாண்டு போதியோ? மறுத்தியோ? எங்ஙனம் வாழ்தி? 127

மந்தரை :—துன்புற்றுவந்து நிற்கும் யாசகர்கட்குக் கொடுக்கக் கோசலையை வேண்டுவாய் போலும்?

தீய மந்தரை அவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின், இமையோர்
மாயை யும்அவர் பெற்றுள வரம்உண்மை யாலும்,
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும் 128

தேவர்களின் மாயை, வரம்; அந்தணர்களின் தவம் இவற்ருல் மந்தரை சூழ்ச்சி பலித்தது.

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க, நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமான்.
இரக்க மின்மையன்ரு, இன்றிவ் வுலகங்கள் இராமன்
பரக்குந் தொல்புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே! 129

அல்லவர்-அரக்கர் அல்லாத்தேவர் முனிவர்கள், துரக்க-செலுத்த, கைகேயி செய்த கொடுமையே நாம் இன்று இராம கதையைத் துய்க்கச் செய்கிறது—எனப் பெருமிதமாகக் காட்டுகின்ருர் கம்பர்.

உரைத்த கூனியை உவந்தனள், உயிருறத் தழுவி
நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட்டி:
இரைத்த வேலைசூழ் உலகம்என் ஒருமகற் கீந்தாய்,
தரைக்கு நாயகன் தாய்இனி நீஎனத் தணியா— 130

ஆரம்-முத்து ஆரங்கள், தணியா-அமைதியோடு,அவள் கூறியபடி கைகேசி வரம்கேட்கத் துணிந்தாள்.

நவ்வி வீழ்ந்தென, நாடக மயில்துயின் றென்னக்
கவ்வை கூர்தரச், சனகியாம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்கும்என் றயோத்திவந் தடைந்தஅம் மடந்தை
தவ்வை யாம்எனக் கிடந்தனள் கைகயன் தனயை 131

நவ்வி-மான், நாடக-நடமாடும், துயின்று-கிடந்தது. கவ்வைகூர்-துன்ப மிக்கு, சீதையாகிய திரு நீங்கி அவ்விடத்தில் மூத்தவள் குடிகொண்டது போல், கேகயன் மகள் கிடந்தாள், அங்கு மன்னர் வந்தார்.

## கைகேசி சூழ்வினைப் படலம்

அடைந்துஅவண் நோக்கி அரந்தை என்கொல் வந்து
தொடர்ந்ததுஎனத்துயர் கொண்டுசோரும் நெஞ்சன்
மடந்தையை மானை எடுக்கும்ஆனை யேபோல்
தடங்கைகள் கொண்டு தழீஇஎடுக்க லுற்றான் 132

*அவண்-அவ்விடம், அரந்தை-துன்பம், நெஞ்சன்-தசரதர்.*

நின்று தொடர்ந்த நெடுங்கை தம்மை நீக்கி
மின்துவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தாள்.
ஒன்றும் இயம்பலள் நீடுஉயிர்க்க லுற்றாள்
மன்றல் அருந்தொடை மன்னன்ஆவி அன்னாள் 133

*நீக்கி விலக்கி, மின்-மின்னற்கொடி. மன்றல்-மணம், தொடை-மாலை. உனக்குத் தீங்கு செய்தாரை ஒறுப்பேன் என்றான் மன்னன்.*

வண்டுளர் தாரவன் வாய்மைகேட்ட மங்கை
கொண்டல் நெடுங்கணின் ஆலிகொங்கை கோப்ப
"உண்டு கொலாம்அருள் என்கண்,உன்கண் ணோக்கில்?
பண்டையஇன்று பரிந்தளித்தி" என்றாள் 134

*தார்அவன்-மாலையணிந்த மன்னன், வாய்மை-சொல், கொண்டல்-சூல் கொண்ட மேகம்: ஆலி-நீர் ஒழுக்கு, என்கண்-என்மீது, பண்டைய-பழைய வரங்களை.*

கள்ளவிழ் கோதை கருத்துணர்ந்த மன்னன்
வெள்ளநெடுஞ்சுடர் மின்னின்மின்ன நக்கான்:
உள்ளம் உவந்து செய்வன்,ஒன்றும் லோபேன்:
வள்ளல் இராமன்உன் மைந்தன்ஆணை என்றான் 135

*கோதை-பூஅணிந்த கூந்தல் கைகேயி, வெள்ளம்-மிக்க, உலோபேன்-ஈயாக்கருமி ஆகேன். கைகேயி இராமனைக் காட்டுக்கு அனுப்ப வரங் கேட்டாள்: உடனே மன்னன்:—*

மேவிநிலத்தில் இருக்கும் நிற்கும் வீழும்
ஓவியம் ஒப்ப உயிர்ப்படங்கி ஓயும்
பாவியை உற்றுஎதிர் பற்றிஎற்ற எண்ணும்
ஆவி பதைப்ப அலக்கண் எய்துகின்றான் 136

*எற்ற-உதைக்க, அலக்கண்-துன்பம்.*

பெண்என உற்ற பெரும்பழிக்கு நாணும்
உண்ணிறை வெப்போ டுயிர்த் துயிர்த்து உலாவும்
கண்ணினின்நோக்கும் அயர்க்கும்மிகக் கைவேல்
புண்ணுழை தைக்க உழைக்கும்ஆனை போல்வான் 137

உண்ணிறை-உள்ளத்து நிறைந்த, அயர்-சோர்வு. கைகேயி மனங் கலங்காது நின்றாள்.

இந்நிலை நின்றவள் தன்னை எய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவன்-நீதிசைத்த துண்டோ?
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்சமுண்டோ?
அந்நிலை சொல்,என தாணை உண்மை என்றான் 138

எய்த-நன்குபொருந்த, எனது ஆணை-என்மீது சத்தியமாக உரை

திசைத்ததும் இல்லை, எனக்கு வந்து தீயோர்
இசைத்ததும் இல்லை முன்ஈந்த இவ்வ ரங்கள்
குசைப்பரியோய், தரின்இன்று கொள்வன்: அன்றேல்
வசைத்திறம் நின்வயின் வைத்து மாள்வன் என்றாள் 139

திசைத்தது-திகைத்தது. குசைப்பரியோய்-கடிவாளமிட்ட குதிரைகள் உடையோனே; வசை வைத்து-உனக்கு வசை உண்டாக்கி.

ஒறுப்பினும் அந்தரம், உண்மை ஒன்றும் ஓவா
மறுப்பினும் அந்தரம் என்று, வாய்மை மன்னன்
பொறுப்பினும் இந்நிலை போகிலாளை வாளால்
இறுப்பினும் ஆவது இரப்பதென் றெழுந்தான் 140

ஒறுப்பினும்-இவளை உதைத்தாலும், அந்தரம்-கேவலம், ஓவா-ஓம்பாமல். பொறுப்பதை விடவும், தீயநிலையில் திரும்பாத இவளை வாளால் கொன்று முடிப்பதை விடவும், இரந்து நிற்பதே செய்தற்குரியது என எழுந்தான்.

கோல்மேற் கொண்டும், குற்றம் அகற்றிக் குறிகொண்டார்
போல்,மேலுற்ற துண்டெனின் நன்றும் பொறைஎன்னுக்
கால் மேல்மேல் வீழ்ந்தான்: கந்துகொல் யானைக் களிமன்னர்
மேல்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான் 141

செங்கோல் பிடித்துக் குற்றங்களை ஒழித்து நலங்காண்பதில் நோக்க முடையவர்போல், மேல்விளைவது நன்மை எனின் பொறுமையும் நல்லதே என்று-அரசர் பலரும் வந்துவிழும் பாதங்களையுடைய மன்னன் கைகேயின் பாதங்களில் விழுந்தான்.

கண்ணேவேண்டும் என்னினும் ஈயக் கடவேன்,என்
உண்ணேர் ஆவி வேண்டினும் இன்றே உனதன்றே:
பெண்ணே, வண்மைக் கைகயன் மானே, பெறுவாயேல்
மண்ணே கொள்நீ, மற்றையதொன்றும் மறஎன்ருன் 142

உண்ணேர்-உள்ளூற்ற, மண்-நாடு வெறுப்பினுல் மண்ணுகத் தோன்றிற்று, இராமன் காடு செல்லுதல் எனவாயாற் சொல்லவுஞ் சகியாணுய் "மற்றைய ஒன்று" என்ருன்.

நின்மகன் ஆள்வான், நீஇனிது ஆள்வாய், நிலம்எல்லாம்
உன்வயம் ஆமே,ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்.
என்மகன் என்கண் என்னுயிர், எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடுஇற வாமை நய என்ருன் 143

நீ இனிது ஆள்வாய், உரைகுன்றேன்-சொல்மாறேன், நாடு இறவாமல்-நாட்டைவிட்டு நீங்காமல்..

மண்ணுள் இன்ரு ராகி நலத்தால் மதியால் வைத்து
எண்ணு நின்ருர் யாரையும் எல்லா இகலாலும்
விண்ணேர் காறும் வென்ற எனக்குஎன் மனைவாழும்
பெண்ணுல் வந்தது அந்தரம் என்னப் பெறுவேனே 144

நலத்தால் மதியால்-நலத்தாலும் மதியாலும் சிறந்த அரசர் பலரையும், இகல்-போர், அந்தரம்-முடிவு, அழிவு. முடி சூட்டலை எண்ணி—

மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வதிட்டன் ஒத்தார். வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார், அன்னுள் திருவினை ஒத்தாள். அவ்வூர்
சாதுகை மாந்தர் எல்லாம் தயரதன் தன்னை ஒத்தார் 145

இராமன் முடிசூட்டு விழாக்காண, (திருமணமுற்ற) மூத்தமாதர் கோசலை போலவும், வேதியர் பலரும் வசிட்டர் போலவும், இளங்கன்னியர் சீதை போலவும், சீதை திருமகள் போலவும், சாகேதபுரி என்னும் அவ்வூர் (அயோத்தி) மக்கள் தசரதர் போலவும் மனத்தில் மகிழ்ச்சியடைந்தனர்.

தாய்கையில் வளர்ந்திலன், வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தை:கிளர் ஞாலம்இவன் ஆள
ஈகையின் உவந்தஅவள் இயற்கைஇது என்ருல்
தோகைஇவள் பேருவகை சொல்லல்அரி தென்பார் 146

இவனை வளர்த்தது கைகேசி; இவன் அரசாளவும் அவள் உவந்து நிற்கிருள்; அவள் மகிழ்ச்சியை நம்மால் அளவிடமுடியுமோ!

**பாவமும் அருந்துயரும் வேர்பறியும் என்பார்**
**பூவலயம் இன்றுதனி அன்று,பொது என்பார்**
**தேவர்பகை உள்ளனஇவ் வள்ளல்தெறும் என்பார்**
**ஏவல் செய்யும் மன்னர்தவம் யாவதுகொல்! என்பார் 147**

பறியும்-நீங்கும், பொது-மக்களாட்சிபோல் ஆகும். பகை உள்ளன-அரக்கரை, ஏவல் செய்-இவனுக்குப் பணி செய்கிற, இராமன் கைகேசி அரண்மனை நோக்கி வருகிறான் : அவளும் அவன் எதிர்வந்தாள்.

**வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி, வாய்த்த**
**சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து, மற்றைச்**
**சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்:**
**அந்திவந் தடைந்த தாயைக் கண்டஆன் கன்றின் அன்னான் 148**

சென்னி-தலை, சிந்துரம் ஒத்த செவ்வாய், புதைத்து-பொத்தி, தானை-மேலாடை, துவண்டு-வணக்கத்துடன், ஆன்-பசு.

**ஆழிசூழ் உலகம்எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்**
**தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவம்மேற் கொண்டு**
**பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி**
**ஏழிரண் டாண்டில் வாஎன் றியம்பினன் அரசன் என்றாள் 149**

கைகேசி மன்னன் உரைத்ததாகக் கூறுகிறாள்: பூழி-புழுதி, துறை-தீர்த்தம்.

**இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே! யாரும்**
**செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்,**
**ஒப்பதே முன்பு, பின்புஅவ் வாசகம் உணரக் கேட்ட**
**அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா. 150**

முன் எப்போதும் தாமரை மலரை ஒத்திருக்கும் முகம்இப்போது, புதிதாக விரிந்த தாமரை மலரையும் வென்று நின்றது. செவ்வி-அழகு, பொலிவு.

**தெருளுடை மனத்து மன்னன் ஏவலில் திறம்பஅஞ்சி**
**இருளுடை உலகந் தாங்கும் இன்னலுக் கியைந்து நின்றான்**
**உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரேறு**
**அருளுடை ஒருவன் நீக்க, அப்பிணி அவிழ்ந்த தொத்தான் 151**

தெருள்-தெளிந்த ஞானம்: திறம்ப-மறுக்க, சகடம்-வண்டி, வண்டியில் உரியவன் பூட்டிச் செலுத்திய காளையைக் கருணை உள்ளத்தான் ஒருவன் அவிழ்த்து நீக்க, அவ்வருத்தம் நீங்கி நிற்பது போல் இராமன் உணர்ந்தான்.

**மன்னவன் பணிஅன்ருகில் நும்பணிமறுப்பனே?என்**
**பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன்பெற்ற தன்ரே?**
**என்இனி உறுதிஅப்பால்? இப்பணி தலைமேற் கொண்டேன்**
**மின்ஒளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன் 152**

*பின்னவன்-தம்பி பரதன், உறுதி-நன்மை, உம் கட்டளையைத தலைமேற் கொண்டு நிறைவேற்றுகிறேன.*

## நகர் நீங்கு படலம்

**குழைக்கின்ற கவரிஇன்றிக், கொற்றவெண் குடையு மின்றி**
**இழைக்கின்ற விதிமுன்செல்லத், தருமம்பின் இரங்கியேக**
**மழைக்குன்றம் அனையான்மௌலி கவித்தனன் வரும்என்றென்று**
**தழைக்கின்ற உள்ளத் தன்னுள் முன்ஒரு தமியன் சென்ருன் 153**

*இராமன் : கவரி-சாமரை, விதியாவற்றையும் நடத்த; தருமம் இரங்கி ஏங்க; மௌலி - மகுடம், மழைக்குன்றம் - நீலமேகந்தங்கிய மலை, தழைக்கின்ற-எண்ணி எண்ணி மகிழ்கிற, தமியன்-தனியனுக.*

**புனைந்திலன் மௌலி, குஞ்சி மஞ்சனப் புனித நீரால்**
**நனைந்திலன் என்கொல்? என்னும் ஐயத்தாள் நளின பாதம்**
**வனைந்தபொற் கழல்கால் வீரன் வணங்கலும், குழைந்து வாழ்த்தி**
**நினைந்ததென்? இடையூ றுண்டோ? நெடுமுடி புனைதற் கென்ருள் 154**

*மௌலி - கிரீடம், குஞ்சி - தலைமுடி, மஞ்சனப் புனிதநீர் - நீராடப் பெற்ருனில்லை, ஐயத்தாள்-ஐயுற்றகோசலை, நளினம்-தாமரை.*

**மங்கை அம்மொழி கூறலும், மானவன்**
**செங்கை கூப்பி,நின் காதல் திருமகன்**
**பங்க மில்குணத்து எம்பி பரதனே**
**துங்க மாமுடி சூடுகின் ருன்என்ருன் 155**

*உன் அன்பு மகன், என் தம்பி, பங்கமில்லாத குணப்பரதன், துங்கம்-சிறந்த.*

**முறைமை அன்றென்பது ஒன்றுண்டு, மும்மையின்**
**நிறைகுணத்தவன், நின்னினும் நல்லனுல் :**
**குறைவிலன் எனக் கூறினள்: நால்வர்க்கும்**
**மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினுள் 156**

*முறைமை அன்று-அரசியல் முறை அன்று இளையவன் முடிசூடல், மும்மை-மும்மடங்கு, மறுஇல்-களங்கம் இல்லாத, களங்கமின்றி நான்கு மக்களிடத்தும் வேற்றுமை காட்டாத கோசலை.*

என்று பின்னரும் மன்னவன் ஏவியது
அன்றெ னுமை மகனே, உனக் கறன்:
நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழி பல்,என்ருள் 157

*அரச கட்டளைக்கு அடங்கி நடப்பதே அறம். ஒன்றி-அவனுடன் இயைந்து, நும்பி-தம்பி.*

சிறந்த தம்பி திருவுற, எந்தையை
மறந்தும் பொய்யிலன் ஆக்கி, வனத்திடை
உறைந்து நீரும் உறுதிபெற் றேன்,இதிற்
பிறந்து யான்பெறும் பேறென்ப தியாவதே! 158

*தந்தை சொல்லை மெய்ப்பிக்கும் இதைவிட நான் பெறும் பேறு யாதுளது?*

ஆகின் ஐய, அரசன்றன் ஆணையால்,
ஏகல் என்பது யானும் உரைக்கிலேன்:
சாகலா உயிர் தாங்கவல் லேனையும்
போகின், நின்னொடுங் கொண்டனை போகென்ருள் 159

*ஏகல்-ஏகாதே, சாகாமல் உயிரைத் தாங்கிநிற்கும் என்னையும் உடன் அழைத்துச்செல்.*

சித்தம் நீ திகைக் கின்றதென்? தேவரும்
ஒத்த மாதவம் செய்துஉயர்ந் தாரன்றே.
எத்த னைக்குள ஆண்டுகள், ஈண்டவை
பத்தும் நாலும் பகல்அல வோ! என்ருன் 160

*தேவர் தவம்செய்தே சிறப்புற்ருர்; யானும் அவ்வாறு சிறப்புற்று வருவேன். பதினன்கு ஆண்டுகளும் பதினன்கு நாட்கள்!*

கொழுநன் துஞ்சும் எனவும், கொள்ளாது உலகம் எனவும்
பழிநின் றுயரும் எனவும், பாபம் உளதாம் எனவும்
ஒழிகின்றிலை, அன்றியும்ஒன் றுணர்கின்றிலை,யான் இனிமேல்
மொழிகின்றனஎன்? என்று முனியும் முறைஅன்றென்ருன் 161

*வசிட்டர் கைகேசியைப் பார்த்து :— துஞ்சும்-இறப்பான், பழி பாவங்களை உணரா உனக்கு யான் என்ன சொல்வது? உன் செயல் முறையற்றது.*

கண்ணோ டாதே, கணவன் உயிரோடு இடர்கா ணுதே
புண்ணோ டோடுங் கனலோ, விடமோ என்னப் புகல்வாய்,
பெண்ணோ தீயோ மாயாப் பேயோ கொடியாய், நீஇம்
மண்ணோ டுன்னோடென்னும்! வசையோ வலிதே என்ருன் 162

இரக்கம் இல்லை, கணவன் இடரை அறிவா யல்லை. புண்ணிற்பட்ட தீ, விடம்போல் புகல்கின்றாய்? மன்னனுக்கு இனி நாட்டோடும் உன்னோடும் என்ன உளது?. தசரதன் நொந்து புலம்புகிறார்:—

கண்டேன் நெஞ்சம் கனிவாய்க், கனிவாய் விடம்நான் நெடுநாள்
உண்டேன், அதனால் நீஎன் உயிரை முதலோடு உண்டாய்
பண்டே எரிமுன் உன்னைப் பாவி, தேவி யாகக்
கொண்டேன் அல்லேன், வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன் 163

கனிந்த நெஞ்சம் என்று எண்ணி, உன் வாய்விடத்தைப் பருக, அது என் உயிரை உண்டது. உன்னை மனைவியாகப் பெற்றே னல்லேன்; என்னை மாய்க்கும் யமனாகப் பெற்றுள்ளேன். எரிமுன்-திருமணத்து அக்கினிமுன்.

விழிக்குங் கண்வேறில்லா வெங்கான் என்கான் முளையைச்
சுழிக்கும் வினையால் ஏகச் சூழ்வாய்; என்னைப் பேழ்வாய்
பழிக்கும் நாணாய்? மாணாப்பாவி, இனிஎன்பல?உன்
கழுத்தின் நாண்உன் மகற்குக் காப்பின் நாணும் என்றான் 164

விழிப்பின், கண்முன் வெம்மை தவிர வேறு இல்லாத கடுங்காட்டிற்கு என் மகனைச் செலுத்துகின்றாய்; என்னைப் பிளக்கின்றாய்: இனி உன் கழுத்துத் தாலிக்கயிற்றை உன் மகனுக்குக் காப்புக் கயிறாக்கு, (தாலியை இழந்து நிற்பாய்).

இன்னே பலவும் பகர்வான் இரங்கா தாளை நோக்கிச்
சொன்னேன் இன்றே: இவள்என் தாரம் அல்லள் துறந்தேன்;
மன்னே ஆவான் வரும்அப் பரதன் தனையும் மகன்என்று
உன்னேன், முனிவா அவனும் ஆகான் உரிமைக்கென்றான் 165

தாரம்-மனைவி, மன்னே ஆவான்-இனி அரசனாக வரும். உரிமைக்கு: எமக்கு ஈமக்கடன் செய்யும் உரிமைக்கு.

கண்ணும் நீராய் உயிரும் ஒழுகக் கழியாநின்றேன்
எண்ணும் நீர் நான்மறையோர் எரிமுன் நின்மேற் சொரிய
மண்ணும் நீராய் வந்த புனலை மகனே, வினையேற்கு
உண்ணாம் நீராய் உதவி உயர்கான் அடைவாய் என்றான் 166

கண் நீர்பெருக்க, உயிர் ஒழுகத் தேய்கிறேன். எண்ணும் நீர்-மதிப்புறு தன்மையுடைய. மண்ணும் நீர்-முடிசூட்டு விழா நீராட்ட வந்த மங்கல நீர். உண்ணும் நீர்-இறக்கும் முன் ஊட்டும் நீராக உதவிக் கடன் ஆற்றி.

படைமாண் அரசைப் பலகால் பழிவாய் மழுவால் எறிவான்
மிடைமா வலிதான் அனையான் வில்லால் அடுமா வல்லாய்,
உடைமா மகுடம் புனைஎன் றுரையா, உடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தேன் அந்தோ? என்றான் 167

*அரசை-அரசர்களை, எறிவான்-அழித்த பரசுராமன், மாபலிச் சக்கரவர்த்தி ஒத்த வலியன். அடும்-வென்ற, மகுடம் புனை என்று உரைத்து சடா மகுடம் தந்து நிற்கின்றேன்!*

**பொன்னின் முன்னம் ஒளிரும் பொன்னே, புகழின் புகழே,**
**மின்னின் மின்னும் வரிவிற் குமரா, மெய்யின் மெய்யே,**
**என்னின் முன்னம் வனம்நீ அடைதற்கு எளியேன் அல்லேன்,**
**உன்னின் முன்னம் புகுவேன் உயர்வா னகம்யான் என்றான் 168**

பொன்களில் முதன்மையான பொன்னே, மின்னலினும் விளக்க முறுவோய்! உன்னை வனத்துக்கு அனுப்பிப் பார்க்க அத்துணை சிறு மனம் உடையவ னல்லேன். உனக்கு முன் யானே வானையடைவேன்.

**நெகுதற் கொத்த நெஞ்சும், நேயத் தாலே ஆவி**
**உகுதற் கொத்த உடலும் உடையேன்: உன்போல் அல்லேன்**
**தகுதற் கொத்த சனகன் தையல் கையைப் பற்றிப்**
**புகுதற் கண்ட கண்ணால் போகக் காணேன் என்றான் 169**

உருகும் நெஞ்சு, உயிர் நீங்கும் உடலுடன் கிடக்கிறேன். உன் அத்தனை உறுதி எனக்கில்லை. சீதையைப்பற்றி நகர் வந்த நீ இனி நகர் நீத்துக் கான் போவது காணச் சகியேன்.

**அள்ளற் பள்ளப் புனல்சூழ் அகல்மாநிலமும் அரசும்**
**கொள்ளக் குறையா நிதியின் குவையின் முதலாம் எவையும்**
**கள்ளக் கைகேசிக்கே உதவிப் புகழ்கைக் கொண்ட**
**வள்ளல் தனம்என் உயிரை மாய்க்கும் மாய்க்கும் என்றான் 170**

அள்ளல் - சேறு, புனல் - நீர், குவை - குவியல், எல்லாம் கள்ளக் கைகேசிக்கே கொடுத்த மனம் இப்போது என் உயிரை மாய்க்கின்றது.

**மெய்யார் தவமே செய்துஉன் மிடல்மார்பு அரிதிற் பெற்ற**
**செய்யாள் என்னும் பொன்னும், நிலமாதென்னும் திருவும்**
**உய்யார் உய்யார், கெடுவேன் உன்னைப் பிரியின் வினையேன்,**
**ஐயா, கைகே சியைநேர் ஆகேனோநான்? என்றான் 171**

தவஞ்செய்து உன் மார்பில் தங்கப்பெற்ற திருமகளும், நீ அரசாள வேண்டிய நிலமகளும் இனி உய்வாரோ? உன்னைப்பிரிந்து யான் உய்வேனோ? நான் கைகேசியை ஒத்த ஒரு பாவியே-என்ற அரசனை நோக்கிக் கோசலை:—

**மெய்யின் மெய்யே, உலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே,**
**உய்யும் வகைநின் உயிரை ஓம்பாது இங்கன் தேம்பின்,**
**வையம் முழுதும் துயரால் மறுகும்: முனிவனுடன்நம்**
**ஐயன் வரினும் வருமால்: அயரேல் அரசே, என்றாள் 172**

உயிரை ஓம்பாது நீர் கலக்கமுறின், உலகம் முழுவதும் கலக்கமுறும். வசிட்டருடன் இராமன் மீண்டு வரலாம், கலங்கேல்-என்ருள். இச்செய்தி அறிந்த நகரத்தவர் வருந்தினர்.

வாரார் முலையாரும் மற்றுமுள மாந்தர்களும்
ஆராத காதல் அரசர்களும் அந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோன் உரைசெவியிற்
சாராத முன்னம் தயரதனைப் போல்வீழ்ந்தார் 173

வார்ஆர்-கச்சு அணிந்த, பெரியோன்-வசிட்டர்.

கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உய்யாள்பொற் கோசலைஎன் ருேவாது வெய்துயிர்ப்பார்
ஐயா இளங்கோவே, ஆற்றுதியோநீ? என்பார்
நெய் ஆரலழலுற்றது உற்ருர்அந் நீள்நகரார் 174

நெய் இட்ட நெருப்புப்போல் கொதித்து நின்ருர்.

சிங்கக் குருளைக்கு இடுதீஞ் சுவையூனை நாயின்
வெங்கண் கடுங்குட்டியை யூட்ட விரும்பினளே!
நங்கைக்கு அறிவின்திறம் நன்றிது! நன்றிதென்னுக்
கங்கைக்கு இறைவன் கடகக்கை புடைத்துநக்கான் 175

இலக்குவன் :—குருளை-குட்டி, ஊனை-உணவை, கங்கை-கோசலநாடு, கடகம்-காப்பு, நங்கை-கைகேசி.

இளையான் இதுகூற, இராமன் இயைந்தநீதி
வளையாவரு நன்னெறி நின்அறிவாகும் அன்றே!
உளையா அறம் வற்றிட,ஊழ் வழுவுற்ற சீற்றம்
விளையாத நிலத்துஉனக் கெங்கன் விளைந்த தென்ருன் 176

நீதி தவருமல் நன்னெறியில் நடப்பது உன் இயல்பு. சலிக்காத தருமம் அழிய; முறைமைக்கு மாறுபாடான சினம் என்றுமில்லாதவாறு எவ்வாறு பிறந்தது? வளையா-பிறழாத, உளையா-அழியா, விளையாத-உண்டாகாத.

நதியின் பிழையன்று நறும்புனலின்மை. அற்றே
பதியின் பிழையன்று, பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று, மகன் பிழையன்று. மைந்த!
விதியின் பிழை,நீ இதற்கென்னை வெகுண்டதென்ருன் 177

நறும்புனல்-நன்னீர், பதி-தலைவர், தந்தை. பயந்து-பெற்று, புரந்தாள்-வளர்த்த கைகேசி, மகன்-பரதன், மைந்த-தம்பீ.

உதிக்கும் உலைஉள்ளூறு தீயென ஊதைபொங்கக்
கொதிக்கும்மனம், எங்கன மாற்றுவேன்? கோள்இழைத்தாள்
மதிக்கும்மதியாய், முதல்வானவர்க்கும் வலீஇ தாகும்
விதிக்கும் விதியாகும் என்வில்திறம் காண்டி என்றான் 178

*உலைக்களத்துப் பிறக்கும் தீப்போல் மூச்சுயிர்த்து, கோள்-இடையூறு; தேவர்கட்கும் வெல்ல அரிய வலிய விதிக்கும் விதியாக நிற்கும் என் வில்.*

ஆன்றான் பகர்வான்பின்னும்,இவ் வையம் மையல்
தோன்றா நெறிவாழ் துணைத்தம்முனைப் போர்தொலைத்தோ,
சான்றோர் புகழுந் தவத்தாதையை வாகைகொண்டோ,
ஈன்றாளை வென்றோ, இனி இக்கதந் தீர்வதென்றான் 179

*ஆன்றான்-பெரியோன், இராமன். உலக மையல் இல்லாத ஒரு துணைவனைப் போரில் அழித்தோ, தெய்வத் தந்தையைப் புண்படுத்தியோ, தாய் மீது வெற்றிகொண்டோ, உன் சினத்தை ஆற்றுவது?*

செல்லும் சொல்வல்லான்எதிர் தம்பியும்—தெவ்வர்சொல்லும்
சொல்லும் சுமந்தேன்,இரு தோளெனச் சோம்பிஓங்கும்
கல்லும் சுமந்தேன், கணைப்புட்டிலும் கட்டமைந்த
வில்லும் சுமக்கப் பிறந்தேன், வெகுண்டென்னை! என்றான் 180

*காரியத்தைச் சாதிக்கும் முறையிற்பேசும் இராமனை நோக்கி இலக்குவன் "பகைவர் புகழும் புகழ் உரை அன்று தாங்கினேன் : இன்று மலைபோன்ற தோள் சோம்பி நிற்கக்கொண்டேன், அம்பறுத்தூணியும் வில்லும் வறிதே சுமந்து நிற்கலானேன், யான் வெகுண்டு யாது பயன்? என்றான். இராமன்:-*

நன்சொற்கள் தந்துஎனை நாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்துஎற்கு அரசாள்வது தக்கதன்றால்.
என்சொற் கடந்தால் உனக்கு யாதுளது ஈனம்? என்றான்
தென்சொற்கடந்தான் : வடசொற் கடலுக் கெல்லைதேர்ந்தான் 181

*தென்மொழியின் எல்லை கடந்தவனும் வடமொழியின் எல்லை கண்டவனுமாகிய இராமன் "நன் சொற்களால் என்னை வளர்த்த தாதையின் சொல்லுக்கு மாறுபட்டு நான் அரசாள்வது தக்கதன்று : நீ என் சொற்படி கேட்டு நடந்தால், அதனால் உனக்கு யாது குறை? என்றான். சொற்கள் தந்தால்-சொற்படி நடந்தால்.*

சீற்றந் துறந்தான், எதிர்நின்று தெரிந்துசெப்பும்
மாற்றந் துறந்தான்: மறைநான்கென வாங்கல்செல்லா
நாற்றெண் டிரைவேலையின் நாயகன் ஆணையாலே
ஏற்றந் தொடங்காக் கடலிற் றணிவு எய்திநின்றான் 182

*சீற்றத்தையும் எதிர்த்துப் பேசுதலையும் விட்டான் இலக்குவன். நான்கு வேதங்களையும் ஒத்துப், பிற்படா நான்கு கடல்போன்ற இராமனின் ஆணை*

யால், தம்பி பொங்கிளழாக் கடல்போல் அடங்கிநின்றான். வாங்கல்-பின்னிடல், ஏற்றம்-எழுச்சி.

வாள்நித்திலவெண் ணகையார்தர, வள்ளல்தம்பி
யாணர் திருநாடு இழப்பித்தவர் ஈந்தளல்லாம்
பூணப் பிறந்தா னும்நின்றான்:அவை போர்வில்லோடும்
காணப் பிறந்தே னும்நின்றேன்: அவைகாட்டும் என்றான் 183

இலக்குவன் :—நித்தில நகையார்-முத்துப்போன்ற பல்பெற்ற மாதர். தர-மரவுரி தர, நாட்டையும் இழக்கவைத்து மரவுரியும் அளிக்க அவற்றைப் பூணுகிறான் ஒருவன்; யான் கைவில்லோடு அவற்றைக் கண்டு நிற்கின்றேன்! அவை-மரவுரி. வாள்-ஒளி. பின் சுமித்திரையிடம் இலக்குவன் விடை கேட்க-

ஆகா ததன்றால், உனக்கவ் வனமிவ் வயோத்தி,
மாகா தலிராமன் அம் மன்னவன், வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம்பூங் குழற்சீதை என்றே
ஏகாய்: இனிஇவ் வயின்நிற்றலும் ஏதம் என்றாள் 184

காடு செல்வது ஒவ்வாததன்று. அவ்வனம் உனக்கு அயோத்தி; இராமன்-மன்னவன், சீதை-உன் தாய்—என்று எண்ணிச் செல். இனி இங்கு நிற்பதும் தீது.

பின்னும் பகர்வாள் : மகனே இவன்பின் செல்:தம்பி
என்னும் படியன்று, அடியாரினில் ஏவல் செய்தி:
மன்னும் நகர்க்கே இவன்வந் திடின்வா: அதன்றேல்
முன்னம் முடிஎன்றனள்,பால் முலைசோர நின்றாள் 185

அடியாரின்-ஊழியன்போல். முன்னம்முடி-அவனுக்காக உயிரைக் கொடுத்து உழை.

பைந்தொடி ஒருத்திசொல் கொண்டு, பார்மகள்
நைந்துயிர் நடுங்கவும், நடத்தி கான்எனு-
உய்ந்தனன் இருந்தனன் உண்மை காவலன்
மைந்தன்!என் றினையசொல் வழங்கினாய், எனு— 186

இராமன், இலக்குவன் உடன் வருவதை மறுக்க, அதற்குப் பதிலாக இலக்குவன் :—ஒரு பெண்ணின் சொல்லை ஏற்று, உலகம் எல்லாம் வருந்த உன்னைக் "காடு செல்" என்று சொல்லி உயிர்வாழ்ந்துவரும் ஒருவன் பெற்ற மகன் என்று எண்ணியோ என்னை இவ்வாறு தடுக்கின்றனை :

மாறினி என்னை!நீ வனங்கொள்வாய்எனா:
ஏறிய வெகுளியை யாது முற்றுற
ஆறினை தவிர்கென—ஐய, ஆணையிற்
கூறிய மொழியினும் கொடிதுஇதாம் என்றான் 187

வேறு இனி உரைக்க யாது உளது? உன்னைக் "கானகம் செல்" என்ற போது "இது தவிர்" என எழுந்த என் சினத்தை யான் கைவிடும்படி முற்றும் ஆற்றினை. அன்று ஆணையிட்டுக் கூறிய மொழிகளினும் இன்று ("நீ இங்கு இரு" எனக்) கூறுவது மிகக் கொடிது-என்று கூறி—

திருஅரை சுற்றிய சீரை ஆடையன்
பொருவருந் துயரினன் தொடர்ந்து போகின்ருன்
இருவரைப் பயந்தவள் ஈன்ற கான்முளை
ஒருவனே இவர்க்குஇவ்வூர் உறவென்ருர்சிலர் 188

சீரை-மரவுரி, பொருஅரு-ஒப்பற்ற, இவ்வூரில் "இராமனுக்கு உறவு சுமித்திரை மகன் ஒருவன் தானே?" என்று ஊரார் நைந்தழுதனர். கான் முளை-மக்கள்.

பொருவில் எம்பி புவிபுரப் பான்,புகல்
இருவர் ஆணையும் ஏந்தினென்: இன்றுபோய்க்
கருவி மாமழைக் கற்றடங் கண்டு,நான்
வருவன். ஈண்டு வருந்தலை நீஎன்ருன் 189

பின் இராமன் சீதையிடம் சென்ருன் :—இருவர்-தாய் தந்தையர். கருவி-கூட்டம், கல்தடம்-மலைவெளி-நீர்-கான்.

நாயகன் வனம் நண்ணலுற் ருன்என்றும்,
மேய மண்இழந்தான் என்றும் விம்மலள்:
"நீ வருந்தலை", நீங்குவன் யான்என்ற
தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள் 190

மேயமண்-உரிமையாக வந்த நாடு.

அன்ன தன்மையள் "ஐயனும் அன்னையும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே:
என்னை என்னை இருத்திஎன்ருன்" என
உன்ன உன்ன உயிர்உமி ழாநின்ருள் 191

அந்த நிலையிலும் சீதை தன்னை "இங்கிரு" என்று பிரித்துக்கூறிய அதனை நினைத்தே நொந்தாள். என்னை-ஏன்?

வல்லரக்கரின் மால்வரை போய்விழுந்து
அல்அரக்கின் உருக்கழல் காட்டுஅதர்க்
கல் அரக்கும் கடுமைய அல்ல;நின்
சில் அரக்குண்ட சேவடிப் போதென்ருன் 192

இராமன் :—கொடிய அரக்கரைப் போன்றுள்ள கரிய மலைகளில், இரவி னும் உருக்கிய அரக்குப்போல் சிவந்து கொதிக்கும் காட்டு வழியிலுள்ள

கற்கள்: அவற்றில் உராய்தற்கு உரிய கடுமைய அல்ல நின் (குளிர்ந்த பஞ்சூட்டிய) பாதங்கள். வல்-கொடிய, வரை-மலை, அல்-இருளில், அதர்-வழி, அரக்கும்-தேய்க்கும், கடுமைய-வலியவை, போது-தாமரைப்பூ.

**பரிவிகந்த மனத்தொடு பற்றிலாது**
**ஒருவுகின்றனை. ஊழி அருக்கனும்**
**எரியும் என்பது யாண்டையது? ஈண்டுநின்**
**பிரிவினும் சுடுமோபெருங் காடென்றாள் 193**

பரிவு இகந்த-இரக்கமற்ற, ஒருவுகின்றனை-நீக்குகின்றாய். ஊழி அருக்கன்-பிரளய காலத்துச் சூரியன். ஈண்டு-இப்பிரிவுத் துன்பத்துடன் ஒப்பிடின். யாண்டையது-எம்மாத்திரம்! இங்கு உன்னைப் பிரிந்திருப்பதினும் அக்காடு அதிகம் சுடுமோ? பின் சீதையும் மரவுரியுடன் புறப்பட்டாள்.

**ஏழைதன் செயல் கண்டவர் யாவரும்**
**வீழுமண்ணிடை வீழ்ந்தனர் வீந்திலர்.**
**வாழும் நாள்உள என்றபின் மாள்வரோ!**
**ஊழி பெயரினும் உய்குநர் உய்வரே 194**

ஊழி பெயரினும்-யுகம் முடியினும், உய்குநர்-பிழைப்பவர்.

**முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினும்**
**வெல்லும் வெண்ணகையாய்,விளைவுன்னுவாய்**
**அல்லை:போத அமைந்தனை ஆதலின்**
**எல்லை அற்ற இடர்தரு வாய்என்றான் 195**

முல்லையரும்பு, கடல்முத்து இவற்றினும் சிறந்த பல். விளைவு-என்ன நேரும் என்பதை, போத அமைந்தனை-உடன்வரத் துணிந்தாய்.

**கொற்றவன்அது கூறலும் கோகிலம்**
**செற்றதன்ன குதலையாள் சீறுவாள்:**
**உற்றுநின்ற துயரம்இது தொன்றுமே!**
**எற் றுறந்தபின் இன்பங் கொலாம்? என்றாள் 196**

கொற்றவன்-இராமன். கோகிலம் குயில் ஒத்த சீதை, செற்றது-கடிந்தது, குதலை-மழலைச் சொல்லால், "யான் உடன் வருவதே துன்பம், யான் இல்லையானால் இன்பமோ? என்றாள். இராமன் பதில்சொல்ல முடியாதவனாகச் சீதையுடன் புறப்பட்டான்.

**சீரை சுற்றித் திருமகள் பின்செல,**
**மூரி விற்கை இளையவன் முன்செலக்**
**காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்**
**ஊரை உற்றதுஉணர்த்தவும் ஒண்ணுமோ 197**

சீரை.மரவுரி, மூரி-வலிய, கார்-மேகம்.

ஏத்தினர் தம்மகனை மருகியை,
வாழ்த்தினர் இளையோனை வழுத்தினர்:
காத்து நல்குமின் தெய்வதங்காள், என்றார்
நாத்தழும்ப அரற்றி நடுங்குவார் 198

## தைலமாட்டு படலம்

முறைமையால் எற்பயந் தெடுத்த மூவர்க்கும்
குறைவிலா என்நெடு வணக்கம் கூறிப்,பின்
இறைமகன் துயர்துடைத்து இருத்தி மாடென்றான்.
மறைகளை மறந்துபோய் வனத்துள் வைகுவான் 199

*இராமனை வெளியிற் சேர்த்துச் சுமந்திரர் திரும்பும்போது, இராமன் :— மூவர்–கோசலை, கைகேசி, சுமித்திரை, இறைமகன்-அரசரின். மாடு—அயல்.*

அன்னவள் கூறுவாள்: அரசர்க்கு அத்தையர்க்கு
என்னுடை வணக்கம்முன் இயம்பி; யானுடைப்
பொன்னிறப் பூவையும் கிளியும் போற்றுகென்று
உன்னும்என் தங்கையர்க்கு உணர்த்துவாய் என்றாள் 200

*அன்னவள்-சீதை, பூவை-மைனா, போற்றுக-காக்க.*

உரைசெய்துளங் கோமகற்கு உறுதி ஆக்கிய
தரைகெழு செல்வத்தைத் தவிர, மற்றொரு
விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யனை
அரசன்என்று இன்னம்ஒன் றறையற் பாலதோ? 201

*பின்னர் இலக்குவன் :—இராமனுக்கு நாடு கொடுப்பதாகச் சொல்லிப் பின்னர் அச்செல்வத்தை அவ்வாக்கு தவறும்படி பிற ஒரு பெண்ணுக்குக் கொடுத்த ஒருவனை; அரசன் என எண்ணி யான் ஒன்று சொல்லி அனுப்புவதோ? விரை-வாசனை, குழலி-கைகேசி.*

கானகம் பற்றிநற் புதல்வன் காயுண,
போனகம் பற்றிய பொய்யில் மன்னர்க்கு இங்கு
ஊனகம் பற்றிய உயிர்கொடு இன்னும்போய்
வானகம் பற்றிலா வலிமை கூறென்றான் 202

*மகன் காட்டிலிருந்து காய் உண்ண; தான் உயிருடன் உண்டு இருந்து விண்ணுலகு எய்தாதவன்மை நன்று! எனக் கூறு. போனகம்-உணவு. ஊன்—உடல்*

மின்னுடன் பிறந்தவாள் பரத வேந்தற்கு
மன்னுடன் பிறந்திலென், மண்கொண் டாள்கின்ற
தன்னுடன் பிறந்திலென், தம்பி முன்னலென்,
என்னுடன் பிறந்தயான் வலியன் என்றியால் 203

*மன்-இராமன், தன்-பரதனுடன், தம்பி-சத்துருக்கன், யான் தனியன் வலியன், உறவற்றவன். சுமந்திரர் சென்றபின் இரவில் காட்டுள் சென்றார்.*

தையல்தன் கற்பும்தன் தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேம மாகக்கொண்டு
ஐயனும் போயினன் அல்லின் நாப்பணே 204

*தகவு-தன் நற்குணம், கருணை-அருள், செய்ய-செம்மையான, அல் நாப்பண்-இருள் நடுவில்.*

இரதம்வந் துற்றதென்றாங் கியாவரும் இயம்பலோடும்
வரதன்வந் துற்றான் என்னு மன்னனும் மயக்கந் தீர்ந்தான்:
புரைதபு கமலநாட்டம் பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான், வீரன்வந் தனனோ? என்றான் 205

*சுமந்திரர் தேரில் அயோத்தி வந்து சேர்ந்தார். வரதன்-இராமன், என்னு-என்று, புரைதபு-குற்றம்இலா, மாதவன்-வசிட்டன்.*

இல்லை என்றுரைக்கலாற்றான் ஏங்கினன் முனிவன் நின்றான்:
நல்லவன் முகமேநம்பி நடந்திலன் என்னும் மாற்றம்
சொல்லலும் அரசன் சோர்ந்தான்: துயருறு முனிவன் நான்இவ்
வல்லல்காண் கில்லேன் என்னு ஆங்குநின் றகலப்போனான் 206

*ஆற்றான்-முடியாமல், நடந்திலன்-வந்திலன், நல்லவன்-வசிட்டர்.*

நாயகன் பின்னும் தன்தேர்ப் பாகனை நோக்கி, நம்பி
சேயனோ அணியனோஎன் றுரைத்தலும்; அனையான் "செய்ய
வேய்உயர் கானம் தானும் தம்பியும் மிதிலைப்பொன்னும்
போயினன்" என்றான்என்ற போழ்தத்தே ஆவிபோனான் 207

*சேயனோ-தூரத்துக் காட்டிலோ, அணியனோ-நகரிலோ; செய்யவேய்-நேர் ஓங்கு-மூங்கில்.*

## கங்கைப் படலம்

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும்இடையாளொடும் இளையானொடும் போனான்:
மையோ மரகதமோ மறி கடலோ மழைமுகிலோ
ஐயோ இவன்வடிவென்பதோ ரழியா அழகுடையான் 208

இராமன் கங்கை அருகில் வருகிருன் : கதிரவன் ஒளியும் இவன் நீல நிறத்தால் குளிர்கிறது : மை, மரகதம், நீலக்கடல், நீருண்ட மேகம் என்னும் படி இவன் விளங்குகிருன்.

மாகந்தமும் மகரந்தமும் அளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரும் இதழான்
மேகந்தனி வருகின்றது மின்னேடென, மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா 209

மணமும் பூக்களின் மகரந்தமும் பெற்ற கூந்தலுடன், இளம்பிறை போன்ற நெற்றி பெற்ற சீதையுடன் பவளம்போன்ற இதழ் பெற்ற இராமன்-மேகமும் மின்னலும் போலவும், ஆண்யானை தன் பெண்ணேடு வருவது போலும் காட்சி. அளகம்-கூந்தல், மதியின் பாகம்-இளம்பிறை, நாகம்-யானை, பிடி-பெண்யானை (பின்னர் முனிவர்களின் விருந்தினராகி மகிழ்ந் தனர்).

வருந்தித் தான்தர வந்த அமுதையும்
அருந்தும் நீர்என்று அமரரை ஊட்டினன்
விருந்து மெல்லடகு உண்டு விளங்கினன்,
திருந்தி னர்வயின் செய்தன தேயுமோ! 210

வருந்தி உழைத்து எடுத்த அமுதத்தை அன்று தேவர்கட்கு அளித்த திருமால், இன்று முனிவர்கள் விருந்தாக இட்ட கீரைகளை உண்டு மகிழ்ந் தான். அடகு-இலை.

சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையான்
ஒருங்கு தேனெடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினன் 211

சுற்றம் அப்புறம் நிற்க ; சுடுகணை
விற்றுறந்து அரை வீக்கிய வாள்ஒழித்து,
அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன்
நற்றவப் பள்ளி வாயிலை நண்ணினன் 212

குகன் வருகிருன் :—கணை-அம்பு, வில் துறந்து வாளை அப்புறப்படுத்தி, அன்பினுல் கால வசதிபற்றி எண்ணுமல் தவப்பள்ளியை நெருங்கினுன்.

கூவாமுன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யார்?என ; அன்பின் இறைஞ்சினன் :
தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய்அடி யேன்என்ருன் 213

நாவாய்-தோணி,

இருத்திஈண் டென்னலோடும் இருந்திலன் : எல்லைநீத்த
அருத்தியன் தேனும்மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல்திருவுள்ளம்? என்ன,வீரன்
விருத்தமாதவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்ருன் 214

அரியதாம் உவப்பஉள்ளத்து அன்பினல் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்ருல், அமிர்தினும் சீர்த்த அன்றே!
பரிவினிற் றழீஇய என்னில் பவித்திரம், எம்மனோர்க்கும்
உரியன, இனிதின் நாமும் உண்டனம் அன்ருே? என்ருன் 215

*அன்பை வெளிப்படுத்தக் கொணர்ந்த அரிய பொருள் இவை; இவை அமுதினும் சிறந்தவை. அன்பினுல் உற்றது பரிசுத்தமானது, இது எனக்கு மட்டுமோ? இங்கு யாவர்க்கும் உரியது. வந்த இது நாம் உண்டதே ஆகும் என்ருன். பின் நீ சென்று, நாளை நாவாயுடன் வருக என்ருன்.*

கார்குலாம் நிறத்தான்கூறக், காதலன் உணர்த்துவான் :இப்
பார்குலாம் செல்வ, நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வனேன்யான், இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் : ஆனது ஐய, செய்குவன் அடிமை என்ருன் 216

*கார்-மேகம், காதலன்-குகன், பார்குலாம்-உலகம் முற்றும் மகிழத்தக்க. ஈர்கலா-எடுக்கமாட்டாத, உன் அழகைப்பார்த்த கண்ணை நீக்கமாட்டாதவனுகக் கவர்ந்து நிற்கிறேன். என் இருப்பிடம் நோக்கின் அது இன்னலே. யான் அங்கு ஏகேன்.*

கோதைவிற் குரிசில்—அன்னுன் கூறியகொள்கைகேட்டான்,
சீதையை நோக்கித், தம்பி திருமுகம் நோக்கித்,தீராக்
காதல னுகுமென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப, இருத்திஈண்டெம்மோ டென்ருன் 217

*குரிசில்-இராமன், நும்மினும் மிக்க அன்புடையன் இவன் என்று கண்ணை மலர்த்திக் காட்டியவனுய் இராமன், நீ இவ்விடமே இரு என்ருன்.*

மாலைவாய் நியமம்செய்து, மாபுளிஇயற்றி, வைகல்
வேலைவாய் அமுதன்னுளும் வீரனும்-விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின்பாயல் வைகினர்-வரிவில் ஏந்திக்
காலைவாய் அளவும்தம்பி இமைப்பிலன் காத்து நின்ருன் 218

*நியமம்-பூசை முறை, வேலை வாய் அமுது-பாற்கடலிற் பிறந்த அமுதினை ஒத்த சீதை, மாலை வாய்-வரிசையாய் பரப்பிய.*

தும்பியின் குழாத்திற் சுற்றும் சுற்றத்தன், தொடுத்தவில்லன்
வெம்பிவெந்து அழியா நின்ற நெஞ்சினன், விழித்த கண்ணன்
தம்பிநின் ருணேநோக்கித்; தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவிசோர்குன்றின் நின்ருன் 219

*தும்பி-யானைகள்போன்ற வீரர் குழுக்களைக்கொண்டவன் குகன். தலை மகன்-இராமன், அம்பி-ஓடம்.*

திருவுளம் எனின்,மற்றென் சேனையும் உடனேகொண்டு
ஒருவலென், இருபோதும் உறைகுவன்: உளராளுேர்
மருவலர்எனின் முன்னே மாய்குவன், வசையில்லேன்
பொருவரு மணிமார்பா, போதுவன்உடன் என்ருன் 220

*பின் கங்கையைக் கடந்தனர். குகன் இராமனை நோக்கி :—நீ திருவுள்ளம் இசைந்தால், என் சேனையுடன் வந்து பிரியாது உடன் உறைவேன், பகை வரின் முன்நின்று உயிர் கொடுப்பேன். யானும் வருகிறேன். ஒருவலென்- பிரியேன். பொருஅரு-ஒப்பற்ற, போதுவன்-வருகிறேன்.*

அங்குள காவற்கு அமைதியின் உளன்உம்பி:
இங்குள கிளைகாவற்கு யாருளர்? உரைசெய்யாய்:
உன்கிளை எனதன்ருே? உறுதுயர் உறலாமோ?
என்கிளை இதுகா,என் ஏவலின் இனிதென்ருன் 221

*அங்கு அயோத்தி காவலுக்கு உம்பி பரதன் இருக்கிருன்; இங்கு கங்கைக்கு நீஅன்றி யார் இருக்கின்ருர்? நீ இவர்களைக் காக்கவேண்டும் என்பது என் ஆணை.*

பணிமொழி கடவாதான், பருவரல் இகவாதான்
பிணியுடை யவன்என்னும் பிரிவினன் விடைகொண்டான்.
அணியிழை மயிலோடும் ஐயனும் இளையோனும்
திணிமரம் நிறைகானிற் சேணுற நெறிசென்ருர் 222

*பணிமொழி-கட்டளை, பருவரல் இகவாதான்-பிரிவுத் துன்பத்தை நீக்காத குகன், சேண்-தூரம்.*

## வனம்புகு படலம்

காலமின்றியும் கனிந்தன கனி;நெடுங் கந்தம்
மூலமின்றியும் முகிழ்ந்தன நிலனுற முழுதும்:
கோல மங்கையர் ஒத்தன கொம்பர்கள்: இன்பச்
சீலம் அன்றியும் செய்தவம் வேறுஒன்றுளதோ! 223

*கந்தம்-கிழங்குகள் வேர் இன்றியும் தரையுள் தோன்றின. கொம்பர்-பூங் கொடிகள்.*

## சித்திரக்கூடப் படலம்

இடிகொள் வேழத்தை எயிற்ருெடும் எடுத்துடன் விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந் தவரென அடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாம்மிதித் தேறப்
படிகள்தாம்எனத் தாழ்வரை கிடப்பன பாராய் 224

*பிளிறும் யானையை எடுத்து உண்ணத்தக்க மலைப்பாம்புகள் கற்றறிந்தவர்போல் அடங்கித், தவசிகள் மனந்தளராமல் (விண்ணுலகைச் சேர்வதற்கு) மிதித்துஏற அமைந்த படிகள்போல் மலைகளிற் கிடந்தன. வேழம்-யானை. எயிறு-மருப்பு, மாசுணம்-மலைப்பாம்பு, வரை-மலை. பாராய்-சீதையே பார்.*

நெய்கொள்நீருண்டு நெருப்புண்டு நீண்ட-மைநிறைந்த
வைகொள் வேல்எனக் காலனும் மறுகுறுங் கண்ணுய்,
மெய்கள் நோகின்ற பிடிகளை விரும்பிய வேழம்
கைகள் நோகில தாங்கின நிற்பன காணுய் 225

*நெய்பூசப்பெற்றதும் நெருப்பிலிடப்பெற்று நீண்டஉருப் பெற்றதுமான கூரிய வேல்போன்றது, மைபெற்றது, யமனும் கலங்கத்தக்க கண்ணை யுடையவளே! வருந்தும் பிடியை, விரும்பும் களிறு தன் கையால் தாங்கி நிற்பதைப்பார் வை-கூர்மை.*

## பள்ளிபடைப் படலம்

மூண்டெழு காதலான் முளரித் தாள்தொழ
வேண்டினன் எய்தினன் உள்ளம் விம்முமால்-
ஆண்டகை நெடுமுடி அரசர் கோமகன்
யாண்டையான்? பணித்திர்என் றிருகை கூப்பினன் 226

*கேகய நாட்டிலிருந்து அயோத்திக்கு வந்த பரதன் தன் தாயிடம்:—காதலான்-விருப்புடைய தந்தை தசரதர். முளரி - தாமரைப்பூ, வேண்டி-விரும்பி, பணித்திர்-அறிவிக்கவும்.*

ஆனவன் உரைசெய, அழிவில் சிந்தையாள்
தானவர் வலிதப, நிமிர்ந்த தானைஅத்
தேனமர் தெரியலான் தேவர் கைதொழ
வானகம் எய்தினன் : வருந்தல்நீ என்ருள் 227

*அழிவுஇல்-வருத்தம் அற்ற, அசுரர்களின் வலிமை அழியத்தக்க சேனையைஉடைய அவன், தேவர்கள் போற்றுவான் உலகு எய்தினன். தெரியல்-மாலை.*

வாயொளி மழுங்கத் தன் மலர்ந்த தாமரை
ஆயலர் நயனங்கள் அருவி சோர்தரத்,
தீயெரி செவியில்வைத் தனைய தீயசொல்
நீயலது உரைசெய நினைப்பரோ? என்ருன் 228

*வாய்-முகத்தில் வாய்த்த, நயனம்-கண்.*

எந்தையும் யாயும்எம் பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனே அவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்ருன் 229

எனக்குத் தந்தை தாய் கடவுள் முன்னேன் எல்லாம். அந்தம் இல்-எல்லேயில்லா.

வாக்கினுல் வரந்தரக் கொண்டு, மைந்தனேப்
போக்கினேன் வனத்திடை; போக்கிப் பார்உனக்கு
ஆக்கினேன். அவன்அது பொறுக்க லாமையால்
நீக்கினுன் தன்உயிர் நேமிவேந்தென்ருள் 230

நேமி வேந்து-சக்கரத்தையுடைய தசரதன் இராமன் பிரிவைப் பொறுக்க ஆற்ருது உயிர் நீத்தான்.

நோயிரல்லீர், நும்கணவன்தன் உயிருண்டீர்,
பேயிரேநீர், இன்னும் இருக்கப் பெற்றீரே,
மாயிர்,மாயா வன்பழி தந்தீர், முலேதந்தீர்
தாயிரே,நீர் இன்னும் எனக்கென் தருவீரே 231

நீவிர் நோயோ? இன்னும் இருப்பதால் பேயே ஆவீர்.

வில்லார்தோளான் மேவினன் வெங்கா னகம்என்ன
நல்லான்அன்றே துஞ்சினன். நஞ்சே அனேயாளேக்
கொல்லேன் மாயேன்,வன்பழி யாலே குறைவற்றேன்
அல்லே னேயான்? அன்புடை யார்போல் அழுகின்றேன் 232

குறைவற்றேன்-பழி நிறைந்திருக்கிறேன். நல்லான்-அரசன்.

செம்மை நன்மனத் தண்ணல் செய்கையும்
அம்மை தீமையும் அறிதல் தேற்றினுள்,
கொம்மை வெம்முலே குமுறு பாலுக
விம்மல் விம்மநின் றழுது வீங்கினுள் 233

பரதன் கோசலேபால் வந்து வருந்தி அழுதான். செம்மை-நேர்மையுள்ள அண்ணல்-பரதன், கொம்மை-திரண்ட.

முன்னேநுங்குல முதலுளோர்கள்தாம்
நின்னே யாவரே நிகர்க்கும் நீர்மையார்!
மன்னர் மன்னவா, என்று வாழ்த்தினுள்.
உன்ன உன்னநைந்துஉருகி விம்முவாள் 234

முன்னே-பழமையான, முதலுளோர்-முந்திய பெரியோர்.

உரைசெய் மன்னன்மற் றுன்னில், என்னில்யார்!
இரவிதன் குலத்து எந்தை முந்தையோர்
பிரத பூசனைக் குரிய பேறுஇலேன்,
அரசு செய்யவோ ஆவ தாயினேன்! 235

*"முடிபுனை" என்ற வசிட்டரை நோக்கிப் பரதன் மறுத்து:—உரைசெய்-புகழ்பெற்ற, முன்னோருக்கு ஈமக்கடன் ஆற்றும் உரிமையற்ற யான் அரச முடிபுனைய உரிமை உண்டோ?*

துன்னு தாள்வளம் சுமந்த தாழையில்
பன்னு வான்குலைப் பதடி ஆயினேன்:
என்னை என்னையே ஈன்று காத்தான்
அன்னையார் எனக்கு அழகு செய்தவா! 236

*தாழை-தென்னை, தெங்கங்குலையில் உற்ற ஒரு பேட்டுத் தேங்காய்போல் சூரிய குலத்தில் இருக்கிறேன்: அன்னையார் செய்த புண்ணியம்!*

## ஆற்றுப் படலம்

நன்னெறி யென்னினும், நான்இந் நானிலம்
இன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்:
அன்னவன் தனைக்கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூடிக் காண்டிரால் 237

*நீவிர் இது நல்லது எனினும் யான் உயிர்ப்பாரந்தாங்கி வாழேன். அன்னவன்-அண்ணன்.*

ஆழியை உருட்டியும், அறங்கள் போற்றியும்
வேள்வியை இயற்றியும் வளர்க்க வேண்டுமோ?
ஏழினோ டேழெனும் உலகும் எஞ்சினும்
வாழிய நின்புகழ்! என்று வாழ்த்தினர் 238

*அப்போது மக்கள்:—ஆழி உருட்டல்-அரசசக்கரம் கொண்டும்.*

தாரையும் சங்கமும் தாளம் கொம்பொடு
வார்மிசைப் பம்பையும் துடியும் மற்றவும்
பேரியும் இயம்பல சென்ற: பேதைமைப்
பூரியர் குழாத்திடை அறிஞர் போலவே 239

*அறிஞர் வாய்பேசார் அதுபோல் வாத்திய முழக்கம் இன்றிப் பரதன் இராமனை அழைக்கச் சென்றான்.*

ஏடறு கோதையர் விழியின் எய்தகோல்
ஊடுற உரம்தொளைத்து உயிர்உறுவகை
ஆடவர்க்கு அரும்பெருங் கவசம் ஆயது;
காடுறை வாழ்க்கைஅக் கண்ணன் நண்ணவே. 240

*ஏடுஅறு-புறஇதழ் இல்லா. பெண்களின் பார்வையாகிய அம்பு இராமன் காட்டு வாசத்தால் ஆடவர் மனத்தில் தைக்காது, உறுதுணையாக நின்றது. கணை-அம்பு, உரம்-மார்பு, கவசம்-காப்பு, துணை.*

இன்னன நெடும்படை ஏக, வேந்தனும்
தன்னுடைத் திருஅரைச் சீரை சாத்தினன்.
பின்இளை யவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தல் மேயினன் 241

*சீரை-மரவுரி, இளையவன்-சத்துருக்கன், துன்பு-கவலை.*

## குகப் படலம்

பூவிரி பொலங்கழல் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினன். 242

*பூவிரி-பூவேலைமிகு, பொலன்-பொன், சோழநாட்டை ஒத்த வளமுடைய அயோத்தியை நீத்துக் கங்கைக் கரை அடைந்தான் பரதன். தாவரம்-நிலையாயபொருள். சங்கமம்-இயங்கு பொருள்.*

எலியெலாம் இப்படை; அரவம் யான்என
ஒலியுலாம் சேனையை உவந்து கூறினன்:
வலிஉலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலாம் ஒருவழிப் புகுந்த போலவே 243

*பரதன் சேனையைக் கண்ட குகன் ;—அரவம்-பாம்பு, ஒலிஉலாம்-ஆர்த்து நிற்கும். வள் உகிர்-கூரிய நகம்.*

அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யால்அர செய்திய மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீஉமிழ் கின்றன செல்லாவோ
உய்ஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஏசாரோ? 244

*ஆளாமே-ஆளாமல், சரம்-அம்பு, உய்ஞ்சி-பிழைத்து உயிருடன்.*

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை என்றவர் சொல்லிய சொல்ஒரு சொல்லன்றோ
ஏழமைவேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ? 245

*ஆறு-கங்கையாற்றை, விலங்கிடும்-அஞ்சி ஒதுங்கும், ஒருசொல்-உண்மை வாக்கு.*

முன்னவன் என்று நினைத்திலன், மொய்புலி அன்னானோர்
பின்னவன் நின்றனன் என்றிலன், அன்னவை பேசானேல்,
என்இவன் என்னை இகழ்ந்ததுஇவ் வெல்லை கடந்தன்றோ?
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும்சரம் பாயாவோ 246

*முன்னவன் அண்ணன், மொய்-வலிய, பின்னவன்-தம்பி இலக்குவன், இவன் இவ் வெல்லையைக் கடந்தால் அது என்னை இகழ்ந்து, மீறி நிற்பதல்லவோ?*

அருந்தவம் என்துணை ஆள,இவன்புவி ஆள்வானோ?
மருந்தெனின் அன்றுஉயிர்: வண்புகழ் கொண்டுபின் மாயேனோ
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று! கழிக்குவன் என்கடன் இன்றோடே 247

*மருந்து அன்று-அமுதமோ அன்று! கேண்மை உகந்தவர்-நட்பை விரும்பிய இராமருடன், கடன்-கடமை.*

தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பியல் தார்இவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ!
வெம்பிய வேடர்உளீர்,துறை ஓடம் விலக்கீரோ:
நம்பி முன்னேஇனி நாம்உயிர்மாய்வது நன்றன்றோ 248

*தும்பி-யானை, மா-குதிரை, சூழ்வு ஆரும்-சூழப்பெற்ற, வம்பு-வாசனை, தார்-பூமாலை. வெம்பி-சினந்து, விலக்கீர்-எடுத்து வாருங்கள்.*

ஆடு கொடிப்படை சாடி அறத்தவரே ஆள
வேடுகொடுத்தது பார்எனும் இப்புகழ் மேவீரோ?
நாடு கொடுத்தஎன் நாயக னுக்குஇவர் நாம் ஆளும்
காடு கொடுக்கில ராகி எடுத்தது காணீரோ 249

*பரதன் படைமீது சாடுவோம். வேடர் இராமனுக்கு நாடு கொடுத்தார் எனப் புகழ் நாட்டுவோம்.*

மா முனிவர்க்குஉறவாகி வனத்திடையே வாழும்
கோ முனியத்தகும் என்று மனத்திறை கொள்ளாதே
ஏ முனை உற்றிடில், ஏழுகடற்படை என்றாலும்
ஆ முனையிற்சிறு கூழ்என இப்பொழு தாகாதோ? 250

*கோ-அரச இராமன். இறை கொளாதே-சற்றும் எண்ணுமல்; ஏ-என் அம்பு. முனை-போர்முனை. பசு வாய்வைத்த பசும் பயிர்போல் இவர் அழிவர். சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றி அறிவிக்கிருன் :—*

**கங்கை இருகரை யுடையான், கணக்கிறந்த நாவாயான்**
**உங்கள்குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவன் உயர்தோளான்**
**வெங்கரியின் ஏறனையான், வில்பிடித்த வேலையினன்**
**கொங்கலரும் நறுந்தண்டார்க் குகன்என்னும் குறியுடையான் 251**

*கரி ஏறு-ஆண் யானை. கொங்கு-தேன், நறு-நல்ல.*

**கற்காணும் திண்மையான், கரைகாணுக் காதலான்**
**அற்காணிற் கண்டனைய அழகமைந்த மேனியான்**
**மற்காணும் திருநெடுந்தோள் மழைகாணும் மணிநிறத்தோய்,**
**நிற்காணும் உள்ளத்தான் நெறிஎதிர் நின்றனன்என்ருன் 252**

*கல் காணும்-மலை ஒத்த, அல் அனைய-இருள் ஒத்த, மல்-உறுதி.*

**தன்முன்னே அவன்தன்மை-தன்துணைவன் முந்துரைத்த**
**சொன்முன்னே உவக்கின்ற துரிசில்லாத் திருமனத்தான்**
**மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்**
**என்முன்னே அவற்காண்பேன் யானேசென்றெனை எழுந்தான் 253**

*தன் துணைவன்-சுமந்திரன், துரிசு-குற்றம், மன்—இராமன், மனக்கினிய-மனத்துக்கு இனிய.*

**வற்கலையின் உடையானை, மாசடைந்த மெய்யானை**
**நற்கலையில் மதியென்ன நகைஇழந்த முகத்தானை**
**கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்ருன்;**
**விற்கையினின்று இடைவீழ விம்முற்று நின்ெழுந்தான் 254**

*வற்கலை-மரவுரி, கலைஇல்-ஒளியில்லா, வில் கையினின்று நழுவி விழ மெய்மறந்து நின்ருன்.*

**நம்பியும்என் நாயகனை ஒக்கின்ருன், அயல்நின்ருன்**
**தம்பியையும் ஒக்கின்ருன், தவவேடம் தலைநின்ருன்**
**துன்பம்ஒரு முடிவில்லை, திசைநோக்கித் தொழுகின்ருன்**
**என்பெருமான் பின்பிறந்தோர் இழைப்பரோ பிழைப்பென்ருன் 255**

*நம்பி-பரதன், அயல் நின்ருன்-சத்துருக்கன், தம்பி-இலக்குவன். பிழை-தவறு.*

**உண்டிடுக்கண் ஒன்றுடையான், உலையாத அன்புடையான்**
**கொண்டதவ வேடமே கொண்டிருந்தான். குறிப்பெல்லாம்**
**கண்டுணர்ந்து பெயர்கின்றேன். காமின்கள் நெறிஎன்னுத்**
**தண்டுறைஓர் நாவாயில் ஒருதனியே தான்வந்தான் 256**

*இடுக்கண்-துன்பம், தண் துறை-நீர்த்துறையின்.*

**தழுவின புளினர் வேந்தன் தாமரைச் செங்க ணனை**
**எழுவினும் உயர்ந்த தோளாய், எய்தியது என்னை? என்ன,**
**முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்று**
**வழுவினன். அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன் 257**

*புளிஞர் வேந்தன்-பரதனைத் தழுவிய வேடர் தலைவன். எழு-இரும்புத் தடி. முந்தையோர்முறை-மூத்த மகனுக்கு முடிசூட்டும் வழக்கம்.*

**தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்**
**தீவினை என்ன நீத்துச், சிந்தனை முகத்தில் தேக்கிப்**
**போயினை என்ற போழ்து, புகழினோய், தன்மை கண்டால்**
**ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா! 258**

*தரணி-நாடு. தீவினை-தகாத செயல். சிந்தனை தேக்கி-முகம் கவலைகாட்ட, போயினை-வந்துள்ளாய், கேழ்-ஒப்பு.*

**தூண்டர நிவந்ததோளான் பின்னரும் சொல்லுவான்;அந்**
**நீண்டவன் துயின்ற சூழல் இதுஎனின், நிமிர்ந்த நேயம்**
**பூண்டவன், தொடர்ந்து பின்னே போனவன் பொழுது நீத்தது**
**யாண்டென இனிது கேட்டான். எயினர்கோன் இதனைச்சொன்னான்**

*நீண்டவன்–பெரியான், இராமன். சூழல்-இடம், பின்போனவன்-இலக்கு வன்.*

**அல்லையாண்டு அமைந்த மேனிஅழகனும் அவளும் துஞ்ச,**
**வில்லைஊன்றிய கையோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்**
**கல்லையாண்டு உயர்ந்த தோளாய், கண்கள்நீர் சொரியக், கங்குல்**
**எல்லைகாண் பளவும் நின்றான், இமைப்பிலன் நயனம் என்றான் 260**

*அல்-இருளை ஒத்த, கல்-மலை, கங்குல்-இரவு.*

**சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத் தொழுது நோக்கி,**
**வெற்றித்தார்க் குரிசில்,இவர் யாரென்று குகன்வினவ— வேந்தர் வைகும்**
**முற்றந்தான் முதல் தேவி, மூன்றுலகும் ஈன்றானை முன்ஈன்றானைப்**
**பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறந்த லால்துறந்த பெரியாள் என்றான் 261**

*கங்கையாற்றைக் கடந்தனர். குகன் :—தேவர்களுக்குச் சமமாகக் கருதித் தொழப்பெறும் கோசலையைச் சுட்டி இவர் யார்? என்றான். முற்றத்தான்-தசரதன், உலகைப்படைத்த பிரமனைப்பெற்ற திருமாலை மகனாகப்பெற்றும், தான் பெறவேண்டிய அரச செல்வத்தை யான் பிறந்ததால் இழந்து நிற்கும் பெருமாட்டி.*

என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை, இவன்யார்? என்று
கன்றுபிரி காராவின் துயருடைய கொடிவினவக்; கழற்கால் மைந்தன்
இன்றுணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோள் குகன்என்பான் இந்நின்ற குரிசில் என்றான்

*கன்றைப்பிரிந்த காராம் பசுபோல் துயர் அடையும் கோசலை, கழல்கால் மைந்தன்-பரதன், இராமனுக்குத் துணைவன், இலக்குவற்கும் எனக்கும் அண்ணன், குகன் என்னும் பெயரினன்.*

நைவீர்அலீர் மைந்தீர், இனித் துயரால்: நாடுஇழந்து காடுநோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றும் அன்றே! விலங்கல் திண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன் தன்னோடும் கலந்து, நீங்கள்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர் என்றாள் 263

*வருந்தாதீர், இராமன் நாடிழந்து காடுவந்ததும் நலமே. விலங்கல்-மலை, காளை-குகன்.*

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள் தனைநோக்கி "ஐய, அன்பின்
நிறைந்தாளை உரை"என்ன, நெறிதிறம்பாத் தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்றன் இளந்தேவி; யாவருக்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான் தனைப்பயந்த பெரியாள் என்றான்

*தருமத்தின் உருவாகநின்ற சுமித்திரையைச் சுட்டி. தன் மெய்யை நிற்பது ஆக்கி-சத்தியத்தை நிலைநாட்டி, பயந்த-பெற்ற.*

சுடுமயா னத்திடைதன் துணையேக; தோன்றல்துயர்க் கடலின் ஏக;
கடுமையார் கானகத்துக் கருணைஆர்கலி ஏக; கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றுஅளந்த உலகெல்லாம் தன்மனத்தே நினைந்து, செய்யுங்
கொடுமையால் அளந்தாளை, "யார்இவர்என்றுரை" என்னக், குரிசில் கூறும்:-

*கணவன் மயானம் செல்லவும், தன்னிற் பிறந்தமகன் துயரக் கடலில் மூழ்கவும், கருணைக் கடலாகிய இராமன் காடு செல்லவும், (அன்று திருமால் மூன்று அடியால் அளந்த உலகை) தன் மனத்திலே மகனுக்காக அளந்து நின்ற கொடியவள். ஆர்கலி-கடல்.*

படர்எல்லாம் படைத்தாளை பழிவளர்க்குஞ் செவிலியைத்,தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கு உயிர்ப்பாரம் குறைந்து தேய,
உடரெல்லாம் உயிரிலா எனத்தோன்றும் உலகத்தே ஒருத்தி அன்றே!
இடர்இல்லா முகத்தாளை அறிந்திலையேல்; இந்நின்றாள் என்னை ஈன்றாள் 266

*துன்பங்களைப் பிறப்பித்தவள், பழிவளர்க்கும் ஆயாள், தன் பாழ்த்த குடலில் தங்கிப்பிறந்த உயிரைத் தேய்த்துக் குறைப்பவள், நாட்டில் உற்ற உடல்களில் உயிர் இல்லை என்று கூறவைத்தவள், இடர் அற்றவள், இவளை என்னைப் பெற்றவள்.*

என்னக் கேட்டுஅவ் விரக்கம்இல் லாளையும்
தன்னற் கையின் வணங்கினன் தாயென:
அன்னப் பேடை சிறையில தாய்க் கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே 267

நற்கையால்-கோசலை சுமித்திரையை வணங்கிய கையால், துன்னிற்று-சேர்ந்தது.

இழிந்த தாயர் சிவிகையின் ஏறத்,தான்
பொழிந்த கண்ணிற் புதுப்புனற் போயினன்:
ஒழிந்தி லன்,குக னும்உடன் ஏகினன்:
கழிந்த னன்பல காவதம் காலினே 268

இழிந்த-படகின் இறங்கிய. சிவிகை-பல்லக்கு, காலின்-நடந்து.

## கிளை கண்டு நீங்கு படலம்

வன்தெறு பாலையை மருதமாம் எனச்
சென்றது, சித்திரக் கூடஞ் சேர்ந்ததால்:
ஒன்றுரைத்து உயிரினும் ஒழுக்கம் நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே. 269

உயிரினும் ஒழுக்கம் சிறந்ததாக நிறுவிய மன்னன் சேனை வலிய பாலை நிலத்தையும் மருதநிலம்போற் கடந்து சித்திர கூடத்தைச் சேர்ந்தது.

பரதன் இப்படைகொடு பார்கொண்டு ஆள்மறம்
கருதி,உட் கிடந்ததோர் கறுவு காதலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தான்.இது
சரதம்,மற் றிலதுஎனத் தழங்கு சீற்றத்தான் 270

சேனையைக் கண்ட இலக்குவன்:—பரதன் அரசாள எண்ணி, விரதம் தாங்கு இராமன்மேல் படையெடுத்து வருகிறன்; இது உண்மை. சரதம்-உண்மை.

இலக்குவ, உலகம்ஓ ரேழும் ஏழும்நீ
கலக்குவன் என்பது கருதி னல்,அது
விலக்குவது அரிது:அது விளம்பல் வேண்டுமோ!
புலக்குரித்து ஒருபொருள், புகலக் கேட்டியால் 271

இராமன் :- நீ உலகினைக் கலக்க நினைத்தால் தடுப்பவர் யார்? அறிவுக் குரியது ஒன்று புகல்கிறேன் கேள். புலம்-அறிவு.

நங்குலத்துஉதித்தவர் நவையுள் நீங்கினர்
எங்குஉலப் புறுவர்கள், எண்ணில் யாவரே
தங்குலத்து ஒருவரும் தருமம் நீங்கினர்?
பொங்குஉலத் திரளொடும் பொருத தோளினய் 272

உலம்-கல்தூண், தூண்போன்ற தோளுடையோய், நம்குலத்து முன்னேர் குற்றமில்லாதவர், அளவிட்டு அறியமுடியாதவர்; அவர் யாவரும் தருமநெறி நீங்காதவர். ஒருவுஅரும்-குலத்தின் நீங்கா.

எனைத்துஉள மறைஅவை இயம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே.
அனைத்திறன் அல்லன அல்ல. அன்னது
நினைத்திலை: என்வயின் நேய நெஞ்சத்தால் 273

பனைபோன்ற துதிக்கை பெற்ற யானைகளையுடைய பரதன் செய்கை வேதங்கள் அத்தனையும் சேர்ந்து சொல்லத்தக்கன: நீ சொல்லும் அம்முறையில் (அறம் அற்றவை) அல்ல. என்மீதுற்ற வாஞ்சையால் நீ அவன் நலத்தை உணர்வாயல்லை.

பெருமகன் என்வயின் பிறந்த காதலின்
வரும்என நினைகையும், மண்ணை என்வயின்
தரும்என நினைகையும் தவிரத், தானையால்
பொரும்என நினைகையும் புலமைப் பாலதோ? 274

தானை-சேனைகொண்டு என்னேடு போர் செய்வான் என எண்ணலாமோ? அது அறிவுடைமையோ?

பொன்னெடும் பொருகழல் பரதன் போந்தனன்,
நன்னெடும் பெரும்படை நல்கல் அன்றியே
என்னெடும் பொரும்என இயம்பற் பாலதோ?
மின்னெடும் பொருவுற விளங்கும் வேலினய். 275

அரச செல்வத்தையும், படைகளையும் என்னிடம் தருவன் என்று நினைத்தலை நீத்துப்; போர்செய்ய வருவதாக நினைப்பது தவறு.

சேனுயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ?
பூணியல் மொய்ம்பினய், போந்தது ஈண்டெனைக்
காணிய. நீஇது பின்னுங் காண்டியால் 276

ஓங்கிய தருமத்தின் தெய்வம், அறத்தின் அச்சாணியாகிய பரதனை ஐயுறலாகுமோ? காணிய-பார்ப்பதற்கே.

தொழுதுஉயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதுஅழி கண்ணினன் அவலம் ஈதெனு:
எழுதிய படிவம்ஒத்து எய்து வான்தனே
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினுன் 277

எய்துவான்தனே-வந்து நெருங்கிய பரதனே.

எல் ஒடுங்கியமுகத்து இளவல் நின்றனன்.
மல் ஒடுங்கியபுயத் தவனே வைதெழுஞ்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ணநீர் நிலத்து வீழவே 278

எல்ஒடுங்கி-பொலிவிழந்தவனுக இலக்குவன், வளம் இல்லாப் பரதனே வைதுசினந்த உணர்வுநீங்கி; வில்லும் கண்ணீரும் நிலத்துவிழத் திகைத்து நின்ருன்.

அறந்தனே நினேந்திலே, அருளே நீத்தனே,
துறந்தனே முறைமையை என்னும் சொல்லினுன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்த தன் தாதையை எதிர்கண் டென்னவே 279

அயாஉயிர்த்து அழுகண்ணீர் அருவி மார்பிடை
உயாவுறத் திருவுள்ளம் உருகப் புல்லினுன்
நியாயம்அத் தனேக்கும்ஓர் நிலேயம் ஆயினுன்
தயாமுதல்-அறத்தினேத் தழுவி என்னவே 280

பரதன் இராமனே நோக்கி: அயாஉயிர்த்து-பெருமூச்சுவிட்டு, உயாவுற-ஒழுகிஓட, நீதியின் நிலேயம் ஆகிய இராமன் அருள் அறத்தைத் தழுவி நிற்பதுபோல் பரதனேத் தழுவி நின்ருன்.

புல்லினன் நின்றவன் புனேந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினுன் பலவும் உன்னினுன் :
அல்லலின் அழுங்கினே. ஐய வாளுடை
மல்லுயர் தோளினுன் வலியனே? என்ருன் 281

தோளினுன் வலியனே-தந்தையார் நலமோ?

அரியவன் உரைசெயப், பரதன் "ஐய, நின்
பிரிவெனும் பிணியினுல், என்னேப் பெற்றஅக்
கரியவள் வரமெனும் காலனுல், தனக்கு
உரியமெய் நிறுவிப்போய் உம்பரான்" என்ருன் 282

*நின்பிரிவு நோயாக, என் தாயின் வரம் யமனாக மன்னன் தன் மெய்ம்மை வாக்கை நிறைவேற்றி விண்ணுலகடைந்தான்.*

தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது காவல,நீ
வானடைந்தாய், இன்னும் இருந்தேன்யான் வாழ்வுகந்தே.
ஊனடைந்த தெவ்வர் உயிர்அடைந்த ஒள்வேலாய் 283

*தெவ்-பகை. அடைந்த-பற்றிய.*

கல்நகு திரள்புயக் கணவன் பின்செல
நன்னகர் ஒத்தது நடந்த கானமும்.
மன்னவன் துஞ்சினன் என்ற மாற்றத்தால்
அன்னமும் துயர்க்கடல் அடிவைத் தாள்அரோ 284

*கல்நகு-மலையினும் சிறந்த, நகர்-அயோத்தி, அன்னம்-சீதை.*

தாய ரும்தலைப் பெய்து தாம்தழீஇ
ஓய்வில் அன்பினால் உரறல் ஓங்கினர்:
ஆய சேனையும் அணங்கு அன்னர்களும்
தீயில் வீழ்ந்துதீ மெழுகிற் றேம்பினர் 285

*தலைபெய்து-இராமனைச் சேர்ந்து தழுவி அன்பினால் அழலானார். சேனையும் பெண்களும் தீயுற்ற மெழுகுபோல் தேம்பினர் இராமன்:—*

வரதன் துஞ்சினான். வையம் ஆணையால்
சரதம் நின்னதே. மகுடம் தாங்கலாய்.
விரத வேடம்நீ என்கொல் வேண்டுவான் ?
பரத,கூறுஎனப் பரிந்து கூறினான் 286

*தந்தையார் இறந்தார், அவர் ஆணைப்படி நாடு உன்னுடையதே. முடி புனையாமல் நீ தவவேடம் விரும்பியது ஏன்?*

மனக்குஒன் றாதன வரத்தின், நின்னையும்
நினக்குஒன் றாநிலை நிறுவி, நேமியான்
தனைக்கொன் றாள்தரும் தனையன், ஆதலின்
எனக்குஒன்றா.தவம் எடுப்பது எண்ணினால் 287

*மனதுக்கு ஒவ்வாவரத்தினால், உன்னை உனக்கு ஒவ்வாநிலைக் குள்ளாக்கி; கணவனையும் கொன்ற ஒருத்தி பெற்ற பிள்ளை யான்: ஆகையால் யான் தவத்தை மேற்கொள்ளல் எனக்கு ஒவ்வாது. எனக்கு ஒன்றா-எனக் குப் பொருந்தாது.*

நோவதாகஇவ் வுலகை நோய் செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவது ஓர்கிலேன், தவஞ்செய் வேன்அலேன்
யாவனாகிஇப் பழிநின்று ஏறுவேன்? 288

*பாவகாரி-பாவி பெற்ற பிள்ளையான் இறக்கவுந்துணிந்திலேன், தவம் மேற்கொள்ளேன், எவ்வாறு கரைதேறுவேன்?*

நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும், பொங்கருள்
துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசின் முந்துமோ 289

*கற்பிலாப் பெண்மை, பொறுமையில்லாத் தவம், அருள் இல்லா அறம், முறை அற்ற அரசு இவை சீர்உறுமோ? அரசின்-அரசுபோல்.*

உந்தை நீமையும், உலகு ருதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்,
எந்தை, நீங்க மீண்டு அரசு செய்கென,
சிந்தை யாவதும் தெரியக் கூறினன் 290

*எந்தை-இராமா, தீமைகளை நீக்க நீ வந்து அரசுசெய்.*

வரன்நில் உந்தைசொல் மரபினல்-உடைத்
தரணி நின்னதுஎன் றியைந்த தன்மையால்;
உரனின் நீபிறந்து உரிமை யாதலால்
அரசு நின்னதே ஆள்க என்னவே 291

*உரன் நில்-வலிமையுற்ற, அரசு பிறப்பாலும் உனக்கே உரியது.*

முன்னர் வந்துதித்து உலகம் மூன்றினும்
நின்னை ஒப்பிலா நீ பிறந்தபார்
என்ன தாகில்.யான் இன்று தந்தனென்.
மன்ன, போந்துநீ மகுடம் சூடென— 292

வாய்மை என்னுமீ தன்றி, வையகம்
தூய்மை என்றும்ஒன் றுண்மை சொல்லுமோ?
தீய்மைதான் அதில் தீர்வது அன்றியே
ஆய்மெய் யாக வேறு அறையல் ஆவதே 293

*இராமன் கூறுகிருன் :- உலகம் வாய்மையை அன்றி மற்ருென்றைத் தூய்மை என்று உண்மையாக ஒப்புமோ? தீமையிலிருந்து நீங்குவதன்றி வேறு யாதையும் மெய்ப்பொருளாக உணரத் தக்கதோ?*

எந்தை ஏவ.ஆண்டு ஏழோடு ஏழென
வந்த காலம்நான் வனத்துள் வைக ;நீ-
தந்த பாரம் தன்னை மெய்ம்மையால்
அந்த நாளெல்லாம் ஆள்என் ஆணையால் 294

*தந்தபாரம்-தந்தை தந்த அரச பாரம்.*

மன்னவன் இருக்க வேயும் "மணியணி மகுடம் சூடு"
என்ன,யான் இயைந்தது அன்னுன் ஏயது மறுக்க அஞ்சி:
அன்னது நினைந்து நீஎன் ஆணையை மறுக்க லாமோ?
சொன்னது செய்திஐய, துயருழந்துஅயரல் என்றான் 295

*மன்னர் ஆணைக்கு அடங்கி யான் அரசை ஏற்க ஒருப்பட்டேன்: அது போல் நீ என் ஆணைக்கு இயைந்து யான் சொன்னவாறு செய்.*

ஏத்தரும் பெருங்குணத்து இராமன் இவ்வழி
போத்தரும் தாதைசொல் புரக்கும் பூட்சியான்:
ஆத்தஆண்டு ஏழினோ டேழும் அந்நிலம்
காத்தல்உன் கடன்,இவை கடமை என்றனர் 296

*அப்போது தேவர்கள் :—ஏத்த அரு-போற்றுதற்குரிய, இவ்வழி போத்தரும்-இங்கு வனம் போவான். பூட்சி-கொள்கை.*

ஆமெனின் ஏழுஇரண் டாண்டின் ஐயநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி, நானிலம்
கோமுறை புரிகிலை என்னிற், கூர்எரி
சாம்,இது சரதம்:நின் ஆணை சாற்றினேன் 297

*பரதன் அண்ணனை நோக்கி :—கூர் எரி-பெரு நெருப்பு, சரதம்-சத்தியம்.*

விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்று
இன்மையின், அரிதுஎன்ன எண்ணி ஏங்குவான்—
செம்மையின் திருவடித் தலம்தந்து ஈகென்,—
எம்மையும் தருவன இரண்டும் நல்கினான் 298

*எம்மையும்-எல்லா உலக இன்பங்களையும், திருவடி-பாதுகை.*

அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினன்
முடித்தலம் இவையென முறையிற் சூடினன்,
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினன்
பொடித்தலம் இலங்கு பொலங்கொள் மேனியான் 299

*முடித்தலம்-மகுடம், பொடித்தலம்-நிலத்துப் புழுதி. பொலன்-பொன்.*

நந்தியும் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோல்முறை செலுத்த, சிந்தையான்
இந்தியங் களைஅவித்து இருத்தல் மேயினன்,
அந்தியும் பகலும்நீர் அருத கண்ணினன் 300

*நந்திக் கிராமத்தில் பாதுகை ஆட்சி செயவதாக வைத்து, இந்திரியங்களை அடக்கித் தவக் கோலத்தில் இருந்துவந்தான் பரதன்.*

# ஆரண்ய காண்டம்

## விராதன் வதைப் படலம்

முத்திருத்தியவ் விருந்த னையமொய்ந் நகையொடும்
சித்திரக் குரிசிலைக் குமரர் சென்றணுகினர்
அத்திரிப் பெயர் அருந்தவன் இருந்தஅமைதி,
பத்திரப் பழுமரப் பொழில்துவன்ற பழுவம் 301

*முத்துப்போன்ற புதுமை காட்டும் பற்கள்கொண்ட சீதையும் இருவரும் அத்திரி முனிவர் ஆச்சிரமம் அடைந்தனர். நகை-பல், பத்திரம்-இலை, துவன்ற-நெருங்கிய, பழுவம்-வனத்து ஆச்சிரமம்.*

அன்ன மாமுனியொடு அன்றுஅவண் உறைந்து, அவன்அரும்
பன்னி கற்பின் அநசூயை பணியால் அணிகலன்
துன்னு தூசினொடு சந்துஇவை சுமந்த சனகன்
பொன்னொடு ஏகி,உயர் தண்டகவனம் புகுதலும் 302

*பன்னி-பத்தினி, பணி-கட்டளைப்படி, சந்து-சந்தனம், சனகன் பொன்-சீதையோடு.*

நில்லும் நில்லும்என வந்து நிணமுண்ட நெடுவெண்
பல்லும் வல்லெயிறும் மின்னு பகுவாய் முழை திறந்து
அல்லி புல்லும்அலர் அன்னம் அனையானை ஒருகை-
சொல்லும் எல்லையின் முகந்து உயர்விசும்பு தொடர 303

*விராதன் :—நிணம்-கொழுப்பு இறைச்சி, முழை-குகை போன்ற வாய், அல்லி புல்லும்-தாமரையில் இருக்கும். சொல்லும் எல்லை-ஒரு வார்த்தை சொல்லும் நேரத்தில்.*

மதநல் யானை யனையான் நிலம் வகிர்ந்த குழிவாய்
நதம்உலாவுநனி நீர்வயின்அழுந்த; நவைதீர்
அதவ மாய் நறுநெய்யுண்டு,உலகில் அன்பர் கருதிற்று
உதவு சேவடியினால் அமலன் உந்துதலுமே 304

*இலக்குவன் வெட்டிய குழியில் இராமன் விராதனைத் தள்ளுதல் :—யானை அனையான்-இலக்குவன், நதம்-நதி, அதவம்-யாகாக்கினி உருவமாய்.*

வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனஉன்
பாதங்கள் இவை என்னின்,படிவங்கள் எப்படியோ?
ஓதங்கொள் கடலன்றி ஒன்றினொடு ஒன்றொவ்வாப்
பூதங்கள் தொறும்உறைந்தால் அவைஉன்னைப் பொறுக்குமோ 305

*விராதன் போற்றுகிறான் :—படிவம்-மற்ற உறுப்புகள், பூதம்-மற்ற நான்கு பூதங்களும். கடலன்றி-கடல் தவிர.*

தாய்தன்னை அறியாத கன்றில்லை, தன்கன்றை
ஆயும்அறியும்: உலகின்தாய் ஆகின்,ஐய
நீயறிதி எப்பொருளும், அவைஉன்னை நிலை அறியா.
மாயையிது என்கொல்லோ! வாராதே வரவல்லாய் 306

ஆய்-தாய், வருதற்கரியவனைக் காட்டி வந்து நிற்கும் இயல்புடையாய்.

அரவாகிச் சுமத்தியால், அயில்எயிற்றின் ஏந்துதியால்.
ஒருவாயின் விழுங்குதியால், ஓரடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை. இஃதறிந்தால் சீறுளோ
மருவாருந் துழாய்அலங்கல் மணிமார்பின் வைகுவாள் 307

நிலமகளை ஆதிசேடனாகிச் சுமக்கின்றாய், பன்றியாகி மருப்பில் தாங்குகிறாய், கண்ணனாகி உண்டு காட்டுகிறாய், திரிவிக்கிரமனாகி ஒரு அடியால் அளக்கின்றாய், மார்பிலிருக்கும் திருமகள் இதனைக் காணச் சகிப்பாளோ?

## சரபங்கர் பிறப்பு நீங்குபடலம்

மானே அனையாளொடு மைந்தனையும்
பூநேர் பொழிலின் புறனே நிறுவா-
ஆன்ஏ றெனவாள் அரியேறு இதெனத்
தானே அவ்வகன் பொழில்சா ருதலும் 308

புறனே-வெளியில் நிறுத்தி, கானை-ஆண்சிங்கம்போல இராமன் மட்டும் சோலையுட் சென்றான்.

ஏழையும் இளவலும் வருகென, இனிதா
வாழிய அவரொடும் வந்தனன் மகிழ்வால்:
ஊழியின் முதல்முனி உறையுளை அணுகா
ஆழியில் விழிதுயில் அவன்என மகிழ்வான் 309

ஏழை-சீதை, முனி-சரபங்கர், அணுகா-அணுகிப் பாற்கடலில் பள்ளி கொள்வான்போல் மகிழ்ந்தான்.

## அகத்தியப் படலம்

பண்டுஅயன் பயந்தருள் பால கில்லரும்
முண்டரும் மோனரும் முதலி னோர்கள்அத்
தண்டக வனத்துஉறை தவத்து ளோர்கள்தாம்
கண்டனர் இராமனைக் களிக்குஞ் சிந்தையார் 310

பண்டு பிரமன்பெற்ற பலரும் இராமனைக் கண்டு மகிழ்ந்தார்.

கனைவரு கடுஞ்சினத்து அரக்கர் காய,ஓர்
வினைபிறிது இன்மையின் வெதும்பு கின்றனர்
அனைவரு கானகத்து அமுத ளாவிய
புனைவர உயிர்வரும் உலவை போல்கின்றார் 311

*காய-சினங்கொள்ள, வினை-தடுக்கும்வினை, அனை-அனல், தீ. புனை-புனல், நீர். உலவை-பட்டமரங்கள்.*

கரக் கருங் கடுந்தொழில் அரக்கர் காய்தலின்
பொரற்குஇடம் இன்மையிற் புழுங்கிச் சோருநர்
அரக்கரென் கடலிடை ஆழ்கின்றார்-ஒரு
மரக்கலம் பெற்றென மறுக்கம் நீங்கினர் 312

*கரக்க அரு-தப்பி மறைதற்கரிய, பொரற்கு-போர் புரியவும், மரக்கலம்-கப்பல், மறுக்கம்-கலக்கம்.*

வேண்டின வேண்டினர்க் களிக்கும் மெய்த்தவம்
பூண்டுள ராயினும், பொறையின் ஆற்றலால்
மூண்டெழு வெகுளியை முதலின் நீங்கினர்,
ஆண்டுறை அரக்கரால் அலைப்புண் டார்அரோ; 313

*பொறையின் ஆற்றலால்-பொறுமை மிகுதியால், அலைப்புண்டார்-துன்புற்றார்.*

எழுந்தனர் எய்தினர் இருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றஅக் குரிசில் வீரனைப்
பொழிந்துஎழு காதலிற் பொருந்தி னர்,அவன்
தொழுந்தொறும் தொழுந்தொறும் ஆசி சொல்லுவார் 314

இரக்கம்என் றொருபொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர் என்று உளர்சிலர், அறத்தின் நீங்கினர்
நெருக்கவும், யாம்படர் நெறிஅலா நெறி
துரக்கவும் அருந்தவத் துறையுள் நீங்கினேம் 315

*நெருக்கவும்-வருத்தலினால், யாம்படர்-யாம்கொண்ட, துரக்க-செலுத்தப்பட்டு, நீங்கினேம்-விட்டு நிற்கிறோம்.*

வல்லியம் பலதிரி வனத்து மான்என
எல்லியும் பகலும்நொந்து இரங்கி ஆற்றலெம்,
சொல்லிய அறநெறித் துறையுள் நீங்கினேம்:
வில்லியல் மொய்ம்பினாய், வீடு காண்குமோ? 316

*வல்லியம்-புலி, எல்லி-இரவு, வீடு-விடுதலை.*

மாதவத்து ஒழுகலெம் மறைகள் யாவையும்
ஓதலெம், ஓதுவார்க்கு உதவல் ஆற்றலெம்,
மூதெரி வளர்க்கிலெம், முறையின் நீங்கினேம் :
ஆதலின் அந்தண ரேயும் ஆகிலேம் 317

*முதுஎரி-வேள்வித்தீ, முறை-ஒழுக்கம்.*

இந்திரன் எனின்அவன் அரக்கர் ஏயின
சிந்தையிற் செய்கையிற் கொள்ளும் செய்கையான் !
எந்தை,மற் றியாருளர் இடுக்கண் நீக்குவார் ?
வந்தனை யாம்செய்த தவத்தின் மாட்சியால் 318

*ஏயின-ஏவியபடி, வந்தனை-நீவந்துளாய்*

உருளுடை நேமியால் உலகை ஓம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ, போக்கிலா
இருளுடை வைகலேம், இரவி தோன்றினாய் ;
அருளுடை வீர,நின் அபயம்யாம் என்றார் 319

*நேமியால்-சக்கரத்தால், மன்னவன்-தசரதன், இனி இருளில் தங்கேம், சூரியன் நீ தோன்றினை.*

ஆவுக் காயினும், அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவரே தகை வானுறை
தேவர்க் குந்தொழு தேவர்கள் ஆகுவர் 320

*இராமன் :—பிறருக்காக உயிர்த்தியாகம் செய்தவரே தொழத்தக்கவர்.*

உரைத்த வாசகம் கேட்டுஉவந் தோங்கிட
இரைத்த காதலர் ஏகிய இன்னலர்
திரித்த கோலினர் தேமறை பாடினர்
நிருத்தம் ஆடினர் நின்று விளம்புவார் 321

*இரைத்த-ஆர்த்து எழுந்த, ஏகிய-நீங்கிய, கோல்-கைத்தண்டம்.*

ஆண்டகையர் அவ்வயின் அடைந்தமை அறிந்தான்
ஈண்டுஉவகை வேலைதுணை ஏழுலகம் எய்த—
மாண்ட வரதன்சரண் வழங்களதிர் வந்தான்
நீண்டதமிழால் உலகை நேமியின் அளந்தான் 322

அகத்தியர் :—ஆண் தகையர்-இராம இலக்குவர், உவகை வேலை-மகிழ்ச்சிக் கடல், வரதன் வணங்க-இராமன் வணங்கும்படி. மாண்ட-சிறந்த.

உழக்குமறை நாலினும் உயர்ந்து,உலகம் ஓதும்
வழக்கினும் மதிக்கவியினும் மரபின் ஆடி,
நிழல்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான் 323

வருந்திப் பயில் வேதங்களினும் சிறந்து, உலக வழக்கு செய்யுள் வழக்கு இரண்டினும் தோய்ந்து உலகுக்குத் தமிழ் தந்த அகத்தியன். ஒளிரும் சூலாயுதம், நெற்றிக்கண் கொண்ட சிவன் தந்த தமிழை;

நின்றவனை, வந்தநெடி யோன்அடி பணிந்தான்.
அன்றவனும் அன்பொடு தழீஇ அழுத கண்ணன்
நன்று வரவுஎன்றுபல நல்லுரை பகர்ந்தான்,
என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான் 324

நெடியோன்-இராமன். இசை கொண்டான்-அகத்தியன்.

பொருந்தஅமலன்பொழில் அகத்துஇனிது புக்கான்,
விருந்துஅவன் அமைத்தபின் விரும்பினன் விரும்பி-
இருந்தவம் இழைத்தஎனது இல்லிடையில் வந்தென்
அருந்தவம் முடித்தனை. அருட்குஅரச, என்றான் 325

அமலன்-இராமன், பெருந்தவம் புரியும் என் மனைக்கு நீ வந்து என் தவத்தை நிறைவேற்றினாய்.

வாழும் மறை வாழும்,மனு நீதிஅறம் வாழும்,
தாழும் இமையோர் உயர்வர், தானவர்கள் தாழ்வர்,
ஆழி உழவன் புதல்வ, ஐயமில்லை, மெய்யே.
ஏழுலகும் வாழும். இனி இங்குறைதி என்றான் 326

தாழும்-வருந்துகிற, தானவர்-அரக்கர், ஆழி உழவன்-தசரதன்; இங்கு உறைதி-இங்கு தங்கு.

ஓங்குமரன் ஓங்கி,மலை ஓங்கி, மணல்ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலை புடைவிம்மி,
தூங்குதிரை ஆறுதவழ் சூழலதுஓர் குன்றின்
பாங்கர்உள தால்உறையுள் பஞ்சவடி மஞ்ச, 327

மரன்-மரம், தூங்கு திரை-தவழும் அலைகள், சூழல்-இடம், மஞ்ச-மைந்தனே

கன்னிஇள வாழைகனி ஈவ,கதிர் வாலின்
செந்நெலுள, தேன்ஒழுகு போதும்உள, தெய்வப்
பொன்னிஎன லாயபுனல் ஆறும்உள, போதா
அன்னம்உள-பொன்இவளோடு அன்பின்விளை யாட 328

*கதிரில் வாலுடைச் செந்நெல்: போது-பூ, பொன்னி-காவிரி, போதா-பெருநாரை, பொன்-திருமகள்.*

## சடாயு காண் படலம்

கருமலை செம்மலை அனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர், செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தின்என் துணைவன் ஆழியான்
ஒருவனை இருவரும் ஒத்துளார் அரோ. 329

*சடாயு :—துணைவன்-தசரதன்.*

உந்தை உண்மைய னாக்கிச், சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு, தாரணி
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே,
எந்தை, வல்லது யாவர்வல் லார் !என- 330

*சிற்றவை-சிற்றன்னை, தம்பி-பரதன், வல்லது-வல்ல இச்செயல் செய்ய.*

பெரிதும் நன்றுஅப் பெருந்துறை வைகி, நீர்
புரிதிர் மாதவம், போதுமின், யான்அது
தெரிவு றுத்துவென் என்று,அவர் திண்சிறை
விரியும் நிழலிற் செல்ல,விண் சென்றனன் 331

*வைகி-தங்கி, அவர்கள் தன் நிழலிற் செல்லுமாறு சடாயு மேற்பறந்து சென்றான்.*

## சூர்ப்பநகைப் படலம்

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிவ ளாவிச்—
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச், சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினைக் கண்ணிற் கண்டார் 332

வண்டுறை கமலச் செல்வி வாள்முகம் பொலிய, வாசம்
உண்டுறை குவளைஒண் கண் ஒருங்குற நோக்கி, ஊழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச், சான்றோர்க்
கண்டுஅடி படிவ தென்னப் பொலிந்தது கடவுள்யாறு 333

*அணி-அழகு, ஆன்ற-சிறந்த. புலம்-அறிவு, வயல். அவி அகத்துறை-அடக்கமான அகப்பொருள், உட்குளிர்ந்த நீர்த்துறை. நெறி-இலக்கண நெறி, வழி. சவி-செம்மை. ஒழுக்கம்-நன்னெறி, நீர் ஒழுக்கு.*

*தாமரை செம்முகமாகவும், குவளை கருங்கண்ணாகவும், அலைகள் கைகளாக வும் பெற்று, மலர்கள் தூவி இருவரையும் கோதாவரி வரவேற்றது.*

**நாளம்கொள் நளினப் பள்ளி நயனங்கள் அனைய நேமி**
**வாளங்கள் உறைவ கண்டு மங்கைதன் கொங்கை நோக்கும்**
**நீளங்கொள் சிலையோன். மற்றை நேரிழை-நெடிய நம்பி**
**தோளின்கண் மனம் வைத்து,அன்ன சுடர்மணித் தடங்கள் கண்டாள் 334**

*தண்டின்மீதுற்ற தாமரைப் பூவில் கண்கள்போல் (இரட்டையாய்ச்) சக்கர வாளங்கள் இருப்பன கண்டு, நீண்ட வில்லையுடைய இராமன் சீதையின் தனங்களை நோக்க; அவள் அவன் தோளையும் அவற்றை ஒத்த மணற் குன்றுகளையும் நோக்கினாள். நயனம் - கண். நேமிவாளம் - சக்கரவாளம், நேரிழை-சீதை.*

**ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழைய ளாகும்**
**சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்:**
**மாதவள் தானும் ஆண்டு வந்துநீ ருண்டு மீளும்**
**போதகம் நடப்ப நோக்கிப், புதியதோர் முறுவல் பூத்தாள் 335**

*ஓதிமம்-அன்னம், உழையள்-அருகிலுள்ளவள், போதகம்-யானைக்கன்று*

**வில்லியல் தடக்கை வீரன் வீங்குநீர் ஆற்றின் பாங்கர்**
**வல்லிகள் நுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்கு நோக்க:**
**எல்லியங் குவளைக்கானத்து இடைஇடை மலர்ந்து நின்ற**
**அல்லியங் கமலம் கண்டாள், அண்ணல்தன் வடிவங் கண்டாள் 336**

*வல்லிகள் நுடங்க-நீர்க் கொடிகள் துவள்தல். இருள்நிறக் குவளைக் காட் டிடையில் தாமரை பூத்து நிற்பதொப்ப இராமன் உருவம் விளங்கும். (நீல உருவில் கண் வாய் கை கால் செந்நிறம்கொண்ட காட்சி).*

**நீலமாமணி நிருதர் வேந்தனை**
**மூலநாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்-**
**மேலைநாள்உயிரொடும் பிறந்து தான்விளை**
**காலம்ஓர்ந்து உடனுறை கடிய நோயன்னாள் 337**

*நிருதர்-அரக்கர், பிறக்கும்போதே உடன் உறைந்து உயிர் அழியும் காலம்வரை இருக்கின்ற நோய்போன்ற சூர்ப்பநகை.*

**பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்**
**செஞ்செவிய கஞ்சம்நிமிர் சீறடியள் ஆகி**
**அஞ்சொல்இள மஞ்ஞையென, அன்னம்என, மின்னும்**
**வஞ்சியென, நஞ்சம்என, வஞ்சமகள் வந்தாள் 338**

*செம்பஞ்சு ஊட்டி விளங்கும்; குளிர்ந்த தளிர்களும் வருந்தும்படியான தாமரைப் மலர்ப் பாதங்களால் நடந்து மயில, அன்னம், வஞ்சிக்கொடி, நஞ்சு என்று கூறுமாறு அவள் வந்தாள்: பல்லவம்-தளிர், கஞ்சம்-தாமரை, மஞ்ஞை-மயில்.*

**கானின்உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி**
**மேனிநனி பெற்று,விளை காமநெறி வாசத்**
**தேனின்மொழி உற்றினிய செவ்விநனி பெற்று,ஓர்**
**மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள் 339**

*கதிர்வல்லி-பூங்கொடி, செவ்வி-பருவஅழகு.*

**நூபுரமும் மேகலையும் நூலும்,அறல் ஓதிப்**
**பூமுரலும் வண்டும்இவை பூசலிடும் ஓசை**
**தாமுரைசெய் கின்றது,ஒரு தையல்வரும் என்று**
**கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான் 340**

நூபுரம்-சிலம்பு, மேகலை-இடைஅணி கோவை, அறல்ஓதி-கருமணல் ஒத்த கூந்தல்.

**விண்அருள வந்ததொரு மெல்லமுதம் என்ன**
**வண்ணமுலை கொண்டுஇடை வணங்கவந்த போழ்தத்து**
**எண்அருளி ஏழைமை துடைத்தருள்மெய் ஞானக்**
**கண் அருள்செய் கண்ணன்இரு கண்ணின்எதிர் கண்டான் 341**

விண்அருள-தெய்வ உலகம் தந்து, எண் அருளி-உள்ளத்தில் அருள் கொண்டு.

**பேருழைய நாகர்உலகிற்,பிறிதின், வானின்,**
**பாருழையின், இல்லதொரு மெல்லுருவு பாரா-**
**ஆருழை அடங்கும்!அழகிற்கவதி உண்டோ!**
**நேரிழையர் யாவர்இவர் நேர்!எனநினைத்தான் 342**

பேர்உழைய-பெரிய இடமான, பாரா-பார்த்து, அவதி-எல்லை, நேர்-ஒப்பு.

**அவ்வயின்அவ் வாசைதனது அகத்துடைய அன்னாள்**
**செவ்விமுகம் முன்னி,அடி செங்கையின்இறைஞ்சா**
**வெவ்விய நெடுங்கண்அயில் வீசி,அயல்பாரா**
**நவ்வியின் ஒதுங்கிஇறை நாணி,அயல் நின்றாள் 343**

*செவ்வி-அழகு, இறைஞ்சா-வணங்கி, கன்ன அயில்-வேல்போன்ற கண், நவ்வி-மான்போல், இறை-சற்றே.*

தீதில்வர வாக,திரு நின்வரவு சேயோய்,
போதஉளது எம்முழைஓர் புண்ணியம தன்றே!
ஏதுபதி? ஏதுபெயர்? யாவர் உறவு? என்ருன்
வேதமுதல். பேதைஅவள் தன்நிலை விரிப்பாள்:- 344

*சேயோய்-சிவந்தவள், நீ என்னிடம் வந்தது பெரும்புண்ணியம், பதி-ஊர் யாது? வேதமுதல்-இராமன்.*

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி,முப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன்ஆன செங்கையோன் தங்கை. திக்கின்
மாஎலாம் தொலைத்துவெள்ளி மலைஎடுத்துஉலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காம வல்லியாம் கன்னிஎன்ருள் 345

*பிரமன் மகன் புலத்தியன் மகன் விச்சிரவசு மகள் யான், சேவலோன்-காளை வாகனன் சிவன் நண்பனுகிய குபேரன் தங்கை. திக்கின்மா-திக்கு யானை, மலை-கயிலாயம், காவலோன்-இராவணன், பின்னை-தங்கை.*

இமையவர் தலைவனேயும் எளிமையின் ஏவல்செய்யும்
அமைதியின் உலக மூன்றும்ஆள்பவன் தங்கையாயின்,
சுமையுறுசெல்வத் தோடும் தோன்றலை, துணையும்இன்றித்
தமியைநீ வருதற்கொத்த தன்மைஎன்? தையல்,என்ருன் 346

*இந்திரனும் ஏவல் செய்யும் இராவணன் தங்கையாயின், நீ தனியாக வந்தது ஏன்?*

வீரன்அஃது உரைத்தலோடும், மெய்யிலாள் வீர, யான்அச்
சீரிய ரல்லார்மாட்டுச் சேர்கிலென்: தேவர் பாலும்,
ஆரிய முனிவர்பாலும் அடைந்தனென்இறைவ, ஈண்டோர்
காரியம் உண்மை,நின்னைக் காணிய வந்தேன் என்ருள் 347

*மெய்யிலாள்-பொய் உருவத்தாள், சீரியரல்லார்-நல்லவராகா இராவணு தியர்.*

அன்னவள் உரைத்தலோடும். ஐயனும் அறிதற்கொவ்வா
நன்னுதல் மகளிர்சிந்தை, நன்னெறிப்பால அல்ல:
பின்இது தெரியும் என்னுப்-பெய்வளைத்தோளி, என்பால்
என்னகா ரியத்தைச் சொல்,அஃது இயையுமேல்இழைப்பல் என்ருன் 348

*மாதர் எண்ணங்கள் எளிதில் அறியக்கூடியன வல்ல. வளை-வளையல் அணி, இழைப்பல்-செய்துநிற்பேன்.*

தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்ப தென்ப-
தாம்எனல்ஆவ தன்ருல், அருங்குல மகளிர்க் கம்மா!
ஏமுறும் உயிர்க்கு நோவேன்,என்செய்கேன், யாரும்இல்லேன்:
காமன்என்று ஒருவன் செய்யும் வன்மையைக்காத்தி என்ருள் 349

குலமாதர் தம் காமத்தைத் தாமே வெளியிடார். ஏமுறு-இன்பமுறு, வன்மை-கொடுமை.

சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வேறு
ஏணுற மிளிர்ந்து நாணு விதம்புரண்டு இருண்ட வாட்கண்
பூணியல் கொங்கை யன்னுள் அம்மொழி புகல்தலோடும்
நாணிலள்; ஐயன்-நொய்யள் நல்லளும் அல்லள் என்றுன் 350

சேணுற-அதிகமாக, அரி-ரேகை, ஏண்-அழகு, ஐயன்-இராமன்.

முனிவரோ டுடையர் முன்னே முதிர்பகை; முறைமை நோக்கார்:
தனியைநீ ஆதலால்மற்று அவரொடுந் தழுவற்கொத்த
வினயம் ஈதல்லது இல்லை, விண்ணும்நின் ஆட்சிஆக்கி
இனியராய் அன்னர் வந்துஉன் ஏவலின் நிற்பர் என்றுள் 351

சூர்ப்பநகை :—என் இனத்தார் முன்னர் முனிவருடன் பகைத்தார். நீ தனியன், ஆதலால் அவர்களுடன் ஒன்றி வாழத்தக்க செயல் இஃதே (என்னை மணப்பதே).

நிருதர்தம் அருளும் பெற்றேன், நின்னலம் பெற்றேன், நின்னேடு
ஒருவருஞ் செல்வத் தியாண்டும் உறையவும் பெற்றேன். ஒன்றே
திருநகர் தீர்ந்த பின்னர் செய்தவம் பயந்தது! என்னு
வரிசிலை வடித்த தோளான் வாள்எயிறு இலங்க நக்கான் 352

நிருதர்-அரக்கர், தவம் பயந்தது-தவம் தந்த பயன்! நின்னலம்-உன்னைக் கூடும் இன்பம்.

பொருதிறத் தானைநோக்கிப், பூவையை நோக்கி நின்றுள்:
கருதமற் றினிவே றில்லை. கமலத்துக் கடவுள்தானே
ஒருதிறத் துணரநோக்கி—உருவினுக்கு உலக மூன்றின்
இருதிறத் தார்க்குஞ்செய்த வரம்புஇவர் இருவர் என்றுள் 353

இராமனையும் சீதையையும் அவள் நோக்கி "ஆண் பெண் உருவுக்கான அழகின் வரம்பு இது!" என்று வியந்தாள்.

ஒள்ளிதுஉன் உணர்வும்! இன்னே. உன்னையார் ஒளிக்கும் ஈட்டார்!
தெள்ளிய நலத்தி னுய்,உன் சிந்தனை தெரிந்த தம்மா!
கள்ளவல் லரக்கி போலாம்! இவளைநீ காண்டி: என்னு
வெள்ளிய முறுவல் முத்தம் வெளிப்பட வீரன் நக்கான் 354

ஒள்ளிது-மிக நன்று, ஒளிக்கும் ஈட்டார்-விலக்க வல்லவர். இவளை-சீதையை, முத்தம்-முத்துப்பல், நக்கான்-ஏளனம் செய்தான் இராமன்.

வளையிற் றுஅரக்க ரோடு வரும்வினை யாட்டென்றுலும்
வினைவன தீமை யேயாம், என்பதை உணர்ந்த வீரன்
உளைவன இயற்றல், ஒல்லை உன்நிலை உணரு மாயின்
இளையவன் முனியும். நங்கை,ஏகுதி விரைவின் என்றான் 355

*எயிறு பல், உளைவன-துன்பமானவை புரியேல், இளையவன்-இலக்கு வன் வெகுண்டு நிற்பான்.*

தாடகைக்கொடியாள்தட மார்பிடை
ஆடவர்க் கரசன்அயில் அம்புபோல்-
பாடவத் தொழில் மன்மதன் பாய்கணை
ஓட, உட்கி உயிருளைந் தாள் அரோ! 356

*பாடுபடுத்தும் மன்மத கணையால் சூர்ப்பநகை நொந்து வருந்தினுள்.*

கைகளால் தன் கதிர்இளங் கொங்கைமேல்
ஐய தண்பனி அள்ளினள் அப்பினள்,
மொய்கொள் தீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால் 357

*கதிர்-கூரிய, தீயில் வெந்து கொதிக்கும் பாறையில் வைத்த வெண்ணெய்போல் உருகி நைந்தாள்.*

வந்து கார்மழை தோன்றினும், மாமணிக்
கந்து காணினும் கைத்தலம் கூப்புமால்,
இந்து காந்தத்து ஈர நெடுங்கல்லும்
வெந்து காந்த வெதுப்புறு மேனியாள் 358

*மணிக்கந்து-நீல மணித்தூண், சந்திரகாந்தக் கல்லும் கொதிக்க மேனி வெப்புற்று நின்றாள்.*

நில்லடீஇ எனக் கடுகினன், பெண்என நினைந்தான்,
வில்எடாது,அவள் வயங்கெரி யாம்என விரிந்த
சில்அல்ஓதியைச் செங்கையிற் றிருகுறப் பற்றி,
ஒல்வயிற் றுதைத்து, ஒளிகிளர் சுற்றுவாள் உருவி— 359

*சீதையை எடுக்கச்சென்ற அரக்கியிடம் இலக்குவன் :—வீங்குஎரி-ஓங்கு நெருப்பு, சில் அல்-குளிர்ச்சியுற்ற இருண்ட தலைமயிரை, ஒல்-விரைவாக.*

ஊக்கித் தாங்கி,விண் படர்வெம்என்று உருத்தெழு வாளை
நூக்கி நொய்தினின் "வெய்துஇழையேல்"எனப் நுவலா
மூக்கும் காதும்வெம் முரண்முலைக் கண்களும் முறையால்
போக்கிப், போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான் 360

*ஊக்கமுற்றுத் துன்பத்துடன் விண்ணிற் செல்லப்புறப்பட்டாளை. உருத்து-சினந்து, நூக்கி-தள்ளி, வெய்து இழையேல்-தீயன புரியேல்,*

நுவலா-சொல்லி, கன்ன-காம்பு, புரிகுழல் விட்டான். தலைமயிர்ப் பிடியை விட்டுவிட்டான்.

**கொலைதுமித்துஉயர் கொடுங்கதிர் வாளின்அக் கொடியாள்**
**முலைதுமித்துஉயர் மூக்கினை நீக்கிய முறைமை-**
**மலைதுமித்தென, இராவணன் மணியுடை மகுடத்**
**தலை துமித்தற்கு நாட்கொண்டதுஒத்ததோர் தன்மை 361**

கொலையிற்சிறந்த தன் வாளினால் அவள் முலையை, மூக்கை அறுத்தது இராவணன் தலையைக் கொய்தற்கு நாட்செய்ததுபோல் ஆயிற்று. மலை துமித்து-மலைச் சிகரத்தை வீழ்த்தல்போல்.

**ஒற்றும் மூக்கினை, உலையுறு தீஎன உயிர்க்கும்,**
**எற்றும் கையினை நிலத்தினில், இணைத்தடங் கொங்கை**
**பற்றும் பார்க்கும்,மெய் வெயர்க்கும்,தன் பருவலிக் காலால்**
**சுற்றும் ஓடும்,போய்ச் சோரிநீர் சோர்தரச் சோரும் 362**

அவள்:—ஒற்றும் ஒட்டுவாள், எற்றும்-அடிப்பாள், பருவரல்-துன்பத்தின், சுற்றும்-வட்டஞ்சுற்றுவாள்.

**மரனேயும் நெடுங்கானின் மறைந்துறையும் தாபதர்கள்,**
**உரனேயோ, அடல்அரக்கர் ஓய்வேயோ, உற்றெதிர்ந்தார்**
**அரனேயோ அரியேயோ அயனேயோ எனும் ஆற்றல்!**
**கரனேயோ, யான்பட்ட கையறவு காணுயோ 363**

ஏயும்-பொருந்திய, மறைந்துறையும்-தவவேடத்தில் மறைந்திருக்கும் இருவர் வலிமை இதோ! வீரஅரக்கரின் ஓய்ந்த நிலையோ? என் எதிரில் உற்றவர் அரனோ அரியோ அயனோ? என்னே வலிமை? கரனே, யான் உற்ற இழிவை வந்து காண்.

**நசையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட**
**வசையாலே நினதுபுகழ் மாசுண்ட தாகாதோ?**
**திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்புஒசித்த**
**இசையாலே நிறைந்த புயத் திராவணனோ! இராவணனோ! 364**

நசையால்-ஆசையால், ஒசித்த-ஒடித்த.

**கானம்அத னிடைஇருவர் காதொடுமூக் குடன்அரிய,**
**மானம்அதால் பாவியேன் இவண்மடியக் கடவேனோ?**
**தானவரைக் கருவறுத்துச், சதமகனைத் தளையிட்டு**
**வானவரைப் பழிகொண்ட மருகாவோ மருகாவோ 365**

மானமதால்-அவமானத்தால், தானவர்-அசுரர், சதமகன்-இந்திரன், தளை-விலங்கு, பணி-குற்றேவல்.

கல்லீரும் படைத்தடக்கை அடல்கரதூ டணர்முதலா
அல்ஈரும் சுடர்மணிப்பூண் அரக்கர்குலத் தவதரித்தீர்,
கொல்ஈரும் படைக்கும்ப கருணனைப்போல் குவலயத்துள்
எல்லீரும் உறங்குதிரோ! யான்அழைத்தல் கேளீரோ 366

*கல்ஈரும்-மலைகளைப் பிளக்கும், அல்ஈரும்-இருளை அகற்றும்.*

வந்தானை இடைநோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு செழுநிலத்தைச் சேருக்கி,
அந்தோ !உன் திருமேனிக்கு அன்புஇழைத்த வன்பிழையால்
எந்தாய்,யான் பட்டபடி இதுகாண்என்று எதிர் விழுந்தாள் 367

*வந்தானை-தன் எதிரில் வந்த இராமனை "உன்மீது அன்புகொண்ட குற்றத்தால் யான் உற்ற கேட்டைப்பார் என்று முறையிட்டாள்.*

காவல்திண் கற்புஅமைந்தார் தம்பெருமை தாம்கழுறுர்,
ஆவல்பே ரன்பினுல் அறைகின்றே னும்அன்ருே!
தேவர்க்கும் வலியான்தன் திருத்தங்கை இவள்ஈண்டு
ஏவர்க்கும் வலியாள்என் றினையோனுக்கு இயம்பீரோ? 368

*உன்மீதுற்ற ஆவலால் யான் என் பெருமைகளைப் பேசுகிறேன். வலியான்-இராவணன். வலியாள்-யாவரினும் சிறந்தவள். ஏவர்-யாவர்.*

மாப்போரில் புறங்காப்பேன், வான்சுமந்து செலவல்லேன்
தூப்போலக் கனிபலவும் சுவையுடைய தரவல்லேன்.
காப்போரைக் கைத்தென்னீர்? கருதியது தருவேன்.இப்
பூப்போலும் மெல்லியலால் பொருள்என்னே? புகல்வீரால் 369

*தூ-ஊன்உணவுபோல், கைத்து என்-வெறுப்பது ஏன்? பொருள் என்னே-இச்சீதையால் உமக்கு யாது நன்மை?*

விண்டாரே அல்லாரோ வேண்டாதார்: நான்வேண்டின்
உண்டாய காதலின்என் உயிர்என்பது உமதன்ருே.
கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடமன்ருே!
கொண்டாரே கொண்டாடும் உருபபெற்ருல் கொள்ளீரோ 370

*மனம் விட்டவர் அல்லவா வேண்டாதார் ஆவர்: கொண்டாரே-மணந்துகொண்டவர் மகிழத்தக்க உருப்பெற்றேன்: என்னைக்கொள்க.*

ஏற்றநெடுங் கொடிமூக்கும் இதுகாதும் முலையிரண்டும் இழந்தும் வாழ
ஆற்றுவனே! வஞ்சனையால் உமைஉள்ள பரிசறிவான் அமைந்த தன்றே!
காற்றினிலும் கனலினும் கடியானை, கொடியானை, கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன் என்றுசலங்கொண்டு போனள் 371

*வாழல் ஆற்றுவனோ-வாழ்வேனோ? உங்கள் இயல்பை அறிய வஞ்சனையாகச் செய்தன இவை. சலம்-சஞ்சலம், சினம்.*

## கரன் வதைப் படலம்

இருந்த மாக்கரன் தாளிணை யின்மிசை
சொரிந்த சோரியள் கூந்தலள், தூம்புஎனத்
தெரிந்த மூக்கினள் வாயினள், செக்கர்மேல்
விரிந்த மேகம்எனவிழுந் தாள்அரோ 372

*தாள் இணை-இருபாதங்களில், தூம்பு-நீர்க்குழாய், செக்கர்-செவ்வானம். சோரி-இரத்தம்.*

கண்டு நோக்கருங் காரிகை யாள்தன்னைக்
கொண்டு போவல் இலங்கையர் கோக்கெனு-
விண்டு மேல்விழுந் தேனை, வெகுண்டவர்
துண்டம் ஆக்கினர் மூக்கெனச் சொல்லினுள் 373

*அவள் கூறுகிருள் : காரிகை-சீதை, கோக்கு-அரசனுக்கு.*

நன்று சொல்லினிர்; நான்இச் சிறுர்கள்மேல்
சென்று போர்செயின் தேவர் சிரிப்பரால்!
கொன்று சோரி குடித்துஅவர் கொள்கையை
வென்று மீளுதிர் மெல்லிய லோடென்ருன் 374

*கரன்பிற அரக்கர்க்கு :—அவர் கொள்கையை-இராமர் வலியை.*

வந்தது சேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கு மாய-
பந்தமா வினையை மாளப் பற்றறு வெற்றி யோர்க்கும்
உந்தரு நிலையதாகி உடனுறைந்து உயிர்கள் தம்மை
அந்தகற்கு அளிக்கும் நோய்போல்-அரக்கிமுன் னுக.அம்மா 375

*பந்தம் ஒழியப் பற்றறுத்தவர்க்கும் விலக்கமுடியாததாகி, உடனிருந்து உயிரைக் கொல்லும் நோய்போல், சூர்ப்பநகையை முன்னுகக் கொண்டு சேனை வெள்ளம் வந்தது. வள்ளியோன்-இராமன், உந்த-நீக்க, அந்தகன்-யமன்,*

நெறிகொள்மா தவர்க்கு முன்னே நேர்ந்தனன்: நிருதர் ஆவி
பறிக்குவன் யானே என்ற பழமொழி பழுதுருமே.
வெறிகொள்பூங் குழலினுளை வீர,நீ-வேண்டினேன்யான்-
குறிக்கொடு காத்திஇன்னே, கொல்வன்இக் குழுவைஎன்று— 376

*இராமன் தம்பிக்கு :—நெறி-அறநெறி, நேர்ந்தனன்-உடன்பட்டுள்ளேன், பழுதுருமே-தவருமல், குழலினுள்-சீதை.*

மீளருஞ் செருவின்விண்ணும் மண்ணும்என் மேல்வந் தாலும்
நாளுலந் திழியும் என்றே, நானுனக்கு உரைப்ப தென்னே!
ஆளியின் துப்பினுய்,இவ் வமர்எனக் கருளிநின்று,என்
தோளிணைத் தின்னுகின்ற சோம்பினைத் துடைத்தி என்ருன் 377

*இலக்குவன் :—மீளரும்-தப்பி மீள்வதற்கு அரிய, நாள்-அவர் தம் வாழுள், ஆளித்துப்பினுய்-சிங்கம்போல் வலியனே. சோம்பினை-சோம்பலை நீக்கு.*

என்றனன் இளையவீரன், இசைந்திலன் இராமன், ஏந்தும்
குன்றன தோளின் ஆற்றல் உள்ளத்தின் உணரக்கொண்டான்:
அன்றியும் அண்ணல் ஆணை மறுக்கிலன், அங்கை கூப்பி
நின்றனன் இருந்தான் கண்ணீர் நிலனுறப் புலர்கின்ருன்பால் 378

வச்சையாமெனும் பயம்மனத்து உண்டென வாழும்
கொச்சை மாந்தரைச் கோல்வனை மகளுங் கூசார்.
நிச்சயம் எனும் கவசந்தான் நிலைநிற்ப தன்றி
அச்சம் என்னும்ஈ தாருயிர்க்கு அருந்துணை யாமோ? 379

*தூடணன் அரக்கர்க்கு:— வச்சை ஆம்-பழிப்பு என்னும், கொச்சை-இழிந்த, கூசார்-அஞ்சார். நிச்சயம்-மனத்திண்மை.*

பூஅராவுவேல் புரந்தரனேடுதான், பொன்ரு
மூவரோடுதான் முன்னின்று முட்டிய முனையில்
யாவர் ஓடினர்? இராக்கதர்! நுமக்கிடைத்து ஓடும்
தேவ ரோடுகற் றறிந்துளீ ராம்எனத் திகைத்தீர்! 380

*பூ அராவு-கூர்மையாகத் தேய்க்கப்பட்ட, பொன்ரு-அழிவிலா, புறங்காட்டுதலைத் தேவர்களிடம் கற்றவர்போலத் திகைக்கின்றீர்!*

இங்கோர் மானுடற் கித்தனை வீரர்கள் இடைந்தீர்;
உம்கை வாளொடு போய்விழுந்து ஊர்புகலுற்றீர்:
கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புற்றும் கொழுங்கண்
நங்கை மார்களைப் புல்லுதிரோ? நலம் நுகர்வீர்? 381

*இடைந்தீர்-பின்னிட்டீர் : இனியும் மனைவியரை மார்புற அணைத்துப் புல்லுவீரோ?*

செம்பு காட்டிய கண்இணை பால்எனத் தெளிந்தீர்.
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிந்உறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோ?தட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோ?குல மங்கையர்க் கம்மா! 382

சினந்து சிவந்து விளங்கவேண்டிய கண் அஞ்சிப் பஞ்சுபோல் வெள்ளை யாகத் தோன்றப்பெற்றீர், வெரிந்-முதுகில் குத்திநிற்கும் கொம்பு; போரில் மார்பில் ஊன்றிய அம்பு; எவற்ருல் விளக்க முறுவீர்? பின் இராமன்.

முடிப்பென் இன்ருெரு மொய்கணை யால்என
தொடுந்து நின்றுஉயர் தோளுற வாங்கினுன்,
பிடித்த திண்சிலை பேரகல் வானிடை
இடிப்பின் ஓசை படக்கடி திற்றதே 383

இராமன் வில் வானத்து இடி ஓசை காட்டி இற்றது.

என்னும் மாத்திரத்து ஏந்திய கார்முகம்
சின்னம் என்றும் தனிமையும் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மல் மரபினுல்
பின்உறத் தன் பெருங்கரம் நீட்டினுன் 384

ஒடிந்தபோது, கார்முகம் சின்னம் – வில்லின் ஒடிவு, மரபு - முன் முறைமையின்.

கண்டு நின்று கருத்துணர்ந் தான்என-
அண்டர் நாதன் தடக்கையின், அத்துணை
பண்டு போர்மழு வாளியைப் பண்பினுல்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன் 385

கண்டு-வருணன் கண்டு, மழுவாளி-பரசுராமன்.

வரம் அரக்கன் படைத்தலின், மாயையின்
உரம்உடைத் தன்மையால்,உலகு ஏழையும்
பரம் முருக்கிய பாவத்தினுல், வலக்
கரம்எனக், கரன் கண்டம்உற் ருன்அரோ. 386

படைத்தலின்-பெற்றிருத்தலால், பரம்முருககிய-மிக அழித்த, வலக்கை அறுபட்டதுபோல் கரன் தன் கழுத்தறுபட்டான்.

ஆர்த்தெ ழுந்தனர் ஆடினர் பாடினர்
தூர்ந்து அமைந்தனர் வானவர் தூமலர்.
தீர்த்த னும்பொலிந் தான்.கதி ரோன்திசை
போர்த்த மென்பனி போக்கிய தென்னவே 387

கதிரவன் பனியை நீக்கியதுபோல் இராமன் அரக்கரை அழித்து விளங்கினுன்.

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற:
இனிய சிந்தை இராமனும் ஏகினன்-
அனிக வெஞ்சமத் தாருயிர் போகத் தான்
தனி யிருந்த உடலன்ன தையல்பால் 388

*மொய்ப்புற-மொய்க்க, அனிகம்-சேனை, சமம்-போர், உயிர்நீங்கி உடன் தனித்திருந்ததை ஒத்த சீதையிடம் ஏகினன். சூர்ப்பநகை:—*

ஆக்கினேன் மனத்துஆசை. அவ் வாசைஎன்
மூக்கி னேடு முடிய முடிந்திலேன்,
வாக்கினல் உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கினேன் கொடியேன் என்று போயினள் 389

*நாளை-வாழ்நாளை.*

## மாரீசன் வதைப் படலம்

நிலையிலா உலகினிடை நிற்பனவும் நடப்பனவும் நெறியின் ஈந்த
மலரின்மேல் நான்முகற்கும் வகுப்பரிது. நுனிப்பதொரு வரம்பில் ஆற்றல்
உலைவிலா வகைஉழந்த தருமம்என, நினைந்தஎலாம் உதவும் தச்சன்
புலன்எலாம் தெரிப்பதொரு புனைமணிமண் டபம்அதனிற் பொலிய வந்தான் 390

*இராவணன் வருகை: யாவற்றையும் படைத்த பிரமனாலும் செய்ய முடியாது: நுட்பமான மிக்க ஆற்றல்பெற்ற தருமத்தைப்போல் நினைத்த எல்லாம் செய்யவல்ல விசுவகர்மாவின் திறனை எல்லாம் வெளிப்படுத்தி நிற்கும் மண்டபத்தில் வந்தான். ஈந்த-படைந்த, புலன் எலாம்-அறிவுத் திறனை.*

புலியினதள் உடையானும், பொன்னுடை புனைந்தானும், பூவினனும்
நலியும்வலத் தாரல்லர்: தேவரினிங் கியாவர் இனி நாட்ட வல்லார்!
மெலியும் இடை தடிக்கும்முலை வேய்இளந்தோள் சேயரிக்கண் வென்றி மாதர்
வலியநெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை வயங்க மன்னே 391

*புலித்தோலை அணி சிவனும், பீதாம்பரம் அணி திருமாலும், பூவில்அமர் பிரமனும் இவனை அசைக்கமுடியாது. நாட்ட-எதிர்நிற்க, அரி-ரேகை.*

இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர், கரதலம் சுமந்த உச்சியர்
மின்அவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே 392

*நோக்கும்-இராவணன் பார்ப்பான், விஞ்சை வேந்தர்-வித்யாதரர், சுற்ற-சூழ.*

மங்கையர் திறத்துஒரு மாற்றம் கூறினும்
தங்களை யாம்எனத் தாழுஞ் சென்னியர்,
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்
சிங்க ஏறுஎனத் திறல் சித்தர் சேரவே 393

*தாழும் சென்னியர்-தலைவணங்குவர், குவிந்த-ஒடுங்கிய.*

அன்னவன் அமைச்சரை நோக்கி, ஆண்டொரு
நன்மொழி பகரினும் நடுங்குஞ் சிந்தையர்
என்னைகொல் பணி?என இறைஞ்சு கின்றனர்
கின்னரர் பெரும்பயம் கிடந்த நெஞ்சினர் 394

*என்னை சொல்பணி-கட்டளையாது?*

மின்னுடை வேத்திரக் கையர். மெய்புகத்
துன்னெடுங் கஞ்சுகத் துகிலர், சோர்விலர்
பொன்னொடு வெள்ளியும் புரந்தராதி யர்க்கு
இன்னியல் முறைமுறை இருக்கை எய்தவே 395

*வேத்திரம்-பிரம்பு. மெய்புக-உடம்புக்கு, கஞ்சுகம்-சட்டை, பொன்-பிருகஸ்பதி, வெள்ளி-சுக்கிரன், புரந்தர ஆதியர்க்கு-தேவேந்திரன் முதலியோருக்கு ஆசனம் அளித்து உபசரிப்பர்.*

சூலமே முதலிய துறந்து, சுற்றிய
சேலையால் சிறியவாய் புதைத்துச், செங்கையின்
தோலுடை நெடும்பணை துவைக்குந் தோறெல்லாம்
காலன்வந் திசைக்கும்நாள் கடிகை கூரவே. 396

*சேலை-ஆடை, தோல்கட்டிய பேரிகை அடிக்கும்போதெல்லாம் காலன் வந்து நேரம் அறிவிப்பான். கூர-நெருங்க.*

கங்கையே முதலிய தீர்த்த கன்னியர்
கொங்கைகள் சுமந்துஇடை கொடியின் ஒல்கிட,
செங்கையின் அரிசியும் அலரும் சிந்தினர்
மங்கலம் முறைமுறை கூறி வாழ்த்தவே. 397

*கங்கை முதலிய கன்னியர் அரிசியும் மலரும்தூவி மங்கலங் கூறுவர்.*

இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும்தன்
அருந்தவம் உடைமையின், அளவில் ஆற்றலின்
பொருந்திய இராவணன்; புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே 398

*இரண்டும் ஒன்றும்-மூன்று உலகங்களும், கார்முகம்-வில், மாதர் சூழ இராவணன் வீற்றிருந்தான்.*

தங்கையும் அவ்வழித் தலையில் தாங்கிய
செங்கையள், சோரியின் தாரை சேந்துஇழி
கொங்கையள் மூக்கினள், குழையில் காதினள்,
மங்குலின் ஒலிபடத் திறந்த வாயினள் 399

சோரி தாரை-இரத்த ஒழுக்கு, மங்குலின் ஒலி-மேக முழக்கம்.

இந்திரன் மேலதோ, உலகம் ஈன்றபேர்
அந்தணன் மேலதோ, ஆழியானதோ,
சந்திர மௌலிபால் தங்கு மேகொலோ
அந்தரம்! என்றுநின்று அழல்கின்றார்சிலர் 400

அயலிருந்தோர் அவளைக் கண்டதும்:—இந்திரன், பிரமன், மால், சிவன் யார்மீதோ இன்று இராவணன் சினம்? என்றார். அந்தரம்-தீங்கு, அழிவு.

செப்புறற் குரியவர் தெவ்வர் யாருளர்?
முப்புறத் துலகமும் அடங்க மூடிய
இப்புறத்து அண்டத்தோர்க்கு இயைவது அன்றிது;
அப்புறத்து அண்டத்தார் ஆம்என்றார்சிலர் 401

செப்புற-தீங்கு செய்தார் என்று கூறத்தக்க, தெவ்வர்-பகைவர்,

என்னையே! இராவணன் தங்கை என்றபின்
அன்னையே என்றடி வணங்கல் அன்றியே
உன்னவே ஒண்ணுமோ ஒருவரால்! இவள்
தன்னையே அரிந்தனள் தான்என்றார்சிலர் 402

உன்னவே ஒண்ணுமோ-இதுசெய்ய யாராலும் நினைக்கவும் படுமோ?

சொல்பிறந் தார்க்குஇது துணிய ஒண்ணுமோ?
இல்பிறந் தார்தமக்கு இயைவ செய்திலள்:
கற்பிழந் தாள்எனக் கரன்கொலாம் இவள்
பொற்பிறந்து ஆக்கினன் புகன்று.என்றார்சிலர் 403

சொல்பிறந்தார்-புகழ்பெற்ற நல்லோர், இவள் கற்பிழந்தாள் எனக்கரனே இவள் அழகை ஒழித்துளான்.

முழவினில் வீணையில் முரளி யாழினில்
தழுவிய குரலினில் சங்கில் தாரையில்
எழுகுரல் இன்றியே, என்றும் இல்லதோர்
அழுகுரல் பிறந்ததுஅவ் இலங்கைக்கு அன்றுஅரோ 404

முரளி-குழல்.

என்று,இனைய வன்துயர் இலங்கைநகர் எய்த
நின்றவர் இருந்தவரொடு ஓடுநெறி நேடக்
குன்றினடி வந்துபடி கொண்டல்என, மன்னன்
பொன்திணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள் 405

ஓடுநெறிநாட-சபையைவிட்டு ஓடும்வகை நாடினர். கொண்டல்-மேகம் போல்

வற்கலையர், வார்கழலர், மார்பின் அணிநூலர்,
விற்கலையர், வேதம்உரை நாவர், நனி மெய்யர்
உற்குஅலையர் உன்னைஓர் துகள்தனையும் உன்னர்
சொற்கலை எனத்தொலைவில் தூணிகள் சுமந்தார் 406

சூர்ப்பநகை இராவணனுக்கு:—வற்கலை-மரவுரியர், விற்கலை-வில்வித்தை வல்லர், உற்கலையர்-உனக்கு அஞ்சார். துகள் தனை-துரும்பு அளவும். சொல்லின், (சொல், கலைகளைப்போல்) அலைபோல் அழிவில்லா அம்புப்புட்டில் கொண்டார்.

"ஆறுபுலன் அஞ்சினம் அரக்கரை" எனச்சென்று
ஏறுநெறி அந்தணர் இயம்ப;உல கெல்லாம்
வேறும்எனும் உங்கள்குலம் வேரொடும் அடங்கக்
கோறும்என முந்தைஒரு சூளுறவு கொண்டார் 407

ஆறுபுலன்-புலன் அடங்கி, ஏறு-உயர், வேறும்-வெல்லுவோம், கோறும்-கொல்லுவேம்.

மருந்தனைய தங்கைமணி நாசிநெடு வாளால்
அரிந்தவரும் மானுடர், அரிந்தும்உயிர் வாழ்வார்!
விருந்தனைய வாளொடும் விழித்துஇறையும் வெள்காது
இருந்தனன் இராவணன்! இன்னுயிர்கொ டின்னும் 408

இராவணன் :—மருந்து-அமிர்தம், விருந்தனைய-புத்தம் புதிய, இறையும்-சற்றும், கொடு-கொண்டு.

மூளும் உள தாயபழி என்வயின் முடித்தோர்
ஆளும் உளவாம், அவர்தம் ஆருயிரும் உண்டாம்,
வாளும் உளது,ஓதவிடம் உண்டவன் வழங்கும்
நாளும் உள, தோளும்உள, நானும் உளென்அன்றே! 409

மூளும்-இப்போது மூண்ட, உளதாய-எப்போதும் நிலைக்கும்: விடம் உண்டவன்-சிவன். ஆளும்-உருவமும், ஓதம்-கடல்.

புத்துறவு உறப்,பழி புகுந்ததென நாணித்
தத்துறுவ தென்னை. மனனே,தளரல் அம்மா!
எத்துயர் உனக்குளது?இனிப் பழிசுமக்கப்
பத்துள தலைப்பகுதி, தோள்கள் பல அன்றே! 410

என்றுமில்லாத புதிதான உறவு, தலைப்பகுதி-தலைகளின் கூட்டம்.

சொல் என்றன் வாயில்கேட்டார்.தொடர்ந்தெழு சேனையோடும்
கல் என்ற ஒலியிற் சென்றார் கரன்முதற் காளை வீரர்.
எல் ஒன்று கமலச் செங்கண் இராமன்என்றிசைத்த ஏந்தல்
வில் ஒன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றாள் 411

*சூர்ப்பநகை :—சொல்-செய்தி, என்-நான் கூறியவற்றைக் கேட்டு, எல்-கதிர் ஒளி.*

என்வயின் உற்ற குற்றம் யாவர்க்கும் எழுதொ ணாத
தன்மையின், இராமனோடும் தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள், வேய்வயின் மென்தோள் கொண்டாள்
பொன்வயின் மேனிகொண்டாள் பொருட்டினால் புகுந்ததென்றாள் 412

*தாமரை தவிரப் போந்தாள்-சீதை, மருங்குல்-இடை, வேய்-மூங்கில், பொருட்டினால்-அவள் காரணமாக.*

காமரம் முரலும் பாடல், கள்ளனக் கனிந்த இன்சொல்
தேமலர் நிறைந்த கூந்தல், தேவர்க்கும் அணங்காம் என்னத்
தாமரை இருந்த தையல் சேடியாம் தரமும் அல்லள்:
யாம்உரை வழங்கும்என்பது ஏழைமைப் பால தன்றோ 413

*காமரம்-சீகாமரம், தேவரும் போற்றத்தக்க மாது: திருமகள் இவட்குத் தோழியாகும் தகுதியும் பெற்றிலள். ஏழைமை-பேதைமை.*

மஞ்சொக்கும் அளகஓதி, மழைஒக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள், செய்ய பவ்ளத்தின் விரல்கள். ஐய
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள். வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும், கடலினும் பெரிய கண்கள்! 414

*அளகம் ஓதி-முடி, மஞ்சு-மேகம், வடித்த நீண்ட, மழை-நீருண்ட மேகம். கஞ்சம்-தாமரை, வதனம்-முகம்.*

தோளையே சொல்லு கேனோ! சுடர்முகத் துலவுகின்ற
வாளையே சொல்லு கேனோ! அல்லவை வழுத்து கேனோ!
மீளவும் திகைப்ப தல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்:
நாளையே காண்டிஅன்றே, நான்உனக் குரைப்ப தென்னோ 415

*வாள்-கண், அல்லவை-மற்றவை பற்றி, மீளவும்-மேலும் சொல்ல, காண்டி-பார்.*

வில்ஒக்கும் நுதல் என்றாலும்,வேல்ஒக்கும் விழி என்றாலும்,
பல்ஒக்கும் முத்தென்றாலும், பவளத்தை இதழ் என்றாலும்,
சொல்ஒக்கும், பொருள்ஒவ் வாவால். சொல்லலாம் உவமை உண்டோ?
நெல்ஒக்கும் புல்என்றாலும் நேர்உரைத்தாக வற்றே? 416

*சொல்-சொல் அளவில், வற்றோ-வல்லதோ, நேர் உரை-சரியான உவமை.*

இந்திரன் சசியைப் பெற்ருன்.இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்ருன்.தாமரைச் செங்க ணனும்
செந்திரு மகளைப் பெற்ருன்.சீதையைப் பெற்ருய் நீயும்.
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கில்லை உனக்கே ஐயா 417

*சசி - இந்திராணி, அந்தரம்பார்க்கின் - முடிவாக உன்னின். 1. நன்மை அவர்க்கு, இல்லை உனக்கு : 2. நன்மை அவர்க்கில்லை, உனக்கு.*

பாகத்தில் ஒருவன் வைத்தான். பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான். அந்தணன் நாவில் வைத்தான்.
மேகத்தின் மின்னைமுன்னே வென்ற நுண்ணிடையை நீயும்
மாகத்தோள் வீர, பெற்ருல், எங்கனம் வைத்து வாழ்தி? 418

*சிவன் பாகத்திலும், திருமால் மார்பிலும், பிரமன் நாவிலும் தேவியரைக் கொண்டார். மாகத்தோள்-பெரிய வீங்கிய தோள், எங்ஙனம்-1. எவ்விடத்தில்; 2. எவ்வாறு?*

பிள்ளைபோல் பேச்சினளைப் பெற்றபின் பிழைக்க லாற்ருய்:
கொள்ளைபோகின்ற செல்வம் அவளுக்கே கொடுத்தி ஐய,
வள்ளலே, உனக்கு நல்லேன்: மற்றுநின் மனையின் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க் கெல்லாம் கேடுசூழ் கின்றேன் யானே

*பிள்ளைபோல்-மழலைபோல், பிழைக்கலாற்ருய்-நீ 1. தீங்கு செய்யமாட்டாய், 2. உயிர்வாழமாட்டாய். கிள்ளை-கிளிபோன்ற மனைவியருக்கு (1. நீ இறப்பதால், 2. நீ அவர்களைப் புறக்கணிக்க நேர்வதால்) கேடு செய்கிறேன்.*

மீன்கொண்டுஊ டாடும்வேலை மேகலை உலகம் ஏத்த
தேன்கொண்டூ டாடும் கூந்தல் சிற்றிடைச் சீதை என்னும்
மான்கொண்டூடாடும் நீ,உன் வாள்வலி உலகங்காண
யான் கொண்டூ டாடும்வண்ணம் இராமனைத் தருதி என்பால் 420

*மீனுலாம் கடலை ஆடையாக உடுத்த உலகம். வண்டு உலாம் கூந்தல் பெற்ற சீதை. சீதை என்னும் மானைக்கொண்டு திளைக்கும் நீ, யான் திளைக்க இராமனை எனக்குத் தருதி, தேன்-வண்டு.*

தருவது விதியே என்ருல், தவம்பெரிது உடையரேனும்
வருவது வருநாளன்றி வந்துகை கூட வற்ருே?
ஒருபது முகமும் மார்பும் உருவமும், கண்ணும் தோள்கள்
இருபதும் படைத்தசெல்வம் எய்துவது இனிநீ எந்தாய் 421

*கைகூட வற்ருே-கிடைக்கவல்லதோ? இனி நீ எல்லாம் எய்துவாய்.*

இன்னவள் தன்னை உன்பால் உய்ப்பல்என் றெடுக்க லுற்ற
என்னைஅவ் விராமன் தம்பி இடைபுகுந்து இலங்கு வாளால்
முன்னைமூக்குஅரிந்து விட்டான்,முடிந்ததுஎன் வாழ்வும்.உன்னின்
சொன்னபின் உயிரைநீப்பான் துணிந்தனென் என்னச் சொன்னாள் 422

உய்ப்பல்-கொண்டு சேர்ப்பேன், உன்னின்-உன்னிடம்.

கோபமும் மற்றும் மானக் கொதிப்பும்என்று இனைய எல்லாம்
பாபம்நின் றிடத்து நில்லாப் பெற்றிபோல் பற்றுவிட்ட;
தீபம் ஒன்றுஒன்றை யுற்றால் என்னலாம் செயலிற், புக்க
தாபமும் காம நோயும் ஆருயிர் கலந்த அன்றே 423

மறன்-வீரம், பற்றுவிட்ட-நீங்கின, தாபம்-வேட்கைத் தவிப்பு.

கரனையும் மறந்தான், தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையு மறந்தான், உற்ற பழியையு மறந்தான, வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால்—முன்னைப் பெற்ற
வரனையு மறந்தான், கேட்ட மங்கையை மறந்தி லாதான் 424

உரன்-வலிமை, அரனையும் வெற்றிகொண்ட - மன்மத பாணத்தால் தன் வெற்றிக்கெல்லாம் காரணமான அரனையும், தான் முன்பெற்றுள்ள வரங்களையும் மறந்தான்.

சிற்றிடைச் சீதைஎன்னும் நாமமும், சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றால், ஒன்றொழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ! மறக்கலாம் வழிமற்றி யாதோ!
கற்றனர் ஞானமின்றேல் காமத்தைக் கடக்க லாமோ 425

சீதை என்னும் பெயரும் இவன் சிந்தையும் இரண்டின்றி ஒன்றாயின.

மயிலுடைச் சாயலானை வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்.
அயிலுடை அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்போல் வெதும்பிற் றன்றே

எயில்-அரண், அயில்-வேல்.

விதியது வலியி னாலும், மேலுள வினையி னாலும்,
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி னாலும்,
கதியுறு பொறியின் வெய்ய காமநோய் - கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே 427

மேலுள-இனி நடக்கவேண்டிய, பயத்து-விளைவினால். கதியுறு பொறியின்-செயற்படு உறுப்புகளில் அவன் வெறி வெளிப்பட்டது.

பொன்மய மான நங்கை மனம்புகப் புன்மை பூண்ட
தன்மையோ, அரக்கன் தன்னை அயர்த்ததோர் தன்மை யாலோ,
மன்மதன் வாளிதூவி நலிவதோர் வலத்த னானன்.
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்த தன்றே 428

*மங்கை - சீதை, புன்மை - சிறுகுணம், அயர்த்த - மதிமறந்த, மாற்று- அழிக்கும்.*

பரங்கி டந்த மாதிரம் பரித்த பாழி யானையின்
கரங்கி டந்த கொம்பொ டிந்து இரங்க வென்ற காவலன்
மரங்குடைந்த தும்பிபோல்,அநங்கன் வாளி வந்து வந்து
உரங்குடைந்து நொந்து நொந்து உளைந்து உளைந்து ஒதுங்கினான்

*பாரமான திக்குகளைச் சுமக்கும் வலிய யானைகள். உரம்-உள்ளம்.*

மாதிரத் திறுதி காறும் தன்மனத் தெழுந்த மையல்
வேதனை வெப்பம் செய்ய, வேனிலும் வெதும்புங்காலை
யாதிது? இங்கிதனின் முன்னைச் சிசிரம் நன்று?இதனை நீக்கிக்
கூதிராம் பருவந் தன்னைக் கொணருதிர் விரைவின் என்றான் 430

*மாதிரத்து-திசைகளின் முடிவு, யாது இது-இது என்ன பருவம், சிசிரம்- பின்பனிக்காலம்.*

கூலத்தார் உலகமெல்லாம் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க,
நீலத்தார் அரக்கன் மேனி நெய்இன்றி எரிந்த தன்றே.
காலத்தால் வருவதொன்றோ. காமத்தால் கனலும் வெந்தீ
சீலத்தால் அவிவ தன்றிச் செய்யத்தான் ஆவ துண்டோ 431

*கூலத்து ஆர்-கடற்கரை கொள், நீலத்தார்-நீலநிறத்து, சீலம்-நல்லொழுக்கம்.*

புடை கொண்டெழு கொங்கையும் அல்குலும் புல்கிநிற்கும்
இடை கண்டிலம், அல்லது எல்லா உருவும் தெரிந்தாம்.
விடம் நுங்கிய கண்ணுடையார் இவர் மெல்ல மெல்ல
மட மங்கையராய் என்மனத்தவர் ஆயினரே! 432

*புடைகொண்டு-புடைத்து, புல்கி-இரண்டையும் இணைத்து, என் மனத்துள் உள்ளவளானாள்.*

பொய் நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தானை நோக்கி
நெய்நின்ற கூர்வாள்அவன் "நேருறநோக்கு: நங்காய்,.
மைநின்ற வாட்கண் மயில்நின்றெனவந் தென்முன்னர்
இந்நின்ற வளாங்கொல்? இயம்பிய சீதை" என்றான் 433

*இராவணன்-சூர்ப்பநகையிடம் :—மை நின்ற-மை பூசப்பட்டு வாள் போன்ற கண், இந்நின்றவளோ நீசொன்ன சீதை? அவள் :—*

**செந்தாமரைக் கண்ணொடும், செங்கனி வாயினொடும்,**
**சந்தார்தடந் தோளொடும், தாழ்தடக் கைகளோடும்**
**அந்தார் அகலத் தொடும், அஞ்சனக் குன்றம் என்ன**
**வந்தான் இவன்ஆகும்அவ் வல்வில் இராமன் என்றாள் 434**

*அவள் :—சந்து-சந்தனம் பூசிய, அகலம்-மார்பு, அஞ்சனக் குன்று-நீல மலை. இராவணன்:—*

**பெண்பால்உரு நான்இது கண்டது, பேதைநீ ஈண்டு**
**எண்பாலுமிலாத தோர்ஆணுருஎன்றி. என்னே**
**கண்பாலுறு மாயை கவற்றுதல்! கற்ற நம்மை**
**மண்பாலவரேகொல் விளைப்பவர்மாயை? என்றான் 435**

*அவன் :—எண்பாலும் இலாத-எண்ணுதற்கே யாதுமில்லாதது, என்றி-என்கிறாய்: கண் எதிரில் மாயை வஞ்சிக்கிறதே! மாயம் கற்ற நம்மை மனிதரோ மயக்குவார்? அவள்:—*

**ஊன்றும் உணர்வு அப்புறம் ஒன்றினும் ஓடலின்றி**
**ஆன்றும் உளதா நெடிது ஆசை கனற்ற நின்றாய்க்கு**
**ஏன்றுஉன் எதிரே விழிநோக்கும் இடங்கள் தோறும்**
**தோன்றும் அனையாள்: இதுதொன்னெறித் தாகும் என்றாள் 436**

*அவள் :—சீதைபால் ஊன்றிய உணர்வு வேறு இடத்திற் செல்லாமல், உன் ஆசைப்பெருக்கு உன்னை எரிக்க; அவள் உனக்கு எங்கும் தோன்று கிறாள், ஏன்று-ஏற்று.*

**அன்னாள் அதுகூற, அரக்கனும் - அன்னதாக:**
**நின்னால் அவ்விராமனைக் காண்குறும் நீர்என்? என்றான்.**
**எந்நாள் அவன்என்னைஇத் தீர்வரும் இன்னல் செய்தான்**
**அந்நாள் முதல்யானும் அயர்த்தில னாகும் என்றாள் 437**

*நீர் என்-தன்மை என்ன? தீர்வரு இன்னல்-நீக்கமுடியாத தீங்கு, அயர்த்திலன்-மறந்திலேன். இராவணன்:—*

**ஆமாம் அதுஅடுக்கும்.என் ஆக்கையோடு ஆவி நைய**
**வேமால். வினையேற்கு இனிஎன் விடிவாகும்? என்னக்;**
**கோமான் உலகுக்கு ஒருநீ குறைகின்ற தென்னே?**
**பூமான் குழலாளைநீ வௌவுதி போதி என்றாள் 438**

*அவன் :—அது அடுக்கும்-அது தக்கதே, வேம்-வேகிறது, விளைவு-முடிவு யாது! (அவள்) கோமான்-நீ தலைவன், வௌவுதி-எடுத்துவா. மாரீசன்:—*

சந்தமலர்த்தண் கற்பக நீழல் தலைவர்க்கும்
அந்தக னுக்கும் அஞ்ச அடுக்கும் அரசாள்வாய்:
இந்தவனத்து என் இன்னலின் இருக்கைக்கு எளியோரின்
வந்த கருத்துஎன்? சொல்லுதி என்றான் மருள்கின்றான் 439

*மாரீசன் :—தலைவன் - இந்திரன், அந்தகன் - யமன், எளியோரின் - எளியோர்போல்.*

நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார், நடையல்லா
வாரங் கொண்டார், மற்றொரு வர்க்காய் மனைவாழும்
தாரங் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈரும் கண்டாய். கண்டகர் உய்ந்தார் எவர் ஐயா? 440

*அன்பரின் நாட்டை எடுத்தவர், முறைமையின்றி வரி கொண்டவர், பிறர் மனைவியைப் பற்றியவர் இவர்களைத் தருமம் அழிக்கும். கண்டகர்- தீயர் யாவரே நல்வாழ்வு பெற்றார்? நார்-அன்பு.*

எம்பிக்கும், என் அன்னை தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க்கும் போர்வில்லி தனக்கும், அயல்நிற்கும்
தம்பிக்கும் நம்ஆண்மை தவிர்ந்தே, சய நிற்கும்
கம்பிக்கும் என்நெஞ்சவன் என்றே கவல்கின்றேன் 441

*எம்பி-சுபாகு, அன்னை-தாடகை, வில்லி-இராமன், தம்பி-இலக்குவன், ஆண்மை தவிர்ந்து-நாம் வீரம்கெட்டு என்றும் நெஞ்சம் நடுங்கும்படி நிற்கும் அவன் என்றே நினைக்கிறேன். கம்பிக்கும்-ஆடி நடுங்கும், நிற்கும்- உனக்கும்.*

நிகழ்ந்ததை நினைந்திலை, என்நெஞ்சின்நிலை அஞ்சாது
இகழ்ந்தனை. எனக்கிளைய நங்கைமுகம் எங்கும்
அகழ்ந்து அனையது ஒப்புற அமைத்தவரை, ஐயா
புகழ்ந்தனை, தனிப்பிழை பொறுத்தனன் இதென்றான் 442

*இராவணன் :—அகழ்ந்தது-தோண்டியதுபோல், தனி-பெரிய.*

யாதும் அறியாய், உரை கொளாய், இகல் இராமன்
கோதை புனையாமுன் உயிர் கொள்ளைபடும் அன்றே!
பேதை மதியால் இஃதொரு பெண்ணுருவம் என்றாய்:
சீதை உருவோ, நிருதர் தீவினைய தன்றே! 443

*மாரீசன் :—கோதை-கைஉறை, படும்-இறக்கும்.*

உஞ்சு பிழையாய் உறவினொடும் எனஉன்னு
நெஞ்சு பறை ஓதும். அதுநீ நினைய கில்லாய்.
அஞ்சும் எனதாருயிர். அறிந்துஅருகு நின்றார்-
நஞ்சு நுகர்வாரை இது நன்றெனலும் நன்றோ? 444

*தப்பிப்பிழைக்கமாட்டாய், பறை ஓதும்-துடிக்கும்.*

மறுத்தனை எனப்பெறினும் நின்னை வடிவாளால்
ஒறுத்துஉனை, மனக்குறை முடிப்பது ஒழிகல்லேன்
வெறுப்பன கிளத்தலுறும் இத்தொழிலை விட்டுஎன்
குறிப்பின்வழி நிற்றி; உயிர் கொண்டுழலின் என்றான் 445

*ஒழிகல்லேன் - தவிரேன்,கிளத்தலுறும் - சொல்கின்ற, உழலின் - அலைய வேண்டின்.*

புறத்தினி உரைப்ப தென்னே, புரவலன் தேவி தன்னைத்
திறத்துழி யன்றி, வஞ்சித்து எய்துதல் சிறுமைத் தாகும்.
அறத்துளது ஒக்கும் அன்றே, அமர்த்தலை வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி மன்ன, என்ன மாரீசன் சொன்னான். 446

*திறத்துழி-வலிமை நேர்மை விளக்கி, அமர்த்தலை-போரினால். மறம்-வீரம்.*

ஆனவன் உரைத்த லோடும் அரக்கர்கோன் அவரைவெல்லத்
தானையும் வேண்டுமோ?என் தடக்கைவாள் தக்க தன்றோ?
ஏனையர் இறக்கில் தானும் தமியளாய் இறக்கு மன்றே
மானவள், ஆதலாலே மாயையின் வலித்தும் என்றான் 447

*தானை-சேனை, ஏனையர்-மற்ற இருவரும், வலித்தும்-பற்றுவோம்.*

கலைமான் முதலாயின கண்ட எல்லாம்
அலைமானுறும் ஆசையின் வந்தனவால்:
நிலையா மன வஞ்சனை நேயம்இலா
விலைமாதர் கண் யாரும் விழுந்தெனவே 448

*பொன்மானைக் கண்டு:—அலைமானுறும் - அலைபோல் புரள், யாரும்-காமுகர் மயங்கியதுபோல். இராமன்:—*

நோக்கிய மானை நோக்கி நுதியிழை மதியின் ஒன்றும்
தூக்கிலன், நன்றிது என்றான். அதன்பொருள் சொல்லலாகும்!
சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கியம் உடைமை யன்றோ, அன்னது பழுதுபோமோ 449

*நோக்கிய-தோன்றிய, நுதி-கூரிய மதியால் ஒன்றும் கருதானாய் 'நன்று இது' என்றான். சேக்கை - படுக்கை, சொல்லலாகும் - சொல்லவேண்டியது தான்! தேவர்கள் காரியம் நிறைவேற. இலக்குவன்:—*

முன்னமும் மகம்வாய் வந்த மூவரின் ஒருவன் போனான்
அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனென்.இதனை ஐய,
இன்னமும் காண்டி, வாழி! ஏகுஎன இருகைகூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை காத்தனன் புறத்து நின்றே 450

*மகம் வாய்-வேள்வியில், அயிர்-ஐயுறுகின்றேன். மான்:—*

குன்றிடை இவரும்,மேகக் குழுவிடைக் குதிக்கும், கூடச்
சென்றிடின் அகலும், தாழில் தீண்டலாம் தன்மைத் தாகும்,
நின்றதே போல நீங்கும். நிதிவழி நேயம் நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனம்எனப் போயிற் றம்மா 451

*இவரும்-ஏறும், தாழின்-தாமதித்து நின்று, மன்றல்-மணம்.*

நெட்டிலைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்டதுஅப் பொழுதே பகு வாயினல்
அட்ட திக்கினும் அப்புறமும் புக
விட்டு அழைத்தொரு குன்றென வீழ்ந்தனன் 452

*நீண்ட அம்பு வஞ்ச மனத்துட் புக்கது. அட்ட-எட்டு.*

வெய்யவன்தன் உருவொடு வீழ்தலும்,
செய்யது அன்றுஎனச் செப்பிய தம்பியை
“ஐயன் வல்லன்! என் ஆருயிர் வல்லன் ! நான்
உய்யவந்தவன் வல்லன் !” என்றுன்னினன் 453

*வெய்யவன்-தீயோன், செய்யது அன்று-நல்லதன்று, ஐயன்-தம்பி.*

ஆசை நீளத்து அரற்றினன் வீழ்ந்த அந்
நீசன் மேனியை நின்றுடன் நோக்கினன் :
மாசில் மாதவன் வேள்வியில் வந்த, மா
ரீசனேஇவன் என்பதும் தேறினன் 454

*ஆசை-திக்கு, அரற்றி-ஓலமிட்டான்.*

## சடாயுவதைப் படலம்

குற்றம் வீந்த குணத்தின்எம் கோமகன்
மற்றைவாள் அரக்கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தனன் என்னவும், என்அயல்
நிற்றியோ? இளையோய், ஒருநீ என்றாள் 455

*சீதை :—வீந்த-அற்ற, ஒருநீ-நீஒரு ? . . . கோமகன்-தலைவன்.*

ஒருபகல் பழகினர் உயிரை ஈவரால்.
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும்நீ
வெருவலை, நின்றனை; வேறென்? யான்இனி
எரியிடை வீழ்ந்துஉயிர் இறப்பல் ஈண்டெனு- 456

*உயிரையீவார்-அன்பர்க்காக உயிர்கொடுப்பர். உலைவுறு-திண்டாடும் வெருவலை-அஞ்சாமல். இலக்குவன்:—*

போகின்றேன் அடியனேன், பொருந்தி வந்து கேடு
ஆகின்றது : அரசன்றன் ஆணை நீர்மறுத்து,
ஏகுஎன் றிருக்கின்றீர்; தனியிர் : என்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் டேகினன் 457

*ஏகு என்று-என்னைப் போகப்பணித்து.*

ஊணிலனும்என உலர்ந்த மேனியான்
சேணெறி வந்ததோர் வருத்தச் செய்கையான்
பாணியின் நடத்திடைப் படிக்கின் றுன்என
வீணையின் இசைபட வேதம் பாடுவான் 458

*இராவணன் உரு :—ஊண்-உணவு, சேண்-தூரம், நடத்திடைப் பாணி-நடனம் பாட்டுக்கியைந்து நடப்பதுபோல்.*

பூப்பொதி அவிழ்ந்தன நடையன், பூதலம்
தீப்பொதிந் தாம்என மிதிக்கும் செய்கையான்
காப்பரு நடுக்குறும் காலன் கையினன்
மூப்பெனும் பருவமும் முனிய முற்றினன் 459

*பாளை விரிவதுபோல் மெல் நடையன். காப்ப அரு-தடுக்கமுடியாக் காலன், முனிய-வெறுப்புற. சீதையைக்கண்டு:—*

சேயிதழ்த் தாமரை சேக்கை தீர்ந்துஇவண்
மேயவள் மணிநிற மேனி காணுதற்கு
ஏயுமே இருபது!இங் கிமைப்பில் நாட்டங்கள்
ஆயிரம் இல்லை. என்று அல்லல் எய்தினன் 460

*சேக்கை-ஆசனம், ஏயுமோ-போதுமோ, இல்லை-இல்லையே.*

உளைவுறு துயர்முகத்து ஒளிஇதாம் எனின்
முளைஎயிறு இலங்கிடும் முறுவல் என்படும்!
தளைஅவிழ் குழல்இவள் கண்டு தந்தஎன்
இளையவட்கு அளிப்பன்என் அரசென்றெண்ணினன் 461

*துயர்முகத்து-வருத்தத்தில். சீதை சந்நியாசிக்கு :—*

தயரதன் தொல்குலத் தலைவன் தம்பியோடு
உயர்குலத்து அன்னைசொல் உச்சி ஏந்தினன்:
அயர்விலதுஇவ்வழி உறையும் அன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் : பெருமையீர், என்றுள் 462

*அயர்விலது-மனச் சலிப்பின்றி. இராவணன்:—*

மான்அவள் உரைத்தலோடும்; மானுடர் அரக்கர் தம்மை
மீன்என மிளிருங் கண்ணுய், வேர்அற வெல்வர் என்னின்,
யானையின் இனத்தை எல்லாம் இனமுயல் கொல்லும்! பின்னும்
கூன்உகிர் மடங்கல் ஏற்றைக் குருளைமான் கொல்லும்! என்ருன்

*இனமுயல்-முயல் கூட்டம், மடங்கல்-சிங்கம், குருளை-குட்டி.*

மேருவைப் பறிக்கவேண்டின், விண்ணினை இடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின், நெருப்பினை அவிக்க வேண்டின்
பாரினைஎடுக்க வேண்டின், பலவினை! சிலசொல் ஏழாய்,
யாரெனக்கருதிச் சொன்னுய்? இராவணற்கு அரிதென்? என்ருன்

*பறிக்க-குழிபறித்து எடுக்க, நீர்-கடல், நெருப்பு-வடவைத்தீ, பார்-பூமி, சிலசொல்-ஏளனமாகப் பேசுகின்ற பெண்ணே.*

விண்ணவர் ஏவல்செய்ய வென்றஎன் வீரம் பாராய்,
மண்ணிடைப் புழுவில் வாழும் மானுடர் வலியர் என்ருய்:
பெண்எனப் பிழைத்தாய்: அன்றேல் உன்னையான் பிசைந்து தின்ன
எண்ணுவன், எண்ணிற் பின்னை என்உயிர் இழப்பென் என்ருன் 465

குலைவுறல் அன்னம்,முன்னம் யாரையுக்கும்பிடா என்
தலைமிசை மகுடம் என்னத் தனித்தனிஇனிது தாங்கி
அலகில்பூண் அரம்பை மாதர் அடிமுறை ஏவல் செய்ய
உலகம் ஈரேழும்ஆளும் செல்வத்துள் உறைதி என்ருன் 466

*குலைவுறல்-அஞ்சேல், இனிது தாங்கி-உன்னைத் தலைமேற்கொண்டு. சீதை:—*

புல்நுனை நீரின் நொய்தாய்ப் போதலே புரிந்து நின்ற
இன்னுயிர் இழத்தல் அஞ்சி, இல்பிறப் பழிதல் உண்டோ
மின்உயிர்த்து உருமிற் சீறும் வெங்கணை விரவா முன்னம்
உன்உயிர்க்கு உறுதி நோக்கி ஒளித்தியால் ஓடி என்ருள் 467

*நொய்தாப்போதல்-எளிதாய் மறையும், உருமின்-இடிபோல, விரவாமுன்-இராமபாணம் வருமுன். அவன்:—*

அணங்கினுக்கு அணங்கனுய்,நின் ஆசைநோய் அகத்துப்பொங்க
உணங்கிய உடம்பி னேனுக்கு உயிரினை உதவி, உம்பர்
கணங்குழை மகளிர்க்கெல்லாம் பெரும்பதம் கைக்கொள் என்னு
வணங்கினன் உலகந் தாங்கும் மலையினும் வலியதோளான் 468

*உணங்கிய-வாடிய, உம்பர்-மேல்உலகு,*

ஆண்டாயிடைத் "தீயவன் ஆயிழையைத்
தீண்டால்" எனும் மேலுரை சிந்தைசெய்யா
தூண்தான் எனலாம்உயிர் தோள்வலியால்
கீண்டான்நிலம் யோசனை கீழொடுமேல் 469

*பெண்ணைத் தொடாதே என்னும் முந்திய சாபத்தைச் சிந்தித்துக் கீண்டான்-பேர்த்தெடுத்தான்.*

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரேன்,நிலைதே றினர்போய்
உலையா வலியார்உழை நீர் உரையீர் 470

*சீதை புலம்பல் :—கலை-ஆண்மான், பிணை-பெண்மான், நிலைதேறினர்-என் நிலையறிந்து அவர் இருப்பிடம் நாடி. உழை-இடத்தில்.*

கோதா விரியே, குளிர்வாய் குழைவாய்,
மாதா அனையாய், மனனே தெளிவாய்,
ஓதா துணர்வா ருழைஓ டினைபோய்
நீதான் வினையேன் நிலைசொல் லலையோ 471

*குழைவாய்-உள் உருகுவாய். தடுத்த சடாயு—*

வலியின்றலை தோற்றிலன், மாற்றருந் தெய்வ வாளால்
நலியும்தலை என்றஃதன்றியும், வாழ்க்கை நாளும்
மெலியுங்கடை சென்றுள தாகலின். விண்ணின் வேந்தன்
குலிசம்எறியச் சிறையற்றதோர் குன்றின் வீழ்ந்தான் 472

*சடாயு இராவணன் வலியால் வீழ்ந்தானல்லன், தலை நலியும்-யாவர் தலையும் அழியும், வேந்தன்-இந்திரனுடைய குலிசம் எறியப்பட்டு வீழ்ந்தான்.*

கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணு,
துய்த்து வாழ்தர-வேறொரு பொருளிலான் உதவ-
வைத்த மாநிதி மண்ணொடும் மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் றானையும் போன்றான் 473

*இராமன் வருந்தல் :—வாழ்க்கை வெறுத்தவனும் வைத்த புதையலை இழந்தவனை ஒத்தான். பொய்த்துளோர்-கள்வர்.*

திருவின் நாயகன் உரைசெய்யச், சுமித்திரைச் சிங்கம்
தருவின் நீளிய தோள்பல-தலைபல என்றால்
பொருது தாதையை இத்தனை நெறிக்கொடு போனான்
ஒருவனே,அவன் இராவண னும்என உரைத்தான் 474

*தருவின்-மரங்கள்போல்.தாதை-சடாயு.*

என்தாரம் பற்றுண்ண ஏன்ருயை, சான்ருேயைக்
கொன்ருனும் நின்ருன், கொலையுண்டு நீகிடந்தாய்,
வன்ருள் சிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனும் நின்றேன் நெடுமரம்போல் நின்றேனே 475

*தாரம்-மனைவி, ஏன்ருயை-காப்பதற்குப் போர் ஏற்ற சடாயுவை.*

நாட்செய்த கமலத்துஅண்ணல் நல்கின-நவைஇல் ஆற்றல்
தோட்செய்த வீரம் என்னிற் கண்டனை; சொல்லும் உண்டோ?
தாட்செய்த கமலத்தானே முதலினர் தலைபத் துள்ளாற்கு
ஆட்செய்கின் ருர்கள்,அன்றி அறஞ்செய்கின் ருர்கள்யாரே! 476

*சடாயு இராமனுக்கு:—அன்று மலர்ந்த தாமரையின் பிரமன் அளித்த தோள்வலியை, என் தோல்வியால் அறிந்தனை, முதலினர்-பிறதேவர்.*

தெண்டிரை உலகந்தன்னில் செறுநர்மாட் டேவல் செய்து
பெண்டிரின் வாழ்வர் அன்றே,இதுவன்ருே தேவர் பெற்றி!
பண்டுஉல களந்தோன் நல்கப் பாற்கடல் அமுதம் அந்நாள்
உண்டில ராயின்,இந்நாள் அன்னவர்க் குய்தல் உண்டோ! 477

*செறுநர்-பகைவன் இராவணன், உலகு அளந்தோன்-மால்கொடுக்க.*

வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடை தமியள்வைகக்,
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக்கொண்டீர்:
அம்பிழை வரிவில் செங்கை ஐயன்மீர், ஆயுங்காலை
நும்பிழை என்பதல்லால் உலகம்செய் பிழையும் உண்டோ! 478

*வம்பு இழை-கச்சு அணிந்த. அம்பு இழை-அம்பு எய்யும்.*

## அயோமுகிப் படலம்

பெண்இயல் தீபம் அன்ன பேரெழி லாட்டி மாட்டு
நண்ணிய பிரிவுசெய்த நவையிலா நவையின் உள்ளத்து
எண்ணியதுஅறிநல் தேற்றேப்; இமைத்தில இராமன் என்னும்
புண்ணியன் கண்ணும், வன்ருேள் தம்பிகண் போன்ற அன்றே 479

*எழிலாட்டி-சீதை, நவையின்-பழியினுல்.*

நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயான்
என்துணைக் குலமங்கை,ஓர் ஏந்திழை
தன்துயர்க்குத் தகவிலென் ஆயினேன்!
நன்று! நன்று!என் வலிஎன நாணுமால் 480

*நின்று-ஆட்சி செய்துநின்று, தகவிலன்-தகுதியற்றவன்.*

வெள்ளஞ் சிலம்பு பாற்கடலின் விரும்பு துயிலை வெறுத்துஅளிய
கள்ளுஞ் சிலம்பும்பூங்கோதை கற்புக்கடலிற் படிவாற்குப்
புள்ளுஞ் சிலம்பும் பொழில்சிலம்பும் புனலும்சிலம்பும்: புனைகோலம்
உள்ளுஞ் சிலம்புஞ் சிலம்பாவால். உயிருண்டாகும் வகையுண்டோ! 481

*இராமன் நிலை: சிலம்பு-ஒலிக்கின்ற, அளியும் கள்ளும்-வண்டும் தேனும் நெகிழும் பூங்கோதை சீதை. எல்லாம் ஒலிக்கும் ஆனால்தான் நினைக்கும் அழகுச் சீதையின் சிலம்பொலி மட்டும் ஆங்கில்லை.*

மயிலும் பெடையும் உடன்திரிய, மானும் கலையும் மருவிவர,
பயிலும் பிடியும் கடகரியும் வருவ திரிவ பார்க்கின்றான்:
குயிலும் கரும்பும் செழுந்தேனும் குழலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதும் சுவைநீத்த மொழியைப் பிரிந்தால் அழியானோ

*கரி-யானை, அயில்-வேல். (உண்ணும்)*

பொழிலைநோக்கும், பொழிலுறையும் புள்ளைநோக்கும் பூங்கொம்பின்
எழிலைநோக்கும், இளமயிலின் இயல்பைநோக்கும், இயல்பாளன்
குழலைநோக்கிக், கொங்கைஇணைக் குவட்டைநோக்கி, அக்குவட்டின்
தொழிலைநோக்கித், தன்னுடைய தோளைநோக்கி நாள்கழிப்பான் 483

*குவடு-குன்று, தொழில்-நிமிர்தல் சித்திரங்கள். நோக்கி-எண்ணி.*

பின்னும் உரைப்பவள் பேரெழில் வீரா,
முன்னர் ஒருத்தர் தொடாமுலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்துஎன்
இன்னுயி ரைக்கடிது ஈகுதி என்றாள் 484

*அயோமுகி இலக்குவற்கு:—தடமார்பு-உன் அகன்ற மார்பு.*

என்னைத்தரு எந்தையை, என்னையரை,
பொன்னைப்பொரு கின்றபொலங் குழையாள்
தன்னைப் பிரிவேன், உளென் ஆவதுதான்
உன்னைப்பிரி யாதஉயிர்ப்பு அலவோ? 485

*இலக்குவனைக் காணாது இராமன்:—தரு-பெற்ற, என்னை-என் தாய்மார், பொன்-திருமகள் ஒத்த. உளன் ஆவது-உயிரோடு இருப்பது.*

போந்தான் நெடு மாயையினிற் பிரியா,
ஈர்ந்தான் அவள்நாசி பிடித்து இளையோன்;
சோர்ந்தான்இடு பூசல் செவித்தொளையில்
சேர்ந்துஆர் தலுமே திருமால் தெருளா— 486

*போந்தான்-மாயையின் உட்புக்கவன் இப்போது அதனைப் பிரிந்தான். செவி-இராமன் செவி, தெருளா-தெளிந்து.*

மூவகை அமரரும், உலகம் மும்மையும்
மேவரும் பகைஎனக் காக மேல்வரின்
ஏவரே கடப்பவர்! எம்பி நீயுளை—
ஆவதே வலி,இனி அரணும் வேண்டுமோ! 487

*அமரர்-மும்மூர்த்தி, நீஇருப்பதே என்பலம் எல்லாம்.*

மான்அவள் மெய்இறை மறக்கலாமையின்
ஆனதோ, அன்றெனின் அரக்கர் மாயமோ,
கானகம் முழுவதும் கண்ணின் நோக்குங்கால்
சானகி உருஎனத் தோன்றும் தன்மையே 488

*மான்போன்ற அவளைச் சற்றும் மறக்க முடிகிறதில்லை, அதனால் எங்கும் சானகியாகக் காண்கிறேன்.*

## கவந்தப் படலம்

ஈன்றவர் இடர்பட, எம்பி துன்புற,
சான்றவர் துயர்உற, பழிக்குஞ் சார்வுமாய்த்
தோன்றலின், என்னுயிர் துறந்த போதல்லால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க ஒண்ணுமோ 489

*இராமன் :—எம்பி-தம்பி நீ, தோன்றலின்-இருப்பதைவிட.*

இல்இயல்புடையநீர் அளித்த இன்சொலாம்
வல்லி-அவ் வரக்கர்தம் மனையுளாள் எனச்
சொல்லி; நன்மலைஎனச் சுமந்த தூணியன்
வில்லினென் செல்வெனோ மிதிலை வேந்தன்பால் 490

*நீர்-சனக மன்னரே, வல்லி–சீதை, தூணி-அம்புப் புட்டில்.*

ஆண்டான் இன்னன பன்னிட, ஐயற்கு இளைவீரன்
ஈண்டியான் உன்பின் ஏகியபின்இவ் விடர்வந்து
மூண்டால்; முன்னே ஆருயி ரோடும் முடியாதே
மீண்டே போதற் காம்எனின், நன்றே வினை!என்றான் 491

*இலக்குவன் :—மீண்டுபோதற்கு-யான் திரும்புவேனாயின்.*

என்றான்என்னப் பின்னும் இசைப்பான், இடர்தன்னை
வென்றார் அன்றே வீரர்க ளாவார். விரவாரின்
தன்தாய் தந்தை தம்முன் எனும் தன்மையர் முன்னே
பொன்றான் என்றால் நீங்குவ தன்றே புகழ் அம்மா! 492

*விரவார்-அயலார்போல், முன்-அண்ணன். உயிர் துறவாவிடின் புகழ் நீங்கிவிடும்.*

என்றாய் "முன் ஏவிய யாவும்இசை, இன்னல்
பின்ருது எய்திப்,பேரிசை யாளர்க்கு அழிவுண்டேல்
பொன்ரு முன்னம் பொன்றுதி" என்ருள்: உரைபொய்யா
நின்ருல் அன்ரே நிற்பது வாய்மை நிலை அம்மா! 493

*உன் அண்ணன் ஏவியவற்றுக்கு இசைந்து நில். பின்ருது-பின் வாங்காமல்.பொய்யா-பொய்க்காமல்.*

கேட்டார் கொள்ளார், கண்டவர் பேணுர். கிளர்போரில்
தோட்டார் கோதைச் சோர்குழல் தன்னைத் துவளாமல்
மீட்டான் என்னும் பேரிசைகொள்ளான்; செருவெல்ல
மாட்டான் மாண்டான் என்றபின் மேலும் வசையுண்டோ 494

*தோட்டார்-தோள்தார், துவளாமல்-வருத்தமின்றி. கொள்ளார்-சகியார்.*

என்னு முன்னே செல்லும் இளங்கோ-இறையோற்கு
முன்னே செல்லும்: முன்னவன் அன்னு னினும்முந்தத்,
தன்னேரில்லாத் தம்பி தடுப்பான், பிறரில்லை
அன்னே, கண்டார் உம்பரும் வெய்துற்று அழுதாரால் 495

*செல்லும்-கவந்தனிடம் செல்கிற, அன்னே-ஐயோ அவ்வெய்யநிலை.*

கணையுலாம் சிலையினீரைக் காக்குநர் இன்மை யேனும்-
இணையிலாள் தன்னைநாடற்கு ஏயன செய்தற்கு ஏற்கும்:
புணையிலா தவர்க்குவேலை போக்கரிது, அன்னதேபோல்
துணையிலா தவர்க்கும்இன்னு, பகைப்புலம் தொலைத்து நீக்கல் 496

*கவந்தன் இருவருக்கும்;—ஆயது-இனிச் செய்யவேண்டியது, ஏய-கூறிய, இரலைக்குன்று-ருசியமுகமலை. காக்குநர்—தடுப்பவர். புணை-தெப்பம்.*

ஆயது செய்கை என்பது-அறத்துறை நெறியின் எண்ணித்
தீயவர் சேர்க்கிலாது செவ்வியோர் சேர்த்துச் செய்தல்.
தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட்டு அன்னுள்
ஏயதோர் நெறியின் எய்தி இரலையின் குன்றம் ஏறி- 497

*ஏய—கூறிய.*

## சவரி பிறப்பு நீங்கு படலம்

அன்னதாம் இருக்கை நண்ணி, ஆண்டுநின்று அளவில் காலம்
தன்னையே நினைந்து நோற்கும் சவரியைத் தலைப்பட்டு, அன்னுட்கு
இன்னுரைஅருளித் தீதின்று இருந்தனைபோலும்? என்ருன்.
முன்இவற்கு இதுஎன்னல் ஆவதோர் மூலம் இல்லான் 498

*அத்தகைய மதங்கர் ஆச்சிரமத்தை அடைந்து, பின் சவரியை அண்மினுர். தீதின்று இருந்தனை-நலமோ ? என்ருன் முதற் பொருளாகிய இராமன்.*

மாங்கனி தாழையின்காய் வாழையின் கனிக ளோடும்
ஆங்கனி ஆவதேஎன்று அருந்திநான்விரும்பி வைத்தேன்:
பாங்கினில் அமுதுசெய்மின் என்றவள் பரிவில் நல்கும்
தேங்கனி இனிதின் உண்டு திருவுளம் மகிழ்ந்த வீரன்- 499

தாழை-தென்னை, ஆம்கனி-உண்பதற்காம் கனிகள். சபரி:—

இருந்தனன். எந்தைநீஈண்டு எய்துதி என்னும் தன்மை
பொருந்திட,இன்று தான்என் புண்ணியம் பூத்தது என்ன;
அருந்தவத்து அரசிதன்னை அன்புறநோக்கி, நாங்கள்
வருந்துறு துயரந் தீர்த்தாய்: அம்மனை வாழி! என்றார் 500

இருந்தனன்-உன் வருகையை எதிர்பார்த்திருந்தேன்.

# கிட்கிந்தா காண்டம்

## பம்பைப் படலம்

ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த ஈர்ம்புனல்,
பேர்ந்துஒளிர் நவமணி படர்ந்த பித்திகை,
சேர்ந்துழி சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஆர்ந்துணர்வு இல்லவர் உள்ளம் ஒப்பது 501

*அறுப்புற்ற கண்ணாடிபோல் தெளிந்த பொய்கை நீர், நவமணிகளும் பதிக்கப்பெற்ற சுவர்களில் மோதி அவற்றின் நிறத்தை அடைந்து; மெய் யுணர்வில்லாதவர் மனத்தைப்போல் மாறி மாறி நின்றது. பித்திகை-சுவர்.*

ஆரிய முதலிய பதினெண் பாடையிற்
பூரியர் ஒருவழி புகுந்த போன்றன.
ஓர்கில கிளவிகள் ஒன்றோ டொப்பில
சோர்வில விளம்பு புள் துவன்று கின்றது 502

*பன்மொழிகளிலும் புலமையற்றவர் பலர் ஓரிடத்திற் கூடியதுபோலப் பல்வகைப் பறவைகளும் பம்பையிற்கூடி உணர்வின்றி ஓய்வின்றி ஒலித்து நின்றன.*

மண் துயின்றன, நிலைய மலைதுயின்றன, மறு இல்
பண் துயின்றன, விரவுபணி துயின்றன, பகரும்
விண் துயின்றன, கழுதும் விழிதுயின்றன. பழுதில்
கண் துயின்றில-நெடிய கடல்துயின்றன களிறு. 503

*அங்கு இரவில், நிலைய-நிலையான, மறு இல்பண்-தெளிந்த நீர்நிலை; நல்ல இசை. விரவு பணி-ஊரும் பாம்பு, கழுது-பேய், கடல் துயின்றன களிறு-கடல் உறங்குவது அன்ன கொந்தளிக்காமல் அலை உருள்வதுபோல். (படுக்கையிற் பிரிவின் வருத்தத்தால் புரள்கிற யானை ஒத்த) இராமன் கண்கள் மட்டும் துயிலவில்லை. பழுதில்-குற்றமின்றியும், அன-அன்ன.*

## மராமரப் படலம்

அஞ்சனைக்குஒரு சிறுவன், அஞ்சனக்கிரி அனைய
மஞ்சனைக்குறுகி ஒரு மாணவப் படிவமொடு-
வெஞ்சினத் தொழிலர் தவமெய்யர் கைச் சிலையர்என
நெஞ்சு அயிர்த்து,அயல் மறையநின்று கற்பினின் நினையும் 504

*இராமனிடம் அநுமான் வருகிறான்: அஞ்சனை-அநுமான் தாய், நீலமலை ஒத்த இராமன் அருகில், ஒரு மாணவன் உருவத்தோடு சென்றான். சினம், தவஉரு, கையில் மூன்றும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதன தாங்குதலின் அயிர்த்தான்.*

**மஞ்செனத் திரண்டகோல மேனிய, மகளிர்க் கெல்லாம்**
**நஞ்செனத் தகையஆகி, நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்**
**கஞ்சம்ஒத் தலர்ந்தசெய்ய கண்ண,யான் காற்றின் வேந்தற்கு**
**அஞ்சனை வயிற்றில் வந்தேன், நாமமும் அநுமன் என்பேன் 505**

*இராமன் நீ யாவன்? என—மஞ்சு-மேகம், மாதரை மயக்கும் உருவமும் குளிரும் பனிக்கு வாடாத் தாமரை மலர்போன்ற கண்களும் பெற்ற ஐய! யான் வாயுபகவானுக்கு அஞ்சனாதேவி வயிற்றிற் பிறந்தவன்.*

**இம்மலை யிருந்து வாழும் எரிகதிர் பரிதிச் செல்வன்**
**செம்மலுக்கு ஏவல்செய்வேன். தேவ,நும் வரவு நோக்கி**
**விம்மலுற்று அனையான் ஏவ,வினவிய வந்தேன் என்றான்**
**எம்மலைக் குலமும் தாழ இசைசுமந்தெழுந்த தோளான் 506**

*பரிதிச் செல்வன்-சூரிய புத்திரன் சுக்ரீவன், வினவிய-கேட்டு அறிய, இசை-புகழ். தோளான்-அனுமான்*

**இல்லாத உலகத் தெங்கும் இங்கிவன் இசைகள்கூரக்**
**கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி**
**சொல்லாலே தோன்றிற் றன்றே! யார்சொல்இச் சொல்லின் செல்வன்!**
**வில்ஆர்தோள் இளையவீர, விரிஞனோ விடைவல்லானோ 507**

*இங்கும் இல்லா ஏனைய உலகத்தும் எங்கும் இவன் புகழ் மிகும்படி யாரும் கற்காத கல்வியும் வேதக்கடலுமாக விளங்குகிற இவன் அறிவு! இவன் வாய்ச் சொல்லால் நன்கு வெளிப்படுகின்றது. தம்பி, இவன் பிரமனோ? காளைவாகனச் சிவனோ? விடை-காளை, பின்னர் நடப்பு எல்லாம் அறிந்தபின் அநுமான்:—*

**யாரென விளம்பு கேனோ? எம்குலத் தலைவர்க் கும்மை.**
**வீர,நீர் பணித்திர் என்றான்,மெய்ம்மையின் வேலிபோல்வான்.**
**வார்கழல் இளையவீரன் மரபுளி வாய்மை யாதும்**
**சோர்விலன் நிலைமை எல்லாம் தெரிவுறச் சொல்ல லுற்றான் 508**

*அனுமான் வியந்து:—குலத்தலைவன்-சுக்ரீவன், மெய்ம்மை வேலி-உண்மைக்கு அரணாக நிற்கும் அநுமான். வாய்மை சோர்விலன்-உண்மை யாதும் தவறுபல்.*

**என்றுஅகம் உவந்துகோல முகமலர்ந்து இனிதின் நின்ற**
**குன்றுறழ் தோளினானை நோக்கிய குரக்குச் சீயம்-**
**சென்றுஅவன் தன்னை இன்னே கொணர்கின்றேன், சிறிதுபோது**
**வென்றியீர் இருத்திர், என்று விடைபெற்று விரைவில்போனான் 509**

*இலக்குவனால் வரலாறு கூறப்பட்டபின், குரங்குச் சீயம்-குரங்குத் தலைவன் அநுமான், அவன்-சுக்ரீவன், வென்றியீர்-வெற்றிக் குரியீர்.*

மேலவன் திருமகற் குரைசெய்தான் "விரைசெய்தார்
வாலிஎன்று அளவிலா வலியினான் உயிர்தெறக்
காலன் வந்தனன்,இடர்க்கடல் கடந்தனம்"என
ஆலமுண்டவனின் நின்று அருநடம் புரிகுவான் 510

*அநுமான் சென்று சுக்ரீவனிடம்:— மேலவன் திருமகன்-சூரிய புத்திரன், விரை-வாசனை, தார்-பூமாலை, வாலியின் உயிரை அழிக்க ஒரு காலன் வந்துளான். நாம் இடர்க்கடல் கடந்தோம் என்று, விடம் அருந்திய ருத்திரன் போல் ஆட்டம் புரிந்துநின்று—*

நீதியார், கருணையின் நெறியினர், நெறிவயின்
பேதியா நிலைமையார், எவரினும் பெருமையார்,
போதியாது அளவிலா உணர்வினர், புகழினர்,
காதிசேய் தருகடல் கடவுள்வெம் படையினர் 511

*காதி சேய்-காதி மகன் விசுவாமித்திரன், கடல்போல் பெரிய தெய்விகப் படையுடையவர். போதியாது-ஓதாதுணர்ந்தவர்.*

தேறினன் தேவர்க் கெல்லாம்தேவராம் தேவர்அன்றே
மாறிஇப் பிறப்பில் வந்தார் மானுடராகி மன்னோ!
ஆறுகொள் சடிலத் தானும் அயனும்என் றிவர்கள்ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்ற தன்றே! 512

*பின்னர் சுக்ரீவன் இராமனைக் கண்டதும் :—முதல் தெய்வமே மனித வடிவத்தோடு வந்துள்ளது. மானிட வடிவம் மற்ற எல்லா வடிவங்களையும் வென்று நிற்கிறது.—சடிலத்தான்-சடையுடைய சிவன், அயன்-பிரம்மா.*

கூட்டம்ஒத் திருந்த வீரர் குறித்ததோர்பொருட்டு, முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்:
மீட்டும் வாளரக்கர் என்னும் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வியோடு ஞானமும் கிடைத்த தொத்தார் 513

*வீரர்-இராமனும் சுக்ரீவனும்.*

என்றஅக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக்கு உள்ள இன்ப துன்பங்கள்உள்ள, முன்னாள்
சென்றனபோக்கி மேல்வந்துஉறுவன தீர்ப்பல்,அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர்என மொழியும் நேரா 514

*"நீயே சரண்" என்ற சுக்ரீவனுக்கு இராமன் :— நேரா-கூறி.*

*மேல் வந்துறுவன-இனி வருந்துன் பங்களை, நேர்-சமம், நிற்கும்-உனக்கும்.*

மற்றினி உரைப்ப தென்னே, வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார். தீயரே எனினும் உன்னொடு
உற்றவர் எனக்கும் உற்றார். உன்கிளை எனது,என் காதல்
சுற்றம்உன் சுற்றம்,நீயே இன்னுயிர்த் துணைவன் என்றான் 515

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத் தன்அர சுரிமைப்
பாரம் ஈந்தவன், பரிவிலன் ஒருவன் தன்இளையோன்
தாரம் வெளவினன் என்றசொல் தரிக்குமாறுளதோ? 516

*ஈரம்-அன்பு, சிற்றவை-கைகேசி, ஆரம்-மாலை, சந்தனம். தம்பி-பரதன். பரிவிலன்-அன்பற்றவன்.*

உலகம் ஏழினொடு ஏழுவந்து அவனுயிர்க்கு உதவி
விலகும் என்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் தாரமும் உனக்கின்று தருவேன்:
புலமையோய், அவன் புகல்இடங் காட்டென்று புகன்றான் 517

*விலகும்-தடுக்கும், வாளி-அம்பு, அவன்-வாலி.*

ஆடினர் பாடினர் அங்குமிங்கும் கலந்து
ஓடினர் உவகையின் நறவைஉண் டுணர்கிலர்:
நேடினும் வாலி காலனைஎன நெடிதுநாள்
வாடினர் தோள்எலாம் வளர மற்றுஅவர் எலாம் 518

*நறவை-கள். வாலிக்கு ஒரு யமனை நாடி முன்பு வாடினவர் இப்போது மகிழ்ந்து ஆடிப்பாடினர்.*

## துந்துபிப் படலம்

முட்டிவான் முகடுசென்றளவி இம்முடை உடற்
கட்டி மால் வரையை வந்துறுதலும், கருணையான்
இட்ட சாபமும் எனக்குஉதவும்,இவ் வியல்பினிற்
பட்டவா முழுவதும் பரிவினால் உரைசெய்தான் 519

*மராமரம் எய்தபின் துந்துபி வரலாற்றை உரைக்கின்றான்:—இந்த முடைஉடல் வான்முகட்டில் முட்டி, இந்த ருசியமுக மலையில் வீழ்ந்தது: கருணைமிகு மதங்கர் அப்போது இட்ட சாபம் எனக்கு நலந்தருகிறது என்று முற்றும் உரைத்தான். பின் சுக்ரீவன் தான் எடுத்த அணிகலன்களைக் காட்ட, இராமன்—*

## கலன்காண் படலம்

**தெரிவுற நோக்கினன் தெரிவை மெய்யணி,**
**எரிகனல் எய்திய மெழுகின் யாக்கைபோல்**
**உருகினன் என்கிலம்! உயிருக்கு ஊற்றமாய்ப்**
**பருகினன் என்கிலம்! பகர்வதென் கொலாம்! 520**

*தெரிவை-பெண் சீதையின் அணிகளை, தீப்பட்ட மெழுகு உருப்போல் உருகினன் என்பதோ, உயிர் தழைக்க அமுதமாய்ப் பருகினன் என்பதோ.*

**மோந்திட நறுமல ராயின.மொய்ம்பினின்**
**ஏந்திட உத்தரீ யத்தை ஏய்ந்தன:**
**சாந்தமு மாய்ஒளி தழுவப் போர்த்தலால்**
**பூந்துகில்ஆய. அப்பூவை பூண்களே 521**

*மொய்ம்பு-தோள், உத்தரீயம்-மேலாடை, சாந்தம்-சந்தனம், பூவை பூண் கள்-சீதையின் அணிகள். அப்போது அநுமான் :—*

**கொடுந்தொழில் வாலியைக் கொன்று, கோமகன்**
**கடுங்கதி ரோன்மகன் ஆக்கிக், கைவளர்**
**நெடும்படை கூட்டினு லன்றி; நேடரிது**
**அரும்படை அரக்கர்தம் இருக்கை: ஆணையாய் 522**

*கோமகன்-அரசனுக, கைவளர்-செயல்மிக்க வானர சேனையைக் கைக் கொண்டாலன்றி, அரக்கரின் இருப்பிடத்தை அறிய முடியாது. (பின் மலை மீது ஏறிச் செல்கின்றனர்).*

**வெங்கண் ஆளி யேறு மீளி மாவும் வேக நாகமும்**
**சிங்க ஏறு இரண்டொ டுந்தி ரண்ட அன்ன செய்கையார்**
**தங்கு சால மூலம் ஆர்த மாலம் ஏல மாலை போல்**
**பொங்கு நாக மும்து வன்ற சார லூடு போயினர் 523**

*ஆளி ஏறு-ஆண்யாளி, மீளிமா-வலிய புலி, நாகம்-யானை, சிங்க ஏறு-ஆண் சிங்கத்துடன் கூடிய, சாலம்-ஆச்சாமரம், மூலம் ஆர்தமாலம்-அடி பருத்த தமாலம், ஏலமாலைபோல்-ஏலக்கொடி வரிசைபோல், நாகம்-சுரபுன்னை, துவன்று-நெருங்கிய. (சுக்ரீவன் சென்று வாலியைப் போருக்கு அழைத்தான்)*

## வாலி வதைப் படலம்

**மாற்பெருங் கடகரி முழக்கம், வாளரி**
**ஏற்பது செவித்தலத் தென்ன, ஓங்கிய**
**ஆர்ப்பொலி கேட்டனன். அமளி மேல்ஒரு**
**பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான் 524**

*மதயானையின் பிளிறல் சிங்கத்தின் செவியிற் சேர்வதுபோல், படுக்கைமேல் பாற்கடல்போன்று கிடந்த வாலியின் செவியில் தம்பியின் ஆர்ப்பு உற்றது.*

வந்தனென் வந்தனென் என்ற வாசகம்
இந்திரி முதல்திசை எட்டும் கேட்டன:
சந்திரன் முதலிய தாரகைக் குழாம்
சிந்தின மணிமுடி சிகரம் தீண்டவே 525

*இந்திரி-கிழக்கு, தாரகை-விண்மீன்.*

ஆயிடைத் தாரைஎன்று அமிழ்தில் தோன்றிய
வேயிடைத் தோளினுள் இடைவி லக்கினுள்,
வாயிடைப் புகைவர வாலி கண்வரும்
தீயிடைத் தன்னெடுங் கூந்தல் தீகின்ருள்: 526

விலக்கலை, விடுவிடு. விளித்துளான் உரம்
கலக்கி,அக் கடல்கடைந்து அமுது கண்டென-
உலக்கஇன் னுயிர்குடித்து ஒல்லை மீள்குவல்:
மலைக்குல மயிலென, மடந்தை கூறுவாள்: 527

*விளித்துளான் உரம்-போருக்கு அழைக்கின்ற அவன் வலிமை, உலக்க-அவன் இறக்க. ஒல்லை-விரைவில், மலையில்வாழ் மயிலைப் போன்ற தாரையே.*

கொற்றவ, நின்பெருங் குவவுத் தோள்வலிக்கு
இற்றையன் அல்லனல், ஈடுண்டு ஏகுவான்
பெற்றிலன், பிறந்திலன் பெயர்த்தும், போர் செயற்கு
உற்றது நெடுந்துணை உடைமையால் என்ருள் 528

*குவவு-திரண்ட, இற்றையன் அல்லன்-இதுவரை அறியாது இன்று புதிதாக வந்தவன் அல்லன். இதுவரை உனக்கு ஈடுசெய்து நிற்கவும் பெற்றிலன். இன்று புதிதாக ஒரு பிறப்பெடுத்து வந்திலன்! இன்று போருக்கு வரக்காரணம் பெருந்துணை பெற்றுளான் என்பதே. அதற்கு வாலி:—*

பேதையர் எதிர்க்குவர் எனினும், பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதிற்
பாதியும் என்னதால்: பகைப்பது எங்ஙனம்?
நீ துயர் ஒழிகென நின்று கூறினன் 529

*என்வலியறியாப் பேதையராய் வந்து எதிர்ப்பினும், அவர் கொண்டுள்ள வரம் உரங்களிற் பாதி என்னைச்சாரும்.*

அன்னது கேட்டவள்-அரச, ஆயவற்கு
இன்னுயிர் நட்பமைந்து இராமன் என்பவன்
உன்உயிர் கோடலுக்கு உடன்வந் தான்எனச்
துன்னிய அன்பினர் சொல்லினர் என்ருள் 530

*கோடலுக்கு-கொள்வதற்கு.*

உழைத்த வல்லிருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்துஅயர் உலகினுக்கு அறத்தின் ஆறெல்லாம்
இழைத்தவற்கு, இயல்பில இயம்பி என் செய்தாய்!
பிழைத்தனை பாவி,உன் பெண்மையால் என்றான் 531

தான்செய்த வினைகளுக்கு முடிவு காணாமல் சஞ்சலப்படும் உலகத்துக்குத் தர்மநெறி காட்டி நிற்பானைப்பற்றித் தகுதியற்றன எல்லாம் பேசுகின்றாயே: பெண்ணே, பெருந்தவறு இது.

ஏற்றபே ருலகெலாம் எய்தி, ஈன்றவள்
மாற்றவள் ஏவ,மற்றவள்தன் மைந்தனுக்கு
ஆற்றரும் உவகையால் அளித்த ஐயனைப்
போற்றலை, இன்னன புகறற் பாலையோ? 532

தான் நாட்டைப்பெற்று; பின்னர் தாய்க்கு அடுத்த கைகேசி மைந்தனுக்கு நாட்டைக் கொடுத்தவனைப் போற்றாது இகழ்வாயோ?

தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர்
இம்பரில் இலதென எண்ணி ஏய்ந்தவன்-
எம்பியும் யானும் உற்றுஎதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ? அருளின் ஆழியான் 533

அருளின் ஆழியான், கருணைக்கடல் இராமன். வாலி வெளிவந்து தோன்றுகிறான்—

நின்றான்எதிர் யாவரும்நெஞ்சு நடுங்கி அஞ்சத்
தன்தோள் வலியால் தகை மால்வரைசாலும் வாலி
குன்றூடு வந்துற்றனன். கோள்அவுணன் குறித்த
வன்தூணிடைத் தோன்றிய மாநரசிங்கம் என 534

மலைஒத்த வாலி குன்றிடையே வந்து; இரணியன் குறித்த தூணில் நரசிங்கம் தோன்றியதுபோல் தோன்றினான். அப்பொழுது இலக்குவன்:—

ஆற்றாது பின்னும் பகர்வான்: அறத்தாறு அழுங்கத்
தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விதன்றால்:
மாற்றான்எனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்துஇவன் தஞ்சம்என்! வீர, என்றான் 535

தருமம் தேயும்படி தெளிவில்லாது நடப்பார்களை நம்புதல் நேர்மையன்று. தன் அண்ணனை எதிரியாகக் கொல்ல முன்வந்த இவன் (சுக்ரீவன்) அந்நிய நம்மிடத்தில் தஞ்சம் புகின் விளைவு என்ன ஆகும்!

அத்தா, இதுகேள் என ஆரியன் கூறுவான்: இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிதுஉத்தமன் ஆதலுண்டோ? 536

*பித்துஆய-புத்தியற்ற குரங்கினத்தின். அத்தா-தம்பி.*

தந்தோள்வலி மிக்கவர் தம்ஒரு தாய்வயிற்றின்
வந்தோர்மட மங்கை பொருட்டு மலைக்கலுற்றார்-
சிந்தோடுஅரி ஒண்கண் திலோத்தமை காதல் செற்ற
சுந்தோப சுந்தப் பெயர்த் தொல்லையினேரும் ஒத்தார் 537

*மலைக்கலுற்றார்-போர்செய்யத் துணிந்த வாலி சுக்ரீவர், ரேகை பரந்த கண்கொண்ட திலோத்தமைக்காகப் பொருத சுந்த உபசுந்தர் என்னும் முந்திய அசுரரை ஒத்தார். இருவரும் போர் செய்யும்போது இராமன் எய்த அம்பு—*

காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேரும் ஆசியிற் சென்றது, நின்றதென்! செப்பின்
நீரும் நீர்தரு நெருப்பும் வன்காற்றும் கீழ்நிமிர்ந்த
பாரும் சார்வலி படைத்தவன் உரத்தைஅப் பகழி 538

*காரும் வார்சுவை-முற்றிய பெருஞ்சுவை; வாழைப்பழத்தில் ஊசி இறங்குவதுபோல் சென்றது, வலி படைத்தவன்-வாலி, உரத்தை-மார்பில்.*

ஓங்கரும் பெருந்திற லுடைமனத் துள்ளத்தன்
வாங்கினன் மற்றவ் வாளியை ஆளிபோல் வாலி,
ஆங்கு நோக்கினர் அமரரும் அவுணரும் பிறரும்
வீங்கி னார்கள்தோள், வீரரையார்விய வாதார்! 539

*வாங்கினன்-பிடுங்கி எடுத்தான். ஆளி-சிங்கம்*

பறித்த வாளியைப் பருஉவலித் தடக்கையால் பற்றி
இறுப்பன் என்றுகொண்டு எழுந்தனன் மேருவை இறுப்போன்.
முறிப்பன் என்னினும் முறிவ தன்றாம் எனமொழியாப்
பொறித்த நாமத்தை அறிகுவான் நோக்கினன் புகழோன் 540

*அறிகுவான்-வாளியில் உள்ள பெயரைத் தெரிந்துகொள்ள.*

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை, முற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும்பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக் கண்களில் தெரியக் கண்டான் 541

*தம்மை....பதத்தை-நாராயண பதத்தைத் தம் அடியார்களுக்கு நல்கும் ராம என்னும் திவ்விய பதத்தை.*

இல்லறம் துறந்த நம்பி எம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால், வேதநூலில்
சொல்லறந் துறந்திலாத சூரியன் மரபும் தொல்லை
நல்அறந் துறந்ததென்று நகைவர நாண் உட்கொண்டான் 542

*வில் அறந்துறத்தல்-மறைந்திருந்து எய்தல். இராமன் அங்கு எதிரில் தோன்ற—*

கண்ணுற்றான் வாலி, நீலக் கார்முகில் கமலம் பூத்து
மண்உற்று வரிவில் ஏந்தி வருவதே போலும்; மாலைப்
புண்ணுற்ற தனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப நோக்கி
எண்ணுற்றாய்? என்செய்தாய்? என்று ஏசுவான் இயம்பலுற்றான் 543

*மாலைப் புண்ணுற்றனைய-வரிசையாகப் புண்பட்டதுபோல் குருதி ஒழுக்குக்காட்டிய, பொறி-உடல், பொடிப்ப-கனன்று கூர்ந்து. எண்-எண்ணம் யாது?*

வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே, நீ பரதன்முன் தோன்றி னாயே!
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தால் தீங்கன்றாமோ!
தாய்மையு மன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய்! 544

*தூயவன்-தசரதன்.*

குலமிது, கல்விஈது, கொற்றம்ஈது, உற்றுநின்ற
நலமிது, புவனம் மூன்றும் நாயக, உன்னதன்றோ?
வலமிது இவ் வுலகந் தாங்கும் வண்மை ஈதுஎன்றால்! திண்மை
அலமரச் செய்யலாமோ? அறிந்திருந்து அயர்ந்து ளார்போல் 545

*இது-உன்னது, திண்மை அலமர-நற்குண உறுதிநிலை கலங்கும்படி.*

கோவியல் தருமம் உங்கள் குலத்துஉதித் தோர்கட் கெல்லாம்-
ஓவியத்துஎழுத ஒண்ணா உருவத்தாய், உடைமை அன்றோ?
ஆவியை, சனகன்பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை! 546

*கோஇயல் தருமம்-அரச முறைமை.*

அரக்கர்ஓ ரழிவு செய்து கழிவரேல், அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கம் எங்குஉகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய்?அப்பா,
பரக்கழி இதுநீ பூண்டால் புகழை யார் பரிக்கற் பாலார்! 547

*பரக்கழி-பழிப்புக்குரிய சிறு செயல். பரி-தாங்கு.*

ஒலிகடல் உலகந் தன்னில் ஊர்தரு குரங்கின் மாட்டே
கலியது காலம் வந்து பரந்ததோ! கருணைவள்ளல்,
மெலியவர் பாலதேயோ ஒழுக்கமும் விழுப்பந் தானும்?
வலியவர் மெலிவு செய்தால் புகழன்றி வசையும் உண்டோ! 548

*தாவித்திரியும் குரங்கு இனத்திற்குக் கலியுகம் தொடங்கிற்றோ? ஒழுக்கம் சிறப்பு இவை எளியவர்க்கே உரியவோ? வலியவர்க்கு இழிவும் புகழோ?*

கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ, பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டுஒரு கருமம் செய்தாய்: எம்பிக்குஇவ் வரசை நல்கிக்
காட்டுஒரு கருமம் செய்தாய்: கருமந்தான் இதின்மே லுண்டோ 549

*கூட்டு-துணையாக. நாட்டு ஒரு கருமம்-தந்தை சாவு, காட்டு ஒரு கருமம்-என் சாவு, நாட்டு வினையால் புகழும் காட்டு வினையால் பழியும் புரிந்தாய்.*

அறைகழல் அலங்கல் வீர ராயவர் புரிவது ஆண்மைத்
துறைஎன லாயிற் றன்றே: தொன்மையின் நன்னூற்கு எல்லாம்
இறைவன்நீ என்னைச் செய்தது ஈதெனில், இலங்கை வேந்தன்
முறையல செய்தான் என்று முனிதியோ? முனிவிலாதாய் 550

*அலங்கல்-மாலை, வீரர் ஆண்மைத் தொழிலே புரிவர். நீ இங்கு என்பால் முறை கெட்டது செய்து; இராவணன் முறைகெட நடந்தான் என முனியலாமோ?*

இருவர்போர் எதிருங்காலை இருவரும் நல்லுற் றாரே.
ஒருவர்மேல் கருணை தூண்டி, ஒருவர்மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத்து எய்தல்
தருமமோ? பிறிதொன் றாமோ? தகுகிலது என்னும் பக்கம்! 551

*தகுகிலது என்னும் பக்கம்-அது தகாததாகிய பட்சபாதமே.*

மற்றொருத்தன் வலிந்துஅறை கூவ வந்து,
உற்றஎன்னை ஒளித்து உயிர் உண்டநீ
இற்றையில் பிறர்க்கும் இகல் ஏறென
நிற்றி போலும், கிடந்த நிலத்தரோ! 552

*இற்றையில்....இன்று நான் கிடக்கின்ற இங்கு பிறர் காண நீ போர் வீரன் என வெட்கமின்றி நிற்பதோ?*

நூல்இயற்கையும், நும்குலத்து உந்தையர்
போல்இயற்கையும், சீலமும் போற்றலை.
வாலியைப் படுத் தாயல்லை, மன்அற
வேலியைப் படுத்தாய் விறல் வீரனே! 553

*மன் அறவேலி-நிலையான அரச தருமத்தின் பாதுகாப்பு முறை.*

தாரம்மற் றொருவன் கொள்ளத், தன்கையிற்
பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே!
நேரும் அன்று, மறைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ? வில்இகல் வல்லதே! 554

*தாரம்-நின் மனைவியை, பழிப்பதே-பழி புரிவதோ? இலக்குவன் வாலிக்குச் சமாதானம் கூறல் :—*

முன்பு நின் தம்பி வந்து சரண்புக, முறையி லோயைத்
தென் புலத்து உய்ப்பன் என்று செப்பினன். செருவில்நீயும்
அன்பினை உயிருக்காகி அடைக்கலம் யானும் என்றி
என்பது கருதி, அண்ணன் மறைந்துநின்று எய்தது என்றான் 555

*நீயும் உன் நலங்கருதி அடைக்கலங்கேட்பாய் எனக் கருதி, (அது நேரா வண்ணம்) அண்ணன் மறைந்து நின்று எய்தான். இறுதியில் வாலி இராமனை நோக்கி:—*

மற்றினி உதவி உண்டோ! வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ, நின்னை என்னைக் சொல்லிய கொணர்ந்து, தொல்லை
சிற்றினக் குரங்கினோடும் தெரிவுறச் செய்த செய்கை-
வெற்றரசு எய்தி, எம்பி வீட்டரசு எனக்கு விட்டான் 556

*மான-பெருமைமிகு, எம்பி வெறு மண்ணரசைத் தான் பெற்று, எனக்கு வீட்டரசு தந்துள்ளான் : இதனிற் பெரிய உதவி யாது?*

ஓவிய உருவ, நாயேன் உளதொன்று பெறுவதுஉன்பால்:
பூவியல் நறவம் மாந்திப் புந்திவே றுற்ற போது
தீவினை இயற்றுமேனும், எம்பிமேற் சீறி, என்பால்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான் 557

*நறவம்-மது, பகழி-அம்பு, கூற்று-யமன், ஏவல்-எய்யற்க.*

இன்னம் ஒன்றுஇரப்பது உண்டால்: எம்பியை உம்பிமார்கள்
தன்முனைக் கொல்வித்தான் என்று இகழ்வரேல், தடுத்தி தக்கோய்.
முன்முனே மொழிந்தாய் அன்றே இவன்குறை முடிப்பது, ஐயா
பின்னிதுஎன் வினையின்செய்கை, அதனையும் பிழைக்கலாமோ 558

*தன் அண்ணனைக் கொன்றவன் என்று இகழ்ந்தால் தடுத்துநில். அவன் குறைகளை நீக்குவதாகக் கூறியுள்ளாய். யான் விழுந்து கிடக்கின்ற இது என் வினைப்பயன்; அதைவிட்டுத் தப்ப முடியுமா?*

அநுமன் என்பவனை-ஆழிஐய,நின் செய்ய செங்கைத்
தனுஎன நினைதி: மற்றென் தம்பிநின் தம்பியாக
நினைதி;ஓர் துணைவர் இன்னோர் அனையவர் இலை,நீ ஈண்டுஅவ்
வனிதையை நாடிக்கோடி. வானினும் உயர்ந்ததோளாய் 559

*தனு என-வில்போல், கோடி-கொள்க. பின்னர் வாலி சுக்ரீவனுக்கு :—*

அரசியல் பாரம் பூரித்து அயர்ந்தனை இகழாது, ஐயன்
மரைமலர்ப் பாதம்நீங்கா வாழுதி: மன்னர் என்பார்
எரி எனற்கு உரியார் என்றே எண்ணுதி. எண்ணம் யாவும்
புரிதி, சிற்றடிமை குற்றம் பொறுப்பர் என்றெண்ணவேண்டா 560

*அயர்ந்தனை-மெய்மறந்து. இராமனை இகழாமல். அரசர் நெருப்பை ஒத்தவர் : அடியவரின் குற்றங்களைப் பொறுப்பர் என்று எண்ணவேண்டாம். பின் அங்குவந்த அங்கதன் :—*

குறையடித்ததுபோல் தீராத் தகைய இத் திசைகள் தாங்கும்
கறை அடிக்கு அழிவு செய்த கண்டகன் நெஞ்சம் உன்றன்
நிறைஅடிக் கோல வாலின் நிலைமையை உன்னுந்தோறும்
பறையடிக்கின்ற அந்தப் பயம் அறப் பறந்த தன்றே 561

*ஆணி கடாவப்பட்டதுபோல் அசையாது நிற்கும் திசையானைகளை வருத்திய இராவணன், உன்வாலை உன்னும்தோறும் நெஞ்சு பறையடிப்பதுபோல் துடிக்கும்; அந்த அச்சம் இனி அகன்றுபோமே! கறையடி-யானை, நிறை-பெரிய. வாலி அங்கதனைப் பார்த்து :—*

என்உயிர்க்கு இறுதி செய்தான் என்பதை இறையும் எண்ணாது
உன்உயிர்க்கு உறுதி செய்தி,இவர்க்கு அமர்உற்றதுண்டேல்
பொன்உயிர்த்து ஒளிரும் பூணாய்,போதுதி, நிலைமை நோக்கி
மன்னுயிர்க்கு உறுதிசெய்வான் மலரடி சுமந்து வாழ்தி 562

*என்னைக் கொன்றான் என்று சற்றும் எண்ணாமல், அவனை அண்டி உன் உயிர்க்கு நன்மை தேடு. அங்கதன் இராமன் அடியிற் பணிந்தான்.*

தன்அடி தாழ்தலோடும் தாமரைத் தடங்கணானும்
பொன்னுடை வாளைநீட்டி "நீ இது பொறுத்தி" என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின. இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான் 563

*பொறுத்தி ஏற்றுக்கொள், வாலிக்காகத் தாரை புலம்புகிறாள் :—*

## அரசியற் படலம்

துயராலே தொலையாத என்னையும்
பயிராயோ? பகையாத பண்பினாய்,
செயிர்தீராய் விதியான தெய்வமே,
உயிர்போனல் உடலாரும் உய்வரோ? 564

*பயிராய்-என்னை அழைக்கமாட்டாயோ, செயிர் தீராய்-என் குறை தீர்ப்பாய்.*

செருஆர் தோள,நின் சிந்தை யுளென் எனின்
மருவார் வெஞ்சரம் என்னையும் வௌவுமால்:
ஒருவேன்உள் உளை யாகின், உய்தியால்:
இருவேம் உள்இரு வேமும் இருந்திலேம் 565

*நான் உன் சிந்தையுள் இருந்திருப்பின், அந்த அம்பு என்னையும் கொல்லுமே! தனித்த என் உள்ளத்தில் நீ இருப்பதாயின் நீயும் உயிர்வாழ வேண்டுமே! ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இருந்ததே இல்லை!*

அது காலத்து அவ் வருட்கு நாயகன்
மதிசால் தம்பியை வல்லை ஏவினன் :
கதிரோன் மைந்தனை ஐய, கைகளால்
விதியான் மௌலி மிலைச்சுவாய் என்றான் 566

*மௌலி மிலைச்சுவாய் - முடிசூட்டு. இலக்குவன் முடி சூட்டியபின் இராமன் சுக்ரீவனுக்கு அறிவுறுத்தல்:—*

சிறியரென் றிகழ்ந்து நொய்வு செய்வனசெய்யல், மற்றிந்
நெறிஇழந்து யான்ஓர் தீமை யிழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியதாம் மேனியாய கூனியால்-குவவுத் தோளாய்,
வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன் 567

*நொய்வு-அற்பம், வெறியன-வீண் துன்பம். குவவு-திரண்ட.*

மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கை யின்றிஉணர்தி;வாலி செய்கையால் சாலும். இன்னும்
அங்கவர் திறத்தி னனே அல்லலும் பழியும் ஆதல்
எங்களிற் காண்டி அன்றே, இதற்குவேறு ஏது யாதோ? 568

*அவர்-மாதர் கைகேசி, சீதை*

நாயகன் நல்லன், நம்மை நனிபயந்துஎடுத்து நல்கும்
தாய்என இனிது பேணத் தாங்குதி. தாங்குவாரை
ஆயது தன்மையேனும், அறம்வரம்பு இகவா வண்ணம்
தீயன வந்தபோது சுடுதியால் தீமை யோரை 569

*உன்னைத் தாய்என அவர்கள் கருதுமாறு நல்லோரைத் தாங்குக.*

ஏழிரண் டாண்டு யான்போய் எரிவனத் திருக்க ஏன்றேன்.
வாழியாய், அரசர் வைகும் வளநகர் வைகல் ஒல்லேன்:
பாழியந் தடந்தோள் வீர, பார்த்திலே போலும் அன்றே!
யாழ்இசை மொழியோ டன்றி, யான்உறை இன்பம் என்னே 570

*ஏன்றேன்-ஏற்றுக்கொண்டேன், ஒல்லேன் - உடன்படேன், யாழ் இசை மொழி-சீதை.*

இல்லறந் துறந்திலாதோர் இயற்கையை இழந்து, போரின்
வில்லறம் துறந்து வாழ்வேற்கு, இன்னண மேன்மை இல்லாச்
சில்லறம் புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு-
நல்லறம் துறந்தநோன்பின் நவையுற நோற்பல் என்றான் 571

*துறந்திலாதார் - கைவிடாதவர், இயற்கை - துணைவியோடு வாழ்தல், சில்லறம்-சிறுமை, நல்லறம்-இல்வாழ்க்கை துறந்த விரத கோலத்துடன் தவஞ்செய்வேன். அநுமானைப் பார்த்து :—*

நிரம்பினன் ஒருவன் காத்த நிறையரசு-இறுதி நின்ற
வரம்பிலா ததனை மற்றோர் தலைமகன் வலிதிற் கொண்டால்,
அரும்புவ நலனும் தீங்கும்.ஆதலின் ஐய,நின்போல்
பெரும்பொறை அறிவினோரால் நிலையினைப் பெறுவதம்மா! 572

*நிரம்பினன்-அரசியல் ஞானம் நிரம்பியான் வாலி, இறுதிநின்ற-எல்லை காணும், பொறை-பாரம் தாங்கும் அறிவினனால் நிலைபெறும்.*

ஆன்றவர்க்கு உரிய தாய அரசினை நிறுவி, அப்பால்
ஏன்று எனக்கு உரியதாய கருமமும் இயற்றற்கு ஒத்த
சான்றவர் நின்னின்இல்லை. ஆதலால் தருமந் தானே
போன்றநீ, யானே வேண்ட அத்தலை போதி என்றான் 573

*அத்தலை-அவ்விடம் சுக்ரீவனுடன், ஆன்றவர்க்கு-பெரிய சுக்ரீவனுக்கு.*

## கார்காலப் படலம்

அளவில் கார்எனும் அப்பெரும் பருவம் வந்தணைந்தால்
தளர்வர் என்பது தவம்புரி வோருக்கும் தகுமால்:
கிளவி தேனினும் அமிழ்தினும் கிளைத்தவெள் வளைத்தோள்
வளவி உண்டவன் வருந்தும் என்றால் அதுவருத்தோ! 574

*கார்காலத்தில் தவத்தினரும் நெஞ்சுரத்தை இழப்பாராயின்; தேமொழி சீதையுடன் கூடித் திளைத்தவன் வருந்தாதிருப்பானோ? அவன் வருத்தம் எடுத்துப் பேசத்தக்க ஒன்றன்று. கிளவி-சொல், வளை-வளையல், கிளைத்த-செழித்த, வளவி-வளைத்துப்பிடித்து நுகர்ந்தவன்.*

நெய்யடை தீஎதிர் நிறுவி "நிற்குஅவள்
கையடை" என்றஅச் சனகன் கட்டுரை
பொய்யடை ஆக்கிய பொறியிலே னெடு
மெய்யடை யாது:இனி விளிதல் நன்றரோ 575

*மிதிலையில் திருமணத்தில் சனகன் கூறிய "உனக்கு அடைக்கலம்" என்ற சொல் பொய்ப்படவைத்து உணர்வற்றவன் ஆனேன். உண்மை இங்கு இல்லை, இனி உயிர்விடலே நன்று.*

கல்வியிற் றிகழ் கணக்காயர் கம்பலை
பல்விதச் சிறார்எனப் பகர்வ-பல்லரி
செல்லிடத்து அல்லதுஒன்று உரைத்தல் செய்கலா
நல்லறி வாளரின் அவிந்த நாஎலாம் 576

*கணக்காயர்-ஆசிரியர், கம்பலை-ஒலி, பல்லரி-தவளை. ஆசிரியன்கீழ் அமர் மாணவர்போல் சத்தமிடும் தவளைகள், தம்சொல் ஏலா இடத்து அடங்கி யிருக்கும் அறிவுடையார்போல நாவடங்கி இருந்தன. சுக்ரீவன் படையுடன் வராமையால் இராமன் தம்பியை நோக்கி :—*

## கிட்கிந்தைப் படலம்

நன்றி கொன்றுஅரு நட்பினை நார்அறுத்து
ஒன்றும் மெய்ம்மை சிதைத்துஉரை பொய்த்துளார்க்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்;
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய் 577

*நன்றிகெட்டு நட்புமறந்து உண்மையைச் சிதைத்துச் சொல் தவறுவாரைக் கொல்வது குற்றமன்று; நீ சென்று சுக்ரீவன் வாராதிருக்கும் இயல்பை உணர்ந்துவா.*

நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது
வஞ்சம் அன்று,மனு வழக்கு: ஆதலான்
அஞ்சில் அம்பதில் ஒன்றும் அறியாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய் 578

*இளமையிலும் முதுமையிலும் யாதும் உணராத (குரங்கு) மனத்தில், நம் திறன் என்றும் நிலைக்க வழி செய்வாய். மனுவழக்கு-மனுநீதி. வீர இலக்குவனை எதிர்காணத் தாரை தன் குழுவுடன் வர-இலக்குவன் அவளைக் கண்டு—*

தாமரை வதனம் சாய்த்துத், தனுநெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தா னும்என மைந்தன் நிற்ப:
பூமியில் அணங்கனார்தம் பொதுவிடைப் புகுந்து பொற்றோள்
தூர்மன நெடுங்கண் தாரை நடுங்குவாள் இனைய சொன்னாள் 579

*நிற்ப-மனம் ஒடுங்கி நின்றான். பூமியிலுற்ற தேவமாதர் போன்ற மகளிர் கூட்டத்துள் நின்று நடுக்கத்துடன் தாரை பேசினாள். தூர்-தூய.*

அந்தமில் காலம் நோற்ற ஆற்றலுண் டாயின் அன்றி,
இந்திரன் முதலி னோரால் எய்தலாம் இயல்பிற் றன்றே:
மைந்த. நின்பாதங் கொண்டெம் மனைவரப்பெற்று வாழ்ந்தோம்:
உய்ந்தனம், வினையும் தீர்ந்தோம்: உறுதி வேறு இதின் ஊங்குண்டோ 580

நீ இங்கு நடந்து வரப்பெற்றது, யாம் நெடுங்காலம் செய்த தவப்பயனே: இந்திரற்கும் இது கிடைப்பரிது: யாம் நல்வாழ்வு பெற்றோம்.

மங்கல அணியை நீக்கி, மணிஅணி துறந்து, வாசக்
கொங்குஅலர் கோதை மாற்றிக், குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூசக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான் 581

தாலி, பிற அணிகள், பூ, குங்குமம் சந்தனம் இன்றி: மார்பும் கழுத்தும் மறைத்துப் போர்த்து நின்ற தாரையைக் கண்டு கண் கசிந்து நின்றான்.

இளையராம் என்னை ஈன்ற இருவரும் என்ன வந்த
நினைவினன் அயர்ப்புச்சென்ற நெஞ்சினன் நெடிது நின்றான்,
வினவினுட்கு எதிர்ஓர் மாற்றம் விளம்பவும் வேண்டும் என்றுஅப்
புனைகுழலாட்கு வந்த காரியம் புகல்வ தானான் 582

இருவர்-கோசலை சுமத்திரை, இவ்வாறே அமங்கலமாய் இருப்பரே. அவ்வன் கூறியபின் தாரை கூறுகிறாள் :—

செம்மைசேர் உள்ளத்தீர்கள் செய்தபேருதவி, தீரா
வெம்மைசேர் பகையும் மாற்றி அரசுவீற் றிருக்க விட்டீர்.
உம்மையே இகழ்வர் என்னின் எளிமையா ஒழிவது ஒன்றோ,
இம்மையே வறுமை எய்தி இருமையும் இழப்பர் அன்றே 583

அழியாப் பகையை அழித்து அரசும் கொடுத்தீர் சுக்ரீவனுக்கு. உம்மை மதியாதிருப்பின் அது சிறிய ஒன்றாகக் கழியுமோ? இம்மையும் மறுமையும் துன்பளிக்கும். சுக்ரீவனின் மதுமயக்கம்—

வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சம் என்றோரை நீக்குந் தன்மையும் களிப்பும் தாக்கும்,
கஞ்சமெல் அணங்குந் தீரும் கள்ளினால்; அருந்தினோரை
நஞ்சமும் கொல்வதல்லால் நரகமும் தப்பா தன்றே 584

மரபில் கொட்பும் - வழக்கமில்லா வழக்கங்களும். தாக்கும்-வருத்தும், தாமரைத் திருமகள் நீங்குவாள். விடம் சொல்லும், ஆனால் நரகிற் சேர்க்காது: கள் நரகிற் சேர்க்கும். சுக்ரீவன் விருந்துண்ண வேண்டுகிறான் :—

மஞ்சன விதிமுறை மரபின் ஆடினை:
எஞ்சலில் இன்னமிழ்து அருந்தின் யாப் எல்லாம்
உஞ்சனம் இனிஎன-அரசு உரைத்தலும்,
அஞ்சன வண்ணனுக்கு அநுசன் கூறுவான் 585

*மஞ்சனம் ஆடினை-நீராடினாய். அரசு-சுக்ரீவன், அநுசன்-தம்பி.*

வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
அருத்தும் என்றால்-எமக்கு இனியதாவதோர்
அருத்தி உண்டாயினும், அவலம் தான் தழீஇக்
கருத்துவே றுற்றபின் அமிழ்தும் கைக்குமால் 586

*எங்கள் வருத்தமும் நின்பழியும் எம் வயிற்றை நிரப்பியிருக்க எமக்கு ஏது இனியதாகும்? விருப்பம் இருப்பினும் துன்புற்ற கருத்துடன் மாறுபட்ட இடத்தில் அமுதமும் கசக்கும். சுக்ரீவன் இராமனை அடைந்தபின், இராமன் :—*

அங்கதற்கு இனியன அருளி, ஐய போய்த்
தங்குதி உந்தையோடு என்று, தாமரைச்
செங்கணன் தம்பியும் தானும், சிந்தையின்
மங்கையும் அவ்வழி அன்று வைகினன் 587

*உந்தையோடு-சுக்ரீவனோடு. வானரப்படை இயல்பு-*

## தானை காண் படலம்

ஓடிக்குமேல் வடமேருவை வேரொடு முடிக்கும்
இடிக்குமேல் நெடு வானக முகட்டையும் இடிக்கும்
பிடிக்குமேல் பெருங் காற்றையும் கூற்றையும் பிடிக்கும்
குடிக்குமேல் கடல் ஏழையும் குடங்கையிற் குடிக்கும் 588

ஈசன் மேனியை, ஈரைந்து திசைகளை, ஈண்டிவ்
ஆசில் சேனையை, ஐம்பெரும் பூதத்தை, அறிவை,
பேசும் பேச்சினை, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,
வாச மாலையாய், யாவரே முடிவெண்ண வல்லார்! 589

யாவதுஎவ் வுலகத்தினின் ஈங்குஇவர்க்கு இயற்றல்
ஆவ தாகுவது அரியதொன்று உளதெனல் ஆமோ?
தேவ தேவியைத் தேடுவ தென்பது சிறிதால்!
பாவந் தோற்றது தருமமேவென்றிதிப் படையால் 590

*இச்சேனையாற் செய்ய முடியாதது யாது ஒன்றுமிலது என்றே கூறலாம். நாடவேண்டிய இடங்களில் கோதாவரி வருணனை —*

## நாட விட்ட படலம்

முத்தீர்த்துப் பொன்திரட்டி மணிஉருட்டி முதுதீர்த்தம் முன்றில் ஆயர்
மத்தீர்த்து மரன்ஈர்த்து மலைஈர்த்து மான்ஈர்த்து வருவதி யார்க்கும்
புத்தீர்த்திட் டமையாமல். புலவர்நா டுதவுவது; புனிதமான
அத்தீர்த்தம் அகல்கோதா விரிஎன்பர் அம்மலையின் அருகிற் றம்மா 591

*முதுநீத்தம்-பெருவெள்ளம், முன்றில்-முற்றங்களின், புத் என்னும் நரகில் அழுந்தாமல் தேவ உலகைக் கொடுக்கும் கோதாவரி பாண்டு மலையருகில் உள்ளது.*

அரன்அதிகன், உலகளந்த அரிஅதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல், புகலரிய பண்பிற் றுமால்,
சுரநதியின் அயலது,வான் தோய்குடுமிச் சுடர்த்தொகைய-தொழுதோர்க் கெல்லாம்
வரன்அதிகம் தரும்தகைய அருந்ததியாம் நெடுமலையை வணங்கி அப்பால் 592

*அரன்-சிவன், அரி-மால், பரிசு-தன்மை, சுரநதி-தேவ கங்கை, குடுமி-சிகரம், சுடர் தொகைய-சூரிய சந்திரர் கூடியிருப்பது, வரன்-வரம்.*

தென்தமிழ்நாட் டகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற் றீரேல்
என்றும்அவன் உறைவிடமாம் ஆதலால்அம் மலையை இடத் திட்டே ஏகிப்
பொன்திணிந்த புனல்பெருகும் பொருநைஎனும் திருநதி பின் பொழிய, நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமாம் நெடுவரையும் கடலுங் காண்டிர் 593

*திருமுனிவன்-அகத்தியன், பின்பு ஒழிய-கடந்து, நாகக் கன்று-யானைக் குட்டி. (வனத்துக் குகைக்குள் சென்று ஒரு நகரம் கண்டனர்).*

## பில நீங்கு படலம்

அமிழ்துஉலை அயினியை அடுத்த உண்டியும்,
தமிழ்நிகர் நறவமும், தணிதண் தேறலும்
இமிழ்கனிப் பிறக்கமும் பிறவும் இன்னன
கமழ்வுறத் தோன்றிய கணக்கில் கொட்பது 594

*அமுது ஒத்தசோறு, பிற உணவுகள், தமிழ் ஒத்ததேன், நன்மது, பழ்வருக்கம், இவை அங்குற்றன.*

## ஆறு செல் படலம்

ஊதைபோல் விசையின், வெங்கண் உழுவைபோல் வயவர், ஓங்கல்
ஆதியை அகன்றுசெல்வார்- அரக்கனுல் வஞ்சிப்புஉண்ட
சீதைபோ லின்ருள் கூந்தல் வழீஇவந்து புவனம்சேர்ந்த
கோதைபோல் கிடந்த-கோதா விரியினைக் குறுகிச் சென்றார் 595

*புயல்போல் வேகம், புலிபோல் சினமுள்ள வானரவீரர். ஓங்கல்-பாண்டு மலையைக் கடந்து, சீதை கூந்தலிலிருந்து நழுவிய பூமாலைபோல் கிடந்த கோதாவரியைக் கண்டார். —பின் பாண்டிநாட்டை அடைந்தார்—*

அத்திருத்தகு நாட்டினை அண்டர்நாடு
ஒத்திருக்கும் என்றால் உரை ஒக்குமோ!
எத்திறத் தினும் ஏழுலகும் புகழ்
முத்தும்முத்தமிழும் தந்து முற்றுமோ! 596

*எவ்வாற்றும் ஏழுலகினும் புகழ்பெற முத்தும் முத்தமிழும் தந்து நிறைவுற்றிருப்பதால், அது தேவலோகத்தை ஒத்தது எனினும் சரி அன்று, அதனினும் சிறந்தது. —சம்பாதி கடல் கடக்க வகை கூறல்—*

## சம்பாதிப் படலம்

எல்லீரும் சேறல் என்பது எளிதன்றுஅவ் விலங்கை மூதூர்:
வல்லீரேல் ஒருவர்ஏகி மறைந்தவண் ஒழுகி, வாய்மை
சொல்லீரே. துயரை நீக்கித் தோகையைத் தெருட்டி மீடிர்;
அல்லீரேல் என்சொல் தேறி உணர்த்துமின் அழகற் கம்மா 597

*சேறல்-கடல்கடந்து செல்தல். ஒருவர்மட்டும் சென்று மறைந்தொழுகி, உண்மையை உரைத்துச் சீதை தெளிவுறச் செய்து திரும்பிவருக: இன்றேல் என் மொழியை நம்பி இராமனிடம் சென்று சீதை இருப்பிடத்தை அறிவியுங்கள். வாய்மை - இராமன் வாய்மொழிகளை, மீடிர் - மீள்க. சாம்பவான் அநுமானே கடல் கடத்தற்கு உரியவன் என்கிறான்:—*

## மகேந்திரப் படலம்

நல்லவும் ஒன்றே! தீயவும் நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர், காரியம் நீரே துணிவுற்றீர்,
வெல்லவும் வல்லீர், மீளவும் வல்லீர், மிடலுண்டேல்
கொல்லவும் வல்லீர், தோள்வலி என்றும் குறையாதீர் 598

*நலம் தீங்கு இரண்டையும் ஆய்ந்து சொல்வீர், துணிந்து செய்வீர், வெல்வீர், மீள்வீர், இடர் ஏற்படின் அழிப்பீர், தோள்வலிமிக்கீர்.*

அறிந்து திறத்தாறு எண்ணி, அறத்தார் அழியாமை-
மறிந்துஉருளப் போர் வாலியை வெல்லும் மதிவல்லீர்,
பொறிந்திமை யாக்கோன் வச்சிர பாணம் புகமூழ்க
எறிந்துழி மற்றோர் புன்மயிரேனும் இழவாதீர் 599

*ஆறு எண்ணி-வழிகளை ஆய்ந்து: வாலி மாண்டு உருளவகை வைத்த மதியுடையீர். இந்திரன் வச்சிராயுதத்தை எறிந்தபோது, ஒரு மயிரேனும் இழவாது நின்றீர் நீர். —அநுமான் பேருருவத்துடன் மலைமேல் நிற்கிறான்—*

பொருவரு வேலை தாவும் புந்தியான்-புவனந் தாய
பெருவடிவு உயர்ந்த மாயோன் மேக்குறப் பெயர்ந்த தாள்போல்
உருஅறி வடிவின் உம்பர் ஓங்கினன், உவமையாலும்
திருவடி என்னும் தன்மை யாவர்க்குந் தெரிய நின்றான்

வேலை தாவும்புந்தி-கடல் கடக்கும் எண்ணம் கொண்ட அனுமான். மேக்குற-ஆகாயம் அளாவித்தூக்கிய திருவடிபோல். உம்பர்-வான் அளாவ, பெருவடிவுத் திரிவிக்ரமனாக.

# சுந்தர காண்டம்

## கடல் தாவு படலம்

வன்தந்தம் வரிகொள் நாகம் வயங்குஅனல் உமிழும் வாய
பொன்தந்த முழைகள் தோறும் புறத்துஊராப் புரண்டு போவ—
நின்று அந்தமில்லான் ஊன்ற நெறிந்துகீழ் அழுந்தி நீலக்
குன்றம்தன் வயிறுகீறிப் பிதுங்கின குடர்கள் மான. 601

*சிரஞ்சீவியாகிய அநுமான் மலையில் நின்று கால்ஊன்ற, அது அழுந்தலின்; அதன் வயிறு பிதுங்கி வெளிப்பட்ட குடல்கள்போல, விடப் பல் கொண்ட நாகங்கள் எரிஉமிழும் வாயொடு குகைகளிலிருந்து வெளிநோக்கி ஊர்ந்து ஓடின. —அநுமான் இலங்கை நகர் மதிலைக்கண்டு—*

## ஊர் தேடு படலம்

கறங்கு கால்புகா, கதிரவன் ஒளிபுகா, மறலி
மறம்புகாது, இனி வானவர் புகார்என்கை வம்பே.
திறம்பு காலத்துள் யாவையும் சிதையினும் சிதையா
அறம் புகாது,இந்த அணிமதில் கிடக்கைநின் றகத்தின் 602

*கறங்குகால்-வீசும் காற்று, மறலி-யமன், அறம் உட்புகாது ஆதலின் வானவர் உட்புகார் என்று சொல்வதற்கில்லை; புகுவர் அழிப்பர். பின்னர் கும்பகர்ணனைக் கண்டபோது—*

அன்னதன் நடுவண்ஓர் அமளி மீமிசைப்
பன்னக அரசென, பரவை தான்என,
துன்இருள் ஒருவழித் தொக்கதாம் என,
உன்னருந் தீவினை உருக்கொண் டென்னவே 603

*அன்னது-மண்டபம், அமளி-படுக்கை. ஆதிசேடன் கடல் இருட்பிழம்பு தீவினையின் உருவம் என்று கூறும்படி. கிடந்தான்.*

மூசிய உயிர்ப்பெனும் முடுகு வாதமும்
வாசலின் புறத்திடை நிறுவி, வன்மையான்
நாசியின் அளவையின் நடத்தக் கண்டவன்
கூசினன் குதித்தனன் விதிர்த்த கையினன் 604

*மூசிய-தொடர்ந்து வருகிற, வாதம்-மூச்சுக் காற்று. வெளியில் தள்ளி மீண்டும் மூக்குவரை இழுக்க அதைக்கண்டு கைஉதறிக் குதித்து ஓடினன் அநுமான். —இந்திரசித்தை நோக்கி—*

வளையும் வாள்எயிற்று அரக்கனோ? கணிச்சியான் மகனோ?
அளையில்வாழ் அரி அன்னவன் யாவனோ? அறியேன்.
இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாள்
உளைய உள்ள போர் இவனொடும் உளதென உணர்ந்தான் 605

ஒளிரும் கோரைப்பல் கொள்ளும் அரக்கர் இனத்தவனோ, சிவகுமாரன் முருகனோ, சிங்கக் குருளைபோன்ற இவன் யாவன்? ஏந்தல்-இராமன்.

இவனை இன்துணை யுடைய போர் இராவணன் என்னே
புவனம் மூன்றையும் வென்றது ஓர் பொருளெனப் புகறல்!
சிவனை, நான்முகத் தொருவனை, திருநெடு மாலாம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறிவோ! 606

இவனைத் துணையாகப்பெற்ற இராவணனுக்கு யாது குறை? —பின்னர் இராவணனைக் காணல்—

சாந்தளாவிய கலவைமேல் தவழ்வுறு தண்டமிழ்ப் பசுந்தென்றல்
ஏந்து காமவெங் கனலி னுக்குமிழ் அதள் துருத்தியின் உயிர்ப்பேற;
காந்தள் மெல்விரல் சனகிமேல் மனமுதல் கரணங்கள் கடிதோடப்
பாந்தள் நீங்கிய முழைஎனக் குழைவுறு நெஞ்சு பாழ்பட் டானை 607

சாந்து-உடலிற்பூசிய சந்தனம், அதள் துருத்தியின் உயிர்ப்பு-உலைக் களத்துத் தோல்துருத்தியின் காற்றுபோல், மனம் கரணம்ஓட-மனமும் செயலும் சீதையை நாடிநிற்க, பாந்தள்-பாம்பு, முழை-புற்று.

தேவியல் நேமியானிற் சிந்தைமெய்த் திருவின் ஏக
பூவியல் அமளிமேலாப் பொய்யுறக்கு உறங்குவானை,
காவிஅங் கண்ணிதன்பால் கண்ணிய காதல் நீரின்
ஆவியை உடல்உயிர்ப்பாம் அம்மியிட்டு அரைக்கின்றானை 608

தெய்விக சக்கரத்தையுடைய இராமனைப்போல் இவனும் சீதைமேல் சிந்தை யுடையவனாய்: காதல் நீராகவும், உடலும் உயிர்ப்பும்-அம்மியும் குளவியாக வும்; ஆவி-அரைக்கப்பட்டுத்தேயும் பொருளாகவும் கண்டான். காவியங் கண்ணிபால் கண்ணிய-நீல மலர்போன்ற கண்பெற்ற சீதைபால் உற்ற நினைப்பின். —உடனே அனுமான் தன்னுள்—

தோள்ஆற்றல் என்ஆகும், மேல்நிற்கும் சொல் என்னும்,
வாள்ஆற்றல் கண்ணானை வஞ்சித்தான் மணிமுடி என்
தாள்ஆற்றலால் இடித்துத் தலைபத்தும் தகர்த்து,என்றன்
ஆள் ஆற்றல் காட்டேனேல் அடியேனாய் முடியேனே 609

என் தோள்வலியும் என் பெரும்புகழும் என்ன பயன்! என் ஆற்றலை விளக்காவிடின் இராமனுக்கு அடியன் ஆவேனோ?

ஆலம்பார்த் துண்டவன்போல் ஆற்றல்அமைந் துளர்எனினும்
சீலம்பார்க் குரியோர்கள் எண்ணுது செய்குவரோ?
மூலம் பார்க்குறின் உலகை முற்றுவிக்கும் முறைநெறினும்
காலம்பார்த்து இறைவேலே கடவாத கடல் ஒத்தான் 610

*ஆலம் உண்ட சிவனைப்போல் ஆற்றல் பெற்றிருப்பினும் சீலம் பார்த்து வினை ஆற்றல் வேண்டும். உலகை அழிக்கும் திறம்படைத்த கடலும் அடங்கிக் காலவரம்புக்குட்படுகிறதல்லவா?*

கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தன்: கவிக்குலக்கோன்
கொண்டுவரும் என்றிருக்கும்: யான்இழைத்த கோள்இதுவால்!
புண்டரிக நயனத்தான் பால்? இனிப்போய் யாது உரைப்பேன்
விண்டவரோடு உடன்வீயாது, யான்வாளா விளிவேனே 611

*காகுத்தன்-இராமன், கவிகுலக்கோன்-சுக்ரீவன், இழைத்தகோள்-செய்த பயனிலாச் செயல். அப்பால்விட்டு நீத்த வானரரோடு சேர்ந்து உயிர்விடாது யான் மட்டும் இங்கு தனியாகச் சாகவோ?. அசோக மரத்தடியிற் சீதையின் நிலை—*

## காட்சிப் படலம்

வன்மருங்குல் வாள் அரக்கியர் நெருக்கஅங் கிருந்தாள்.
கன்மருங்கெழுந்து என்றும்ஓர் துளிவரக் காணு
நன்மருந்துபோல் நலன்அற உணங்கிய நங்கை
மென்மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள் 612

*வன்மருங்குல்-தடித்த இடுப்பு, கல்-மலை, எழுந்து-முளைத்து, மருந்து-சஞ்சீவி மூலிகை.*

துப்பினுற் செய்த கைகொடு கால்பெற்ற-துளிமஞ்சு
ஒப்பினுன்தனை நினைதொறும் நெடுங்கண்கள் உகுத்த
அப்பினுல் நனைந்து, அருந்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பினுல் புலர்ந்து, ஒரு நிலையுருத மென்துகிலாள் 613

*துப்பு-பவளம், மஞ்சு ஒப்பு-மேகம் ஒத்தவன். கண்ணீரால் நனைந்து உயிர்ப்பினுல் உலரும் ஆடை.*

அரிது போகவோ, விதிவலி கடத்தல் என்றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாரா,
சுருதி நாயகன் வரும் வரும் என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணுள் 614

*பரிதிவானவன்-சூரிய குலம், சுருதி-வேதம், மாதிரம்-திசை.*

ஆவிஅந்துகில் புனைவதொன்று அன்றிவேறு அறியாள்,
தூவி அன்னம் மென்புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவுதெண்கடல் அமிழ்துகொண்டு அனங்கவேள் செய்த
ஓவியம் புகை யுண்டதே ஒக்கின்ற மெய்யாள் 615

*ஆவி-பால் ஆவிபோன்ற ஆடை, தூவி-இறக்கை, தேவு-தெய்விக' வேள்-மன்மதன்.*

அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்றழுங்கும்,
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்,
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென மயங்கும்,
இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டுஎழாதாள் 616

*இலை உணவை யார் எடுத்துவைக்க, இராமன் அருந்துவான்? செல்-கரையான்.*

தெம்மடங்கிய சேணிலம், கேகயர்
தம் மடந்தை உன் தம்பியதாம் என,
மும்மடங்கு பொலிந்த முகத்தினன்
வெம்மடங்கலை உன்னி வெதும்புவாள் 617

*பகை-அடங்கிய பெருநாடு. வெம்மடங்கல்-வலிய ஆண்சிங்கம் இராமன்*

மெய்த் திருப்பதம் மேவு என்ற போதிலும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதிலும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள் 618

*அரசபதம் பெறு, நாடுதுறந்து காடுசெல்-இருசமயத்தும் ஓவியத்தாமரை போல் வாடாதிருந்தான்.*

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு "எம்பி நின்தம்பி,நீ
தோழன், மங்கை கொழுந்தி" எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள் 619

*ஆழி நட்பு-கடல் ஒத்த பெருநட்பு. வேடன்-குகன்.*

பரித்த செல்வம் ஒழியப், படரும் நாள்
அருத்தி வேதியர்க்கு ஆன்குலம் ஈந்து,அவர்
கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டு,இறை
சிரித்த செய்கை நினைந்துஅழும் செய்கையாள் 620

*பரித்த-தாங்கவேண்டிய, அருத்தி—அவா, ஆன்-பசு, அவர் கருத்து-அந்தணர் உள்ளத்து, இறை-சிறிதே.*

விரிமழைக் குலங் கிழித்து ஒளிரும் மின்எனக்
கருநிறத்து அரக்கியர் குழுவிற் கண்டனன்
உருநிறத்து ஒருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத்து உற்ற,எற்கு இயைந்த காந்தத்தை 621

*மேகக் கூட்டத்துக்கு இடையில் உறு மின்னல்போல். இருநிறத்து-பெரிய மார்பு, எற்கு இயைந்த-என் போற்றுதலுக்குரிய. கொண்டல்-மேக வண்ணன்.*

புனைகழல் இராகவன் புயத்தையோ, புகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ,
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ! யாதைச் சாற்றுகேன் 622

*யாதைச் சாற்றுகேன் - எதனைப் புகழ்வது? எவ்வாறு புகழ்வது.*
*—இராவணன் வருகிறான்—*

## நிந்தனைப் படலம்

சிகரவெண்குடுமி நெடுவரை எவையும் ஒருவழி திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டலம் அலம்பும் திண்டிறல் தோள்புடை வயங்க
சகரவே லையின்நீர் தழுவிய கதிரில் தலைதோறும் தலைதோறும் தயங்கும்
வகைய பன் மகுட இளவெயில் எறிப்பக் கங்குலும் பகல்பட வந்தான் 623

*குடுமி-உச்சி, சிவண-ஒப்ப, மகரிகை-மீன் வடிவம், வயங்க-விளங்க, வேலை-கடல், ஓங்கிய மலைகள் ஒரு வரிசையுற்றனபோல் தோள்கள்; அவற்றின்மேல் மகரகுண்டலம் படியும்; கடலில் தோன்று உதயசூரியன்போல் தலைதொறும் மகுடம் மின்ன, மணிகளின் ஒளியால் இரவெல்லாம் பகல்பட வந்தான்.*

உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர, மேனகை வெள்ளடை உதவ,
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல, அரைம்பையர் குழாம்புடை சுற்ற,
கருப்புரஞ் சாந்தும் கலவையும் மலரும் கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்போர் மாதிரக் களிற்றின் வரிக்கைவாள் மூக்கிடை மடுப்ப 624

*வெள்ளடை-வெற்றிலை, பலவகை மணமும் திசையானைகளின் மூக்கைத் துளைக்க வந்தான். பொருப்பு-மலைஒத்த.*

நானநெய் விளக்கம் நாலிருகோடி நங்கையர் அங்கையில் ஏந்த,
மேனிவந் தெழுந்த மணியுடை அணியின் விரிகதிர் இருள்எலாம் விழுங்க,
கான்முதற் கிடந்த நூபுரம் சிலம்ப, கிண்கிணி கலையோடும் கலிப்ப,
பால்நிறத் தன்னக் குழாம் படர்ந் தென்னப் பற்பலர் சாமரை இரட்ட 625

*நானம்-புனுகுத் தைலம், கால் நூபுரம்-சிலம்பு, கிண்கிணி-சதங்கை.*

ஆர்தரும் அகழி அருவரை இலங்கை அடிபெயர்ந் திடுதொறும் அழுந்தி
நேர்தரும் பரவைப் பிறழ்திரை தவழ்ந்து நெடுந்தடந் திசைதொறும் நிமிர,
சார்தருங் கடுவின் எயிறுடைப் பகுவாய் அநந்தனும் தலைதடு மாற,
முரிநீ ராடை இருநில மடந்தை முதுகுளுக் குற்றனள் முரல 626

*நிலையான கடல் மத்தியிலுள்ள திரிகூட மலையான இலங்கை அவன் அடிஎடித்துவைப்பின் உள் அமுங்கும். அனந்தன்-ஆதிசேடன், கடு-விசம், முரி-வலிய, நில மடந்தை-பூமி தேவி. இராவணன் சீதையிடம்:—*

இன்றிறந்தன நாளை இறந்தன
என் திறந்தரும் தன்மை இதால்!எனைக்
கொன்றிறந்தபின் கூடுதியோ?குழை
சென்றுஇறங்கி மறந்தரு செங்கணாய் 627

*காதின் குழைவரை நீண்டுசென்று என்னை வாட்டும் கண்கள் பெற்றவளே. இன்றுவரை இவ்வாறு கழிந்தன, நாளையும் இவ்வாறு கழியும். இதுவோ நீ என்பால் செய்வது? யான் இறந்த பின்னரோ உன் உறவு.*

ஈண்டு நாளும் இளமையும் மீண்டில,
மாண்டு மாண்டு பிறிதுறும் மாலைய.
வேண்டும் நான் வெறிதே கழிந்தால் இனி
யாண்டு வாழ்வது? இடர்உழன் றாழ்தியோ 628

*மிக்கநாட்களும் இளமையும் கழிந்தால் மீளா: கழிந்து கழிந்து மாறுபடும் இயல்பின. விருப்பத்துக்குரிய இளமை நாள் வீணே கழிந்தால், என்று தான் சுகத்தோடு வாழ்வது? துன்பத்தில் மூழ்கவே எண்ணமோ?*

குடியை மூன்றுலகும் செய் கொற்றத்துஎன்
அடிமை கோடி, அருளிதியால் என
முடியின்மீது முகிழ்த்துஉயர் கையினன்
படியின்மேல் விழுந்தான், பழிபார்க்கலான் 629

*உலகை எல்லாம் குடிமக்களாகக்கொண்ட என்னை நீ அடிமையாகக் கொள், முகிழ்த்து-கூப்பி, படி-தரை. சீதை முனிந்து கூறுகிருள்:—*

பெற்றுள வரனும் நாளும் பிறந்துடை உரனும் பின்னும்
மற்றுடை எவையும் தந்த மலர்அயன் முதலோர் வார்த்தை
வில்தொடை இராமன் கோத்து விடுதலும்-விலக்குண்டு எல்லாம் .
இற்றிடைந்து இறுதல் மெய்யே.விளக்கின்முன் இருள்உண்டாமோ

*வரம் ஆயுள் உரம் எல்லாம் பிரமன் தந்திருப்பினும் அவை இராமன் கணைமுன் நில்லா.*

கடிக்கும்வல் லரவும் கேட்கும் மந்திரம்:களிக்கின்ருேயை
அடுக்கும் ஈதுஅடாதென்று ஆன்ற ஏதுவோடு அறிவுகாட்டி
இடிக்குநர் இல்லை.உள்ளார் எண்ணியது எண்ணி, உன்னை
முடிக்குநர் என்றபோது முடிவன்றி முடிவ துண்டோ 631

*அடுக்கும் இது அடாது-இது தகும் இது தகாது. உள்ளர்-உன்னிடம் இருப்பவர் முடிவு-அழிவு. இராவணன் கூறுகிருன்:—*

ஒன்றுகேள் உரைக்க. நிற்கோர் உயிர்என உரியோன் தன்னைக்
கொன்றுகோள் இழைத்தால், நீநின் உயிர்விடக் கூற்றங் கூடும்,
என்றன் ஆருயிரும் நீங்கும் என்பதை இயைய எண்ணி
அன்றுயான் வஞ்சம் செய்தது. யார்எனக்கு அமரின் நேர்வார்? 632

*உன் உயிர் நாயகனை யான் கொன்ருல், நீயும் கூற்றுவனுல் உயிர்விட நேரும்; அதனுல் நான் உயிர்விடுவேன். இவற்றை எண்ணியே உன்னை வஞ்சனையால் கவர்ந்தேன்.*

பள்ளநீர் அயோத்தி நண்ணிப் பரதனே முதலினோர் ஆண்டு
உள்ளவர் தம்மை எல்லாம் உயிர்குடித்து, ஊழித் தீயின்
வெள்ளநீர் மிதிலையோரை வேர்அறுத்து, எளிதின் எய்திக்
கொள்வன்நின் உயிரும்,என்னை அறிந்திலை குறைந்த நாளோய் 633

*அயோத்தி சென்று அங்குள்ளாரையும், மிதிலை சென்று அங்குள்ளாரையும் அழித்து; மீண்டுவந்து உன்னையும் அழிக்கவல்லேன். அவன் அரக்கியர்க்கு:—*

அஞ்சுவித்தானும், ஒன்ருல் அறிவுறத் தேற்றி யானும்,
வஞ்சியிற் செவ்வியாளை வசித்தென்பால் வருவீர்; அன்ருல்
நஞ்சுஉமக்கு ஆவன்என்னு, நகையிலா முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத்து அரக்கிமார்க்கு வேறுற உணர்த்திப் போனுன் 634

*அச்சுறுத்தி, அறிவுறுத்தி, வஞ்சித்து-ஏதேனும் ஒருவகையில் அவளைச் சரிக்கட்டுவீர் என்று அவர்க்குத் தனிமையில் உணர்த்திப்போனுன்.—சீதை தன்னை நோதல்—*

## உருக்காட்டுப் படலம்

பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறனலது என்றுஉயிர்க்கு இறைவன் தீர்ந்தனன்:
புறன்அலர் அவன்உறப், போது போக்கியான்
அறன்அலது இயற்றி வேறு என்கொண் டாற்றுவேன் 635

*உயிர்க்கிறைவன்-இராமன், அலர்-வசை, போது-காலத்தை, தீர்ந்தனன்-என்னை நீக்கிவிட்டான்.*

அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டுஅருஞ் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கலை என்னின், யானுடைக்
கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன் 636

ஆசுஅற-துளிகூட இல்லாமல், என் கற்பை எம்முறையில் விளக்கு வேன். இற்புக-இல்லம் வர.

கண்டனன் அநுமனும் கருத்தும் எண்ணினன்,
கொண்டனன் துணுக்கம், மெய்தீண்டக் கூசுவான்
"அண்டர்நாயகன் அருள்தூதன் யான்" எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன் 637

தொண்டை-கோவைக் கனிபோன்ற.

அரக்கனேஆக, வேறோர் அமரனேஆக, அன்றிக்
குரக்கினத் தலைவனேதான் ஆகுக. கொடுமையாக,
இரக்கமேஆக, வந்திங்கு எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான், உயிர்க்கிதின் உதவி உண்டோ

கோற்றவர்க்கு ஆண்டுகாட்டிக் கொடுத்தபோது அடுத்த தன்மை
பெற்றிபின் உணர்தற் பாற்றே! உயிர்நிலை பிறிதும் உண்டோ!
இற்றைநாள் அளவும்அன்னாய், அன்றுநீ இழித்து நீத்த
மற்றைநல் அணிகள்காண் உன் மங்கலங் காத்த மன்னே 639

அநுமான் கூறுகிறான் :—இராமனுக்கு, உன் நகைகளைக் காட்டியபோது உற்ற நிலையே உயிர்வாழ்வளித்து உன் மங்கலத்தைக் காத்து வருகிறது.

"நடத்தல் அரிதாகும்நெறி. நாள்கள் சில. தாயர்க்கு
அடுத்த பணி செய்துஇவண் இருத்தி"என அச்சொற்கு
உடுத்த துகிலோடும் உயிர்உக்க உடலோடும்
எடுத்த முனிவோடும் அயல் நின்றதும் இசைப்பாய் 640

காட்டு நெறியில் நடத்தல் கடிது. இங்கு இரு என்றபோது, நீவிர் முனிந்து உடன்புறப்பட்டு நின்றதையும் சொல்லச் சொன்னார். மோதிரங் கொடுக்க; அதனைப் பெற்ற சீதை—

இழந்தமணி புற்றரவு எதிர்ந்ததென லானாள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்
உழந்து விழிபெற்ற ஒரு உயிர்ப்பொறையும் ஒத்தாள் 641

எதிர்ந்தது-மீண்டும் பெற்றது. கண் இல்லாது வருந்திப் பின்னர் கண் பெற்ற உடற்பிண்டத்தையும் ஒத்தாள்.

வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள், சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை ஒத்தினள், தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போடு
ஏங்கினள் உயிர்த்தனள் இதுஇன்னதென லாமே! 642

மும்மையாம் உலகந் தந்த முதல்வர்க்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந்தாய்க்குச் செயல்என்னல் எளியதுண்டே!
அம்மையாய் அத்தனாய அப்பனே, அருளின் வாழ்வே,
இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோ டென்றாள் 643

*கீர்த்தியோடு இம்மை மறுமை நலனும் அளித்தாய்.*

பாழிய பணைத் தோள்வீர, துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே,யான் மறுவிலா மனத்தேன் என்னின்
ஊழிஓர் பகலாய் ஓதும் ஆண்டெலாம். உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி! என்றாள் 644

*பாழிய-வலிய, பரிவு-துன்பம், வீவு-அழிவு.*

மின்னேர் எயிற்று வல்லரக்கர் வீக்கம் நோக்கி, வீரற்குப்
பின்னே பிறந்தான் அல்லதுஓர் துணையிலாத பிழைநோக்கி
உன்னா நின்றேன் உடைகின்றேன், ஒழிந்தேன் ஐயம் உயிர்உயிர்த்தேன்:
என்னே, நிருதர் என்ஆவர்? இவனே எங்கோன் துணை என்றாள்! 645

*அரக்கரின் பெருக்கம்! இராமனுக்குத் தம்பி தவிர வேறு துணையின்மை இவற்றைக் கருதி வருந்தினேன்: இப்போது வருத்தம் தீர்ந்தேன். நிருதர்-அரக்கர், இவனே-இவ்வநுமான். அநுமான் கூறுகிறான்:—*

## சூடாமணிப் படலம்

அருந்ததி உரைத்தி, அழகற்கு அருகு சென்றுஉன்
மருந்தனைய தேவி நெடு வஞ்சர் சிறைவைப்பில்
பெருந்துயரி னோடும் ஒரு வீடுபெற லில்லாது
இருந்தனள் எனப்பகரின், என்அடிமை என்னும்? 646

*அழகன்-இராமன், மருந்து-அமிர்தம், வீடு-விடுவித்தல்.*

வேறினி விளம்ப உளதன்று. விதியால்இப்
பேறுபெற என்கண்அருள் தந்தருளு. பின்போய்
ஆறுதுயர். அஞ்சொல்இள வஞ்சி,அடியன் தோள்
ஏறுகடிது என்றுதொழுது இன்னடி பணிந்தான் 647

*இப்பேறுபெற - உன்னை இராமனிடத்தில் சேர்க்கும் பேறுபெற. என் தோள்மீது அமர், பின்-சேர்ந்தபின். சீதை பதில்:—*

பொற்பிறங்கல் இலங்கை பொருநர்தலர்
எற்பு மால்வரை யாகிலதே எனின்-
இற்பிறப்பும் ஒழுக்கும், இழுக்கமில்
கற்பும் யான்பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன் 648

பொன்மலை இலங்கை பகைவரின் எலும்பு மலையாக மாறவில்லை யெனின், என் பிறப்பு ஒழுக்கம் கற்பு இவற்றை எவ்வாறு விளக்குவல்?

வேறும் உண்டுரை. கேள்அது, மெய்ம்மையோய்,
ஏறுசேவகன் மேனியலால்; இடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆண்எனக்;
கூறும்-இவ்வுரு தீண்டுதல் கூடுமோ? 649

சேவகன்-வீரன், இடை-என் வாழ்வினிடை ஐம்பொறியடங்கிய உன்னையும் தீண்டுதல் முறையன்று.

இன்னும் ஈண்டுஒரு திங்கள் இருப்பல்யான்:
நின்னை நோக்கிப் பகர்ந்தது-நீதியோய்,
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன். அந்த
மன்னன் ஆணை இதனை மனக்கொள்நீ 650

ஏத்தும் வென்றி இளையவற்கு ஈதொரு
வார்த்தை கூறுதி. மன்அருளால் எனைக்
காத்திருந் தவர்க்கே கடன், இன்றிடை
கோத்த வெஞ்சிறை வீடுஎன்று கூறுவாய் 651

இராவணன் என்னை இலக்குவன் காவலிற் சிறையெடுத்தான்; ஆதலின் என்னை மீட்பது அவர் கடன் என்றுகூறு.

திங்கள் ஒன்றில்என் செய்தவம் தீர்ந்ததால்,
இங்கு வந்திலனேஎனில், யாணர்நீர்க்
கங்கை ஆற்றங் கரை அடியேற்குத் தன்
செங்கையால் கடன் செய்கென்று செப்புவாய் 652

சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதை ஆண்டு
இறக்கின்றாள் தொழுதாள் எனும் இன்னசொல்.
அறத்தின் நாயகன்பால் அருள் இன்மையால்
மறக்கு மாயினும், நீ மறவேல் ஐய 653

நீ மறவேல்-என் தூய நிலையைக்கண்ட நீ சொல்லித் தக்கது செய்ய மறவேல்.

வந்துஉனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய் 654

எந்தை ஆய்முதலிய கிளைஞர் யார்க்கும் என்
வந்தனை விளம்புதி. கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப் போய்
அந்தமில் நெடுநகர்க்கு அரசன் ஆக்கென்பாய் 655

*கவியின் மன்னன் - குரங்குத் தலைவன் சுக்ரீவன், சுந்தரத்தோளன் - இராமன், நெடுநகர்-அயோத்தி. அநுமான் கூறுகிறான்:—*

வினையுடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகி என்று ஒருதழல் நடுவண் தங்கலால்-
அனகன்கை அம்புஎனும் அளவுஇல் ஊதையால்
கனகம்நீடு இலங்கைநின்றுஉருக காண்டியால் 656

*தீய அரக்கராகிய கரி வெந்து சாம்பலாகச் சீதை ஒரு தழல்போல் அங்குற்றுள். இராமபாணம் நெருப்பைப் பெருக்கும் காற்று. இருந்தை-கரி, அனகன்-தற்றமற்றவன்.*

தாக்கு இகல் இராவணன் தலையில் தாவின—
பாக்கியம் அனையநின் பழிப்புஇல் மேனியை
நோக்கிய கண்களை-நுதிகொள் மூக்கினுல்
காக்கைகள் கவர்ந்துகொண்டு உண்ணக் காண்டியால் 657

*நற் பாக்கிய உன்னைக் காமுற்ற-போர் வலிமிகு இராவணன் தலையில் தாவி அவன் கண்களைக் காக்கைகள் கொத்தக் காண்பாய். இகல்-போர், நுதி-கூர்மை*

எண்ணரும் பெரும்படை நானை இந்நகர்
நண்ணிய பொழுது,அதன் நடுவண், நங்கைநீ
விண்ணுறக் கருளன்மேல் விளங்கும் விண்டுவின்
கண்ணனை என்நெடு வெரிநிற் காண்டியால் 658

*கருடன்மேல் திருமால்போல், என் பிடரிமேல் இராமனைக் காண்பாய்.*

குராவருங் குழலி,இக் குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கிலான் எனின்
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு
இராவணன் அவன்!இவன் இராமன்! என்றனன். 659

குரா-குரவமலர் அணி கூந்தலையுடையவளே, விரா அரும்-பயில்தற்கு அரிய, பரா-பரவி. சிறை மீட்காவிடின் பழி மிக்கு அவன் இராவணன் போல்வான்: விருப்பத்தால் இவன் இராமன் போல்வான்.

சூடையின் மணி கண்மணி ஒப்பது, தொன்னுள்
ஆடையின்கண் இருந்தது, பேரடை யாளம்—
நாடிவந்து எனது இன்னுயிர் நல்கிய நம்பா,
கோடி என்று கொடுத்தனள் மெய்ப்புழ் கொண்டாள் 660

கோடி-கொள்க, சூடையின் மணி-சூளாமணி.

தொழுது வாங்கினன், சுற்றிய தூசினன் முற்றப்
பழுதுருவகைப் பந்தனை செய்தனன், வந்தித்து
அழுது மும்மை வலங்கொடு இறைஞ்சினன். அன்போடு
எழுது பாவையும் ஏத்தினள், ஏகினன் இப்பால். 661

தூசினன்-துணியில் பொதிந்தனன், பந்தனை-பாதுகாப்பு. அநுமான் பொழிலை அழித்ததுபற்றிக் கேட்ட இராவணன்:—

## பொழில் இறுத்த படலம்

ஆடகத் தருவின் சோலை பொடிபடுத்து, அரக்கர் காக்கும்
தேடரும் ஓமம் வாங்கி இலங்கையும் சிதைந்த தம்மா!
கோடரம் ஒன்றே, நன்றிது இராக்கதர் கொற்றம் சொற்றல்!
மூடரும் மொழியார் என்ன மன்னனும் முறுவல் செய்தான் 662

பொன்மயமான சோலையை அழித்து, நாம் பேணிய ஓமாக்கினியை அழித்து நின்றது ஒரு குரங்கு? கொற்றம்-வெற்றி, கோடரம்-குரங்கு, மூடரும் என்முன் இவ்வாறு பேசார். வீரர் யாது செய்தனர்? என்ற வினவுக்குத் தூதுவர் கூறுகின்றார்கள்:—

## கிங்கரர் வதைப் படலம்

சலந்தலைக் கொண்டன ராய தன்மையர்
அலந்திலர் செருக்களத்து அஞ்சின ரல்லர்
புலம் தெரி பொய்க்கரி புகலும் புன்கணர்
குலங்களின் அவிந்தனர் குரங்கினல் என்றார் 663

சினம் மிஞ்சியவராக நின்று, கலங்காமல் அச்சமின்றிப் பொருது-(மனமாரப் பொய்ச்சாட்சி சொன்ன புல்லியர் குலம்போல்) அழிந்தனர் என்றார். சலம்-சினம்.

மீட்டவர் உரைத்திலர், பயத்தின் விம்முவார்
தோட்டலர் இனமலர் தொங்கல் மோலியன்
வீட்டியது அரக்கரை என்னும் வெவ்வுரை
கேட்டதோ கண்டதோ? கிளத்துவீர் என்ருன் 664

தொங்கல் மௌலியன்-மாலையணி முடியன்-இராவணன்.

## சம்பு மாலி வதைப் படலம்

சலித்தான் ஐயன், கையால் எய்யும் சரத்தை உகச் சாடி;
ஒலித்தார் அமரர் கண்டார், ஆர்ப்பத் தேரின் உட்புக்குக்
கலித்தான், சிலையைக் கையால் வாங்கிக் கழுத்தின் இடையிட்டு
வலித்தான், பகுவாய் மடித்து மலைபோல் தலை,மண்ணிடை வீழ 665

அநுமான் தன் எழு தவறியதால் சலிப்புற்ருன். சம்புமாலி எய்யும் அம்பு களைக் கையால் எதிர்த்தான். ஆர்த்து நின்று, அவன் வில்லைப்பிடுங்கி அவன் கழுத்தில் மாட்டி, அவன் வாய்ப்பிளந்து தலைகீழாக மண்ணில் விழும்படி இழுத்தான்.

## பஞ்ச சேனபதிகள் வதைப் படலம்

எறிந்தனர் எய்தனர் எண்ணிறந்தன
பொறிந்தெழு படைக்கலம் அரக்கர் போக்கினர்:
செறிந்தன மயிர்ப்புறம் தினவு தீர்வுறச்
சொறிந்தன எனஇருந்து ஐயன் தூங்கினன் 666

அரக்கர் எறிந்த படைக்கலம் தாக்கியது அவன் உடல் மயிர்மீது தினவு நீங்கச் சொறிந்ததுபோல் இருந்தது.

வஞ்சமும் களவும் வெஃகி, வழியலா வழிமேல் ஓடி
நஞ்சினும் கொடிய ராகி நவைசெயற்கு உரிய நீரார்
வெஞ்சின அரக்கர் ஐவர், ஒருவனே வெல்லப் பட்ட
அஞ்செனும் புலன்கள் ஒத்தார், அவனும் நல்அறிவை ஒத்தான் 667

வெஃகி-விரும்பி; நவை-குற்றம், அரக்கர் ஐவர் வெல்லப்பட்டார் ஐம்புலன் ஒத்தார். அவன் ஒருவன் நல்லறிவை ஒத்தான்.

## அட்ச குமாரன் வதைப் படலம்

இந்திர சித்தோ, மற்றவ் விராவண னேயோ, என்னச்
சிந்தையின் உவகை கொண்டு முனிவுற்ற குரக்குச் சீயம்
வந்தனன், முடிந்த தன்றே மனக்கருத்து! என்ன வாழ்த்திச்
சுந்தரத் தோளை நோக்கி இராமனைத் தொழுது சொன்னன் 668

அட்சகுமாரனை இந்திரசித்து, இராவணன் என எண்ணி "என் எண்ணம் இன்று நிறைவேறிற்று" என்ருன்.

எண்ணிய இருவர் தம்முள் ஒருவனல். யான்முன் நோற்ற
புண்ணியம் உளதால் எம்கோன் தவத்தொடும் பொருந்தி னனே.
நண்ணினன், நானும் நின்றேன். காலனும் நணுகி நின்றான்
கண்ணிய கருமம் இன்றே முடிக்குவன் கடிதின் என்றான். 669

நீத்தாய் ஓடின உதிரப் பெருநதி நீராகச், சிலை பாராகப்;
போய்த்தாழ் செறிதசை அரிசிந்தினபடி பொங்கப் பொருமுயிர் போகாமுன்
மீத்தா நிமிர்சுடர் வயிரக் கைகொடு பிடியா, விண்ணொடு மண்காணத்
தேய்த்தான் ஊழியின் உலகேழ் தேயினும் ஒருதன் புகழ்இறை தேயாதான்

*உதிராகவும், தரை அம்மிக்கல்லாகவும், அட்சன்சதை அரிசியாகவும் தோன்றுமாறு தேய்த்தான். சிலை-கல், பொங்க-மேல் எழஎழ*

தாவரும் திருநகர் தையலார் முதல்
ஏவரும் இடைவிழுந்து இரங்கி ஏங்கினர்:
காவலன் கால்மிசை விழுந்து, காவல்மாத்
தேவரும் அழுதனர் களிக்குஞ் சிந்தையார் 671

*தாவரு - குற்றமில்லா இலங்கை, காவல் மாத்தேவர் - திக்குப் பாலகர் உள்ளத்தில் மகிழ்ந்தும் இராவணற் கஞ்சி அழுதனர். —இந்திரசித்து வருகிறான்—*

## பாசப் படலம்

தம்பியை உன்னுந் தோறும் தாரைநீர் ததும்பும் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி வாய்மடித்து உருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினல், குரங்கா ஆற்றல்
எம்பியோ இறந்தான், எந்தை புகழன்றோ தேய்ந்த தென்றான் 672

*குரங்கா ஆற்றல்-தாழ்விலா வலிமை, வம்பு இயல்சிலை-பயனற்று நிற்கும் வில்.*

வெப்படை கில்லா நெஞ்சில் சிறியதோர் விம்மல் கொண்டான்,
அப்புஅடை வேலையன்ன பெருமையார் ஆற்ற லோடும்
ஒப்படைகில்லார் எல்லாம் உலந்தனர். குரங்கும் ஒன்றே!
எப்படைகொண்டு வெல்வது இராமன் வந்து எதிர்க்கின்! என்றான்

*வெஞ்சினம் காணுத் தன் நெஞ்சில் ஒரு ஏக்கம் காணப்பெற்றான். அப்பு-நீர், வேலை-கடல்போல் வலிய பெரியரெல்லாம் பட்டனர்; அழித்த குரங்கோ ஒன்று!*

தேரும் யானையும் புரவியும் அரக்கரும் சிந்திப்
பாரின் வீழ்தலும் தான்ஒரு தனிநின்ற பணைத்தோள்
வீர வீரனும் முறுவலும் வெகுளியும் வீங்க—
வாரும் வாரும்என் றழைக்கின்ற அநுமன்மேல் வந்தான் 674

*உடன்வந்த தேர் யானை குதிரை அரக்கர் அழியத் தான்மட்டும் எஞ்சி நின்ற வீரன் வெகுளியுடன், தன்னை அழைக்கின்ற அநுமன் முன் வந்தான்.*

**நல்லை நல்லைஇஞ் ஞாலத்துள் நின்ஒக்க நல்லார்**
**இல்லை இல்லையால். எறுழ்வலிக் கியாரொடும் இகல**
**வல்லை வல்லை.இன்றுகும் நீ படைத்துள வாழ்நாட்கு**
**எல்லை எல்லை என்று இந்திரசித்துவும் இசைத்தான் 675**

*எறுழ்வலி-மிகுவலிமை, இகல-போர் செய்ய.*

**நாளுக் கெல்லையும், நிருதராய் உலகத்தை நலியும்**
**கோளுக் கெல்லையும், கொடுந்தொழிற்கு எல்லையும், கொடியீர்**
**வாளுக் கெல்லையும் வந்தன, வகைகொண்டு வந்தேன்—**
**தோளுக்கு எல்லை ஒன்றில்லை என்று அநுமனும் சொன்னான் 676**

*நாள்-வாழ்நாள், கோள்-கொள்கை.—அநுமானைப் பிணித்து இராவணன் முன் நிறுத்தினான்—*

## பிணிவீட்டுப் படலம்

**ஏக நாயகன் தேவியை எதிர்ந்ததன் பின்னை,**
**நாகர் வாழ்விடம் முதலென-நான்முகன் வைகும்**
**மாக மால் விசும்பு ஈறென நடுவண வரைப்பில்**
**தோகை மாதர்கள் மைந்தரிற் றோன்றினர் சுற்ற 677**

*சீதையைக் கண்ட நாள்முதல் நாக உலகம், விண்ணுறு பிரம்மவுலகம், இடைப்பட்ட உலகங்களின் மங்கையர் அவனுக்கு மைந்தர்கள்போலவே தோன்றினர். இராவணன் அநுமனைப் பார்த்து:—*

**ஆரை நீ? என்னை இங் கெய்து காரணம்?**
**ஆர்உனை விடுத்தவர்? அறிய ஆணையால்**
**சோர்விலை, சொல்லுதி என்னச் சொல்லினான்**
**வேரொடும் அமரர்தம் புகழ் விழுங்கினான் 678**

*சோர்விலை-அஞ்சாதே—என்று எள்ளினான் அமரர் புகழை அடியோடு அழித்த இராவணன். அநுமான் :—*

**மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய**
**காலமும் கணக்கும் நீந்த காரணன் கைவில் ஏந்திச்**
**சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை**
**ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்**

*காரணன்-மூலகாரணமாகிய கடவுள். சூலம் வெள்ளிப்பொருப்பு-சிவனுக்கு, திகிரி சங்கு ஆல்-திருமாலுக்கு, கரகம் மலர்-பிரமனுக்கு உரியவை.*

அன்னவற்கு அடிமை செய்வேன், நாமமும் அநுமன் என்பேன்;
நன்னுதல் தன்னைத் தேடி நாற்பெருந் திசையும் போந்த
மன்னரில், தென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மகன், அவன்றன் தூதன் வந்தனென் தனியேன் என்றான் 680

*நன்னுதல்-சீதை, வாலி மகன்-அங்கதன்.*

என்றலும் இலங்கை வேந்தன் எயிற்றினம் எழிலி நாப்பண்
மின்திரிந்து என்ன நக்கு, வாலி சேய் விடுத்த தூத,
வன்திற லாய வாலி வலியன்கொல்? அரசின் வாழ்க்கை
நன்றுகொல்? என்னலோடும் நாயகன் தூதன் நக்கான் 681

*வலியன் கொல்-சுகமோ? நக்கு-சிரித்து. எழிலி-மேகம்.*

அஞ்சலை அரக்க, பார்விட்டு அந்தரம் அடைந்தான் வாலி,
வெஞ்சின வாலி மீளான், வாலும்போய் விளிந்த தன்றே:
அஞ்சனமேனியான்றன் அடுகணை ஒன்றால் மாழ்கித்
துஞ்சினன். எங்கள்வேந்தன் சூரியன் தோன்றல் என்றான் 682

*கணை-அம்பு, துஞ்சினன்-இறந்தான், சூரியன் தோன்றல்-சுக்ரீவன்.*

திறம்திறம்பிய காமச் செருக்கினால்
மறந்து தத்தம் மதியின் மயங்கினர்
இறந்து இறந்து இழிந்து ஏறுவதே யலால்
அறந் திறம்பினர் ஆர் உளர்ஆயினர்? 683

*மனம் மாறுபட்டுக் காமவெறியினால் அறம் மறந்து மதிமயங்கினர் செத்தவர்களாய் இழிவில் மிகுவதன்றி உயிரின் உயர் வாழ்வுள்ளவர் ஆவரோ. வீடணன் இராவணன் செய்கையைத் தடுத்து:—*

பூதலப் பரப்பின், அண்டப் பொகுட்டினுள், புறத்துள், பொய்தீர்
வேதம் முற்று இயங்கு வைப்பின், வேறுவேறுஇடத்து வேந்தர்
மாதரைக் கொலைசெய்தார்கள் உளரென வரினும்; வந்த
தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர்? 684

*பூமியின் உள்ளும் புறத்தும், வேதம் பயிலும் இடங்களிலும், பிற இடங்களிலும் வேந்தர் தூதரைக் கொலைசெய்ததில்லை இராவணன் பதில்:—*

நல்லது உரைத்தாய் நம்பி,இவன்நவை செய்தானே ஆனாலும்
கொல்லல் பழுதே. போஇடைநீ கூறிக்கொணர்தி கடிது என்னத்
தொல்லை வாலை மூலம்அறச் சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லைக் கடக்க விடுமின்கள் என்றான். நின்றார் இரைத்தெழுந்தார்

*நவை-குற்றம், பழுதே-குற்றமே, கொணர்தி கடிது-இராமலக்குவரைச் சீக்கிரம் அழைத்துவா. மூலம் அற-அடியோடு அழிய. வாலில் தீவைத்ததை அறிந்த சீதை:—*

தாயேஅனைய கருணையான் துணையே, ஏதும் தகைவில்லர்
நாயேஅனைய வல்லரக்கர் நலியக்கண்டால் நல்காயோ?
நீயே உலகுக் கொருசான்று, நிற்கேதெரியும், கற்பதனில்
தூயேன் என்னின் தொழுகின்றேன், எரியே அவனைச்சுடல் என்றாள்

*கருணையான் துணை-வாயுபகவான் துணையாகிய நெருப்பே. நல்காய்-அருள்புரி. சுடல்-சுடேல்.*

வெற்பினால் இயன்ற தன்ன மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினும், சுடாது நின்ற நீர்மையை நினைவில் நோக்கி-
அற்பின்நார் அருதசிந்தை அநுமனும் சனகன் பாவை
கற்பினால் இயன்றதென்பான் பெரியதோர் களிப்பன் ஆனான் 687

*அற்பின் நார்-அன்பின் பற்று. எரிந்த தீயினால் நகரின்—*

## இலங்கை எரியூட்டு படலம்

பேய மன்றினில் நின்று பிறங்குஎரி
மாயர் உண்ட நறவும் மடுத்ததால்:
தூயர் என்றவர், வைகிடம் துன்னினால்
தீயர் அன்றியும் தீமையும் செய்வரால் 688

*பேய-அஞ்சத்தக்க பெரிய மன்றம், எரி-தீ, நறவு-மது, மாயர்-வஞ்சக அரக்கர், தூயரிலர்-தீயர், துன்னினால்-சேர்ந்தால்.*

என்றுகொல் குரங்குஅன்னது இவ்வலியுளது! இலங்கை
நின்று வெந்துமா நீறெழுகின்றது. நெருப்பு
தின்று தேக்கிடு கின்றது. தேவர்கள் சிரிப்பார்;
நன்று நன்று வலி!என ராவணன் நக்கான் 689

*தேக்கிடுகின்றது-தெவிட்டி ஏப்பமிடுகின்றது. —அநுமான் கடல்கடந்து இக்கரை வந்து—*

## திருவடி தொழுத படலம்

வாலிகாதலனை முந்தை வணங்கினன். எண்கின் வேந்தைக்
காலுறப் பணிந்து, பின்னைக் கடன் முறை கடவோர்க் கெல்லாம்
மேலுற இயற்றி; ஆங்கண் இருந்துஇவண் இருந்தோர்க் கெல்லாம்
ஞாலநாயகன்தன் தேவி சொல்லினள் நன்மை என்றான் 690

*அரசன் ஆதலின் அங்கதனை முதலில் வணங்கி; மூத்தவர் ஆதலின் சாம்பவானை அடிபணிந்து: தக்கமுறையில் பிறரை மதித்து நின்றான்.*

ஆண்டகை தேவி உள்ளத்துஅருந்தவம் அமையச் சொல்லி
பூண்டபே ரடையாளம் கைக்கொண்டதும் புகன்று,போரில்
நீண்டவாள் அரக்க ரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான், தான்தன் வென்றியை உரைப்ப வெள்கி

"வியவாமை வேண்டும் தன்னை"—குறள். அப்பொழுது வானரர்:—

பொருதமை புண்ணே சொல்ல,வென்றமை போந்த தன்மை
உரைசெய, ஊர்தீயிட்டது ஓங்கிரும் புகையே ஓத,
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தோம், பின்னர் என்இனிச் செய்தும்? என்றார் 692

கருதலர்-பகைவர். பின் இராமனை அடைந்து—

எய்தினன் அநுமனும். எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுதிலன், முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇநெடிது இறைஞ்சி வாழ்த்தினன் 693

இராமனை வணங்காமல், சீதை இருப்பிடம் நோக்கித் தரையில் விழுந்து கும்பிட்டுக் கிடந்தான். பின்னர் கூறுகிறான்:—

கண்டனேன் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்.
அண்டர் நாயக,இனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயரும்என் றநுமன் பன்னுவான் 694

உன்பெருந் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன்பெருமருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்.
என்பெருந் தெய்வம்! ஐயா,இன்னமும் கேட்டி என்றான் 695

மன்-தசரத மன்னர். மருகி-மருமகள்.

உன்குலம் உன்னதாக்கி, உயர்புகழ்க்கு ஒருத்தியாய
தன்குலம் தன்னதாக்கித், தன்னைஇத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து, வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தாள். என்இனிச் செய்வது எம்மோய்! 696

*உன் சூரியகுலம் உன்னால் சிறப்புற; பெண்ணினம் சீதையால் சிறப்புற; அரக்கர் குலம் யமனுக்கு இரையாக; தேவர் குலம் நல்வாழ்வுற; என் குரங்கினத்தில் யான் முதன்மையுற வகை செய்தாள். என் தாய் இதனினும் செய்வதற்கு யாது உளது! மோய்-தாய்.*

**வாங்கிய ஆழிதன்னை வஞ்சர்ஊர் வந்ததாம் என்று**
**ஆங்குயர் மழைக்கண்நீரால் ஆயிரம் கலசம் ஆட்டி**
**ஏங்கினள் இருந்த தல்லால் இயம்பலள், எய்த்த மேனி**
**வீங்கினள் வியந்த தல்லால் இமைத்திலள், உயிர்ப்பு விண்டாள் 697**

*வாங்கிய-என்னிடமிருந்து பெற்ற மோதிரம் தீயர் நாட்டுள் உற்றதால் கண்ணீரால் சுத்தம் செய்தாள்.*

**இங்குள தன்மை எல்லாம் இயைபுளி இயம்பக் கேட்டாள்**
**அங்குள தன்மை எல்லாம் அடியனுக்கு அறியச் சொன்னாள்**
**திங்கள் ஒன்று இருப்பன், இன்னே திருவுளம் தீர்ந்தபின்னை**
**மங்குவன் உயிரோடு என்றுன் குரைகழல் தலைக்கண் வைத்தாள்**

*திருஉளந் தீர்ந்தபின்னை-என்னை மீட்க இராமன் மனம் இரங்காதிருப்பின். இச்செய்தி கேட்டதும் இராமன்—*

**பைப்பையப் பயந்த காமம் பரிணமித்து உயர்ந்து பொங்கி**
**மெய்யுற வெதும்பி உள்ளம் மெலிவுறு நிலையை விட்டான்.**
**ஐயனுக்கு அங்கி முன்னர் அங்கையால் பற்று நங்கைக்**
**கைஎன லாயிற் றன்றே: கைபுக்க மணியின் காட்சி 699**

*பரிணமித்து-பெருகி, அங்கி-திருமண வேள்வி, மணி-சூளாமணி. சீதையின் கையைப் பற்றியதாக உணர்ந்தான்.*

**வையகம் அதனின் மாக்கள் மயங்குவர் வயவெஞ் சேனை**
**எய்திடின் என்பதுஉன்னி; இராகவன் இனிதின் ஏவப்-**
**பெய்கனி கிழங்கு தேன்என்று இனையன பெறுதற் கொத்த**
**செய்யமால் வரையே ஆறுச் சென்றன தகைப்பில் சேனை 700**

*சேனையைக் காணின் உலகமக்கள் கலங்குவர் என்று, இராமன் கட்டளைப் படி சேனை மலைவழியாகச் சென்றது.*

# யுத்த காண்டம்

## கடல் காண் படலம்

சேயகாலம் பிரிந்து அகலத் திரிந்தான், மீண்டும் சேக்கையின்பால்
மாயன் வந்தான் இனிவளர்வான் என்று கருதி வருந்தென்றல்
தூய மலர்போல் நுரைத்தொகையும் முத்தும் சிந்திப் புடைசுருட்டிப்
பாயல் உதறிப் படுப்பதே ஒத்த திரையின் பரப்பம்மா! 701

*கடல் நிலை: மாயன் நெடுங்காலம் நம்மைப் பிரிந்தான்; மீண்டும் வந்துள்ளான், இனிக் கண்வளர்வான் என்று பாய் விரிப்பதுபோல்-தென்றல் கடல் அலைகளை விரித்துப் பரப்பியது.*

கொங்கைக் குயிலைத் துயர்நீக்கி, இமையோர்க் குற்ற குறைமுற்ற
வெங்கைச் சிலையன், தூணியினன் விடாது முனிவின் மேற்செல்லும்
கங்கை திருநாடுஉடையானைக் கண்டு நெஞ்சம் களிகூர
அங்கைத் திரள்கள் எடுத்தோடி ஆர்த்தது ஒத்த மணிஆழி 702

*குயில்-சீதையின் துயர் நீக்க. இராமனைக் கண்டு கடல் அலைகளாகிய கைகளை நீட்டிக் களித்தது.*

## மந்திரப் படலம்

முனைவரும் தேவரும் மற்று முற்றுளோர்
எனைவரும் தவிர்கென ஏய ஆணையான்
புனைகுழல் மகளிரோடு இளைஞர்ப் போக்கினன்
நினைவுறு காரியம் நிகழ்த்து நெஞ்சினன் 703

*இராவணன் அவை கூட்டுகிருன்:—முனைவர்-முனிவர், தவிர்க-அப்பால் ஆகுக, ஏய-ஏவிய.*

ஆன்றமை கேள்விய ரெனினும் ஆண்தொழிற்கு
ஏன்றவர் நண்பினர் எனினும், யாரையும்,
வான்துணைச் சுற்றத்து மக்கள் தம்பியர்
போன்றவர் அல்லரைப் புறத்துப் போக்கினன் 704

*ஆன்று அமை-அதிகம் படித்து அடங்கிய, வான்துணை-சிறந்த துணை.*

நன்னகர் அழிந்தென நாணினை, நயத்தால்
உன்னுயிர் எனத்தகைய தேவியர்கள் உன்மேல்
மன்நகை தரத்தர: ஒருத்தன்மனை யுற்றாள்
பொன்அடி தொழத்தொழ, மறுத்தல்புகழ் போலாம்! 705

கும்பகர்ணன் கூறுகிறான்:—நகைதர-உன்னைப் பார்த்துச் சிரிக்க, அடி தொழ மறுத்தல்-நீ அடிதொழ அவள் மறுத்திருக்க இது உன் பெருமை!

ஆசில் பரதாரம் அவை அஞ்சிறை அடைப்போம்,
மாசில்புகழ் காதலுறுவோம்! வளமை கூரப்
பேசுவது மானம், இடைபேணுவது காமம்!
கூசுவது மானுடரை! நன்று நம கொற்றம்! 706

ஆசில்-குற்றமில்லா, கூர-மிக, கொற்றம்-வெற்றி.

யானையிலர், தேர்புரவி யாதும்இலர், ஏதும்
தானையிலர், நின்றதவம் ஒன்றுமிலர், தாம்ஓர்
கூனல் முதுகின் சிறுகுரங்குகொடு செல்வார்
ஆனவரும் மானிடர்! நம் ஆண்மை இனிதுஅன்றே! 707

ஆனவரும்-இவர்கள், இராவணன் கும்பகருணனைக் கடிதல்:—

இச்சை நல்லன உறுதிகள் இசைக்குவன் என்றாய்,
பிச்சர் சொல்லுவ சொல்லினை, என்பெரு விறலைக்
கொச்சை மானுடர் வெல்குவர் என்பது குறித்தது
அச்சமோ? அவர்க்கு அன்பினோ? யாவதோ? ஐயா 708

உறுதிகள்-நல்லன. பிச்சர்-பித்தர், விறலை-வல்மையை.

நந்தி சாபத்தின் நமைஅடும் குரங்கெனின், நம்பால்
வந்த சாபங்கள் எனைப்பல? அவைசெய்த வலிஎன்?
இந்தி யாதிகள் அவித்தவர் தேவர் நம் இறுதி
சிந்தியாதவர் யார்?அவை நம்மை என் செய்த? 709

அடும்-கொல்லும், இந்தியாதி-இந்திரியங்களை அடக்கிய முனிவர்.

## இரணியன் வதைப் படலம்

காலமும் கருவியும் இடனுமாய்க், கடைப்
பால்அமை பயனுமாய், பயன்துய்ப் பானுமாய்,
சீலமும் அவைதரும் திருவுமாய் உளன்,
ஆலமும் வித்தும்ஒத் தடங்கும் ஆண்மையான் 710

*இரணியனுக்குப் பிரகலாதன் அறிவுறுத்தல்:— காலம் இடம், கருவியின் வினை, வினையின் பயன், பயனை அனுபவிப்பவன், சீலம், சீலத்தின் பயனுன திரு ஆகிய எல்லாமாகி, வித்துள் ஆல் அடங்கிய தன்மைகொண்டவன் கடவுள்.*

**உள்ளுற உணர்வினிது உணர்ந்த ஓசை ஓர்
தெள்விளி யாழிடைத் தெரியும் செய்கையான்:
உள்உளன் புறத்துளன் ஒன்றும் நண்ணலான்
தள்ளரு மறைகளும் மருளும் தன்மையான் 711**

*இனிய ஒலிநுட்பம் உணர்வோர் யாழின் கண் நுட்பங்காணல்போல் அறிய வேண்டியவன், உள்ளும் புறமும் உள்ளவன் கடவுள்.*

**ஓம்எனும் ஓரெழுத்து அதனின் உள்ளுயிர்
ஆம்அவன் அறிவினுக்கு அறிவும் ஆயினன்:
தாமமூ வுலகமும் தழுவிச் சார்தலரால்
தூமமும் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான் 712**

*புகையும் நெருப்பும்போல ஒன்றி மூவுலகும் பரவிய தன்மையன்.*

**காலையில் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்
சூலையின் திருக்கலால், சொல்லு வோர்க்கெலாம்
வேலையும் திரையும்போல் வேறுபாடிலான் 713**

*புதுப் பூக்களைச் சேர்த்துக்கட்டிய மாலையின் மலர்களை ஒத்தவர் சமய வாதிகள். இவர்கள் செய் திறத்தின் பாகுபாடேஅன்றி; அவன் கடலும் அலையும்போல் வேறுபாடில்லாதவன்.*

**அம்போருகனுர், அரனுர், அரியார்,
எம்போலியர் எண்ணிடின் என்,பலவாம்.
கொம்போடு அடைபூ கனி காய் எனினும்
வம்போ, மரம்ஒன் றெனும் வாசகமே. 714**

*பிரமன் சிவன் திருமால் ஒன்றுஎன அறியாதவராய் எண்ணின் பலஆம். கொம்பு இலை பூ கனி காய் எனப்பலவாறு கூறினும் இது வம்பு உரையன்று. அவை அமர் மரம் ஒன்றே.*

**நின்னிற் பிறிதாய் நிலையிற் றிரியா
தன்னிற் பிறிவாயின தான் அறமும்?
உன்னிற் பிறிதாயினவோ உலகம்?
பொன்னிற் பிறிதாகிய பொற்கலனே? 715**

*நின்னை விட்டு வேருகக் காட்டிப் பலபல வகைப்பட்டாலும், ஆபரணமும் பொன்னும் வேறுபடா நிலையில்; யாவும் நீயே.*

சாணினும் உளன், ஓர்தன்மை அணுவைச் சதகூறிட்ட
கோணினும் உளன், மாமேருக் குன்றினும் உளன், இந்நின்ற
தூணினும் உளன், முன்சொன்ன சொல்லினும்உளன், இத்தன்மை
காணுதி விரைவின் என்றான்: நன்றெனக் கனகன் சொன்னான் 716

*சதகூறு-நூறு பங்கு, கோண்-பகுப்பு, கனகன்-இரணியன்.*

உம்பர்க்கும் உனக்கும் ஒத்திவ் வுலகெங்கும் பரந்துளானைக்
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி: காட்டிடாயேல்
கும்பத்தின் கரியைக் கோண்மா கொன்றென நின்னைக் கொன்றுன்
செம்பொத்த குருதி தேக்கி உடலையும் தின்பென் என்றான் 717

*ஒத்து-மனம் ஒப்பிய, கும்பம்—மத்தக யானை, கோண்மா-சிங்கம்.*

என்உயிர் நின்னால் கோறற்கு எளியதொன் றன்று. யான்முன்
சொன்னவன் தொட்டதொட்ட இடந்தோறும் தோன்றா னயின்
என்உயிர் யானே மாய்ப்பல், இன்னும் வாழ்வு உகப்பல் என்னின்
அன்னவர்க்குஅடியேன் அல்லேன் என்றனன் அறிவின்மிக்கான் 718

*கோறல்-சொல்லுதல், உகப்பல்-விரும்பினேன்.*

கேளிது, நீயும் காணக் கிளர்ந்த கோளரியின் கேழில்
தோளொடு தாளும் நீக்கி, நின்னையும் துணித்துப், பின்என்
வாளினைத் தொழுவ தல்லால்; வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ? என்ன அண்டங்கள் நடுங்க நக்கான் 719

*இரணியன்:—கோளரி-சிங்கம், கேழ் இல்-ஒப்பு இல்.*

பேரை ஒருபொருட்கே பல்வகையாற் பேர்த்தெண்ணும்
தாரை நிலையை, தமியை, பிறரில்லை
யாரைப் படைக்கின்றது, யாரை அளிக்கின்றது,
யாரைத் துடைக்கின்றது அதையாம் அறியேமால் 720

*சிங்கத்தைத் தேவர் போற்றுதல்:—தாரை நிலையை-நேர்முறை கொண்ட நீ தனி முதற்பொருள். படைப்பு காப்பு அழிப்பு எல்லாம் நீயே; பெயர்பல, பொருள் ஒன்றே.*

## வீடணன் அடைக்கலப் படலம்

அஞ்கினை ஆதலின் அமர்க்கும் ஆள்அலை.
தஞ்செனை மனிதர்பால் வைத்த சார்பினை,
வஞ்சனை மனத்தினை, பிறப்பு மாற்றினை,
நஞ்சினை உடன்கொடு வாழ்தல் நன்றரோ! 721

*இராவணன் வீடணனைச் சீறுகிறான்:—பிறப்பு மாற்றினை-அரக்கனுகப் பிறந்தும் அமர்க்கு அஞ்சி மனிதனைச் சார்ந்து கெட்டாய்.*

பழியினை உணர்ந்து யான் படுக்கிலேன் உனை,
ஒழி சில புகலுதல், ஒல்லை நீங்குதி,
விழிஎதிர் நிற்றியேல் விளிதி, என்றனன்
அழிவினை எய்துவான் அறிவு நீங்கினன் 722

*படுக்கிலேன்-சொல்லகில்லேன், விளிதி-சாவாய்.*

வேண்டுழி இனியன விளம்பி, வெம்முனை
பூண்டுழி அஞ்சி, வெஞ்செருவிற் புக்குடன்
மாண்டுழி அன்றி, நம் மருங்கு வந்தவன்
ஆண்டொழில் உலகினுக்கு ஆணியாம் அன்றே! 723

*சுக்ரீவன் வீடணனைப்பற்றி இராமனுக்குக் கூறுதல்:—வேண்டுழி-தன் காரியம் ஆகவேண்டும்போது, மாண்டுழி அன்றி-மாள்வதன்றி, ஆணி ஆம்-ஆதரவு ஆமோ!*

வார்க்குறு வனைகழல் தம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்குற; ஆயிடைச் செறுநர் சீறிய
போர்க்கு உறவன்றியே, புகுந்த போதிவன்
ஆர்க்கு உறவாகுவன்? அருளின் ஆழியாய் 724

*அண்ணன் வாழ்ந்த நாளில் சீருக்கு உறவாகிப், பகைவரால் போருற்ற நாளில் உறவை நீத்து இங்குவந்து புகுந்துளான்.*

விண்டுழி ஒருநிலை நிற்பர், மெய்ம்முகம்
கண்டுழி ஒருநிலை நிற்பர், கைப்பொருள்
கொண்டுழி ஒருநிலை நிற்பர், கூழுடன்
உண்டுழி ஒருநிலை நிற்பர் - உற்றவர் 725

*நீங்கிய இடத்திலும் நேர்முகத்தினும் கையிற்பொருள் கொள்ளினும், பொருளற்றுக் கூழருந்தும் காலத்தினும் உறுதியாக நிலைப்பவரே உற்றார்.*

உய்யநிற் கபயம் என்றான் உயிரைத் தன் உயிரின் ஓம்பாக்
கையனும், ஒருவன்செய்த உதவியிற் கருத்தில் லோனும்,
மையறு நெறியின்நோக்கி மாமறை நெறியின் நின்ற
மெய்யினைப் பொய்என்றானும் மீள்கிளா நரகில் வீழ்வார் 726

*இராமன் ஏனையோருக்கு அறிவித்தல்:—அபயம் என்றான்-அபயம் கேட்டு நின்றானுடைய.*

கரங்கள்மீச் சுமந்து செல்லும் கதிர்மணிமுடியன், கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலன், கருணைவள்ளல்
இரங்கினன் நோக்குந்தோறும் இருநிலத் திறைஞ்சுகின்றான்,
வரங்களின் வாரிஅன்ன தாளிணை வந்து வீழ்ந்தான் 727

*வீடணன் இராமனிடம் வருதல்:—மீச்சுமந்து-தலைமேற் குவித்து, வள்ளல்-இராமன். வாரி-கடல் ஒத்த.*

ஆழியான் அவனை நோக்கி அருள்சுரந்து உவகை தூண்ட
ஏழினோ டேழாய் நின்ற உலகும் என் பெயரும் எந்நாள்
வாழும்நாள் அன்றுகாறும் வாள்எயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்றான் 728

*ஆழி-சக்கரம், எயிற்று-பல்கொண்ட.*

வினைவினை அறியும் வென்றி வீடணன் "என்றும் வீயா
அளவறு பெருமைச் செல்வம் அளித்தனை யாயின், ஐய
களவியல் அரக்கன் பின்னே தோன்றிய கடன்மைதீர
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி" என்றான் 729

*விளைவு-வரும் பயன், வீயா-அழியா, கடன்மை-முறைமைக் குற்றம், மோலி-பாதுகை.*

குகனொடும் ஐவரானோம் முன்பு.பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம். எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல்ஐய, நின்னொடும் எழுவர் ஆனேம்.
புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை 730

*குன்று சூழ்வான்-சூரியன், உந்தை-உன் தந்தை தசரதர்.*

## இலங்கை கேள்விப் படலம்

உடலினை நோக்கும், இன்னுயிரை நோக்குமால்
இடரினை நோக்கும், மற்றியாதும் நோக்கலன்
கடலினை நோக்கும், மக்கள் வைகுறும்
திடரினை நோக்கும்,தன் சிலையை நோக்குமால் 731

*இரவில் இராமன் நிலை:—இன்னுயிர்ச் சீதையை மனத்தால் நோக்குவான்.*

என்றுலப்புறச் சொல்லுகேன்: இராவணன் என்னும்-
குன்றுலப்பினும் உலப்பிலாத் தோளினன் கொற்றம்
இன்றுலப்பினும், நாளையே உலப்பினும், சிலநாள்
சென்றுலப்பினும் நினக்கன்றிப் பிறர்க்கென்றும் தீரான் 732

*வீடணன் இராவணனைப்பற்றி இராமனுக்கு:—அவன் என்று அழிவான் என்று சொல்லுகிறேன்: உன்னாலன்றி அவன் அழியான், உலப்பு-அழிவு,*

## வருணனை வழிவேண்டு படலம்

ஒன்றுவேண்டல ராயினும் ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவரேல் அவர் சிறுமையில் தீரார்.
இன்று வேண்டியது எறிகடல் நெறிதனை, மறுத்தல்
நன்று நன்றென நகையோடு புகையுக நக்கான் 733

*இராமன் 'வருணனைக் கடிகிறன்:—வேண்டலர்-தனக்குத் தேவையின்றியும், தீரார்-நீங்கியவராகார்.*

மறுமைகண்ட மெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யாரென விரும்பார்,
குறுமைகண்டவர் கொழுங்கனல் என்னினும் கூசார்,
சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறர் 734

*மறுமை-மோட்ச இன்பம், வெறுமை-யாதுமில்லாமை, குறுமை-புன்மை, பெருமை-நம் வலிமை, தேறர்-அறிவுபெறர்.*

## சேது பந்தனப் படலம்

கருவரை காதங்கள் கணக்கிலாதன
இருகையில் தோள்களிற் சென்னி ஏந்தின
ஒருகடல் அடைக்க, மற்றெழுந்த வேலைகள்
வருவனவாம்என வந்த வானரம் 735

*பல காத தூரத்து மலைகளை எடுத்து வானரங்கள் வந்தன: அவை கடல் ஒத்த அளவின. வரை-மலை. வேலை-கடல்.*

மஞ்சினிற் றிகழ்தரு மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிதெடுத் தெறியவே, நளன்
விஞ்சையிற் றுங்கினன்; சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றேர்களைத் தாங்குந் தன்மைபோல் 736

*மஞ்சு-மேகத்தோடு, விஞ்சையில்-இலாவகமாய், எஞ்சுற-அடி அங்கு எஞ்ச ஒடித்து.*

குமுதன் இட்ட குலவரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரையும் திரைக்கடல்
துமிதம் ஊர்புக, வானவர் துள்ளினர்:
அமுதம் இன்னும் எழுமெனும் ஆசையால் 737

*குலவரை-பெருமலை, துமி-துளி, திமிதம்-ஒலி.*

## ஒற்றுக் கேள்விப் படலம்

செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத் தணங்கைத் தீர்ந்து
துயில்சுவை மறந்தான்தோளில் தூய்நிலா தவழும் தோற்றம்
மயிற்குலம் பிரிந்த தென்ன,மரகத மலைமேல் மெள்ள
உயிர்ப்புடை வெள்ளைப் பிள்ளை வாளரா ஊர்வ போன்றே 738

*இரவில் இராமன்மீது நிலா ஒளி: செயிர்ப்பினும்-சினந்தாலும், அணங்கு-சீதை, மரகதமலை-பச்சைமலை, வெள்ளை அராப்பிள்ளை-வெண்ணிறப் பாம்புக் குட்டிகள், துயில் சுவை-தூக்கம்.*

பாம்பிழைப் பள்ளி வள்ளல் பகைஞரென்றுஉணரான்; பல்லோர்
நோம்பிழை செய்த கொல்லோ குரங்கென இரங்கி நோக்கித்,
"தாம்பிழை செய்தாரேனும் தஞ்சம் என்றடைந்தார் தம்மை
நாம்பிழை செய்யலாமோ? நலிந்திடல் விடுதி" என்றான் 739

*இராமன் ஒற்றரை விடுவிக்க உரைத்தல்:—சேடனைப் படுக்கையாகக் கொண்ட இராமன் ஒற்றரை அரக்கர் என்று உணராமல், விடுவிக்கச் சொன்னான். நோம்-வருந்தும்படி. இழை-அணி.*

எல்லை நோக்கவும் எய்தில தாமெனும்
சொல்லை நோக்கிய மானுடன் தோள்எனும்
கல்லை நோக்கிக், கணைகளை நோக்கித்,தன்
வில்லை நோக்கவும் வெந்தது வேலையே 740

*ஒற்றர் இராவணனுக்கு:-இராமன் கடலை நோக்க; கடற்றெய்வம் உடன் வந்திலது என்று தன் வில்லை நோக்க, உடனே கடல் வெந்தது. கல்-மலை.*

## இலங்கைக் காண் படலம்

நம்திரு நகரே யாதி வேறுள நகர்கட் கெல்லாம்
வந்தபே ருவமைகூறி வழுத்துவான் அமைந்த காலை
இந்திரன் இருக்கை என்பர், இலங்கையை எடுத்துக்காட்டார்-
அந்தரம் உணர்தல் தேற்றார் அருங்கவிப் புலவர் அம்மா! 741

*இராமன் இலங்கையை வியத்தல்:—நம்நகர் ஆதி-அயோத்தி முதலான, வழுத்துவான்-சொல்ல, அந்தரம்-முற்றும் முடிவாக.*

## இராவணன் தானைகாண் படலம்

ஓது நூல்களை வழியின் செவியுள்ளும்
சீதை சீதை எனும் ஆருயிர் தேய:
நாத வீணை இசை நாரதர் பாட
வேத கீத அமிழ்தள்ளி விழுங்க 742

*இராவணன் நிலை இவ்வாறு.*

## மகுடபங்கப் படலம்

ஒன்ருகநினைய ஒன்ருய் விளைந்ததென் கருமம் அந்தோ?
என்ருலும் யானே வாழேன், நீஇலை எனவும் கேளேன்,
இன்ருய பழியும்நிற்க, நெடுஞ்செருக் களத்தின் என்னைக்
கொன்ருய்நீ அன்ருே! நின்னைக் கொல்லுமேல் குணங்கள் தீயோன் 743

*இராவணனிடம் சிக்கி மீண்ட சுக்ரீவனைப் பார்த்து இராமன்:—நீ இலை-நீ இல்லை, தீய இராவணனுல் நீ கொால்லப்பட்டாய் எனக் கேட்கச் சகியேன்.*

கல்லினும் வலிய தோளாய், நின்னைஅக் கருணை யில்லோன்
கொல்லுதல் செய்தானுகின், கொடுமையால் குற்றம்பேணிப்
பல்பெரும் பகழி மாரி வேரொடும் பறிய நூறி
வெல்லினும் தோற்றேன் யானே அல்லனோ? விளிந்தி லாதேன் 744

*நீ இன்றேல் என் வெற்றியும் தோல்வியே.*

பெருமையும் வண்மை தானும், பேரெழில் ஆண்மைதானும்
ஒருமையின் உணர நோக்கின் பொறையினது ஊற்றம்அன்றே:
அருமையும் அடர்ந்து நின்ற பழியையும் அயர்ந்தாய்போல
இருமையும் கெடுத்தா யன்றே! என்நினைந்து என்செய்தாய்நீ 745

*பொறையின் ஊற்றம்-பொறுமைக்கு வலிமை தரும், அயர்ந்தாய்-மறந்தாய்.*

இந்நிலை விரைவின் எய்தாது இத்துணை தாழ்த்தி யாயின்
நன்னுதற் சீதை யால்என்? ஞாலத்தால் பயன்என்? நம்பி,
உன்னையான் தொடர்வன், என்னைத் தொடருமிவ் வுலகம் என்ருல்,
பின்னைஎன் இதனைநோக்கி விளையாடிப் பிழைப்ப செய்தாய்! 746

*இதனை நோக்கி—இச்செயலை மேற்கொண்டு. என்-ஏன்.*

காட்டிலே கழுகின்வேந்தன் செய்தன காட்டமாட்டேன்
நாட்டிலே குகனர் செய்த நன்மையை நயக்கமாட்டேன்
கேட்டிலேன், இன்று கண்டும் கிளிமொழி மாதரானை
மீட்டிலேன், தலைகள் பத்தும் கொணர்ந்திலேன், வெறுங்கை வந்தேன் 747

*சுக்ரீவன்:—கேட்டிலேன்-கேட்டது மட்டும் அன்றே, செத்தேனில்லையே!*

வன்பகை நிற்க, எங்கள் வானரத் தொழிலிற் கேற்ற
புன்பகை காட்டும் யானே புகழ்பகைக் கொருவன்போலாம்!
என்பகை தீர்த்து,என் ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன்பகை உனக்குத் தந்தேன், உயிர்சுமந் துழலா நின்றேன் 748

*புகழ்ப்பகை-உன் புகழுக்குப் பகை. வன்பகை நிற்க-வலியபகை இராவணன் இன்னும் இருக்கவைத்து.*

நூல்வலி காட்டுஞ் சிந்தை நும்பெருந் தூதன், வெம்போர்
வேல்வலி காட்டுவோர்க்கும், வில்வலி காட்டுவோர்க்கும்
வால்வலி காட்டிப் போந்த வளநகர் புக்கு, மற்றென்
கால்வலி காட்டிப் போந்தேன்! கைவலிக் கவதி உண்டோ 749

*நூல்-கல்விப் பெருமை, தூதன்-அனுமான். காட்டினுர்-அரக்கர். கால்வலி-பின் ஓட்டமாக, அவதி உண்டோ-சிறிதும் உண்டோ.*

வாங்கிய மணிகள் அன்னுன் தலைமிசை மௌலி மேலே
ஓங்கிய அல்லவோ? மற்றினி யப்பால் உயர்ந்த துண்டோ!
தீங்கிவன் சிரத்தின் மேலும் உயிரினும் சீரிதம்மா,
வீங்கிய புகழை எல்லாம் உயிரொடும் வாங்கிவிட்டாய் 750

*வீடணன் பாராட்டுகிருன்:—வாங்கிய-பறித்துவந்த. நீ மணிபறித்த அவன் தலை, உயிர் இரண்டையும் அழித்தலினும் மிக்கது. வன்செயல்.*

தன்தனிப் புதல்வன் வென்றித் தசமுகன் முடியில் தைத்த
மின்தளிர்த் தனைய பன்மா மணியினை வெளியிற் கண்டான்:
ஒன்றெுளித் தொன்ரும் என்றுஅவ் வரக்கனுக் கொளிப்பான்போல
வன்தனிக் குன்றுக் கப்பால் இரவியும் மறையப் போனுன் 751

*தன்-சூரியன், கண்டான்-கண்டு, இரவி-கதிரவன்.*

## அணிவகுப்புப் படலம்

கலங்கிய கங்கு லாகி நீங்கிய; கற்பங் காணும்
நலங்கினர் தேவர்க்கேயோ, நான்மறை முனிவர்க்கேயோ
பொலங்கெழு சீதைக்கேயோ, பொருவலி இராமற்கேயோ
இலங்கையர் வேந்தர்க்கேயோ, எல்லார்க்கும் செய்த தின்பம் 752

*கங்குல்-இரவு. அது நீங்கிய நிலை யாவர்க்கும் இன்பம் அளித்தது.*

அளித்தகை இல்லா ஆற்றல் அமைந்தவன் கொடுமை அஞ்சி,
வெளிப்பட அரிதென்றுன்னி வேதனை உழக்கும் வேலை-
களித்தவர் களிப்பு நீங்கக் காப்பவர்தம்மைக் கண்ணுற்று
ஒளித்தவர் வெளிப்பட் டன்ன கதிரவன் உதயம் செய்தான் 753

*அளித்தகை-கருணையில்லா வலிய கொடுங்கோல் மன்னன், வேதனை-மக்கள் வேதனைப்பட, களித்தவர்-செருக்குற்ற மன்னர், காப்பவர்-தமக்கு ஆதரவாளர் ஒருவரை, ஒளித்தவர்-வேதனையால் முன்பு ஒளித்தவர்.*

## அங்கதன் தூதுப் படலம்

மாருதிஇன்னும் செல்லின், மற்றிவன் அன்றி வந்து
சாருதல் வலியார்இல்லை என்பது சாலும் அன்றே:
யார்இனி ஏகத் தக்கார், அங்கதன் அமையும், ஒன்னர்
வீரமே விளைப்பரேனும் தீதின்றி மீடல் வல்லான் 754

*இராமன் கூறுகிறன்:—அநுமான்-தூது செல்லின், இவனன்றி வேறு வலியர் இலர் என்று கருதநேரும், மீடல்-மீள்தல்.*

கல்லுண்டு மரமுண்டு ஏழைக் கடலொன்று-கடந்தோம் என்னும்
சொல்லுண்டே, இவனை வெல்லும் தோற்றத்தோர் கூற்றம் உண்டோ!
எல்உண்ட படைகைக் கொண்டான் எதிர்உண்டே? இராமன் கையில்
வில்உண்டே உண்டென் றெண்ணி ஆற்றவும் வியந்து நின்றன் 755

*அங்கதன் இராவணன் உருவை வியத்தல்:—கல், மரங்களால் கடலைக் கடந்துவிட்டோம். யாரும் இவனைக் கொல்ல முடியுமோ? எல்-ஒளி, படை கொண்டவன்-இராவணனுக்கு.*

நெடுந்தகை விடுத்த தூதன் இவைஇவை நிரம்ப எண்ணி
கடுங்கனல் விடமும் கூங்றும் கலந்து கால் கரமும் நீட்டி
விடுஞ்சுடர் மகுடம் மின்ன விரிகடல் இருந்த தென்னக்
கொடுந்தொழில் மடங்கல் அன்னன் எதிர்சென்று குறுகி நின்றன் 756

*நெடுந்தகை-இராமன், விரிகடல் கனலையும் விடத்தையும் யமனையும் சேர்த்துக் கை கால்களாக நீட்டியதுபோல் இருந்தான் இராவணன்.*

பூதநாயகன், நீர் சூழ்ந்த புவிக்குநாயகன், அப் பூமேல்
சீதைநாயகன், வேறுள்ள தெய்வ நாயகன்,நீ செப்பும்
வேதநாயகன், மேல்நின்ற விதிக்கு நாயகன்றன் விட்ட
தூதன்யான்; பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன் என்றன் 757

*நீ யாவன் என்ற கேள்விக்குப் பதில்:—பணித்த மாற்றம்-இட்ட கட்டளைச் செய்தியை.*

உந்தை என் துணைவன் அன்றே. ஓங்குஅறம் சான்றும் உண்டால்.
நிந்தனைஇதன்மே லுண்டோ நீஅவன் தூதன்ஆதல்?
தந்தனன்நினக்கி யானே வானரத் தலைமை, தாழா
வந்தனை,நன்று செய்தாய் என்னுடை மைந்த, என்றன் 758

*உந்தை-உன் தந்தை வாலி, தாழா-தாமதிக்காமல்.*

தாதையைக் கொன்றான் பின்னே தலைசுமந்து இருகை நாற்றிப்
பேதையன்என்ன வாழ்ந்தாய் என்பதோர் பிழையும் தீர்ந்தாய்,
சீதையைப் பெற்றேன், உன்னைச் சிறுவனும் ஆகப் பெற்றேன்
ஏதுஎனக் கரிய தென்றான் இறுதிநூற் கெல்லை கண்டான் 759

*பிழை தீர்ந்தாய்-என்னைச் சேர்ந்தால் அக்குற்றம் நீங்கும். வாழ்வு என்னும் இழைக்கு இறுதி எல்லை கண்டவன், மறைநூல் எல்லை கண்டவன்.*

அந்நரர் இன்று நாளை அழிவதற் கையம் இல்லை,
உன் அரசு உனக்குத் தந்தேன், ஆளுதி ஊழி காலம்.
பொன்அரி சுமந்த பீடத்து இமையவர் போற்றி செய்ய
மன்னவ னாக யானே சூட்டுவன் மகுடம் என்றான் 760

*நரர்-மனிதர், அரி-சிங்கம்.*

வாய்தரத் தக்க சொல்லி என்னைஉன் வசம்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ, தூதுவந்து அரச தாள்கை!
நீதரக் கொள்வேன்யானே? இதற்கினி நிகர்வே றெண்ணின்
நாய் தரக் கொள்ளும் சீயம் நல்லரசு!என்று நக்கான் 761

*அங்கதன்:—தூதனாக வந்து அரசாள்வது முறையோ, நிகர்—ஒப்பு, சீயம்-சிங்கம்.*

பருந்துணைப் பாட்டியாக்கை படுத்தநாள், படைஞரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்தநாள், வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை இருஞ்செவி முலையும் மூக்கும்
அரிந்தநாள் வந்திலாதான் இனிச்செய்யும் ஆண்மை உண்டோ!

*பாட்டி-தாடகை, மாமன்-சுபாகு, தங்கை-சூர்ப்பநகை.*

ஏந்திழை தன்னைக் கண்ணுற், றெதிர்ந்தவர் தம்மை எற்றிச்,
சாந்தெனப் புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்துத், தன்னூர்
காந்துஎரி மடுத்துத், தானும் காணவே கடலைத் தாவிப்
போந்தபின் வந்திலாதான் இனிப்பொரும்போரும் உண்டோ! 763

*சாந்து-சந்தனம், எரிமடுத்து-தீ வைத்து. புதல்வன்-அட்ச குமாரன்.*

## முதல் போர்ப் படலம்

ஆங்கவன் அமர்த்தொழிற் கணுகினான்என—
வாங்கினன் சீதையை என்னும் வாய்மையால்
தீங்குறு பிரிவினால் தேய்ந்த தேய்வற
வீங்கின இராகவன் மீளித் தோள்களே 764

*ஆங்கு அவன்-இராவணன், வாங்கினேன்-சிறை எடுத்தான். சீதை பிரிவினால் மெலிந்த தோள் போர் எண்ணி வீங்கியது.*

**கலக்கிய அரக்கன் வில்லின் கல்வியின்-கவிகள்உற்ற
அலக்கணும், தலைவர்செய்த தன்மையும் அமையக் கண்டான்.
இலக்குவன் "என்கை வாளிக்கு இலக்குஇவன், இவனை இன்று
விலக்குவன்" என்ன வந்தான் வில்லுடைமேரு என்ன 765**

*அரக்கன் வில்லால் குரங்கினம் கலங்குதலையும் தலைவர்கள் நிலையையும் இலக்குவன் கண்டான். இலக்கு-குறி, உலகைவிட்டு விலக்குவேன் என்று வந்தான்.*

**ஆற்றல்சால் அரக்கன்றானும்-அயல்நின்ற வயவர் நெஞ்சம்
வீற்று வீற் றாகிஉற்ற தன்மையும், வீரன் தம்பி
கூற்றின்வெம் புருவம் அன்ன சிலைநெடுங் குரலும் கேளா
ஏற்றினன் மகுடம், என்னே "இவன் ஒரு மனிசன்!" என்னு 766**

*வயவர்-வீரர், வீற்று-உடைந்து, ஏற்றினன் மகுடம்-முடித்தலை நிமிர நின்று, இவன் ஒரு தனி மனிதன் என வியந்தான்.*

**"காக்கின்ற என்நெடுங் காவலின்வலி நீக்கிய கள்வ,
போக்கின்று உனக்குஅரிதால்" எனப்புகன்றான், புகை உயிர்ப்பான்,
கோக்கின்றன தொகுக்கின்றன கொலைஅம்புகள் தலையோடு
ஈர்க்கின்றன கனல்ஒப்பன எய்தான்இகல் செய்தான் 767**

*சீதையை எடுத்து என் காவல் பெருமையைக் கெடுத்தவனே. போக்கு-நீ தப்பிப்போவது, ஈர்க்கின்றன-கொய்து இழுத்து நிற்பன.*

**நீளாண்மையின் உடனேஎதிர் நின்றாய், இஃதொன்றே,
வாளாண்மையும் உலகேழினோ டுடனே உடைவலியும்
தாளாண்மையும் நிகர்யாருமில் தனிஆண்மையும், இனிநின்
தோளாண்மையும் இசையோடுடன் துடைப்பேன் ஒருபுடைப்பால்**

*அநுமான் இராவணனை நோக்கி: -மிகு ஆண்மையால் எனக்கெதிர் நிற்கப்பெற்றாய், உன் ஆண்மை அழியும் என்றான்.*

**பரக்கப்பல உரைத்தென், படர்கயிலைப் பெரு வரைக்கும்,
அரக்குற்றுஎரி பொறிக்கண்திசைக் கரிக்கும் சிறிதுஅனுங்கா
உரக் குப்பையின் உயர்தோள்பல உடையாய், உரனுடையாய்,
குரக்குத்தனிக் கரத்திற்புடை பொறை ஆற்றுவை கொல்லாம்? 769**

*கயிலைமலை, திசை யானைகளைக் குலைத்தவனே, குரங்கு யான் குத்து வதைத் தாங்குதி. கரி-யானை, அநுங்கா-பின்வாங்காத, உரக்குப்பை-வலிமை மிகுதி.*

என்ருேள்வலி அதனல்எடுத் தியான்எற்றவும், இறவா
நின்ருயெனில், நீபின்எனை நின்கைத்தல நிரையால்-
குன்றேபுரை தோளராய்,மிடல் கொடுகுத்துதி. குத்தப்
பொன்றேன்எனில், நின்னேடுஎதிர் பொருகின்றிலென் என்ருன் 770

*கைத்தலநிரை-வரிசையான இருபது கைகள், மிடல்-வலி, பொன்றேன், எனில்-இறவேன்எனினும் இருப்பினும்.*

வலிஎன்பதும் உளதேஅது நின்பாலது. மறவோய்,
அலிஎன்பன புறம்நின்றன, உலகேழினு மடைத்தாய்:
சலி என்றெதிர் மலரோன் உரை தந்தால்,இறை சலியேன்:
மெலிவென்பதும் உணர்ந்தேன்,எனை வென்ருய்,இனி விறலோய்

*இராவணன் புகழ்கிருன்:—பிறர் யாவரும் அலிகள். அடைத்தாய்-அடக்கியவன் ஆனாய், பிரமன் சலி எனினும் யான் சலிப்பு அடையேன்.*

ஒன்றுண்டினி உரைநேர்குவது, உன்மார்பின் என் ஒருகை
குன்றின்மிசை கடைநாள்விழும் உரும்ஏறெனக் குளித்தால்
நின்றிந்நிலை தருவாய்எனில், நீயல்லவர் உளரோ,
இன்றும்உளை! என்றும்உளை! இலைஓர்பகை என்ருன் 772

*உரும் ஏறு-பெரிய இடி, நிலை தருவாய்-இறவாது நிலைத்தால், இலை-இல்லை. உளை-வாழ்வுறுவாய்.*

என்ருன்எதிர் சென்ருன்இகல் அடுமாருதி-எனைநீ
வென்ருயலையோ? உன்உயிர் வீடாதுரை செய்தாய்;
நன்ருக நின் நிலை நன்றென நல்கா, எதிர் நடவா
குன்ருகிய திரள்தோளவன் "கடன்கொள்" எனக் கொடுத்தான் 773

*என் முன் உயிர் அழியாது நின்று பேசுவதே உன்வெற்றி அல்லவா? நல்கா-மார்பைக் காட்டவும், திரள் தோளவன் - இராவணன் பதில் கொடுத்தான்.*

பள்ளக்கடல் கொள்ளப்படர் படிபேரினும் பதையா
வள்ளப்பெரு வெள்ளத்துஎறுழ் வலியாரினும் வலியான்,
கள்ளக்கறை உள்ளத்ததிர் கழல்வெய்யவன் கரத்தால்
தள்ளத்தளர்வு எள்ளிப்பெருங் கிரியாம்எனச் சலித்தான் 774

*கடல் சூழ்பூமி பெயரினும் சலியா வலிய அநுமான் கள்ள இராவணன் குத்தினால் கயிலாயம் எனச் சலித்தான். படி-பூமி, எறுழ்-வலிய.*

நன்று போர்வலி! நன்றுபோராள்வலி! வீரம்
நன்று! நோக்கமும் நன்று! கைக் கடுமையும் நன்று!
நன்று கல்வியும்! நன்று நின்திண்மையும் நலனும்!
என்று கைம்மறித் திராவணன் ஒருவன்நீ! என்ருன் 775

இராவணன் இலக்குவனை வியத்தல்:—கடுமை-விசை, மறித்து-நிறுத்திக் குவித்து.

கானின் அன்றுஇகல் கரன்படை படுத்தஅக் கரியோன்
தானும், இந்திரன் தன்னைஓர் தனுவலந் தன்னல்
வானில் வென்ற என்மதலையும், வரிசிலை பிடித்த
யானும்அல்லவர் யார்உனக்கு எதிர்!என்று மிசைத்தான் 776

கரியோன்-இராமன், மதலை-இந்திரசித்து.

சொல்லும் அத்தனை அளவையின் மணிமுடி துறந்தான்-
எல்இமைத் தெழு மதியமும், ஞாயிறும் இழந்த
அல்லும் ஒத்தனன் பகலும் ஒத்தனன்:அமர் பொருமேல்
வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன் 777

இராவணன் தோற்றநிலை:—ஒரு சொல்லை முடிக்கும் நேரத்தில் முடி இழந்து மதியிலா இரவு, கதிர் இல்லாப் பகல்போல் ஆயினன். எல்-ஒளியுடன்.

அறங்கடந்தவர் செயல்இதென்று உலகெலாம் ஆர்ப்ப
நிறம்கரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்ருன்
இறங்கு கண்ணினன் எல்அழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆல்என நின்ருன் 778

செயல் இது-அழிவு, கிளைத்திட-கீறிக்கொண்டு, இறங்கு-கீழ்நோக்கிய, எல்-ஒளி.

அறத்தினு லன்றி, அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தி னுலரி தென்பது மனத்திடை வலித்தி.
பறத்தி நின் நெடும்பதிபுகக் கிளையொடும், பாவி.
இறத்தியானது நினைக்கிலென் தனிமைகண் டிரங்கி 779

கடத்தல்-வெல்லுதல், வலித்தி-உணர்க, பறத்தி-ஓடிப்போ, தனித்து நின்று நீ இறப்பது என் எண்ணம் அன்று.

"ஆளையா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை, இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவா"என நல்கினன், நாகிளங் கமுகின்
வாளைதாவுறு கோசல நாடுடை வள்ளல் 780

மாருதம்-புயல், பூளை-பூளைப்பூ, நாகிளங்கமுகு-இளம் பாக்குமரம், ஆள்-உன் படைவீரர்.

## கும்பகருணன் வதைப் படலம்

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்,
தாரணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக்கான் 781

*வாரணம்-திக்குயானை, வரை-கயிலைமலை, மவுலி-கிரீடம்.*

கிடந்தபோர் வலியார் மாட்டே கெடாத வானவரை எல்லாம்
கடந்துபோய் உலக மூன்றும் காக்கின்ற காவலாளன்
தொடர்ந்துபோம் பழியினேடும், தூக்கிய கரங்களோடும்
நடந்துபோய் நகரம் புக்கான்; அருக்கனும் நாகம் சேர்ந்தான் 782

*வானவரை வென்றவன் தோற்று நடந்துபோனுன். அருக்கன்-சூரியன்.*

மாதிரம் எவையும் நோக்கான், வளநகர் நோக்கான், வந்த
காதலர் தம்மை நோக்கான், கடற்பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தல்மாதர் தனித்தனி நோக்கத், தான்அப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் போந்தான் 783

*மாதிரம்-திசை.*

நாள்ஒத்த நளினம்அன்ன முகத்தியர் நயனம் எல்லாம்
வாள்ஒத்த, மைந்தர் வார்த்தை இராகவன் வாளி ஒத்த
கோள்ஒத்த சிறைவைத் தாண்ட கொற்றவற்குஅற்றை நாள்தன்
தாள்ஒத்த துணைமென் கொங்கை, நோக்கங்கு தொடர்கிலாமை

*நாள்-பகலில் மொத்தமாகப் பூத்த தாமரை மலர் ஒத்த முகமுடைய பெண்களின் கண்கள் வருத்தி வாள் ஒத்தன. கோள்-கிரகங்களை, அற்றைநாள்-அன்று, தாள் ஒத்த-கொங்கைகள் குதிங்கால்கள் ஒத்தன.*

வானகும், மண்ணும் எல்லாம் நகும்நெடு வயிரத் தோளான்
நான்நகு பகைவர் எல்லாம் நகைவர் என்றுஅதற்கு நாணுன்:
வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றுன் 785

*வானத்தவரையும் பூவுலகத்தவரையும் இகழும் இராவணன் "சீதை என்னை இகழ்வளே" என்று வாடி வருந்தினுன்.*

எறித்தபோர் அரக்கர்ஆவி எண்ணிலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோ தென்னை அந்தப் பரிபவம் முதுகிற் பற்றப்
பொறித்தபோது, அன்னுன் அந்தக் கூனி கூன்போக உண்டை
செறித்தபோது ஒத்த தன்றிச் சினவுண்மை தெரிந்ததில்லை 786

*எறித்த-ஆயுதம் எறியப்பட்ட, எஞ்ச-ஒழிய, பரிபவம்-அவமானம், பொறித்த-பதித்தபோது, அன்னுன்- இராமன்.*

விண்ணினை இடறும் மேன்மை விசும்பினை நிறைக்குமேனி
கண்எனும் அவைஇரண்டும் கடல்களிற் பெரிய வாகும்.
எண்ணினும் பெரிய னுன இலங்கையர் வேந்தர் பின்னேன்
மண்ணினை அளந்துநின்ற மால்என வளர்ந்து நின்றான் 787

கும்பகருணன் விழித்தெழுந்து நிற்றல்:—மேன்மை-மேல்பக்கம் உச்சி. எண்ணினும்-நினைப்பின் எவ்வகையினும் பெரியன்; முறையால் இராவண னுக்குத் தம்பி. மால்-திருமால்.

ஆனதோ வெஞ்சமம்? அளவில் கற்புடைச்
சானகி துயரின்னந் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே? 788

சமம்-போர், பொன்றும்-அழியும்.

உறுவது தெரியஅன்று உன்னைக் கூயது,
சிறுதொழில் மனிசரைக் கோறி சென்று.எனக்கு
அறிவுடை அமைச்சன்நீ அல்லை, அஞ்சினை,
வெறுவிதுஉன் வீரம்! என்றிவை விளம்பினான் 789

இராவணன் கடிதல்:—கூயது-கூப்பிட்டது, உறுவது-பின் நடப்பதை, கோறி-கொல்தி, வெறுவிது-வீண்.

மானுடர் இருவரை வணங்கி, மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்,
யான்அது முடிக்கிலேன், எழுதி, போதியால் 790

ஊனுடை - உடலை வளர்த்துள்ள.

என்னைவென்றுளர் எனின், இலங்கை காவல,
உன்னைவென்று உயருதல் உண்மை, ஆதலால்
பின்னைநின் றெண்ணுதல் பிழை.அப் பெய்வளை
தன்னை நன்குஅளிப்பது தவத்தின் பாலதே 791

கும்பகருணன்:—பின்னை - காரியம் நடந்தபின், பெய்வளை - வளையல் அணிந்த சீதை.

''இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளவெனிற் பொறுத்தி. கொற்றவ,
அற்றதால் முகத்தினில் விழித்தல். ஆரிய,
பெற்றனென் விடை''எனப் பெயர்ந்து போயினன் 792

முகத்தில் விழித்தல்-ஒருவரை ஒருவர் இனிப் பார்ப்பது.

தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால். நடுவண் நின்றதோர்
தாளுடை மலைகொலாம்! சமரம் வேட்டதோர்
ஆளென உணர்கிலேன். ஆர்கொலாம் இவன்? 793

*இராமன் வீடணனை நோக்கி:—தாள் உடை-கால்பெற்ற மலை இது, போர்புரி மனிதனாகக் காண்கிலேன்.*

நீதியும் தருமம் நின்ற நிலைமையும் புலமை தானும்
ஆதியங் கடவுளாலே அருந்தவம் ஆற்றிப் பெற்றாய்,
வேதியர் தேவன் சொல்லால் விளிவிலா ஆயுட் பெற்றாய்,
சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும் தக்கோய் 794

*தன்னிடம் வந்த வீடணனுக்குக் கும்பகருணன்:—கடவுள் தேவன்-பிரமன், விளிவிலா-சாகாத.*

ஐயநீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலம் ஆகி, ஆங்கே
உய்கிலை என்னின்; மற்றிவ் வரக்கரா யுள்ளோர் எல்லாம்
மொய்கணை மாரியாலே இறந்து பாழ்முழுதும் பட்டால்
கையினால் எள்நீர் நல்கிக் கடன்கழிப்பாரைக் காட்டாய் 795

*கடன்-ஈமக்கடன்.*

எனக்கு அவன் தந்த செல்வத் திலங்கையும் அரசும் எல்லாம்
நினக்கு யான் தருவன், தந்துன் ஏவலின் எளிநின் நிற்பேன்:
உனக்கிதின் உறுதி இல்லை, உத்தம, உன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து வந்த மரபையும் விளக்கி வாழ்தி 796

*வீடணன் கூறுகிறான்:—உறுதி-நலம், பின்வந்தேன்-தம்பி.*

மலரின் மேலிருந்த வள்ளல் வழுவிலா வரத்தினால் நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய், உலகுள்ள தனையும் உள்ளாய்,
தலைவன்நீ உலகுக் கெல்லாம், உனக்கது தக்கதேயால்:
புலையுறு மரணம் எய்தல் எனக்குஅது புகழதேயால் 797

*கும்பகருணன்:—வள்ளல்-பிரமன், உலகுள்ள அளவு-சிரஞ்சீவி ஆனாய்.*

கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துத்
திருத்தலா மாகின் அன்றே திருத்துதல். தீரா தாயின்
பொருத்துறு பொருளும் உண்டோ, பொருதொழிற்கு உரியராகி
ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியதம்மா 798

*கருத்து-ஆயுந்தன்மை, பொருத்துறு-இணைக்கத்தக்க வழி.*

தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனையோடும் வேறுள கிளைஞரோடும்-
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன் மூவுலகை ஆண்டு-
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல் 799

தும்பி-வண்டு, தொடையல்-மாலை, வீரன்-இராமன்.

செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங்கொண்ட புண்ணுடை நெஞ்சோடு ஐய,
கும்பிட்டு வாழ்கிலேன் யான், கூற்றையும் ஆடல் கொண்டேன் 800

இஞ்சி - மதில், வம்பு - வாசனை, தெரியல் - மாலை, முன் - அண்ணன் இராவணன், ஆடல்-வெற்றி.

ஆகுவது ஆகுங் காலத்து, அழிவதும் அழிந்து சிந்திப்
போகுவது, அயலே நின்று போற்றினும் போதல் செய்யும்.
சேகற உணர்ந்தோர் நின்னின் யாருளர்? வருத்தல் செய்யாது
ஏகுதி, எம்மை நோக்கி இரங்கலை, என்றும் உள்ளாய் 801

ஆகுவது உரிய காலத்தில் ஆகும்; அழிவதும் அவ்வாறே அழியும். சேகு அற-குற்றம் அற. என்றும் உள்ளாய்-சிரஞ்சீவி.

என்றவன் தன்னை மீட்டும் எடுத்து மார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி ஏங்கி நிறைகணன் நெடிதுநோக்கி
இன்றெடுந் தவிர்ந்த தன்றே உடன்பிறப் பென்ப தென்றான்.
வென்றி வெந் திறலினானும் அவன் அடித் தலத்து வீழ்ந்தான் 802

நிறைகண்-நீர் நிறைந்தகண், திறலினான்-வீடணன்.

எய்திய நிருதர் கோனும் இராமனை இறைஞ்சி "எந்தாய்,
உய்திற னுடையார்க் கன்றே, அறநெறி ஒழுக்கம் உண்மை,
பெய்திறன் எல்லாம் பெய்து பேசினேன், பெயருந் தன்மை
செய்திலன், குலத்து மானம் தீர்ந்திலன் சிறிதும்" என்றான் 803

வீடணன் இராமனைச் சேர்ந்து:—பெயரும்-விலகும், மீளும்.

குன்றின்வீழ் குரீஇ என்னக் குழாங்கொளக் குதித்துக் கூடிச்
சென்றுமேல் எழுந்து பற்றிக் கைத்தலம் தேயக் குத்தி
வன்திறல் எயிற்றால் கவ்வி, வள்உகிர் மடியக் கீளா
ஒன்றும் ஆகின்ற தில்லை என்று இழிந் தோடிப் போன 804

மலைமீது மோதும் குருவிகள்போல வானரப் படைகள் முட்டித் திரும்பி ஓடின. எயிறு-பல், உகிர்-நகம், இழிந்து-விட்டிறங்கி.

நின்றவன்தன்னை அன்னன் நெருப்பெழ நிமிர நோக்கிப்
பொன்ற வந்தடைந்த தானைப் புரவலன் ஒருவன்ருனே?
அன்றவன் மகனே?எம்மூர் அனல்மடுத்து அரக்கர் தம்மை
வென்றவன்ருனே, யாரோ?சொல்லுதி விரைவின்? என்ருன் 805

*கும்பகர்ணன் அங்கதனைப் பார்த்து:—அன்னுன்-கும்பகர்ணன், தானைப் புரவலன்-சேனைத் தலைவன் சுக்ரீவன், வென்றவன்-அநுமான்.*

நும்முனை வாலிற் சுற்றி நோன்திசை நான்கும் தாவி
மும்முனை நெடுவேல் அண்ணல் முளரியஞ் சரணம் தாழ்ந்த
வெம்முனை வீரன்மைந்தன், நின்னைஎன் வாலின் வீக்கித்
தெம்முனை இராமன்பாதம் வணங்கிடச் செல்வேன் என்ருன் 806

*அங்கதன்: நும்முனை-உன் அண்ணனை, நோல்-வலிய, அண்ணல்-சிவனை வழிபாடுசெய்யும், வீரன்-வாலி, தெம்முனை-பகைவர் போர்முனை.*

உந்தையை மறைந்து ஓரம்பால் உயிருண்ட உதவியோற்குப்
பந்தனை பகையைச் செற்றுக் காட்டலை என்னிற், பாரோர்
நிந்தனை நின்னைச் செய்வர்: நல்லது நினைத்தாய்! நேரே
வந்தனை புரிவ ரன்றே!வீரராய் வசையில் தீர்ந்தார் 807

*பந்தனை-பதில் செய்யும் தொடர்பாக, வீரர் உன்னை மதிப்பரோ?*

இத்தலை வந்தது என்னை இராமன்பால் வாலின் ஈர்த்து
வைத்தலை நுதலியன்று. வானவர் மார்பில் தைத்த
முத்தலை அயிலின் உச்சி முதுகுற, மூரி வால்போல்
கைத்தலம் காலும் தூங்கக் கிடத்தலைக் கருதி என்ருன் 808

*ஈர்த்து-இழுத்துச்சென்று, நுதலி-கருதி, முத்தலை அயில்-என்கைச் சூலாயுதம்.*

எறிகுவன் இதனை நின்மேல், இமைப்புறும் அளவில் ஆற்றல்
மறிகுவ தன்றி, அல்லல் மாற்றினை என்னின், வன்மை
அறிகுவர் எவரும். பின்னையான் உன்னேடு அமரும் செய்யேன்
பிறிகுவன் உலகில் வல்லோய், பெரும்புகழ் பெறுதி என்ருன் 809

*மாற்றினை-தடுத்தாயாயின், பிறிகுவன்-அயல் செல்வேன்.*

மாற்றம் அஃதுரைப்பக் கேளா மலைமுழைதிறந்த தென்னக்
கூற்றுறழ் பகுவாய் விள்ளச் சிரித்து,நீ கொணர்ந்த குன்றை
ஏற்றனன், ஏற்ற காலத் திறைஅதற்கு ஒற்கம் எய்தின்
தோற்றனென், உனக்கென் வன்மை சுருங்கும்என் றரக்கன்சொன்னன் 810

*அநுமான் "மலையைத் தடு" என்று கூற:—கேளா-கேட்டு, முழை-குகை. ஏற்றுத்தளர்வு எய்திஞல் தோற்றவன் ஆவேன் என்ருன். ஒற்கம்-தளர்ச்சி.*

இளக்கம் ஒன்றின்றி நின்ற இயற்கைபார்த்து இவனது ஆற்றல்
அளக்குறற் பாலும்ஆகா! குலவரை அமரின் ஆற்று!
துளக்குறு நிலையா னல்லன்,சுந்தரத் தோளான் வாளி
பிளக்குமேல் பிளக்கும்! என்று மாருதிபெயரப் போனன் 811

*இளக்கம்-சோர்வு, மலைகளும் இவனை அசைக்கா, துளக்கு-அசைவு.*

குன்றும் கற்களும் மரங்களும் குறைந்தன, குரங்கின்
வென்றியம் பெருஞ்சேனை ஓர் பாதியின் மேலும்
இன்று தேய்ந்த தென்று உரைத்தலும், அமரர்கண்டு உவப்பச்
சென்று தாக்கினன் ஒருதனிச் சுமத்திரைச் சிங்கம் 812

*என்று உரைத்தலும்-என்று தேவர்கள் கூற:—*

இராமன் தம்பிநீ, இராவணன் தம்பிநான், இருவேம்
பொரா நின்றேம்:இது காணிய வந்தனர் புலவோர்:
பராவுந் தொல் செருமுறை வலிக்கு உரியன பகர்ந்து
விராவு நல்லமர் விளைக்குதும் நாம்என விளம்பா 813

*கும்பகருணன் இலக்குவனுக்கு:—புலவோர்-தேவர், பராவு-போற்றத்தகு, செருமுறை-போர் அறம்.*

பெய்தவத்தின்ஓர் பெண்கொடி எம்முழைப் பிறந்தாள்,
செய்த குற்றம்ஒன்றில்.அவள் நாசிவெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ, மற்றவள் கூந்தல் தொட்டுசேர்த்த
கை தலத்திடைக் கிடத்துவன், காக்குதி என்றான் 814

*பெய்-உற்ற, பெண்கொடி-சூர்ப்பநகை. காக்குதி-தடு.*

அல்லினுற் செய்த நிறத்தவன் அனையது பகர,
மல்லினுற் செய்த தோளினன் "மாற்றங்கள் நும்பால்
வில்லினுற் சொல்லின் அல்லது, வெந்திறல் வெள்கச்
சொல்லினுற் சொலக் கற்றிலம் யாம்"எனச் சொன்னன் 815

*அல்-இருள், மல்-வலிமை வில்லாற் காட்டுவதன்றி, வீரமற்ற பேடியாய்ச் சொல்லால் பேசி நில்லேன்.*

உற்ற காலையின் இராவணன் தம்பிமா டுதவ,
இற்ற தானையின் இருமடி இகல்படை ஏவ,
முற்றி அன்னவை முழங்குமுந் நீரென முடுகிச்
சுற்றி ஆர்த்தன சுமித்திரைச் சிங்கத்தைத் தொடர 816

*மாடு உதவ-பக்கத்து உதவியாக, முற்றி அன்னது-அச்சேனை சூழ்ந்து வளைத்து, முந்நீர்-கடல்.*

கண்டனன் வதனம் வாய் கண் கை கால்எனப்
புண்டரிகத் தடம் பூத்துப் பொற்சிலை
மண்டலந் தொடர்ந்து மண் வயங்க வந்ததோர்
கொண்டலிற் பொலிதரு கோலத்தான் தன்னை 817

கும்பகர்ணன் இராமனுக்கு:—புண்டரிகம்-தாமரை, சிலை மண்டலம்-வான வில் பிரபை, கொண்டல்-மேகம் இராமன்.

மாக் கவந்தனும்,வலி தொலைந்த வாலியாம்
பூக் கவர்ந் துண்ணியும் போலும் என்றெனைத்
தாக்க வந்தனை! இவன்றன்னை இன்னுயிர்
காக்க வந்தனை எனக் கழறல் மேயினன் 818

மா-பெரிய. பூ உண்ணி-குரங்கு, இவன்-இச்சுக்ரீவனை.

நேடினேன் திரிந்தனன் நின்னை. திக்கிறந்து
ஓடியது உன்படை, உம்பி ஓர்ந்து ஒரு
பாடுற நடந்தனன், அநுமன் பாறினன்,
கோறும் இவனைக் கொண்டு எளிதின் எய்தினேன் 819

இறந்து-கடந்து, பாடு-பக்கம், பாறினன்-சிதைந்தான், இவனை-சுக்ரீவனை.

ஏதுவெந் திறலினேய், இமைப்பிலோர் எதிர்
பேதுறு குரங்கையான் பிணித்த கைப்பிணி
கோதை வெஞ் சிலையினல் கோடி வீடெனில்,
சீதையும் பெயர்ந்தனள் சிறைநின்ருெம் என்ருன் 820

ஏது-ஆயுதங்கொண்ட, இமைப்பிலார்-தேவர், கோடிவீடு-விடுவித்துக் கொண்டாயெனின் பேதுறு-திண்டாடுகிற.

என்றலும் முறுவலித்து இராமன் "யானுடை
இன்துணை ஒருவனை எடுத்த தோளிணைக்
குன்றினும் உயர்ந்தன குறைக்கிலேன் எனின்
பின்றினேன் உனக்கு வில் பிடிக்கிலேன்" என்ருன் 821

இணை-இரண்டு, பின்றினேன்-தோற்றவனாவேன்.

மீட்டவன் கரங்களாம் விலங்கல் ஆரையே
மூட்டற நோக்குவான் முயலும் வேலையில்,
வாட்டலை பிடர்த்தலை வயங்க, வாளிகள்
சேட்டக நெற்றியின் இரண்டு சேர்த்தினன் 822

தன்னை மீட்கிற சுக்ரீவன் தன் கரங்களால், கும்பகர்ணனின் வளைந்து சுற்றிய கைக்கோப்பினை நீக்க முயலும்போது-இராமன் வாள்நுனி போன்ற (பிடரியில் தூணியிலிருந்த) அம்புகள் இரண்டை அவன் உயர்ந்த நெற்றியிற் செலுத்தினான். விலங்கல் ஆரை-மலையரண் போன்ற கை.

குன்றின்வீழ் அருவின் குதித்துக் கோத்திழி
புன்தலைக் குருதிநீர் முகத்தைப் போர்த்தலும்,
இன்துயில் எழுந்தன உணர்ச்சி எய்தினான்.
வன்திறல் தோற்றிலான் மயக்கம் எய்தினான் 823

நெற்றிக்குருதி முகத்தில் ஓட, தூக்கம் விட்டெழுவதுபோல் உணர்ச்சி பெற்று; உடனே மயக்கம் எய்தினான்.

கண்டனன் நாயகன் தன்னைக், கண்ணுறுத்
தண்டலில் மானமும் நாணும் தாங்கினான்.
விண்டவன் நாசியும் செவியும் வேரொடும்
கொண்டவன் எழுந்துபோய்த் தமரைக் கூடினான் 824

சுக்ரீவன் தப்பி ஓடிவந்து:—நாயகன்-இராமன், தண்டலில்-நீங்காது நிலைத்த, விண்டனன்-விட்டு நீங்கிய கும்பகர்ணனின், தமர்-இனத்தவர்.

ஏசியுற் றெழும், விசும்பினரைப் பார்க்கும்,தனி
நாசியைப் பார்க்கும், நடந்த நாளுடை
வாசியைப் பார்க்கும்,இம் மண்ணைப் பார்க்குமால்,
சீசிஉற்ற தெனத் தீயும் நெஞ்சினான் 825

கும்பகர்ணன்-ஏசி தன் குறைபாட்டைப் பழித்து, வாசி—பாணம்; கடந்த காலக்கூறு. சீசி-சீசீ.

ஏதியோ டெதிர் பெருந்துணை இழந்தனை,எதிர் ஒருதனி நின்றாய்
நீதியோனுடன் பிறந்தனை ஆகலின் நின்னுயிர் நினக் கீவேன்:
போதியோ, பின்றை வருதியோ, அன்றெனிற் போர்புரிந்திப் போதே
சாதியோ, நினக்குறுவது சொல்லுதி தெரிவுறச் சமைந் தம்மா 826

இராமன் கும்பகர்ணனுக்கு:—ஏதி-ஆயுதம், துணை-சேனைப்பலம், நீதியோன்-வீடணன்.

உங்கள் தோள்தலை வாள்கொடு துணித்து, எம்முன் உவந்தெய்த
நங்கை நன்னலம் கொடுக்கிய வந்தநான்-வானவர் நகை செய்யச்
செங்கை தாங்கிய சிரத்தொடும் கண்ணின்நீர் குருதியினொடு தேக்கி
எங்கைபோல் எடுத்தழைத்து நான் வீழ்வனோ இராவணன் எதிர் அம்மா 827

வாள்கொடு-வாளால், எம்முன்-என் அண்ணன் இராவணன் உவக்க, நங்கை சீதை, எங்கை-தங்கை சூர்ப்பநகைபோல, அழைத்து-அலறி அழுது, செங்கை-குருதிக் கறைபடிந்த கை.

ஐயன் வில்தொழிற் காயிரம் இராவணர் அமைவிலர்! யான் அந்தோ
கையும் கால்களும் இழந்தனென், வேறினி உதவலாம் துணை காணேன்.
மையல் நோய் கெடு முடிந்தவனும் என்று வரம்பின்றி வாழ்ந்தானுக்கு
உய்யுமாறு அரிதென்று உள்ளத்தின் உணர்ந்து ஒருதுயர் உற்றான் 828

*அழிவுறுகும்பகருணன் கூறுதல்:—அமைவு-ஈடு, முடிந்தவன்-இராவணன் முடிகிறான், இனி அவன் உய்தல் அரிது.*

நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறியறியான் என்தம்பி:
ஆதியாய், உனையடைந்தான், அரசர்உருக் கொண்டமைந்த
வேதியா, இன்னும் உனக்கு அடைக்கலம் யான்வேண்டினேன் 829

*வரம் வேண்டுதல்:—தம்பி வீடணனன், ஆதியாய்-முழு முதற்பொருளே.*

வெல்லுமா நினைக்கின்ற வேலரக்கன் வேரோடும்
கல்லுமா முயல்கின்றான், இவன்எனலும் கறுவுடையான்:
ஒல்லுமா றியலுமேல் உடன்பிறப்பின் பயன்ஓரான்,
கொல்லுமால் அவன்இவனை: குறிக்கோடி: கோடாதாய் 830

*அரக்கன்-இராவணன், இவன்-வீடணன், கறு-பகைமை, குறிக்கோடி-கவனத்திற்கொள்.*

தம்பிஎன நினைந்திரங்கித் தவிரான்அத் தகவில்லான்;
நம்பி இவன்றனைக் காணின் கொல்லும், இறை நல்கானல்.
உம்பியைத்தான் உன்னைத்தான் அநுமனைத்தான் ஒருபொழுதும்
எம்பி பிரியா னாக அருளுதி, யான் வேண்டினேன் 831

*தவிரான்-விடமாட்டான், இறை-சிறிதும் இரங்கான்.*

மூக்கிலா முகம்என்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை, நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய்: நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய், இதுநின்னை வேண்டுகின்ற பொருள்என்றான் 832

*நோக்காமை-பார்க்காவண்ணம்.*

## மாயா சனகப் படலம்

பண்களால் கிளவி செய்து, பவளத்தால் அதரம் ஆக்கிப்
பெண்களா னார்க்குள் நல்ல உறுப்பெல்லாம் பெருக்கி,நீட்ட
எண்களால் அளவா மானக் குணந்தொகுத் தியற்றினாளைக்
கண்களால் அரக்கன் கண்டான் அவளைஓர்கலக்கங் காண்பான்

*கிளவி-சொல், அதரம்-உதடு, அளவா-கணக்கிடமுடியாத, காண்பான்-செய்வதற்காக. இராவணன் கூறுகிறான்:—*

வஞ்சனேன் எனக்கு நானே, மாதரார் வடிவு கொண்ட
நஞ்சுதோய் அமுதம் உண்பான் நச்சினேன்: நாளுந் தேய்ந்து
நெஞ்சு நேரானதும்மை நினைப்புவிட்டு ஆவிநீக்க
அஞ்சினேன். அடியனேன் நும் அடைக்கலம். அமுதின் வந்தீர் 834

*நச்சினேன்-விரும்பினேன், நேரானது-நெறிப்பட்டுள்ளது.*

தோற்பித்தீர், மதிக்குமேனி சுடுவித்தீர், தென்றல் தூற்ற
வேர்ப்பித்தீர், வயிரத்தோளை மெலிவித்தீர், வேனில்வேளை
ஆர்ப்பித்தீர், என்னை இன்னல் அறிவித்தீர், அமரர் அச்சம்
தீர்ப்பித்தீர், இன்னம் என்னென் செய்வித்துத் தீர்ப்பீரம்மா! 835

*மதி-சந்திரனுல், வேள்-மன்மதன், ஆர்ப்பித்தீர்-ஓகை கூறவைத்தீர்.*

பெண்எலாம் நீரே ஆக்கிப், பேர்எல்லாம் உமதே ஆக்கிக்
கண்எலாம் நும்கண் ஆக்கிக், காமவேள் என்னும்நாமத்
தண்ணல் எய்வானும் ஆக்கி, ஐங்கணைக்கு அரியத் தக்க
புண்எலாம் எனக்கே ஆக்கி விபரிதம் புணர்த்தி விட்டீர் 836

*காமமேளை அம்பு எய்வான் ஆக்கி. அரியத்தக்க-குத்தித்தாக்கும்.*

ஊண்இலா யாக்கை பேணி உயர்புகழ் சூடாது உன்முன்
நாண்இலாதிருந்தேன் அல்லேன். நவையறு குணங்கள் என்னும்
பூண்எலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும் காதலால் இருந்தேன்கண்டாய் 837

*சீதை கூறுகிருள்:—ஊண் இலா-உணவின்றி, நவையறு-குற்றமற்ற.*

பிறையுடை நுதலார்க் கேற்ற பிறந்தஇல் கடன்கள் செய்ய
இறையுடை இருக்கை மூதூர் என்றும்வந்து இறுக்கலாதீர்,
சிறையிடை காண, நீரும் சிறையோடு சேர்ந்தவாறே!
மறையுடை வரம்பு நீங்கா வழிவந்த மன்னர் நீரே 838

*சீதை தந்தையை நினைத்து:—நுதலார்-பெண்களுக்கு உரிய கடமையைச் செய்யவும், (மகளுடைய) தலைவன் இருக்கும் மூதூரில் வந்து தங்கீர். காண-என்னைக்காண. வந்து சிறைப்பட்டீரோ!*

இருந்துநான் பகையை எல்லாம் எல்லைகண்டு அளவில்இன்பம்
பொருந்தினேன் அல்லேன், எங்கோன் திருவடிபுனைந்தேன் அல்லேன்
வருந்தினேன் நெடுநாள் உம்மை வழியொடுமுடித்தேன், வாயால்
அருந்தினேன் அயோத்திவந்த அரசர்தம் புகழை அம்மா 839

*இருந்து-இங்கு சிறையிலிருந்து, வழியோடு-வழிவழியாக, அருந்தினேன்-அழித்து முடித்தேன்.*

தேவரே முதலாம் மற்றைத் திண்டிறல் நாகர் மண்ணேர்
யாவரும் வந்து நுந்தை அடிதொழுது ஏவல் செய்வர்:
பாவைநீ இவனின் வந்த பயன்பழு தாவ தன்ருல்.
மூவுலகுஆளுஞ் செல்வம் கொடுத்தது முடித்தி என்ருன் 840

இராவணன்:—நுந்தை-சனகர், இவனின் வந்த-இவருக்கு மகளாகப் பிறந்த, கொடுத்து-தந்தைக்குக் கொடுத்து.

சொல்லுவ மதுர மாற்றம் துண்டத்தால் உண்டுன் கண்ணைக்
கல்லுவ காகம், வந்து கலப்பன கமலக் கண்ணன்
வில்லுமிழ் பகழி, பின்னர் விலங்கெழில் அலங்கல் மார்பம்
புல்லுவ களிப்புக் கூர்ந்து புலவுநாறு அலகை எல்லாம் 841

சீதை:—காகம் இனிது மகிழ்ந்து கரைந்து உன் கண்களைக் குத்தித் துண்டாக எடுத்து உண்ணும், இராமன் அம்பு உன் மார்பில் பாயும். பேய்க் கூட்டம் உன்னைப் புல்லும். மாற்றம்-பேச்சு, கல்லுவ-தோண்டும், அலங்கல்-பூ மாலை, அலகை-பேய்.

புன்மகன் கேட்டி, கேட்டற் குரியது புகுந்தபோரின்
உன்மகன் உயிரை எம்மோய் சுமித்திரை உய்ய ஈன்ற
நன்மகன் வாளி நக்க, நாய் அவன் உடலை நக்க
என்மகன் இறந்தான் என்ன நீஎடுத்து அரற்றல் என்ருள் 842

புன்மகன்-அற்பனே, மோய்-தாய், வாளி-அம்பு, அரற்றல்-புலம்புதல்.

பூவின்மேல் இருந்த தெய்வத் தையலும் பொதுமை யுற்ருள்
பாவியான் பயந்த நங்கை நின்பொருட்டாகப் பட்டேன்
ஆவிபோய் அழியல் நன்றே? அமரர்க்கும் அரசன் ஆவான்
தேவியா யிருத்தல் தீதே! சிறையிடைத் தேம்புகின்ருய் 843

மாயா சனகன்:—தையல்-லட்சுமி பொதுமகளாவாள், பயந்த-பெற்ற, பட்டேன்-வருந்துகிறேன்.

என்னைஎன் குலத்தினேடும் இன்னுயிர் தாங்கி, ஈண்டு
நன்னெடுஞ் செல்வம் துய்ப்பேன் ஆக்கினை நல்கி,நாளும்
உன்னைவெஞ் சிறையின் நீக்கி இன்பத்துள் உய்ப்பாய் என்னு,
பொன்அடிமருங்கு வீழ்ந்தான் உயிர்உகப் பொருமுகின்ருன் 844

நீக்கி-விடுவித்து, என்னு-என்று.

அவ்வுரை கேட்ட நங்கை செவிகளை அமையப் பொத்தி
வெவ்வுயிர்த்து ஆவிதள்ளி வீங்கினள் வெதுளிபொங்கி-
இவ்வுரை எந்தை கூருன். இன்னுயிர் வாழ்க்கை பேணி:
செவ்வுரை அன்றிதென்னுச் சீறினள் உளையச்செப்பும் 845

உயிர்த்து-பெருமூச்சு விட்டு, உளைய-உள்ளங்குலைந்து.

அறங்கெட, வழக்குநீங்க, அரசர்தம் மரபுக்குஆன்ற
மறங்கெட, மெய்ம்மைதேய, வசையுற, மறைகள்ஓதும்
திறங்கெட, ஒழுக்கங் குன்ற, தேவரும் பேணத் தக்க
நிறங்கெட இனையசொன்னாய். சனகன்கொல்நினையின்? ஐய 846

*மறம்-வீரம், நிறம்-சிறப்பு.*

நீயும்நின் கிளையும் மற்றிந் நெடுநில வரைப்பு நேரே
மாயினும் முறைமை குன்ற வாழ்வெனோ? வயிரத் திண்டோள்
ஆயிரம் நாமத் தாழி அரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்குவேனோ? நாண்துறந்து ஆவி நச்சி 847

*வரைப்பு-எல்லை, அரி-சிங்கம் இராமன், நச்சி-விரும்பி, ஆழி-சக்கராயுதன்.*

வரிசிலை ஒருவன் அல்லால், மைந்தர்என் மருங்கு வந்தார்
எரியிடை வீழ்ந்த விட்டில் அல்லரோ? அரசுக் கேற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை-அங்கணத் தழுக்குத் தின்னும்
நரியொடும் வாழ்வ துண்டோ,! நாயினும் கடைப்பட்டோனே 848

*ஒருவன்-இராமன் தவிரப் பிறர், அங்கணம்-சாக்கடை.*

என்னையும் கொல்லாய்,இன்னே இவனையும் கொல்லாய்,இன்னும்
உன்னையும் கொல்லாய்! மற்றிவ் வுலகையும் கொல்லாய்,யானோ
இன்னுயிர் நீங்கி என்றும் கெடாப்புகழ் எய்துகின்றேன்:
பின்னையும் எங்கோன் அம்பின் கிளையொடும் பிழையாய் என்றான்

*கொல்லாய்-கொல், கொல்லமாட்டாய், இவன்-சனகன், பிழையாய்-அம்புக்குத் தப்பமாட்டாய், உயிர்வாழாய்.*

நோக்கறவும் எம்பியர்கள் மாளவும்இந் நொய்திலங்கை
போக்கறவும்,மாதுலனார் பொன்றவும், பின்பிறந்தாள்
மூக்கறவும் வாழ்ந்தேன்: ஒருத்தி முலைக்கிடந்த
ஏக்கறவால், இன்னம் இரேனோ உனைஇழந்தும் 850

*இராவணன் அழுகை:—தம்பியர் இலங்கையைப் பார்ப்பதற்குமின்றி இறக்கவும், இலங்கைக்கு வருதலுமின்றி மாமன் மாரீசன் பட்டும், தங்கை மூக்கு இழந்தும் நான் இன்னும் வாழ்கிறேன். ஏக்கறவு-ஏக்கம், உனை-தம்பி உன்னை.*

செந்தேன் பருகித் திசைதிசையும் நீவாழ
உய்ந்தேன். இனிஇன்று! நானும் உனக்காவி
நொந்தேன் பிரியேன், தனிப்போகத் தாழ்க்கிலேன்,
வந்தேன் தொடர; மதகளிறே, வந்தேனால் 851

*தாழ்கிலேன்-தாமதியேன்.*

அண்டத் தளவும் இனைய பகர்ந் தழைத்துப்
பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான்
தொண்டைக் கனிவாய் துடிப்ப, மயிர்பொடிப்பக்
கெண்டைத் தடங்கண்ணுள் உள்ளே கிளுகிளுத்தாள் 852

அண்டமெல்லாம் கேட்க அழுது தன் பெயரின் காரணத்தை விளக்கி நின்ருன். இராவணன்-அழுகையன், தொண்டை-கொவ்வை.

கண்டாள் கருணனை,தன் கண்கடந்த தோளானை;
கொண்டாள் ஒருதுணுக்கம். அன்னவனைக் கொற்றவனுர்
தண்டாத வாளி தடிந்த தனிவார்த்தை
உண்டாள் உடல் தடித்தாள், வேருெருத்தி ஒக்கின்ருள் 853

முன்புகும்பகர்ணனைக் கண்டு ஒரு துணுக்கங்கொண்டாள். அன்னவனையும் தன் நாயகன் கொன்ருன் என அறிந்து உள்மகிழ்ந்து வீங்கினுள்.

## அதிகாயன் வதைப் படலம்

வெந்திறற் சித்தி கண்ட வீடணன் வியந்த நெஞ்சன்
அந்தர சித்தர் ஆர்ப்பும் அமலையும் கேட்டான். ஐயன்
மந்திர சித்தியன்ன சிலைத்தொழில் வலியி தாயின்,
இந்திர சித்தி னற்கும் இறுதியே இயைவ தென்ருன் 854

வீடணன் :—இலக்குவன் அதிகாயனைக் கொன்றதும் வீடணன்:—சித்தி - வெற்றி, அமலை-ஆரவாரம், இது வாயின் - இலக்குவன் திறன் இத்தகைத்தாயின்.

மண்ணினை எடுக்க எண்ணும், வானினை இடிக்க எண்ணும்
எண்ணிய உயிர்க ளெல்லாம் ஒருகணத்து எற்ற எண்ணும்
பெண்ணெனும் பெயர எல்லாம் பிளப்பன் என்றெண்ணும், எண்ணிப்
புண்ணிடை எரிபுக் கென்ன மானத்தால் புழுங்கி நையும் 855

மகன் இறந்ததைக் கேட்ட இராவணன்:—எடுக்க-தூக்கி எறிய.

அக்கன் உலந்தான், அதிகாயன் தானுலந்தான்,
மிக்க திறத்துள்ளார்கள் எல்லாரும் வீடினுர்.
மக்களில் இன்றுள்ளான் மண்டோ தரிமகனே,
திக்கு விசயம் இனி ஒருகாற் செய்யாயோ 856

தாய் தானைமாலை புலம்பல்:—அட்சகுமாரன் இறந்தான்....மண்டோதரி மகன்-இந்திரசித்து.

## நாகபாசப் படலம்

ஏற்றருந் தடந்தோள் ஆற்றல் என்மகன் எய்த பாசம்
காற்றிடைக் கழித்துத் தீர்த்தான் கலுழனும்! காண்மின் காண்மின்.
வார்த்தை யீதாயின் நன்று‌ல் இராவணன் வாழ்ந்த வாழ்க்கை!
மூத்தது கொள்கைபோலாம்! என்னுடை முயற்சி எல்லாம் 857

*இராவணன்:—காற்றிடை-காற்றினுல், கலுழன்-கருடன், மூத்தது-கால வேகத்தில் மாறிவிட்டது. மகன்-இந்திரசித்து, பாசம்-நாகபாசம்.*

### படைத்தலைவர் வதைப் படலம்

### மகரக்கண்ணன் வதைப் படலம்

## பிரமாத்திரப் படலம்

கும்பிகை திமிலை திண்டி குறடு மாப்பேரி கொட்டும்
பம்பை தார் முரசம் கஞ்சம் பாண்டில் போர்ப்பணவம் தூரி
கம்பலி உறுமை தக்கை கரடிகை துடிவேய் கண்டை
அம்பலி கனுவை ஊமை சகடையோ டார்த்த அன்றே 858

இருவிர் என்னெடு பொருதிரோ? அன்றெனின் ஏற்ற
ஒருவிர் வந்து உயிர் தருதிரோ? உம்படை யோடும்
பொருது பொன்றுதல் புரிதிரோ? உறுவது புகலும்.
தருவல் இன்றுஉமக் கேற்றுள தொன்றெனச் சலித்தான் 859

*இந்திரசித்து இலக்குவனை நோக்கி:—தருவது-இன்று உமக்கு ஏற்ற போர் தருவேன் என்ருன்.*

வாளில், திண்சிலைத் தொழிலினில், மல்லினில், மற்றை
ஆளுற் றெண்ணிய படைக்கலம் எவற்றினும், அமரில்,
கோளுற்று உன்னேடு குறித்தது செய்து உயிர்கொள்வான்
நாளுற்றேன்: இதுசரதம் என் றிலக்குவன் சொன்னுன் 860

*இலக்குவன்:—கோளுற்று-வலிமையுடன், கொள்வான்-கொள்ள.*

கும்ப கன்னன்என் றொருவன்,நீர் அம்பிடைக் குறைத்த
தம்பி அல்லன்யான்; இராவணன் மகன்ஒரு தமியேன்!
எம்பி மாருக்கும் என்சிறு தாதைக்கும் இருவீர்
செம்புண் ணீர்கொடு கடன்கழிப் பான்இன்று தீர்ந்தேன் 861

*தம்பி-இராவணன் தம்பி, இருவீர்-நும் இருவருடைய குருதி கொண்டு கருமாதி நடத்துவேன்.*

அரக்கர் என்பதோர் பெயர்படைத் தவர்க்கெலாம் அடுத்த
புரக்கு நன்கடன் செயஉளன் வீடணன் போந்தான்,
கரக்கு நுந்தைக்கு நீசெய்யக் கடவன கடன்கள்
இரக்க முற்று உனக்கு அவன்செய்யும் என்றனன் இளையோன் 862

*அடுத்த-உரிய, புரக்கும்-அவர்களை ஈடேற்றும் ஈமக்கடன், கரக்கும்-மறையும், அவன்-உன் தந்தை.*

எந்தை இறந்தான் என்றும் இருந்தேன். உலகெல்லாம்
தந்தனன் என்றும் கொள்கை தவிர்ந்தேன், தமியல்லேன்,
உய்ந்தும் இருந்தாய் நீஎன நின்றேன்: உரைகாணேன்
வந்தனென் ஐயா, வந்தனென் ஐயா, இனிவாழேன் 863

*கட்டுண்ட தம்பிக்காக இராமன்:—தந்தனன்-பரதனுக்கு அளித்த முறையும் உனக்கு இன்றி. உரை காணேன்-நீ பேசுவாயல்லை.*

வேலைப் பள்ளக் குண்டுஅகழிக்கும், விராதற்கும்
காலிற் செல்லும் காக மணிக்கும், கரனுக்கும்,
மூலப் பொத்தற் செத்த மரம்ஏழ் முதலுக்கும்,
வாலிக் கும்மே ஆயினவோஎன் வலி அம்மா! 864

*கடல் விராதன் காகம் கரன் மராமரம் வாலி இவர்கட்கோ என் வில்வலி? (கும்பியைக் காக்க அன்று!) கால்-காற்று.*

பிராட்டி களன் காண் படலம்

## மருத்து மலைப் படலம்

உயிர்ப்புமுன் உதித்த பின்னர் உரோமங்கள் சிலிர்ப்ப ஊறி
வியர்ப்புள தாகக் கண்கள் விழித்தன. மேனி மெல்லப்
பெயர்த்து வாய் புனல்வந் தூற, விக்கலும் பிறந்த தாக,
அயர்த்திலன் இராமன்நாமம் வாழ்த்தினன், அமரர் ஆர்த்தார் 865

*மயங்கிய அநுமான் எழுதல்:—பெயர்த்து-அசைத்து.*

சீதைஎன் றொருத்தியால் உள்ளம் தேம்பிய
பேதைஎன் சிறுமையால் உற்ற பெற்றியை
யாதென உணர்த்துகேன், உலகொ டீர்வுறுக்
காதை வன் பழியொடும் திருத்திக் காட்டினேன் 866

*இராமன் வருத்தம்:—பெற்றி-தன்மை, ஈர்வுறு-இணங்காத, திருத்தி-தெளிவாக.*

அழியுங் கால்தரும் உதவி - ஐயனே
மொழியுங்கால் தரும் உயிரின் முற்றுமே.
பழியும் காத்துஅரும் பகையும் காத்துஎமை
வழியும் காத்தனை, மறையும் காத்தனை 867

*இராமன் அநுமானுக்கு:—அழியுங்கால்-ஆபத்தில், உயிரைக் கொடுப்பினும் அதற்கு ஈடு ஆகுமோ! வழி-மரபு, மறை-வேதநெறி.*

## களியாட்டுப் படலம்

முத்தவாள் நகையின் மூரல் முகத்தியர் முழுக்கண் வேலால்
குத்துவார் கூட்டமெல்லாம் வானரக் குழுவில் தோன்ற;
மத்துவாழ் கடலின் உள்ளம் மறுகுற, வதனம் என்னும்
பத்து வாழ்மதிக்கும் அந்நாள் பகல்ஒத்தது இரவு பண்பால் 868

*யாவரும் எழுந்ததை அறிந்த இராவணன்:—முத்து பல்லுக்கு வெட்கும் முகத்துப் பெண்கள் குரங்குபோல் தோன்றினர். மறுகுற-கலங்க, முகச் சந்திரன் பொலி விழந்தனவால், இரவு பகலாயிற்று.*

## மாயா சீதைப் படலம்

தாதைக்கும் சடாயுவான தந்தைக்கும் தமிய ளாய
சீதைக்கும் கூற்றங் காட்டித் தவிர்ந்தில தொருவன் தீமை:
பேதைப்பெண் பிறந்து பெற்ற தாயர்க்கும் பிழைப்பிலாத
காதல் தம்பியர்க்கும் ஊர்க்கும் நாட்டிற்கும் காட்டிற்றன்றே 869

*இராமன் வருந்துதல்:—ஒருவன் தீமை-என் தீவினை, ஊர்-அயோத்தி, நாடு-கோசலநாடு.*

இற்றதொன்று உணரகில்லார் உணர்ந்து வந்து உருத்தாரேனும்
வெற்றிவெம் பாசம் வீசி விசித்தவன் கொன்று வீழ்ந்தால்
மற்றைவெம் புள்ளின்வேந்தன் வருகிலன், மருந்து நல்கக்
கொற்ற மாருதிஆங் கில்லை. யார்உயிர் கொடுக்கற் பாலார்? 870

*அயோத்தியிலிருக்கும் தம்பிமார் இங்கு நடந்ததை அறியார். விசித்து-கட்டி, புள்ளின் வேந்தன் கருடன்.*

வீரனும் ஐயந் தீர்ந்தான். வீடணன் தன்னை மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி ஐய,
தீர்வது பொருளோ துன்பம்? நீஉண்டு, தெய்வம் உண்டு
மாருதிஉண்டு, நாம்செய் தவம்உண்டு, மறையும் உண்டால் 871

*விடணன் உண்மை நிலை அறிவித்த பின்ட வீரன்-இராமன், தீர்வது பொருளோ-துன்பம் தீர்வது பெரிய காரியமன்று.*

## நிகும்பலைப் படலம்

நானுனை நயந்து கூறும் நயமொழி ஒன்றும் கேளாய்,
சானகி தன்னை வாளால் தடிந்ததோ, தனதன் தந்த
மானம்மேல் சேனையோடும் வடதிசை நோக்கி மீது
போனதோ? கோடிகோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய் 872

*இந்திரசித்தை அநுமான் எள்ளுதல்:—தனதன்-குபேரன், மானமேல்-விமானம் ஏறி.*

ஏந்தகல் ஞாலம்எல்லாம் இனிதுஉறைந் தியற்கை தாங்கும்
பாந்தளிற் பெரிய திண்டோள் பரதனை, பழியின் தீர்ந்த
வேந்தனைக் கண்டு,நீநின் வில்வலம் காட்டி மீண்டு
போந்ததோ! உயிருங்கொண்டே ஆயினும் புதுமை அன்றே! 873

*பாந்தள்-ஆதிசேடன், பெரிய உலகினை இயற்கையாகத் தாங்கி நிற்கிறது. பரதனை எதிர்த்து உயிருடன் மீண்டால் அது ஒரு புதுமை!*

அம்பரத் தமைந்த வல்வில் சம்பரன் ஆவி வாங்கி
உம்பருக்கு உதவி செய்த ஒருவனுக் குதவி செய்த
நம்பியை, முதல்வரான மூவர்க்கு நால்வரான
தம்பியைக் கண்டு, நின்தன் தனுவலங் காட்டிற்றுண்டோ? 874

*அம்பரம் - ஆகாயம், ஒருவன் - தசரதன், தம்பி - சத்துருக்கன், தனு வலம்-வில்வலி.*

இருவீரரும் இவன்இன்னவன் இவன்இன்னவன் என்னச்
செருவீரரும் அறியாவகை திரிந்தார் கணை சொரிந்தார்.
ஒருவீரரும் இவர் ஒக்கிலர்! எனவானவர் உவந்தார்:
பொருவீரையும் பொருவீரையும் பொருதால் எனப்பொருதார் 875

*இருவீரர்-இந்திரசித்தும் இலக்குவனும் யாரும் இனங்காணா வகையில் மூண்டு நின்று பொருதார். வீரை-கடல்.*

முரட்டடந் தண்டும் ஏந்தி மனிசரை முறையைக் குன்றி
பிரட்டரிற் புகழ்ந்து,பேதை அடியரின் இரந்து பின்சென்று,
இரட்டுறு முரசம் என்ன இசைத்ததே இசைக்கின்றாயைப்
புரட்டுவன் தலையை இன்று: பழிஎன ஒழிவென்போலாம் 876

*இந்திரசித்து வீடணனை இகழ்தல்:—முரண்தட தண்டு-வலிய பெரிய தண்டாயுதம். பிரட்டர்-நாடு கடத்தப்பட்டார்போல். இரட்டுறு முரசு-இரட்டை முரசு, ஒழிவன்-உன்னை விட்டுவைக்கிறேன்.*

பனிமலர்த் தவிசின் மேலோன் பார்ப்பன குலத்துக் கெல்லாம்
தனிமுதல் தலைவனென உன்னைவந்து அமரர் தாழ்வார்:
மனிசருக் கடிமை யாய்நீ இராவணன் செல்வம் ஆள்வாய்!
இனிஉனக் கென்னு! மானம் எங்களோ டடங்கிற் றன்றே 877

*மலர்-தாமரை, பார்ப்பனன்-பிரமன்.*

சொல்வித்தும் பழித்தும்,நுங்கை மூக்கினைத் துணிவித்தோரால்
எல்வித்தும் படைக்கை உங்கள் தமையனை எங்களோடும்
கொல்வித்தும், தோற்று நின்ற கூற்றினர் குலத்தை எல்லாம்
வெல்வித்தும் வாழும் வாழ்வின் பெருமையே விழுமி தன்றே! 878

*பிறரால் சொல்லியும். எல்வித்தும்-ஒளிவிசும், தமையன்-இராவணன், கூற்றினர்-யமபடைக்கு வெற்றி அளித்தும்.*

உண்டிலென் நறவம், பொய்ம்மை உரைத்திலென் வலியால்ஒன்றும்
கொண்டிலென், மாய வஞ்சம் குறித்திலென், யாருங்குற்றம்
கண்டிலர் என்பால், உண்டேல் நீயிரும் காண்டிர் அன்றே:
பெண்டிரிற் திறம்பினரைத் துறந்தது பிழையிற்றே? 879

*வீடணன் கூறுகிறன்:—நறவம்-மது, திறம்பினர்-நெறி தவறியவர். பிழையிற்றே-பிழை ஆகுமோ?*

அறத்தினைப் பாவம் வெல்லாது என்னும தறிந்து, ஞானத்
திறத்தி னதுறும் என்றெண்ணித் தேவர்க்குந்தேவைச் சேர்ந்தேன்
புறத்தினிப் புகழேஆக! பழியோடும் புணர்க! போதச்
சிறப்பினிப் பெறுக,தீர்க; என்றனன்சீற்றம் தீர்ந்தான் 880

*ஞானத்தின் அது உறும்-அஃதே அறிவும் ஆகும். புகழ் பழி சிறப்பு இழிவு இவைபற்றி இனிக் கருதேன்.*

## இந்திரசித்து வதைப் படலம்

முன்னையோர் இறந்தார் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றார் எல்லாம் வென்றனர் பெயர்வர் என்றும்
உன்னை நீ அவரைவென்று தருதிஎன் றுணர்ந்தும் அன்றல்:
என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்

*இராவணன் இந்திரசித்தை முனிதல்:—பெயர்வர்-மீள்வர், தருதி-சீதையை நிலையாகத் தருவாய்.*

பேதைமை உரைத்தாய் மைந்த, உலகெலாம் பெயரப் பேராக்
காதைஎன் புகழினேடு நிலைபெற, அமரர் காண
மீதெழு மொக்குள் அன்ன யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவதுண்டோ? இருபது திண்டோள் உண்டாய் 882

*பெயர-அழியினும், பேரா-அழியா, மொக்குள்-நீர்க்குமிழ், யாக்கை-உடல்.*

**வென்றிலன் என்ற போதும் வேதம்உள் ளளவும் யானும்**
**நின்றனன் அன்றே! மற்றவ் விராமன்பேர் நிற்குமாயின்.**
**பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ, பொதுமைத் தன்றே!**
**இன்றுள்ளார் நாளைமாள்வார்: புகழுக்கும் இறுதி உண்டோ 883**

*நின்றனன்-நிலைப்பேன், பொன்றுதல்-இறப்பு.*

**விட்டனன் சீதைதன்னை என்னலும், விண்ணோர் நண்ணிக்**
**கட்டுவ தல்லால் பின்னை யான்எனக் கருதுவாரோ!**
**பட்டனன் என்ற போதும் எளிமையிற் படுகிலேன் யான்,**
**எட்டினோ டிரண்டும் ஆய திசைகளை எறிந்து வென்றேன் 884**

*கட்டுவர்-என்னைக் கட்டுவர், இராவணன் என அஞ்சார்.*

**மறைகளே தேற்றத் தக்க வேதியர் வணங்கற் பால**
**இறையவன் இராமன் என்னும் நல்லற மூர்த்தி யாயின்,**
**பிறை எயிற்று இவனைக் கோறி என்றொரு பிறைவாய் வாளி**
**நிறையுற வாங்கி விட்டான் உலகெலாம் நிறுத்தி நின்றான் 885**

*இலக்குவன் அம்பு எய்யும் முறை:—தேற-ஆராய்ந்தறிய, கோறி-கொல்தி, நிறுத்தி-உலகம் நிலைகெடாது காப்பாற்றிநின்ற இலக்குவன்.*

**வீங்கிய தோளன் தேய்ந்து மெலிகின்ற பழியன், மேன்மேல்**
**ஓங்கிய உவகை ஊறும் உள்ளத்தன், உம்பர்க் காகத்**
**தேங்கிய கடலை முன்னாள் திரித்தவன் சேய் செங்கையால்**
**தாங்கிய குரிசில் பற்றி கொணர்ந்திடுந் தலையைக் கண்டான் 886**

*அங்கதன் இந்திரசித்தின் தலையொடு நிற்க, இராமன் கண்ணுற்றான்: உள்ளத்தன்-இராமன், திரித்தவன் சேய்-கடல் கடைந்த வாலி மகன்.*

**தலையினை நோக்கும், தம்பிகொற்றவை தழீஇய பொற்றோள்**
**மலையினை நோக்கும், நின்ற மாருதி வலியை நோக்கும்,**
**சிலையினை நோக்கும், தேவர் செய்கையை நோக்கும், செய்த**
**கொலையினை நோக்கும், ஒன்றும் உரைத்திலன் களிப்புக் கொண்டான் 887**

*கொற்றவை-வெற்றித் திருமகள், தேவர் செய்கை-களித்தலும் அதர்மத்தை அழித்தலும்.*

காள மேகத்தைச் செக்கர் கலந்தெனக், கரிய குன்றம்
நாள்வெயில் பரந்த தென்ன நம்பிதன் தம்பி மார்பில்
தோளின்மேல் உதிரச் செங்கேழ்ச் சுவடுதன் உருவில் தோன்ற
தாளின்மேல் வணங்கினானைத் தழுவினன் தனித்தொன் றில்லான் 888

காளமேகம் - கருமேகம், செக்கர் - செவ்வானம், செங்கேழ் - செந்நிறம், தனித்து ஒன்றில்லான்-எல்லாம் தானே ஆகிய கடவுள் இராமன்.

கம்ப மதத்துக் கழியானைக் காவற் சனகன் பெற்றெடுத்த
கொம்பும் என்பால் இனிவந்து குறுகினாள் நன்று எனக்கு ளிர்ந்தேன்:
வம்புசெறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி உடையான் படையஞ்சான் என்னும் மாற்றம் தந்தனையால்!

கம்பம்-கட்டுத்தறி, வம்பு-வாசனை, மாற்றம்-சொல்லை நிலைநாட் டினை.

வீக்கிய தூணி வாங்கித் தோளொடு மார்பைச் சுற்றித்
தூக்கிய கவச பாசம் ஒழித்தது விரைவின் நீக்கித்
தாக்கிய பகழிக் கூர்வாய் தடிந்தபுண் தழும்பும் இன்றிப்
போக்கினன் தழுவிப் பல்கால் பொற்றடந் தோளின் ஒற்றி 890

தூணி-அம்புப் பையை அகற்றி, பாசம்-கவசக் கட்டுகள், பகழி-அம்பு.

ஆடவர் திலக நின்னால் அன்று, இகல் அநுமன் என்னும்
சேடனால் அன்று, வேறோர் தெய்வத்தின் சிறப்பும் அன்று,
விடணன் தந்த வெற்றி ஈதென விளம்பி மெய்ம்மை
ஏடவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன் இனிதின் இப்பால். 891

இராமன் வீடணனுக்கு நன்றி உரை:—ஆடவர் திலகம்-இலக்குவன், சேடன்-சிரேட்டன், ஏடு-இதழ், அலங்கல்-மாலை, மார்பன்-இராமன்.

## இராவணன் சோகப் படலம்

கந்தர்ப்பர் இயக்கர் சித்தர் அரக்கர்தம் கன்னிமார்கள்
சிந்தொக்கும் சொல்லினார் உன்தேவியர் திருவின் நல்லார்
வந்துற்று, "என் கணவன் றன்னைக் காட்"டென்று மருங்கு வீழ்ந்தால்
அந்துஒக்க அரற்றவோ யான்? கூற்றையும் ஆடல் கொண்டேன்

இராவணன் மகனுக்காக இரங்கல்:—சிந்து-இனிய பண், திருவின்-திருமகளைவிட, அந்து-நெற்பூச்சி.

சினத்தொடும் கொற்றம் முற்றி இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன். நேரிழை ஒருத்தி நீரால்:
எனக்குநீ செய்யத் தக்க கடன்எல்லாம் ஏங்கி ஏங்கி
உனக்குநான் செய்வதானேன்; என்னின்யார் உலகத்துள்ளார் 893

வெற்றியே எய்தி இந்திர செல்வம்பெற்று உயர்ந்தயான். கடன்-நீர்க் கடன், என்னின்-என்போல் பாவி.

பஞ்செரி உற்ற தென்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிசர் வெல்ல விளைந்ததே மீண்டதில்லை.
அஞ்சினேன் அஞ்சினேன் இச்சீதை என்று அமிழ்தாற் செய்த
நஞ்சினல் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றே 894

மண்டோதரி புலம்பல்:—பஞ்சில் எரிஉற்றதுபோல். பரவை-கடல் அத்துணை அரக்கர்.

இன்று நீ இவளை வாளால் எறிந்து, போய் இராமன்றன்னை
வென்று மீண்டிலங்கை மூதூர் எய்தினை வெதும்பு வாயோ?
பொன்றினள் சீதை என்றே போவர்கள் அவர்தாம், அல்லால்
வென்றிட முடியா தென்னும் வீரமோ விளம்ப? என்றான் 895

இராவணனுக்கு மகோதரன் கூறுகிறான்:—பொன்றினள்-வெட்டுண்டு இறந்துவிட்டாள்.

படைக் காட்சிப் படலம்

மூலபல வதைப் படலம்

## வேல் ஏற்ற படலம்

வென்றி என்வய மானது! வீடணப் பசுவைக்
கொன்றினிப் பயன் இல்லைஎன்று, இராவணன் கொண்டான்:
நின்றிலன் ஒன்று நோக்கிலன் முனிவெலாம் நீத்தான்,
பொன்திணிந்தன மதிலுடை இலங்கையூர்ப் புகுந்தான் 896

இராவணன் வீடணனைக் குறித்து:—முனிவு–பழைய கோபம்.

எழுந்துநின் றநுமன்தன்னை இருகையால் தழுவி, எந்தாய்
விழுந்திலன் அன்றே மற்றவ் வீடணன்? என்ன விம்மித்
தொழுந்துணை யவனைநோக்கித் துனுக்கமும் துயரும் நீங்கக்
கொழுந்தியும் மீண்டாள்,பட்டான் அரக்கன் என்று உவகை கொண்டான் 897

இலக்குவன் எழுந்து:-தொழும்-தன்னைத்தொழும் வீடணனை. கொழுந்தி-மதனி.

உற்றது முழுதும் நோக்கி ஒழிவற உணர்வுள் ளூறச்
சொற்றனன் சாம்பன்: வீரன் அநுமனைத்தொடரப் புல்லிப்
பெற்றனென் உன்னை,என்னைபெருதன? பெரியோய், ஒன்று
மற்றிடை யீறுசெல்லா ஆயுளை ஆக!என்றான் 898

வீரன்-இராமன், உன்னைப் பெற்றுள்ளயான் எல்லாம் பெற்றவன்; நீ அழியா நீடிய ஆயுள் பெறுக. என்னை யாது?

## தேர்ஏறு படலம்

மன்றலங் குழல் சனகி தன் மலர்க்கையால் வயிறு
கொன்று அலந் தலேக்கொடு நெடுந் துயரிடை குளித்தல்,
அன்றி தென்றிடில்- மயன்மகள் அத்தொழில் உறுதல்,
இன்று இரண்டில்ஒன் ருக்குவென் தலேப்படின் என்ருன் 899

*இராவணன் சபதம்:—சானகி வயிற்றிலடித்து வருந்துதல், அல்லது மயன்மகள் மண்டோதரி அவ்வாறு அழுந்தல்; இரண்டில் ஒன்று இன்று செய்வேன்.*

## இராவணன் வதைப் படலம்

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய பெருந்தவமும், முதல்வன் முன்னள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும், ஏனேத்
திக்கோடும் உலகனேத்தும் செருக்கடந்த புயவலியும்தின்று- மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்றன் புனித வாளி 900

*மண்டோதரி புலம்பல்:—முதல்வன்-பிரமன், புக்குஒடி-உள் நுழைந்து.*

வெம்மடங்கல் வெகுண்டனேய சினம்அடங்க, மனம்அடங்க, வினேயம் வீயத்
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க, மயலடங்க, ஆற்றல் தேயத்
தம்அடங்கு முனிவரையும் தலேயடங்க நிலேயடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன அம் முறைதுறந்தான் உயிர்துறந்த முகங்கள் அம்மா

*இராவணன் முகப்பொலிவு:—மடங்கல்-சிங்கம், தெம்மடங்க-பகைவர் அடங்க, மயல்-மையல், தம்அடங்கு-தம்மை அடக்கிய.*

ஆயிரந் தோளினனும் வாலியும் அரிதின் ஐய
மேயின வென்றி விண்ணேர் சாபத்தின் விளேந்த மெய்ம்மை:
தாயினும் தொழத் தக்காள்மேல் தங்கிய காதல்தன்மை
நோயும்நின் முனிவும் அல்லால், வெல்வரோ நுவலற்பாலார் 902

*வீடணன் இராமனே நோக்கி:—கார்த்தவீரியன், வாலி இருவரும் தேவர் சாபத்தால் தீங்குபெற்ருர், காதல் நோயும் உன் சினமும் அன்றிப் பிறர்வீரம் பேசுவோர் இவனே வெல்வரோ?*

உண்ணுதே உயிருண்ணு தொருநஞ்சு சனகிஎனும் பெருநஞ்சு உன்னேக்
கண்ணுலே நோக்கவே போக்கியதே, உயிர்நீயும் களப்பட் டாயே.
எண்ணுதேன் எண்ணியசொல் இன்றினித்தான் எண்ணுதியோ, எண்ணில் ஆற்றல்
அண்ணுவோ அண்ணுவோ அசுரார்கள்தம் பிரளயமே அமரர்கூற்றே 903

*வீடணன் அண்ணனுக்காகப் புலம்பல்:—நஞ்சு அதனை உண்ணுமற் கொல்லாது, ஆனல் சானகி?—உன்னை அண்ணன் என்று எண்ணுமல் பிரிந்தயான் எண்ணிக் கூறியவற்றை இப்பொழுது எண்ணுகிருயா?*

**ஓராசை ஒருவன்மேல் உயிராசைக் குலமகள்மேல் உடைய காதல்**
**தீர்ஆசை பழிஎன்றேன், எனைமுனிந்த முனிவாறித் தேறி னயோ.**
**பேராசைப் பட்டெழுந்த குலம்முற்றும் பொன்றவும், தான்பொங்கிநின்ற**
**பேராசை பேர்ந்ததோ, பேர்ந்தாசைக் கரிஇரியப் புருவம் பேர்த்தோய் 904**

*ஒரே ஆசை, உயிர்க்குயிராய்த் தன் கணவன்மீது ஆசைகொண்ட சீதை, ஆசைக்கிரி இரிய-திக்குயானைகள் நிலைகெடப் புருவம் கோட்டியவனே.*

**போர்மகளை கலைமகளை, புகழ்மகளைத் தழுவியகை பொருமைகூரச்**
**சீர்மகளை திருமகளைத் தேவர்க்குந் தெரிவரிய தெய்வக் கற்பின்**
**பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா,பின்னைப்**
**பார்மகளைத் தழுவினையே! திசையானைப் பணைஇறுத்த பணைத்த மார்பால் 905**

*பேர்மகள்-சீதை, பார்மகளை-பூமியிற் கவிழ்ந்து கிடக்கின்ருயே. பணை-கொம்பு.*

**அன்னேயோ அன்னேயோ ஆகொடியேற் கடுத்தநாள், அரக்கர் வேந்தன்**
**பின்னேயோ இறப்பது,முன் பிடித்திருந்த கருத்ததுவும் பிடித்திலேனே!**
**முன்னேயோ, விழுந்ததுவும் முடித்தலையோ, படித்தலைய முகங்காட்டாயோ**
**என்னேயோ என்னேயோ இராவணனர் முடிந்தபரிசுஇதுவோ பாவம்! 906**

*மண்டோதரி புலம்பல்:—அன்னேயோ-ஐயோ ஐயோ. பிடித்திருந்த கருத்து-கணவனுக்குமுன் இறப்பது, படித்தலைய-பூமியிற்கிடப்பவை.*

**வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்**
**எள்இருக்கும் இடம்இன்றி உயிர்இருக்கும் இடன்நாடி இழைத்த வாரோ!**
**கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்**
**உள்இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி 907**

*முடியான்-சிவன், வெற்பு-கயிலாயமலை, இழைத்தவாரோ-செய்துள்ள முறையோ, வாளி-அம்பு.*

**காந்தையர்க்கு அணிஅனைய சானகியார் பேரழகும் அவர்தம்கற்பும்**
**ஏந்துபுயத்து இராவணனர் காதலும்அச் சூர்ப்பநகை இழந்தமூக்கும்**
**வேந்தர்பிரான் தயரதனர் பணியினல் வெங்கானில் விரதம் பூண்டு**
**போந்ததுவும், கடைமுறையே புரந்தரனர் பெருந்தவமாய்ப் போயிற்றம்மா 908**

*காந்தையர்-பெண்கள், பணி-கட்டளை, புரந்தரனர்-இந்திராதி தேவர்.*

ஆரா அமுதா யலைகடலிற் கண்வளரும்
நாராயணன் என்றிருப்பேன் இராமனை நான்:
ஓராதே கொண்டகன்ருய் உத்தமனர் தேவிதனை:
பாராயோ நின்னுடைய மார்பகலம் பட்டஎலாம் 909

*நான் இராமனை நாராயணனுகத் தொழ, நீ அறிவின்றி அவன் மனைவியை எடுத்தகன்ருய்: இப்போது பட்டதென்ன! பார்.*

## மீட்சிப் படலம்

மெய்கொள் வேத விதிமுறை விண்ணுளோர்
தெய்வ நீள்புனல் ஆடல் திருத்திட
ஐயன் ஆணையி னல்இளங் கோளரி
கையி னல்மகு டங்கவித் தான்அரோ 910

*தேவர்கள் அபிடேகம் நடத்த, இராமன் கட்டளைப்படி இலக்குவன் வீடணனுக்கு முடி சூட்டினுன்.*

ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆழி யான அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம் 911

*அநுமான் சீதையிடம் மாராயம்பாடி அறிவித்தல்:—ஆழி-கடல் ஒத்த வலிய, சூழியானை-முகபடாம் அணிந்த யானை ஒத்த இராமன்.*

அனையளாகி அநுமனை நோக்கினள்
இனைய தின்ன தியம்புவ தென்பதோர்
நினைவி லாது நெடிதிருந்தாள். நெடு
மனையின் மாசு துடைத்த மனத்தினள் 912

*அனையளாகி-களிப்புற்றவளாக, மனை-இல்வாழ்வு.*

யாதிதற்கு ஒன்று இயம்புவ தென்பது,
மீதுயர்ந்த உவகையின் விம்மலோ?
தூது பொய்க்கு மென்ருே?எனச் சொல்லினன்
நீதி வித்தகன். நங்கை நிகழ்த்தினள் :- 913

*என்பது-என்று வாளா இருப்பது, வித்தகன்-அநுமான்.*

மேக்கு நீங்கிய வெள்ள உவகையால்
ஏக்க முற்ருென்று இயம்புவ தியாதென
நோக்கி நோக்கி அரிதென நொந்துளேன்:
பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ! 914

*மேக்கு-இதனின் மேலானது: அரிதென-ஒன்றும் இயம்பமுடியாதவளாக.*

முன்னை நீக்குவன் மொய்சிறை என்றநீ
பின்னை நீக்கி உவகையும் பேசினை:
என்ன பேற்றினை ஈகுவ தென்பதை
உன்னி நோக்கி உரைமறந் தோவினேன் 915

முன்னை-முன்னர் வந்தபோதே, பின்னை-இப்போது, ஓவிவேன்-வறிதே யுற்றேன்.

எனஉரைத்துத் "திரிசடையாள் எம்மோய்
மனையினிற் சுடர்மாமுக மாட்சியாள்
தனைஒழித்து,இவ் வரக்கியர் தங்களை
வினையினிற் சுட வேண்டுவன் யான்" என்ருன் 916

அநுமான் கூறுகிருன்:—மோய்-தாய், சுடர்-விளக்குப்போன்று ஒளிர்.

குடல் குறைத்துக் குருதி குடித்தவர்
உடல் முருக்கியிட்டு உண்குவன் என்றலும்
அடல் அரக்கியர் "அன்னை,நின் பாதமே
விடலம் மெய்ச்சரண்" என்று விளம்பலும்- 917

குடலைப்பிடுங்கிக் குருதியைக் குடித்து அவர்களை அழிப்பேன். விடலம்-வி' டு அகலோம்.

அன்னை "அஞ்சன்மின் அஞ்சன்மின் நீர்"என
மன்னு மாருதி மாமுகம் நோக்கி,"வேறு
என்ன தீமை இவர்இழைத்தார்? அவன்
சொன்ன சொல்லின் அல்லது." தூய்மையோய் 918

அவன்-இராவணன்.

யான் இழைத்த வினையினின் இவ்விடர்
தான் அடுத்தது. நாயினும் அன்பினேய்,
கூனியிற்கொடி யார்அலரே இவர்?
போன அப்பொருள் போற்றலை புந்தியோய் 919

இழைத்த-செய்த, போற்றலை-எண்ணவேண்டாம்.

எனக்கு நீஅருள் இவ்வரம்-தீவினை
தனக்கு வாழ்விடம் ஆய சழக்கியர்
மனக்கு நோய்செயல் என்றனள். மா மதி
தனக்கு மாமறு தந்த முகத்தினள் 920

சழக்கியர்-அறிவிலார், மனக்கு-மனத்துக்கு, செயல்-செய்யேல், மாமதி-சந்திரனும் களங்கமுற ஒளிரும் சீதை.

சீலமும் காட்டி,என் கணவன் சேவகக்
கோலமும் காட்டி,என் குலமும் காட்டி,இஞ்
ஞாலமும் காட்டிய கவிக்கு நாள்அருக்
காலமும் காட்டுமே கொல்!என் கற்பென்ருள் 921

அநுமானைப் பாராட்டுகிருள்:—சேவகம்-வீரம், காட்டி-உலகுக்கு விளக்கி, ஞாலம்-உலகியல், கவி—குரங்கு அநுமான், நாள்அரு-முடிவிலா வாழ்நாள்.

“எச்சில் என்உடல், உயிர்ஏகிற்றே,இனி
நச்சிலை” என்பதோர் நவையிலாள் எதிர்
பச்சிலை வண்ணமும் பவள வாயுமாய்
கைச்சிலை ஏந்திநின் றதனைக் கண்ணுற்ருள் 922

இராவணன் மனை உற்றதால் உடல் எச்சிலாயிற்று, உயிர் ஒழிந்தது, இனி எனக்கு யாதொரு ஆசையும் இல்லை-என்பாள் தன்முன் இராமனைக் கண்டாள்.

கற்பினுக் கரசினை, பெண்மைக் காப்பினை,
பொற்பினுக் கழகினை, புகழின் வாழ்க்கையை-
தற்பிரிந் தருள்புரி தருமம் போல்இயை
அற்பின்அத் தலைவனும் அமைய நோக்கினன் 923

காப்பு-அரண் போன்றவள்: தன்னைப் பிரிந்தும் அருள்புரி தர்மத்தின் உருவமான இராமன் கண்ணுற்ருன்.

ஊண்திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை. முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டுறைந்து அடங்கினை, அச்சந் தீர்ந்திவண்
மீண்டதென் நினைவெனை, விரும்பும் என்பதோ? 924

முறை திறம்பிய அரக்கன் மனையில் உறைந்தாய், ஊன் உண்டாய், ஒழுக்கங்கெட்டாய், உயிர்விட்டாயல்லை. விரும்பும்-இவன் விரும்புவான்.

பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பெனும்
திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
உண்மையும்- நீஎனும் ஒருத்தி தோன்றலால்
வண்மையில் மன்னவன் புகழின் மாய்ந்ததால் 925

வண்மை-ஈகை.

அடைப்பர் ஐம் புலன்களை, ஒழுக்கம் ஆணியாய்ச்
சடைப்பரம் தகைந்ததோர் தகைவின் மாதவம்
படைப்பர்; வந்திடை ஒரு பழிவந் தால்அது
துடைப்பர் தம்உயிரொடும் குலத்தின் தோகைமார் 926

*குலத்திற் பிறந்த மாதர் புலன்களை அடக்குவர், ஒழுக்கந்தாங்குவர், முடிதிரையக் கட்டித் தவம்புரிவர்; ஒரு பழி வந்துறின் உயிரை மாய்த்து நிற்பர்*

எத்தவம் என்னலம் என்றன் கற்பு நான்
இத்தனை காலமும் உழந்த இவ்வெலாம்
பித்தென லாய வம்பிழைத்த லால் அன்றே,
உத்தம,நீ மனந் துணிந்தி லாமையால் 927

*சீதை:—என் பெருந்தவம், நலம், கற்பு, வருத்தங்கள் நீ உணர்ந்திலாமையால் வீணாயின, பித்துற்றன.*

ஆதலிற் புறத்தினி யாருக்காக என்
கோதறு தவத்தினைக் கூறிக் காட்டுகேன்?
சாதலிற் சிறந்ததொன் றில்லை, தக்கதே,
வேத,நின் பணிஅது விதியும் என்றனள் 928

*யாருக்காக-உன்னையன்றி யாருக்காக, காட்டுவேன்-உணர்த்துவேன், நீ இட்ட கட்டளை எனக்குஉற்ற விதியும் ஆகும்.*

கனத்தினற் கடந்தபூண் முலைய கைவளை
மனத்தினல் வாக்கினல் மறுவுற் றேன்எனின்
சினத்தினற் சுடுதியால் தீச்செல்வா, என்ருள்:
வனத்துளாய் கணவற்கும் வணக்கம் போக்கினள் 929

*இலக்குவன் மூட்டிய தீயை நோக்கி:—பருத்துமிக்க பூண் அணிந்து, வளையல்களையும் அணிந்த சீதை "தீயே சுடு" என்று இராமனுக்கும் வணக்கம் புரிந்தாள்.*

பொன்னைத் தீயிடைப் பெய்தல்அப் பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற்கென்பது மனக்கௌல் தகுதி.
உன்னைக் காட்டினன் கற்பினுக்கு அரசிஎன் றுலகில்
பின்னைக் காட்டுதற்கு அரியதென் றெண்ணிஇப் பெரியோன் 930

*தசரதர் மண்ணுலகுக்கு வந்து:—பின்பு உன் கற்பின் தூய்மையை விளக்குதல் அரிது என்று இராமன் இப்போது விளக்கி நின்ருன், என்ருர்.*

என்று பின்னரும் இராமனை "யான் உனக்குஈவது
ஒன்று கூறுதி, உயர்குணத் தோய்"என, அனையான்
சென்று வானிடைக் கண்டுஇடர் தீர்வன் என்றிருந்தேன்,
இன்று காணப் பெற்றேன்இனிப் பெறுவதென்? என்ருன் 931

*யான் வானில் வந்து உன்னைக் காணலாம் என்றிருந்தேன்: அனையான்-இராமன்.*

ஆயினும்உனக் கமைந்தது ஒன்றுஉரைஎன, அழகன்
தீயள் என்றுநீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரந் தருகெனத் தாழ்ந்தான்.
வாய்திறந் தெழுந் தார்த்தன உயிரெலாம் வழுத்தி 932

தெய்வம் ஒத்த கைகேசியும்: அழகன்-இராமன்.

"வரதகேள்"எனத்; தயரதன் உரைசெய்வான்: மறுஇல்
பரதன் அன்னது பெறுக,தான் முடியினைப் பறித்திவ்
விரத வேடம் மற்றுஉதவிய பாவிமேல் விளிவு
சரதம் நீங்கலா தாம் என்றுன் தழீஇயகை தளர 933

முடியினை-அரசமுடி, பாவி-கைகேசி, விளிவு-என் சபதம், சாபம்.

ஊன்பிழைக்கிலா உயிர்நெடி தளிக்கும் நீள்அரசை
வான்பிழைக்குஇது முதல்எனுது, ஆள்வுற மதித்து
யான்பிழைத்த தல்லால், என்னை ஈன்ற எம் பிராட்டி
தான் பிழைத்ததுஉண்டோ என்றுன், அவன் சலம் தவிர்ந்தான் 934

இராமன்:—உயிர்கட்குத் தீங்கு இல்லாமல் நீண்டகாலம் காப்பாற்ற வேண்டிய அரச பதவி பெருங் குற்றங்கட்கெல்லாம் அடிப்படையாகும் என்று நீக்காமல், ஆட்சிமுறையை ஏற்று நான் தவறுசெய்தேன். வான்-பெரிய, முதல்-அடிப்படை.

எவ் வரங்களும் கடந்தவன் அப்பொருள் இசைப்ப,
தெவ் வரம்பறு கானிடைச் செலுத்தினுட்கு ஈந்த
அவ் வரங்களும் இரண்டு: அவைஆற்றினுற்கு ஈந்த
இவ் வரங்களும் இரண்டென்றுர் தேவரும் இரங்கி 935

தேவர்கள் வாழ்த்துதல்:—கடந்தவன்-இராமன், அவை ஆற்றினுர்க்கு-நிறைவேற்றிய இராமனுக்கு.

கோட்டு வார்சிலைக் குரிசிலை, அமரர்தம் குழாங்கள்
மீட்டு நோக்குரு "வீரநீ வேண்டுவ வரங்கள்
கேட்டியால்"என, "அரக்கர்கள் கிளப்பருஞ்செருவில்
வீட்ட மாண்டுள குரங்கெலாம் எழு"கென விளம்பி 936

நோக்குரு-நோக்கி, கோட்டு-வளைந்த, வீட்ட-இறந்த.

பின்னும் ஓர்வரம், "வானரப் பெருங்கடல் பெயர்ந்து
மன்னு பல்வனம் மால்வரைக் குலங்கள் மற்றின்ன
துன்இடங்கள் காய் கனிகிழங்கொடு தேன் துற்ற
இன்உண்ணீர்உள ஆக விளம்பிடு"கென்றுன் 937

வரை-மலை. துன்-சேரும், துற்ற-நெருக்கம்.

வரந்தரும் முதல் மழுவலான் முனிவரர் வானோர்
புரந்தராதி மற் றேனையோர் தனித்தனிப் புகழ்ந்தாங்கு
அரந்தை வெம்பிறப்பு அறுக்கு நாயக,நினது அருளால்
குரங்கினம் பெறுக என்றனர் உள்ளமும் குளிர்ப்பார் 938

*மழுவலான்-சிவன், புரந்தரன்-இந்திரன், அரந்தை-துன்பமான, பெறுக-உணவும் நீரும் பெறுக.*

பார மாமதில் அயோத்தியின் எய்தி,நின் பைம்பொன்
ஆர மாமுடிக் கோலமும் செல்வியும் அழகும்
சோர்விலாது யாம் காண்குறும் அளவையும் தொடர்ந்து
பேரவே அருள் என்றனர் உள்ளன்பு பிணிப்பார் 939

*விடணன் இராமனுக்கு:—முடிக்கோலம்-முடிசூட்டுவிழா, பேர-தொடர்ந்து வந்து பின்திரும்ப.*

அன்பினால்அவர் மொழிந்த வாசகங்களும் அவர்கள்
துன்பம் எய்திய நடுக்கமும்நோக்கி: நீர் துளங்கல்,
முன்பு நான்நினைந் திருந்ததப் பரிசு,நும் முயற்சி
பின்பு காணுமாறு உரைத்ததென்று உரைத்தனன் பெரியோன் 940

*துளங்கல்-கவலைப்படேல், நும் முயற்சியை அறிவதற்கே பின்பு கூறினேன்.*

இதுதமிழ் முனிவன் வைகும் இயல்தரு குன்று; முன்னும்
அதுவளர் மணிமேல் ஓங்கல்; அப்புறத் துயர்ந்து தோன்றும்
அது திகழ் அநந்த வெற்பு என் றருள்தர; “அநுமன்தோன்றிற்று
எது?”என; அணங்கைநோக்கி இற்றென இராமன் சொன்னான் 941

*மீளும்போது இராமன்:—இது பொதிகை, அது திருமாலிருஞ் சோலை, உயர்ந்த அது திருவேங்கடம் என்றான்: சீதை அநுமான் தோன்றியது எவ்விடத்தில்? என்றாள்.*

வாலிஎன் றளவில் ஆற்றல் வன்மையான் மகரநீர்சூழ்
வேலையைக் கடத்த லாகும் விறலுடை அவனை வீட்டி
நூலியல் தருமநீதி நுணித்து அறம் குணித்த மேலோர்
போல்இயல் தபனன் மைந்தன் உறைதரும் பொறைஈ தென்றான் 942

*மகரநீர்-சுறுவாழும் கடலைக் கடக்கும் ஆற்றல்படைத்த வாலியைக் கொன்று, சூரியன் மகன் வாழ்ந்த குன்று இது.*

கிட்கிந்தை இதுவேல் ஐய, கேட்டியால், எனது பெண்மை,
மட்கும்தா னுய வெள்ள மகளின்றாகி, வானோர்
உட்கும்போர்ச்சேனை சூழ ஒருத்தியே அயோத்தி எய்தின்:
கட்கொந்தார் குழலினாரை ஏற்றுதல் கடன்மைத் தென்றாள் 943

*மட்கும்-குறைவுபடும், கேட்டி-கேள், வெள்ளம்போல் பல மகளிர் இருக்க நான் துணையின்றிச் சேனை வீரர் மத்தியில் தனித்த ஒரு பெண்ணாக அயோத்தி செல்வதோ? கள் கொந்து-தேனுற்ற பூங்கொத்தணிந்த மாதரை உடன்கொள்ளல் முறைமை.*

அம்மொழி இரவி மைந்தற்கு அண்ணல்தான் உரைப்ப, அன்னன்
மெய்ம்மைசேர் அநுமன் தன்னைநோக்கி:நீ விரைவின் வீர,
மைம்மலி குழலினாரை மரபினாற்கொணர்தி என்னா:
செம்மைசேர் உள்ளத்து அண்ணல் கொணர்ந்தனன்சென்று மன்னோ 944

*அண்ணல்-இராமன்.*

வெயர்த்த மேனியன் விழிபொழி மழையன் மூவினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமரல் உழந்துழந்து அழிவான்
அயர்த்து நோக்கினும் தென்றிசை அன்றிவே றறியான்
பயத்த துன்பமே உருவுகொண் டென்னலாம் படியான் 945

*பரத்துவாசர் பரதன் தன்மையை இராமனுக்கு உரைத்தல்:—மூவினை-மனம் மொழி மெய்களை ஒறுத்துள்ள, தெருமரல்-கலக்கம்.*

அவ்வுரை புகலக் கேட்ட அறிவனும் அருளின் நோக்கி
வெவ்வரம் பொருத வேலோய், விளம்புகேன் கேட்டி,வேண்டிற்று
எவ்வரம் எனினும் தந்தேன்,இயம்புதி எனலும், ஐயன்
கவ்வையின் றாகி வென்றிச் கவிக்குலம் பெற்றுவாழ்க 946

*அறிவன்-பரத்துவன், அவ்வுரை-வரங்கொள் என்ற உரை.*

அரியினம் சென்ற சென்ற அடவிகள் அனையும் வானம்
சொரிதரும் பருவம் போன்று கிழங்கொடு கனிகாய் துன்றி
விரிபுனல் செழுந்தேன் மிக்கு விளங்கென விளம்புகென்றான்:
புரியு மாதவனும் அஃதே ஆகெனப் புகன்றிட்டானால் 947

*அரி-குரங்கு, அடவி-காடு.*

நோக்கினன் தென்றிசை அல்லது நோக்குறான்
ஏக்குற் றேக்குற்று "இரவி குலத்துளான்
வாக்கிற் பொய்யான் வரும்வரும்" என்றுயிர்
போக்கப் போக்கி உழக்கும் பொருமலான் 948

*இரவி குலத்துளான்-இராமன், ஏக்குற்று-ஏங்கி.*

கானுள நிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி, போனவர்கள் வரும்அவதி போயிற் றென்று
ஆனாத உயிர்விடஇன் றமைவானும் ஒருதம்பி. அயலே நாணாது
யானும்இவ் வரசாள்வேன்! என்னே இவ்வரசாட்சி இனிதே அம்மா! 949

*தன்னை அரசு நடத்தக்கேட்ட பரதனுக்குச் சத்துருக்கன் உரை:—கான்-காடு, போவான்-இராமன், அவதி-கால எல்லை, ஆறாது-அமையாது.*

மன்னின்பின் வளநகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரதன் என்னும்
சொல்நிற்கும் என்றஞ்சி புறத்திருந்தும் அருந்தவமே தொடங்கினயே,
என்னின்பின் இவன்உளனும் என்றேபின் அடிமைஉனக்கு இருந்ததேனும்,
உன்னின்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ் இருப்பதுவும் ஒக்கும் என்றான்

*சொல்-வசை, மன்-இராமன், உன்னின்பின்-நீ இறந்து அதன்பின்.*

முத்துருக்கொண் டமைந்தனைய முழுவெள்ளிக் கொழுநிறத்து, முளரிச் செங்கண்
சத்துருக்கன் அஃதுரைப்ப; அவனிங்குத் தாழ்கின்ற தன்மை யான்இங்கு
ஒத்திருக்க லால்அன்றே, உலந்தால்பின் இவ்வுலகை உலைய ஒட்டான்
அத்திருக்கும் கெடும்,உடனே புகுந்தாலும் அரசு,எரிபோய் அமைக்க என்றான்

*முத்தின் உருவன் வெள்ளியின் உருவம்போல், அவன்-இராமன் தாமதத்தின் காரணம் யான் இங்கு ஆண்டிருப்பது அல்லவா? உலந்தால்-நான் இறந்தால், அத்திருக்கு-அவன் திரும்பாத செயல்.*

அப்பொழுதின் இவ்வுரைசென்று அயோத்தியினில் இசைத்தலுமே அரியை ஈன்ற
ஒப்பெழுத ஒண்ணாத கற்புடையாள் வயிறுபுடைத் தலமந் தேங்கி
இப்பொழுதே உலகிறக்கும் யாக்கையினை முடித்தொழிந்தான் மகனேஎன்று
வெப்பெழுதி னல்என்ன மெலிவுடையாள் கடிதோடி விலக்க வந்தாள் 952

*அரி-திருமால் ஆம் இராமன், மெலிவுடையாள்-கோசலை.*

மந்திரியர் தந்திரியர் வளநகரத் தவர்,மறையோர் மற்றும் சுற்றச்
சுந்தரியர் எனைப்பலரும் கைதலையிற் பெய்திரங்கித் தொடர்ந்து செல்ல,
இந்திரனே முதலான இமையவரும் முனிவரரும் இறைஞ்சி ஏத்த
அந்தர மங்கையர் வணங்க அழுதரற்றிப் பரதனைவந்தடைந்தாள் அன்றே

எரிஅமைக்கும் மயானத்தை எய்துகின்ற காதலனை இடையே வந்து
விரிஅமைத்த நெடுவேணி புறத்தசைந்து வீழ்ந்தொசிய மேனிதள்ளச்
சொரிஅமைப்பது அரிதாய மழைக்கண்ணாள் தொடருதலும், துணுக்கம் எய்தாப்
பரிவமைந்த திருமனத்தான் அடிதொழுதான், அவள் புகுந்து பற்றிக்
கொண்டாள் 954

*விரிவேணி-விரிந்த சடை, ஓசிய-தளர, மழை சொரி கண்ணாள்-கோசலை, பரிவு-இரக்கம்.*

மன் இழைத்ததும் மைந்தன் இழைத்ததும்
முன் இழைத்த விதியின் முயற்சியால்:
பின் இழைத்ததும் எண்ணில்,அப் பெற்றியால்.
என் இழைத்தனை? என்மகனே என்றாள் 955

ம்ன்-தசரதர், மைந்தன்-இராமன், பின் இழைத்தது-இராமன் வாராதிருப்பது, நீ என்ன செய்யத் துணிந்தனை மகனே!

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்அரு ளுக்குஅரு காவரோ!
புண்ணியம் எனும் நின்னுயிர் போயினல்
மண்ணும் வானமும் உயிர்களும் வாழுமோ 956

மைந்தன் என்னை மறுத்துரைத் தான்எனல்,
எந்தை மெய்ம்மையும் இக்குலச் செய்கையும்
நைந்துபோக உயிர்நிலை நச்சிலேன்
முந்து செய்த சபதம் முடிப்பனல் 957

பரதன் கோசலைக்கு:—எனல்-என்று சொல்லாதீர்: எந்தையார்போல் வாய்மை, சூரியகுலத்து ஒழுக்கம் இவை கெட்டு வாழ, யான் விரும்பவில்லை.

தாய்சொல் கேட்டலும் தந்தைசொல் கேட்டலும்
பாசத்துஅன்பினைப் பற்றற நீங்கலும்
ஈசற்கே கடன்,யான்அஃ திழைக்கிலேன்
மாசற்றேன் இது காட்டுவன் மாண்டென்றுன் 958

ஈசற்கு-தெய்வீக இராமனுக்கு உரியன, இழைக்கிலேன்-செய்யேன், உம் சொல் பணியேன்.

ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்:
மெய்யின் மெய்யனே, நின்னுயிர் வீடினல்
உய்யு மோஅவன்? என்றுரைத் துட்புகாக்
கையினல்எரி யைக்கரி ஆக்கினுன் 959

அநுமான் அங்குற்று:—நீ இறந்தால் இராமன் உயிர் வாழ்வானோ?

காட்டிய மோதிரம் கண்ணிற் காண்டலும்
ஊட்டிய வல்விடம் முற்றும் முற்றுவார்க்கு
ஊட்டிய நன்மருந் தொத்ததாம் அரோ!
ஈட்டிய உலகுக்கும் இளைய வேந்தற்கும் 960

விடம் உண்டவர்க்கு அமுத சஞ்சீவி கிடைத்ததுபோல் பரத சத்துருக்கர் உலகினர் மகிழ்ந்தார்.

அழும் நகும், அநுமனை ஆழிக் கைகளால்
தொழும்எழும் துள்ளும் வெங் களிதுளக்கலால்
விழும் அழிந்து ஏங்கும்போய் வீங்கும் வேர்க்கும்.அக்
குழுவொடும் குனிக்கும் தன் தடக்கை கொட்டுமால் 961

களி-களிப்பு, குனிக்கும்-ஆடுவான்.

வேதியர் தமைத்தொழும் வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத்தான்தொழும்
ஏதும்ஒன் றுணர்குறுது இருக்கும் நிற்குமால்:
காதல் என்றதும் ஓர் கள்ளிற் றேற்றிற்றே 962

காலின்மா மதலை சொல்லப் பரதனும் கண்ணீர் சோர
வேலிமா மதில்கள் சூழும் இலங்கையில் வேட்டங் கொண்ட
நீலமா முகில்பின்போனன் ஒருவன்:நான் நின்று நைவேன்
போலுமால்! இவைகள்கேட்பேன் புகழுடைத்துஅடிமை மன்னே

*காலின் மதலை-வாயுகுமார அநுமான் நடந்த எல்லாம் அறிவிக்க, நீலமா முகில்-இராமன்.*

அருந்தவன் சுவைகள்ஆறோடு அமுதினி தளிப்ப, ஐயன்
கருந்தடங் கண்ணி யோடும் கனைகனும் துணைவரோடும்
விருந்தினிது அருந்தி நின்ற வேலையின்,வேலை போலும்
பெருந்தடந் தானையோடும் கிராதர்கோன் பெயர்ந்து வந்தான் 964

*அருந்தவன்-பரத்துவாசர், கிராதர்கோன்-வேடர் தலைவன் குகன்*

தொழுதனன் மனமும் கண்ணும் துளங்கினன் சூழ ஓடி
அழுதனன் கமலம் அன்ன அடித்தலம் அதனின் வீழ்ந்தான்:
தழுவினன் எடுத்து மார்பில் தம்பியைத் தழுவுமாபோல்
வழுவிலா வலியர் அன்றோ மக்களும் மனையும்?என்றான் 965

அருள்உனதுஉளது, நாயேற்குஅவரெல்லாம் அரியவாய
பொருளல்லர், நின்னை நீங்கப் புணர்ப்பினல் தொடர்த்து போந்து
தெருள்தரும் இளைய வீரன் செய்வன செய்க லாதேன்
மருள்தரு மனத்தி னேனுக்கு இனிதன்றோ வாழ்வு?மன்னே 966

*மனைவி மக்கள் எனக்கு அரியவர் அல்லர்; இலக்குவன்போல யான் உடன்வந்து உதவவில்லையே; என்ன வாழ்வு இது?*

ஆயன பிறவும்பன்னி அழுங்குவான்தன்னை ஐய
நீயிவை உரைப்ப தென்னே? பரதனின்நீவே றுண்டோ?
போய்இனி திருத்தி என்னப்: புளிஞர்கோன் இளவல்பொற்றாள்
மேயினன் வணங்கி, அன்னை விரைமலர்த் தாளின்வீழ்ந்தான் 967

*நின்றவனை-குகன், துணைவர்-சுக்ரீவனும் மற்றப் பிறரும், மேலோன்-இராமன். அன்னை-சீதை.*

தொழுதுநின் றவனை நோக்கித் துணைவர்கள் தமையும் நோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன் மொழிகுவான்: முழுநீர்க்கங்கை
தழுவிரு கரைக்கு நாதன், தாயினும் உயிர்க்கு நல்லான்
வழுவிலா எயினர் வேந்தன் குகன்என்னும் வள்ளல்என்பான் 968

தாயருக் கன்று சார்ந்த கன்றெனும் தகையன் ஆனன்
மாயையிற் பிரிந்தோர்க் கெல்லாம் மனேலயம் வந்த தொத்தான்
ஆயிளையர்க்குக் கண்ணுள் ஆடிரும் பாவை ஆனன்
நோய்வறுத் துலந்த யாக்கைக் குயிர்புகுந்தாலும் ஒத்தான் 969

*இராமன் காட்சி:—மயக்கிலாத் தெளிவினர்க்கு மனம் லயிக்கும் இடம் ஆனன். இளையார்-தம்பியர், உலர்ந்த-வாடிய, பாழ்பட்ட.*

அனைவரும் அனையராகி அடைந்துழி, அருளின்வேலை
தனைஇனி தளித்த தாயர் மூவரும் தம்பி மாரும்
புனையும்நூல் முனிவன்ருனும் பொன் அணி விமானத்தேற
வனைகழல் குரிசில் முந்தி மாதவன் தாளில் வீழ்ந்தான் 970

*அருளின் வேலை - கருணைக்கடலான இராமனைப்பெற்ற, மாதவன் - வசிட்டர்.*

ஊடுறு கமலக் கண்ணீர் திசைதொறும் சிவிறியோட
தாள்தொடு தடக்கையாரத் தழுவினன்; தனிமைநீக்கிக்
காடுறைந்து உலைந்த மெய்யோ, கையறு கவலை யூர
நாடுறைந்து உலைந்த மெய்யோ நைந்ததென்று உலகம் நைய

*பரத இலக்குவர் காட்சி:—விசிறி சிந்தி. தாள்தொடு - முழங்காலளவு நீண்ட, தழுவினன்-பரதன் இலக்குவனைத் தழுவினுன், காடு உறைந்த இலக்குவனே நாடு உறைந்த பரதனே-யாவர் அதிகம் மெலிந்தார்?*

குரக்கினத் தரசை சேயை குமுதனை சாம்பன்தன்னை
செருக்கிளர் நீலன்தன்னை மற்றும்அத் திறத்தினேரை
அரக்கருக் கரசை வெவ்வே றடைவினில் முதன்மைகூறி
மருக்கமழ் தொடையல்மாலை மார்பினன் பரதன் நின்ருன் 972

*சேய்-அங்கதன், அரக்கர் அரசு-விடணன், முதன்மைகூற-உபசார வரவேற்பு.*

## திருமுடி சூட்டு படலம்

ஊழியின் இறுதி காணும் வலியினது உயர்பொற் றேரின்
ஏழுயர் மதமா அன்ன இலக்குவன் கவிகை ஏந்தப்
பாழிய மற்றைத் தம்பி பால்நிறக் கவரி பற்றப்
பூழியை அடக்குங் கண்ணீர்ப் பரதன்கோல் கொள்ளப் போனன்

*மதமா-யானை, தம்பி-சத்துருக்கன்.*

வீடணக் குரிசில் மற்றை வெங்கதிர்ச் செல்வன்-வெற்றிக்
கோடணை குன்றம் ஏறிக் கொண்டல்தேர் மருங்கு போகத்
தோடணை மவுலிச் செங்கண் வாலிசேய் தூசு செல்லச்
சேடனைப் பொருவும் வீர மாருதி பின்பு சென்றான் 974

*கோடு-தந்தம் கொண்டமலை ஒத்த யானைமீது ஏறி, மேகவண்ணன்-இராமன், தோடு-பூ இதழ், தூசு-முன் அணிப்படை.*

வானர மகளிர்எல்லாம் வானவர் மகளிராய் வந்து
ஊனமில் பிடியும் ஒண்தார் புரவியும் பிறவும் ஊர்ந்து-
மீன்இனம் மதியைச் சூழ்ந்த தன்மையின் விரிந்து சுற்றப்
பூநிற விமானந் தன்மேல் மிதிலைநாட் டன்னம் போனாள் 975

*பிடி-பெண்யானை, மீன்-விண்மீன்.*

ஆயதோர் அளவில் ஐயன் பரதனை அருளின் நோக்கித்
தூயவீ டணற்கும், மற்றைச் சூரியன் மகற்கும், தொல்லை
மேயவா னரங்களாய வீரர்க்கும், பிறர்க்கும் நந்தம்
நாயகக் கோயிலுள்ள நலமெலாந் தெரித்தி என்றான் 976

எரிமணிக் குடங்கள் பன்னூற்றி யானைமேல் வரிசைக் கான்ற
விரிமதிக் குடையின் நீழல் வேந்தர்கள் பலரும் ஏந்திப்
புரைமணிக் காளம் ஆர்ப்பப் பல்லியம் துவைப்பப் பொங்கும்
சரயுவின் புனலும் தந்தார் சங்கினம் ஆர்ப்ப மன்னோ 977

*அரசர் மணிக்குடங்களில் யானை மதமர்ந்து சரயுநதி நீரைக் கொண்டு வந்தார்.*

மங்கல கீதம்பாட மறைஒலி முழங்க வல்வாய்ச்
சங்கினம் குமுறப் பாண்டில் தண்ணுமை ஒலிப்பத் தாவில்
பொங்குபல் லியங்கள் ஆர்ப்பப் பூமழைபொழிய விண்ணோர்
எங்கள்நாயகனை வெவ்வே றெதிர்அபிடேகம் செய்தார் 978

மாதவர் மறைவலாளர் மந்திரக் கிழவர் மற்றும்
மூதறி வாளர் உள்ளஞ் சான்றவர் முதல்நீராட்ட,
சோதியான் மகனும் மற்றைத் துணைவரும் அநுமன்தானும்
தீதிலா இலங்கை வேந்தும் பின்அபி டேகம் செய்தார் 979

*சோதியன் மகன்-சுக்ரீவன்.*

தெய்வநீ ராடற்கு ஒத்த செய்வினை வசிட்டன் செய்ய
ஐயமில் சிந்தையான்அச் சுமந்திர அமைச்ச னேடு
நொய்தினின் இயற்றி நோன்பின் மாதவன்நுனித்துக் காட்ட
எய்தினி தியன்ற, பல்வேறு இந்திரற்கு ஏயஎன்ன- 980

*இந்திரனுக்கு வந்து சேர்வதுபோல் யாவும் வந்தன.*

அரியணை அநுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்தப்,
பரதன்வெண்குடை கவிக்க, இருவரும் கவரிவீச,
விரைசெறி குழலி ஓங்க, வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க-வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி 981

*விரை-வாசனை, குழலி-சீதை சிறப்பாக வீற்றிருந்தாள்.*

சித்தம்ஒத் தனன்என் றேதும் திருநகர்ச் செல்வம் என்ன
உத்தமத் தொருவன் சென்னி விளங்கிய உயர்பொன் மௌலி
ஒத்த மூவுலகத் தோர்க்கும் உவகையின் உறுதி உன்னில்
தத்தம் உச்சியின்மேல் வைத்த தொத்தெனத் தளர்வு தீர்ந்தார்

*யாவர் மனத்துக்கும் இணக்கமானவன் என்று புகழப்பெற்ற அயோத்தி யின் செல்வமான இராமன்.*

விரதநூல் முனிவன்சொன்ன விதிநெறி வழாமை நோக்கி
வரதனும் இளைஞர்க்கு ஆங்கண் மாமணி மகுடஞ் சூட்டிப்
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து, நாளும்
கரை தெரிவிலாத போகக் களிப்பினுள் இருந்த காலை 983

*முனிவன்-வசிட்டர், வரதன்-இராமன்.*

## விடைகொடுத்த படலம்

மங்கல கீதம்பாட மறையவர் ஆசி கூறச்
சங்கினம் குமுறப் பாண்டில் தண்ணுமை துவைப்பத் தாவில்
பொங்குபல் லியங்கள் ஆர்ப்பப்பொருங்கயல் கருங்கண் செவ்வாய்ப்
பங்கய முகத்தினர்கள் மயில் நடம் பயில மாதோ 984

ஏனைய பிறரும்சுற்ற எழுபது வெள்ளத் திற்ற
வானர ரோடும் வெய்யோன் மகன்வந்து வணங்கிச் சூழத்
தேனிமிர் அலங்கல் பைந்தார் வீடணக் குரிசில் செய்ய
மானவாள் அரக்கரோடு வந்தடி வணங்கிச் சூழ்ந்தான் 985

வெற்றிவெஞ் சேனை யோடும் வெறிப்பொறிப் புலியின் வெவ்வால்
சுற்றுறத் தொடுத்து வீக்கும் அரையினன் சுழல்செங் கண்ணன்
கற்றிரள் வயிரத் திண்டோள் கடுந்திறல் மடங்கல் அன்னான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை குகன் தொழுது சூழ்ந்தான்

வள்ளலும் அவர்கள் தம்மேல் வரம்பின்றி வளர்ந்த காதல்
உள்ளுறப் பிணித்த செய்கை ஒளிமுகக் கமலம் காட்டி
அள்ளுறத் தழுவினான்,மேல் அகமகிழ்ந் தினிதின் நோக்கி
எள்ளலில் லாத மொய்ம்பீர், ஈண்டினி திருத்திர் என்றான் 987

மறையவர் தங்கட் கெல்லாம் மணியொடு முத்தும் பொன்னும்
நிறைவளம்பெருகு பூவும் சுரபியும் நிரைத்து மேன்மேல்
குறையிதென் றிரந்தோர்க் கெல்லாம்குறைவறக் கொடுத்துப் பின்னர்
அறைகழல் அரசர் தம்மை வருகென அருள, வந்தார் 988

அங்கதம்இலாத கொற்றத் தண்ணலும் அகிலம் எல்லாம்
அங்கதன் என்னும் நாமம் அழகுறத் திருத்து மாபோல்
அங்கதம் கல்நற் தோளாற்கு அயன் கொடுத்ததனை ஈந்தான்
அங்கதன் பெருமை மண்மேல் யார்அளந் தறிய கிற்பார் 989

*அங்கதம் இலா-குற்றமிலா, அண்ணால்-இராமன், கல் நல்தோள்-அழகிய மலை ஒத்த தோள், அயன்-பிரயன்கொடுத்த அங்கதம் என்னும் அணியை அளித்து.*

பின்னரும் அவனுக்கு ஐயன் பெருவிலை ஆரத்தோடும்
வன்னநுண் தூசும் மாவும் மதமலைக்கு அரசும் ஈயா
உன்னைநீ இன்றி இந்த உலகினில் ஒப்பி லாதாய்,
மன்னுக கதிரோன் மைந்தன் தன்னொடு மருவி என்றான் 990

*தூசு-துணி, மா-குதிரை, மதமலை யானை.*

மாருதி விமல சேயை மகிழ்ந்தினி தருளின் நோக்கி
ஆர்உத விடுதற் கொத்தார் நீயலால்! அன்று செய்த
பேருத விக்கு யான்செய் செயல்பிறி தில்லை, மெய்ப்பூண்
போருதவிய திண்தோளாய், பொருந்துறப் புல்லுகென்றான் 991

*புல்லு.அணைப்பாய், விமல-குற்றமற்ற.*

என்றலும் வணங்கி நாணி வாய்புதைத் திலங்குதானை
முன்தலை ஒதுக்கி நின்றமொய்ம்பனை முழுதும் நோக்கிப்
பொன்திணி வயிரப் பைம்பூண் ஆரமும் புனைமென் தூசும்
வன்திகழ் கயமும் மாவும் வழங்கினன் வழங்கு சீரான் 992

*தானை.ஆடை, மொய்ம்பன்-வலியன், கயம்-யானை.*

பூமலர்த் தவிசை நீத்துப் பொன்மதில் மிதிலே பூத்த
தேமொழித் திருவை ஐயன் திருவருள் முகந்து நோக்கப்
பாமறைக் கிழத்தி ஈந்த பருமுத்த மாலை கைக்கொண்டு
ஏமுறக் கொடுத்தாள் அன்னள், இடர்அறிந்து உதவினற்கே 993

*மறைக்கிழத்தி-கலைமகள், ஏமுற-இன்பமுற.*

மின்னேர் மௌலிச் செங்கண் வீடணப் புலவர் கோமான்
தன்னையே இனிது நோக்கிச் சராசரஞ் சுமந்த சால்பின்
நின்னையே ஒப்பர் நின்னை யலதிலர். உளரேல் ஐய,
பொன்னையே இரும்பு நேரும் ஆயினும் பொருவன்றென்றான் 994

*வீடணனாகிய புலவர் பெருமானைப் பார்த்து. உளரேல்-இருப்பினும்.*

சிருங்கிபே ரியம்என் றேதும் செழுநகர்க் கிறையை நோக்கி
மருங்கினி உரைப்பதென்னே மறுவறு துணைவற் கென்னச்,
கருங்கை மாக்களிறும் மாவும் கனகமும் தூசும் பொன்னும்
ஒருங்கற உதவிப் பின்னர் உதவினன் விடையும் மன்னே 995

*ஒருங்கு அற-மொத்தமாக.*

அநுமனை வாலி சேயை சாம்பனை அருக்கன் தந்த
கனைகழற் காலினனைக் கருணையங் கடவுள் நோக்கி
நினைவநற் கரிது நும்மைப் பிரிவென்றல், நீவிர் வைப்பும்
எனதது, காவற்குஇன்றென் ஏவலின் ஏகும் என்றான் 996

*அருக்கன் சேய்-சூரியன்.*

இலங்கைவேந் தனுக்கும் இவ்வா றினியன யாவும்கூறி
அலங்கல்வேல் மதுகை அண்ணல் விடைகொடுத் தருளலோடும்,
நலங்கொள் பேருணர்வு மிக்கோர் நலனுறுநெஞ்சர் பின்னர்
கலங்கலர், ஏயசெய்தல் கடன்எனக் கருதிச் சூழ்ந்தார் 997

*வேந்து-வீடணன், ஏய-ஏவிய முறையில்.*

பரதனை இளையகோவை சத்துருக் கனனைப் பண்டை
விரதமாதவனை தாயர் மூவரை மிதிலைப் பொன்னை
வரதனை வலங்கொண்டேத்தி வணங்கினர் விடையும்கொண்டே
சரதமா நெறியும் வல்லோர் தத்தம பதியைச் சேர்ந்தார் 998

குகனைத்தன் பதியின் உய்த்துக்,குன்றினை வலஞ்செய் தேரான்
மகனைத்தன் புரத்தில் விட்டு, வாள்எயிற் றரக்கர் சூழக்
ககனத்தின் மிசையே எய்திக் கனைகடல் இலங்கை புக்கான்
அகனுற்ற காதல் அண்ணல் அலங்கல் வீடணன்சென் றன்றே 999

*தேரான்-சூரியன், புரம்-கிட்கிந்தை, பதி-சிருங்கி பேரம், ககனம்-ஆகாயம்.*

**ஐயனும் அவரைநீக்கி அருள்செறி துணைவரோடும்**
**வையகம் முழுதும் செங்கோல் மனுநெறி முறையிற் செல்ல,**
**செய்யமா மகளும் மற்றச் செகதல மகளும், மற்றும்**
**நையுமாறின்றிக் காத்தான் நானிலம் பொறைகள் தீர்த்தே! 1000**

*உலகம் வருந்தாமல் காத்துவந்தான்.*

## ஓம்படை

கம்பரா யிரத்தைக் கற்பார் கையினில் எடுப்பார் கேட்பார்
தம்புலம் ஒன்றித் துய்ப்பார் தக்கவர்க் கெடுத்துச் சொல்வார்
செம்பொன்னுள் அருளுக்காவார், சிந்தையுள் மகிழ்ச்சி காண்பார்
இம்பரில் நீடு வாழ்ந்து யாவர்க்கும் இனிய ராவார்

கம்பரா யிரத்தால் நெஞ்சம் களிப்புறும் கவலை நீங்கும்
அம்பலத் தமர லாகும் அறிஞராம் பேறுண் டாகும்
தம்பலம் பெரிதாய்த் தோன்றும், தன்னையும் மறத்த லாலே
உம்பர்தம் அருளும் மேவும் உயர்வுறும் நலங்கள் எல்லாம்

தண்டமிழ் நாடு வாழ்க "தமிழ்வளர் மன்றம்" வாழ்க
தொண்டுசெய் புலவர் வாழ்க துணும்நற் றுணையும் ஆகுந்
திண்டிறன் ராமசுப்ர மணியனும் செயலோன் வாழ்க
கொண்டுநூல் போற்று வாரும் சுற்றமும் நீடு வாழ்க

---

ஆற்றுப் படிக்கட் டமர்ந்தே நறுநீர் மொண்டுமீதே
ஊற்றிக் குளித்தீர் உள்ளங் குளிர்ந்தீர் ஒன்றுசெய்வீர்
சாற்றுங் கவிகள் பன்னீ ராயிரப் பெருவெள்ளம்
போற்றிப் படிந்தே மூழ்கிக் குளிப்பீர் புனிதமாவீர்.

---

பாரோர் பலரும் கம்பர்கவி படித்துநற் புலமை நயந்துய்க்க
ஓரா யிரத்தை உருவாக்கித் தந்தமா பெருமைக் குறுமேலோன்
தீராப் பிணிகள் தீர்த்துநிற்கும் இரத்தின வேல்சுப் பிரமணியம்
சீராம் செல்வம் சுகம்சீர்த்தி சந்ததி எல்லாம் நீடுவாழ்க

வாழ்க கம்பன் தமிழகம்!
வாழ்க மகாத்மா பாரதம்!
வாழ்க அறத்தார் வையகம்!
வாழ்க வாழ்க வாழ்கவே!

# பாட்டு முதலும் எண்ணும்

## சொல்லகராதி


| | |
|---|---|
| அக்கன் | 856 |
| அங்கத | 587 |
| அங்கதம் | 989 |
| அங்குள | 221 |
| அச்சென | 84 |
| அஞ்சலை | 682 |
| அஞ்சன | 244 |
| அஞ்சனை | 504 |
| அஞ்சினை | 721 |
| அஞ்சுவி | 634 |
| அடித்த | 299 |
| அடைப்பு | 926 |
| அடைந்த | 132 |
| அணங்கி | 468 |
| அணங்கு | 120 |
| அண்டத் | 852 |
| அதுகா | 566 |
| அத்தா | 536 |
| அத்திரு | 596 |
| அந்தமில்அ | 41 |
| அந்தமி | 580 |
| அந்நகர் | 119 |
| அந்நரர் | 760 |
| அநுமனை | 996 |
| அநுமன் | 559 |
| அம்பர | 874 |
| அப்பொ | 952 |
| அம்போ | 713 |
| அமிழ்இ | 77 |
| அமிழ்து | 594 |
| அம்மொ | 944 |
| அயா | 280 |
| அரக்கர் | 862 |
| அரக்கர்ஓ | 547 |
| அரக்கனே | 638 |
| அரக்கர் | 129 |
| அரசிய | 560 |
| அரத்த | 73 |
| அரவா | 307 |
| அரன்அ | 592 |
| அரிதுபோ | 614 |
| அரியணை | 981 |
| அரியதா | 215 |
| அரியவன் | 282 |
| அரியின் | 947 |
| அருந்ததி | 646 |
| அருந்தவமு | 19 |
| அருந்தவன் | 964 |
| அருந்தவம் | 247 |
| அருந்து | 616 |
| அருள்உ | 966 |
| அலைஉ | 50 |
| அல்லினா | 815 |
| அல்லை | 260 |
| அவ்வ | 343 |
| அவ்வு | 845 |
| அவ்வு | 946 |
| அழியும் | 867 |
| அழும் | 961 |
| அளவில் | 574 |
| அளித்த | 753 |
| அள்ளல் | 170 |
| அறங்கட | 778 |
| அறங்கெட | 846 |
| அறத்தி | 779 |
| அறத்தினை | 880 |
| அறந்தனை | 279 |
| அறந்தா | 264 |
| அறிந்து | 599 |
| அறுபதி | 102 |
| அறைக | 550 |
| அற்புத | 636 |
| அனுமனை | 996 |
| அனைய | 116 |
| அனைவரும் | 970 |
| அனையருளா | 912 |
| அன்பினா | 940 |
| அன்னதன் | 191 |
| அன்னதன் | 603 |
| அன்னதா | 498 |
| அன்னது | 530 |
| அன்னமா | 302 |
| அன்னம் | 94 |
| அன்னவர் | 680 |
| அன்னவன் | 200 |
| அன்னவன் | 394 |
| அன்னவள் | 348 |
| அன்னாள் | 437 |
| அன்னே | 906 |
| அன்னை | 918 |
| ஆகாத | 184 |
| ஆகின் | 159 |
| ஆகுவ | 801 |
| ஆக்கி | 389 |
| ஆங்க | 764 |
| ஆசில் | 706 |
| ஆசை | 454 |
| ஆடகத் | 662 |
| ஆடகமா | 55 |
| ஆடவர் | 123 |
| ஆடவர்தி | 891 |
| ஆடி | 245 |
| ஆடினார் | 518 |
| ஆடு | 249 |
| ஆண்ட | 691 |
| ஆண்டகைய | 322 |
| ஆண்டா | 469 |
| ஆண்டான் | 491 |
| ஆதலின் | 928 |
| ஆமாம் | 438 |
| ஆமெனின் | 297 |
| ஆயது | 497 |
| ஆயதோ | 976 |
| ஆயன | 967 |
| ஆயிடை | 526 |
| ஆயிரந் | 902 |
| ஆயினா | 932 |
| ஆய்ந் | 51 |
| ஆரா | 909 |
| ஆரிய | 502 |
| ஆரை | 678 |
| ஆர்தரு | 626 |
| ஆர்த்தே | 387 |
| ஆலம் | 610 |
| ஆவி | 615 |
| ஆவு | 320 |
| ஆழநீர் | 619 |
| ஆழநெடு | 245 |
| ஆழிசூழ் | 149 |
| ஆழியான் | 728 |
| ஆழியை | 238 |
| ஆளையா | 780 |
| ஆறு | 407 |
| ஆற்ற | 766 |
| ஆற்றா | 535 |
| ஆனதா | 67 |
| ஆனதோ | 788 |
| ஆனவன்உ | 227 |
| ஆனவன் | 447 |
| ஆன்றமை | 704 |
| ஆன்றவர் | 573 |
| ஆன்றான் | 179 |
| இங்குள | 698 |
| இங்கோர் | 381 |

| | |
|---|---|
| இச்சை | 708 |
| இடி | 224 |
| இது | 941 |
| இத்தலை | 808 |
| இந்திரன்எ | 318 |
| இந்திரன் | 400 |
| இந்திரசசி | 417 |
| இந்திர | 42 |
| இந்திரசித் | 668 |
| இந்நிலை | 138 |
| இந்நிலை | 746 |
| இப்பொ | 150 |
| இம்மலை | 506 |
| இமை | 346 |
| இரக்க | 315 |
| இரவி | 4 |
| இராம | 813 |
| இரதம் | 205 |
| இருத்தி | 214 |
| இருந்த | 372 |
| இருந்த | 48 |
| இருந்தனன் | 398 |
| இருந்தன | 500 |
| இருந்து | 839 |
| இருவர் | 551 |
| இருவிர் | 859 |
| இருவீர | 875 |
| இலங்கை | 997 |
| இலக்கு | 271 |
| இல்லற | 542 |
| இல்இய | 490 |
| இல்லறந் | 571 |
| இல்லாத | 507 |
| இல்லை | 206 |
| இவனை | 606 |
| இவ்வண் | 33 |
| இழந்த | 641 |
| இழிந்த | 268 |
| இளக்க | 811 |
| இளையர | 582 |
| இளையான் | 176 |
| இற்ற | 870 |
| இற்றை | 792 |
| இற்றே | 95 |
| இன்றிற | 627 |
| இன்று | 895 |
| இன்னம் | 558 |
| இன்னபோ | 392 |
| இன்னன | 241 |
| இன்னவள் | 422 |
| இன்னும் | 650 |
| இன்னே | 165 |
| ஈசன் | 589 |
| ஈண்டு | 628 |
| ஈந்தே | 17 |
| ஈரநிர் | 10 |
| ஈரம் | 516 |
| ஈர்ந்த | 501 |
| ஈன்றவ | 489 |
| உங்கள் | 827 |
| உடலினை | 731 |
| உண்டி | 256 |
| உண்ணு | 903 |
| உதிக் | 178 |
| உந்தை | 290 |
| உந்தைஎன் | 758 |
| உந்தையை | 807 |
| உந்தைஉ | 330 |
| உம்பர் | 717 |
| உயிர்ப் | 865 |
| உய்ஞ்சு | 444 |
| உய்ய | 726 |
| உரிமை | 114 |
| உருத்தெ | 70 |
| உருப்ப | 624 |
| உருளு | 319 |
| உரைசெ | 201 |
| உரைசெமன் | 235 |
| உரைத்தகூ | 130 |
| உரைத்தவா | 321 |
| உலகம் | 517 |
| உலகம் | 1 |
| உலகெ | 96 |
| உழக்கு | 323 |
| உழுந்தி | 58 |
| உழைத்த | 531 |
| உளைவுறு | 461 |
| உள்ளுற | 711 |
| உறுவது | 789 |
| உற்றகா | 816 |
| உற்றது | 898 |
| உற்றது | 101 |
| உற்றதொ | 870 |
| உன்குலம் | 696 |
| உன்பெருந் | 695 |
| ஊக்கம் | 65 |
| ஊக்கி | 360 |
| ஊடுறு | 971 |
| ஊணில | 458 |
| ஊண்இலா | 837 |
| ஊண்திறம் | 924 |
| ஊதை | 595 |
| ஊழியின் | 973 |
| ஊன்பிழை | 934 |
| ஊன்றும் | 436 |
| எச்சில் | 922 |
| எண்ணரு | 37 |
| எண்ணரு | 658 |
| எண்ணிய | 99 |
| எண்ணிய | 669 |
| எண்ணிலா | 24 |
| எண்ணில் | 956 |
| எண்ணுதற் | 32 |
| எதிர்வரு | 21 |
| எத்தவ | 927 |
| எந்தைஇற | 863 |
| எந்தைஆய் | 655 |
| எந்தையும் | 229 |
| எந்தைஏ | 294 |
| எம்பி | 441 |
| எய்தஅம் | 98 |
| எய்திய | 803 |
| எய்தினன் | 693 |
| எய்யவி | 85 |
| எய்யென | 18 |
| எரிஅமை | 954 |
| எரிமணி | 977 |
| எலி | 243 |
| எல்ஒடு | 278 |
| எல்லீரு | 597 |
| எல்லை | 740 |
| எவ்வர | 935 |
| எழுந்த | 314 |
| எழுந்து | 897 |
| எறிகுவ | 809 |
| எறித்த | 786 |
| எறிந்த | 666 |
| எனஉரை | 916 |
| எனக்க | 796 |
| எனக்கு | 920 |
| எனைத்து | 273 |
| என்றஅக் | 514 |
| என்உயிர் | 562 |
| என்உயிர் | 718 |
| என்தாய் | 493 |
| என்தாரம் | 475 |
| என்வயின் | 412 |
| என்றகம் | 509 |
| என்றலும்இ | 681 |
| என்றலும்வ | 992 |
| என்றலுமே | 262 |
| என்றலும்மு | 821 |
| என்றவன் | 802 |

என்றனன் 378
என்றான் 492
என்றான்எ 773
என்றினை 405
என்றுசொ 689
என்றுபி-இ 931
என்றுபி-ம 157
என்றுலப் 732
என்றோள் 770
என்னக் 267
என்னாமு 495
என்னும் 384
என்னைத் 485
என்னைஎன் 844
என்னையும் 849
என்னைவென் 791
என்னையே 402
ஏகம் 15
ஏகநா 677
ஏகும் 47
ஏசியுற் 825
ஏடறு 240
ஏதியோ 826
ஏது 820
ஏத்தரு 296
ஏத்தி 198
ஏந்தகல் 873
ஏந்திழை 763
ஏழிரண் 570
ஏழை 911
ஏழையும் 309
ஏழைதன் 194
ஏற்றபே 532
ஏற்றநெடு 371
ஏற்றரு 857
ஏனைய 985
ஐயநீ 795
ஐயன் 28
ஐயனும் 1000
ஐயன்வந் 959
ஐயன்வில் 828
ஒடிக்கு 588
ஒட்டிய 104
ஒத்தசி 118
ஒருபக 456
ஒலிகடல் 548
ஒள்ளிது 354
ஒறுப்பி 140
ஒற்றும் 362
ஒன்றாக 743
ஒன்றுகே 632
ஒன்றுண் 772
ஒன்றுவே 733
ஓங்கரு 539
ஓங்குமர 327
ஓசை 2
ஓம்எனு 712
ஓதிமம் 335
ஓதுநல் 742
ஓராசை 904
ஓவிய 557
கங்கை 251
கங்கைநீர் 71
கங்கையே 397
கச்சை 105
கடலோ 43
கடிக்கு 631
கணையு 496
கண்டன 637
கண்டனஅனு 817
கண்டன-நாய 824
கண்டனென் 694
கண்டாள் 853
கண்டிலென் 879
கண்டுநின் 385
கண்டுநோ 373
கண்டுவரு 611
கண்டேன் 163
கண்ணும் 166
கண்ணுற் 543
கண்ணே 142
கண்ணோடா 162
கந்தர்ப் 892
கம்ப 889
கரக்க 312
கரங்க 727
கரன் 424
கருங்கு 74
கருத்தி 798
கருமலை 329
கருமுகில் 20
கருவரை 735
கலக்கி 765
கலங்கி 752
கலைமான் 448
கல்ஆர் 88
கல்நகு 284
கல்லா 14
கல்லிடை 6
கல்லினு 744
கல்வீரு 366
கல்லுண் 755
கல்வி 576
கள்ளவி 135
கறங்கு 602
கற்கா 252
கற்பி 923
கனை 311
கனத்தி 929
கன்னிஇ 328
கன்னியர் 103
காக்சின் 767
காட்டிய 960
காட்டிலே 747
காந்தை 908
காமரம் 413
காரும் 538
கார்கு 216
காலமி 223
காலமும் 710
காலின் 963
காலை 713
காவல் 368
காவியு 72
கானமே 888
கானகம் 202
கானம் 365
கானாள 949
கானின் 776
கானின்உ 339
கிடந்த 782
கிட்கிந் 943
குகனை 999
குகனொடு 730
குடல் 917
குடிமை 629
குமுதன் 737
கும்பக 861
கும்பி 858
குரக்கி 972
குரா 659
குலமிது 545
குலைவுறல் 466
குழைக்கி 153
குற்றம் 455
குன்றிடை 451
குன்றின்வீழ் 804
குன்றின்அரு 823
குன்றும் 812
கூட்டம் 513
கூட்டு 549
கூலத் 431
கூவா 213

| | |
|---|---|
| கேகய | 93 |
| கேட்டார் | 494 |
| கேளிது | 719 |
| கைகளா | 357 |
| கைத்த | 473 |
| கையால் | 174 |
| கொங்கை | 702 |
| கொடுத் | 522 |
| கொலை | 361 |
| கொல்லும் | 36 |
| கொழுங் | 161 |
| கொற்றவ | 196 |
| கொற்றவ | 639 |
| கோட்டு | 936 |
| கோதாவி | 471 |
| கோதை | 217 |
| கோபமு | 423 |
| கோமகன் | 91 |
| கோல்மேல் | 141 |
| கோவியல் | 546 |
| கோணணி | 78 |
| சந்தம | 439 |
| சலந்த | 663 |
| சலித்தா | 665 |
| சாந்த | 607 |
| சாணினு | 716 |
| சிகர | 623 |
| சிங்கக் | 175 |
| சித்தம் | 160 |
| சித்தம் | 982 |
| சிருங்கி | 995 |
| சிருங்கி | 211 |
| சிலையு | 89 |
| சில்லிய | 80 |
| சிவந்த | 125 |
| சிறக்கு | 653 |
| சிறந்த | 158 |
| சிறிய | 567 |
| சிற்றி | 425 |
| சினத் | 893 |
| சீதை | 866 |
| சீரை | 197 |
| சீலமும் | 921 |
| சீற்றம் | 182 |
| சுடும | 265 |
| சுற்றம் | 212 |
| சுற்றத் | 261 |
| சூடக | 26 |
| சூடை | 660 |
| சூலமே | 396 |
| செப்புங் | 35 |
| செந்தா | 434 |
| செந்தேன் | 851 |
| செப்புற | 401 |
| செம்பிட் | 800 |
| செம்பு | 382 |
| செம்மா | 63 |
| செம்மை | 233 |
| செயிர் | 738 |
| செயிர்சே | 583 |
| செருஆர் | 565 |
| செல்லும் | 180 |
| சேணுய | 276 |
| சேணுற | 350 |
| சேயகா | 701 |
| சேயிதழ் | 460 |
| சொல்என் | 411 |
| சொல்ஒக் | 29 |
| சொல்பிற | 403 |
| சொல்லும் | 777 |
| சொல்லுவ | 841 |
| சொல்வித் | 878 |
| தங்கை | 399 |
| தடுத்தி | 56 |
| தண்டலை | 8 |
| தந்தோ | 537 |
| தம்பின | 831 |
| தம்பியர் | 533 |
| தம்பியை | 672 |
| தயரத | 462 |
| தருவது | 421 |
| தருவன | 23 |
| தலையினை | 886 |
| தழுவின | 257 |
| தறையடி | 561 |
| தன்அடி | 563 |
| தன்தனி | 751 |
| தன்முன் | 253 |
| தாடகை | 356 |
| தாதுக | 7 |
| தாதைஅ | 117 |
| தாதைக்கு | 869 |
| தாமரை | 579 |
| தாமுறு | 349 |
| தாயரு | 285 |
| தாயரும் | 969 |
| தாயுரை | 258 |
| தாயே | 686 |
| தாய்ஒக் | 16 |
| தாய்கை | 146 |
| தாய்சொல் | 958 |
| தாய்தன் | 306 |
| தாக்கு | 657 |
| தாயே | 686 |
| தாதையை | 759 |
| தாரம் | 554 |
| தாரை | 239 |
| தாவரு | 671 |
| திங்கள் | 652 |
| திசைத் | 139 |
| திரண்ட | 108 |
| திருஅரை | 188 |
| திருவின் | 474 |
| திருவுளம் | 220 |
| திறம்திற | 683 |
| திறை | 49 |
| தீய | 128 |
| தீதில் | 344 |
| தீதென்று | 27 |
| துப்பி | 613 |
| தும்பிய | 799 |
| தும்பியின் | 219 |
| தும்பியும் | 248 |
| துயரா | 564 |
| துன்னு | 236 |
| தூண்டர | 259 |
| தூண்டும் | 127 |
| தெண்டி | 477 |
| தெம்மட | 617 |
| தெய்வநீ | 980 |
| தெரிவு | 520 |
| தெருண்ட | 60 |
| தெருவே | 86 |
| தெருளுடை | 151 |
| தென்தமி | 593 |
| தேரும் | 674 |
| தேவரே | 840 |
| தேவிய | 608 |
| தேறினன் | 512 |
| தேனடை | 283 |
| தையலா | 68 |
| தையல் | 204 |
| தொழுதன | 965 |
| தொழுது | 661 |
| தொழுதுகின் | 968 |
| தொழுதுயர் | 277 |
| தோகை | 54 |
| தோளொடு | 793 |
| தோளை | 415 |
| தோள்ஆற் | 609 |
| தோள்கண் | 75 |
| தோற்பி | 835 |
| நங்குல | 272 |

ந்ஸசயா 364
நஞ்சம் 578
நஞ்சினு 61
நடத்த 640
நதியினு 62
நதியின் 177
நந்தி 709
நந்தியம் 300
நம்திரு 741
நம்பியு 255
நம்பியை 57
நலங் 113
நல்லது 685
நல்லவு 598
நல்லை 675
நவ்வி 131
நன்சொ 181
நன்றி 577
நன்றுசொ 374
நன்றுபோ 775
நன்னக 705
நன்னெறி 237
நாட்செய் 476
நாமத் 76
நாயகண் 190
நாயகண் 207
நாயகண் 569
நாரங் 440
நாளம் 334
நாளுக் 676
நாள்ஒத் 784
நாறுபூ 66
நான 625
நானுனை 872
நிகழ்ந்த 442
நிரம்பி 572
நிருதர் 352
நிலஞ்செ 22
நிலையி 390
நில்லடி 359
நில்லும் 303
நிறை 289
நினைந்த 52
நின்மக 143
நின்றவ 324
நின்றவ 805
நின்ருன் 534
நின்று 133
நின்று 480
நின்னிற் 715
நீக்க 44
நீதியார் 511
நீதியால் 829
நீதியும் 794
நீத்தாய் 670
நீயும் 847
நீலமா 337
நீளாண் 768
நீளெழுத் 111
நும்முனை 806
நூபுரம் 340
நூல்இய 553
நூல்வலி 749
நெகுதற் 169
நெடுந்த 756
நெட்டிலை 452
நெய்கொள் 225
நெய்யடை 575
நெறி 376
நேடி 819
நைவளம் 82
நைவீர் 263
நோக்கற 850
நோக்கியநோ 38
நோக்கியமா 449
நோக்கின் 948
நோயீர் 231
நோவதா 288
படர்எ 266
படைமா 167
பஞ்சி 338
பஞ்செரி 894
பணி 222
பண்க 9
பண்க 833
பண்டய 310
பண்ணே 87
பரக்க 769
பரங்கி 429
பரதன் 270
பரதனை 998
பராவ 122
பரித்த 620
பரிவிக 193
பருகிய 39
பருந்து 762
பழியினை 722
பள்ளக் 774
பள்ளநீ 633
பறித்த 540
பனி 877
பாகத் 418
பாரமா 939
பாம்பி 739
பாவமு 147
பாழிய 644
பிள்ளை 419
பிறர்ம 635
பிறையு 838
பின்னரு 990
பின்னும்பக 185
பின்னும்ஓர் 937
பின்னும்உரை 484
புடை 432
புத்துற 410
புலியி 391
புல்நுனை 467
புல்லி 281
புவி 332
புறத் 446
புணைக 622
புணைந்தி 154
புன்ம 842
பூஅரா 380
பூதநா 757
பூதலப் 684
பூதலத் 97
பூப்பொதி 459
பூமலர் 993
பூமழை 100
பூவிரி 242
பூவிலோ 345
பூவின்மே 843
பெண்இய 479
பெண்எ 836
பெண்என 137
பெண்பால் 435
பெண்மை 925
பெய்தவ 814
பெரிதும் 331
பெருந்த 11
பெருமக 274
பெருமக 107
பெருமை 745
பெற்று 630
பேதை 882
பேதையர் 529
பேயமன் 688
பேருழை 342
பேரை 720
பைந்தோ 186
பைப்பை 699
பொடி 30

| | |
|---|---|
| பொய் | 433 |
| பொருதமை | 692 |
| பொருதிற | 353 |
| பொருந்த | 325 |
| பொருவரு | 600 |
| பொருவில் | 189 |
| பொழிலை | 483 |
| பொற்பின்றி | 13 |
| பொற்பின்ற | 648 |
| பொன்மய | 428 |
| பொன்னின்ஓ | 81 |
| பொன்னின்மு | 168 |
| பொன்னை | 930 |
| பொன்னொ | 275 |
| போகின் | 457 |
| போதி | 126 |
| போந்தா | 486 |
| போர்என் | 64 |
| போர்மக | 905 |
| மங்கலஅ | 581 |
| மங்கல | 978 |
| மங்கலகீ | 984 |
| மங்கை | 155 |
| மங்கையர் | 393 |
| மங்கையர் | 568 |
| மஞ்சன | 585 |
| மஞ்சினி | 736 |
| மஞ்சென | 505 |
| மஞ்சொக் | 414 |
| மண்ணுள் | 144 |
| மண்ணினு | 109 |
| மண்ணிணை | 855 |
| மண்துயி | 503 |
| மதநல் | 304 |
| மந்திரி | 953 |
| மயிலுடை | 426 |
| மயிலும் | 482 |
| மரனே | 363 |
| மருங்கி | 40 |
| மருந்த | 408 |
| மலரின் | 797 |
| மலையே | 470 |
| மறுத்த | 445 |
| மறுமை | 734 |
| மறைக | 885 |
| மறையவ | 988 |
| மற்றவ | 110 |
| மற்றினி | 515 |
| மற்றினி | 556 |
| மற்றுள | 92 |
| மற்றொரு | 552 |
| மனக் | 287 |
| மன்இழை | 955 |
| மன்றல | 899 |
| மன்றலின் | 90 |
| மன்னவ | 152 |
| மன்னவஇருக் | 295 |
| மன்னரா | 115 |
| மன்பின் | 950 |
| மாகந்த | 209 |
| மாக்கவ | 818 |
| மாங்க | 499 |
| மாதர் | 145 |
| மாதவத் | 317 |
| மாதவரை | 83 |
| மாதவர் | 979 |
| மாதவன் | 112 |
| மாதிரம் | 783 |
| மாதிரத் | 430 |
| மாப்போ | 369 |
| மாமுனி | 250 |
| மாருதி | 754 |
| மாருதி | 991 |
| மாலை | 218 |
| மாறினி | 187 |
| மாற்பெரு | 524 |
| மாற்றம் | 124 |
| மாற்றம் | 810 |
| மானுட | 790 |
| மானேஅ | 308 |
| மான்அவ | 463 |
| மான்அவ | 488 |
| மின்னேர் | 645 |
| மின்னுட | 203 |
| மின்னுடை | 395 |
| மின்னை | 994 |
| மீட்டவர் | 664 |
| மீட்டவன் | 822 |
| மீளரு | 377 |
| மீன் | 420 |
| முக்கோ | 900 |
| முடிப் | 383 |
| முட்டி | 519 |
| முத்தமி | 3 |
| முத்தவான் | 868 |
| முத்திரு | 301 |
| முத்தீர் | 591 |
| முத்துரு | 951 |
| மும்மை | 541 |
| மும்மையா | 643 |
| முரட்ட | 876 |
| முல்லையு | 195 |
| முல்லையை | 5 |
| முழவி | 404 |
| முறை | 156 |
| முறைமையா | 199 |
| முனியும் | 46 |
| முனிவர் | 388 |
| முனிவரோ | 351 |
| முனைவ | 703 |
| முன்புநின் | 555 |
| முன்னமும் | 450 |
| முன்னவன் | 246 |
| முன்னர் | 292 |
| முன்னைநீ | 915 |
| முன்னைநு | 234 |
| முன்னைப் | 881 |
| மூக்கிலா | 832 |
| மூசிய | 604 |
| மூண்டெ | 226 |
| மூலமும் | 679 |
| மூவகை | 487 |
| மூளும் | 409 |
| மெய்கொள் | 910 |
| மெய்த்தி | 618 |
| மெய்யார் | 171 |
| மெய்யின் | 172 |
| மேக்கு | 914 |
| மேருவை | 464 |
| மேலவ | 510 |
| மேவி | 136 |
| மைந்தர் | 106 |
| மைந்தன் | 957 |
| மையறு | 34 |
| மொய் | 79 |
| மோந்தி | 521 |
| யாதித | 913 |
| யாதும் | 443 |
| யாரென | 508 |
| யாவதெ | 590 |
| யானை | 707 |
| யான் | 919 |
| வச்சை | 379 |
| வஞ்ச | 584 |
| வஞ்சமு | 667 |
| வஞ்சனே | 834 |
| வண்டுறை | 333 |
| வண்டுளர் | 134 |
| வண்மை | 12 |
| வண்தங் | 601 |
| வந்த | 25 |
| வந்தது | 375 |
| வந்தவள் | 148 |

| | |
|---|---|
| வந்தனென் | 525 |
| வந்தானை | 367 |
| வந்துள | 654 |
| வந்துகா | 358 |
| வம்பிழை | 478 |
| வரத | 933 |
| வரதன் | 286 |
| வரந்த | 938 |
| வரம்அர | 386 |
| வரன் | 291 |
| வரிசிலை | 848 |
| வருத்த | 586 |
| வருந்தி | 210 |
| வலிஎன் | 771 |
| வலியின் | 472 |
| வல்லர | 192 |
| வல்லிய | 316 |
| வளைஎயி | 355 |
| வளைபயி | 69 |
| வளையும் | 605 |
| வள்ளலும் | 987 |
| வள்ளல்ம | 53 |
| வற்கலை | 254 |
| வற்கலையார் | 406 |
| வன்தெறு | 269 |
| வன்பகை | 748 |
| வன்மருங் | 612 |
| வாக்கி | 230 |
| வாங்கி | 697 |
| வாங்கி | 750 |
| வாங்கினன் | 642 |
| வாசநா | 31 |
| வாசமென் | 45 |
| வாயொளி | 228 |
| வாய்தர | 761 |
| வாய்மைஎன் | 293 |
| வாய்மையும் | 544 |
| வாரணம் | 781 |
| வாரார் | 173 |
| வார்கு | 59 |
| வார்க்குறு | 724 |
| வாலிஎ | 942 |
| வாலிகா | 690 |
| வாழும் | 326 |
| வாளில் | 860 |
| வாள்நித் | 183 |
| வானமு | 785 |
| வானர | 975 |
| விட்டன | 884 |
| விண்டா | 370 |
| விண்குழி | 725 |
| விண்அரு | 341 |
| விண்ணவ | 465 |
| விண்ணினை | 787 |
| விதியது | 427 |
| விம்மி | 298 |
| விரத | 983 |
| விரிமழை | 621 |
| விலக்கலை | 527 |
| வில்ஒக் | 416 |
| வில்லார் | 232 |
| வில்லிய | 336 |
| விழிக்கு | 164 |
| விளைவி | 729 |
| வினையு | 656 |
| வீக்கிய | 890 |
| வீங்கிய | 886 |
| வீடண | 974 |
| வீரன்அ | 347 |
| வீரனும் | 871 |
| வெங்கண் | 523 |
| வெப்ப | 673 |
| வெந்தி | 854 |
| வெம்ம | 901 |
| வெவ்விட | 121 |
| வெயர்த் | 945 |
| வெய்ய | 453 |
| வெய்யோன் | 208 |
| வெல்லு | 830 |
| வெள்ளெ | 907 |
| வெள்ளம் | 481 |
| வெற்பினு | 687 |
| வெற்றி | 986 |
| வென்றல் | 883 |
| வேண்டின் | 313 |
| வேண்டுழி | 723 |
| வேதங்க | 305 |
| வேதிய | 962 |
| வேலைப் | 864 |
| வேறினி | 647 |
| வேறும் | 649 |
| வையகம் | 700 |


| பாட்டு | அடி | திருத்தங்கள் |
|---|---|---|
| 67 | உரை | கஸ்தூரி |
| 118 | உரை | அத்த - ஐயனே |
| 174 | 4 | ஆரழலுற்றது |
| 350 | 3 | கொங்கையன்னாள் |
| 360 | 2 | எனநுவலா |
| 456 | 3 | வெருவலை நின்றனை |
| 469 | 3 | உயர்தோள்வலியால் |
| 507 | 3 | யார்கொல் |
| 726 | 4 | மீள்கிலாநரகில் |
| 823 | 1 | குன்றின் வீழ் அருவியின் |
| 954 | 3 | மழைக் கண்ணாள் |
| 966 | 2 | தொடர்ந்து போந்து |